சேலம்-நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்

முனைவர் அ. கிருட்டினன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

சேலம் - நாமக்கல்
மாவட்டக் கல்வெட்டுகள்

முனைவர் அ. கிருட்டினன் எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,
இணைப்பேராசிரியர்
கல்வெட்டியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 5

ISBN : 81-7090-287-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 227

திருவள்ளுவராண்டு 2032 சித்திரை - மே 2001

நூல்	:	சேலம் - நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்
பதிப்பாசிரியர்	:	அ. கிருட்டினன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	கல்வெட்டியல்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பக்கம்	:	8 + 288 = 296
தாள்	:	டி.என்.பி.எல். மேப்லித்தோ 31 கே.ஜி.
அளவு	:	1/4 கிரவுன்
நூற்கட்டுமானம்	:	சாதாரணக்கட்டு
விலை	:	உரு. 280/-
படிகள்	:	500
ஒளியச்சு	:	மாணிக்கம் அச்சகம், தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

அணிந்துரை

"சேலம்-நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்" தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டிற்கு வந்துபோன வெளிநாட்டார் எழுதிவைத்த குறிப்புகள், ஆங்காங்கு அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள், மட்பாண்டங்கள், முதுமக்கள் தாழிகள், செப்பேடுகள், கல்வெட்டுகள் போன்றவை தமிழர் வரலாற்றை அறிய உறுதுணை புரிந்து வருகின்றன.

தமிழ்ப் பெருமக்களின் வாழ்வில் சமயம் பின்னிப்பிணைந்து இலங்குவதைக் காணலாம். சேலம், நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த கோயில் கற்சுவர்கள், மலைப்பாறைகள், கல்தூண்கள், படுக்கைகள், நடுகற்கள் முதலானவற்றில் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. நம் முன்னோர்களின் முறையான வரலாற்றை அறிவதற்கு இக்கல்வெட்டுகள் பெருந்துணை புரிகின்றன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சேர்ந்த 350 கல்வெட்டுகளை முனைவர் அ. கிருட்டினன் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

சேலம், நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த சைவ, வைணவத் திருக்கோயில்களில் இறைவனுக்குச் செய்யப்படும் பூசை, வழிபாடு, விழா முதலியன பற்றியும், கோயிலுக்கு அளிக்கப்படும் அணிகலன்கள், நிலங்கள், பொற்காசுகள், ஊதுசங்கு, பேரிகை போன்றவற்றைப் பற்றியும் கல்லில் வெட்டப்பட்டிருப்பதை அறிய முடிகின்றன. அரசர்களும், அரசியல் அதிகாரிகளும், பொதுமக்களும் செய்துள்ள தனித்தனி அறச் செயல்களும் கல்லில் பொறிக்கப்பட்டிருப்பதைப் பதிப்பாசிரியர் எடுத்து விளக்கியுள்ளார். கோயிலுக்கு நிலங்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அரசனால் கோயிலுக்கு விடப்பட்ட நிலத்தின் மேலுள்ள அனைத்து வரிகளும் நீக்கப்பட்டதை 'வரி நீங்கிய திரு நாமத்துக்காணி' என்ற தொடரால் கல்வெட்டில் பொறித்துள்ளனர்.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததொரு கல்வெட்டில் 'புலால் மறுத்தல்' எனும் அதிகாரத்தில் இடம்பெறும்

> "தன்னூன் பெருக்கற்குத் தான்பிரி தூணுண்பா
> னெங்ஙன மாளு மருண்" (திருக்குறள் 251)

என்ற திருக்குறள் 6 வரிகளாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

திரு சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களின் `Indian Ephemeris' என்னும் ஆண்டு விளக்கக் குறிப்பு நூல் உதவிகொண்டு 66 கல்வெட்டுக்களின் காலத்தைப் பதிப்பாசிரியர் கணித்துக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. இடம், அரசர், காலம், மொழி, செய்தி, கல்வெட்டு (மூலம்) என்று வகைப்படுத்தி 350 கல்வெட்டுகளையும் முனைவர் அ. கிருட்டினன் பதிப்பித்து முன்பகுதியில் விரிவானதொரு முன்னுரையும் எழுதியுள்ளார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டியல் துறையில் இணைப் பேராசிரியராகப் பணிபுரியும் முனைவர் அ. கிருட்டினன் அவர்கள் சேலம்-நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகளைப் படி எடுத்து இந்நூலைப் பெரு முயற்சியுடன் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். கல்வெட்டு ஆய்வாளர்களுக்கும், தமிழக வரலாற்றை அறிவதற்கும் இவர்தம் நூல் பெரிதும் பயன்படும்; இவருக்கு எம் பாராட்டுக்கள்!

7 / 5 / 2001
தஞ்சாவூர்

கதிர். மகாதேவன்
துணைவேந்தர்

நன்றியுரை

'சேலம் - நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்' என்னும் இத் தொகுதி இனிது அமைவுற உற்றுழி உதவியோர் பலர்.

ஆய்வுப்பணியின் பொருட்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்து இன்முகங்காட்டி இயன்றதைச் செய்துதவிய 'இலக்கியச்செம்மல்' தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்பமை முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள்,

ஆய்வேடுகளை விரைந்து வெளிக் கொணரும் ஆர்வத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட துணைவேந்தர் மாண்பமை கி. கருணாகரன் அவர்கள்,

இந்த ஆய்வேடு நூலாக வெளிவருவதற்கு உறுதுணை புரிந்தும் அணிந்துரையும் நல்கியவர் இந்நாள் துணைவேந்தர் மாண்பமை முனைவர் கதிர். மகாதேவன் அவர்கள்,

நுண்மாண் நுழைபுலத்தால் என் ஆய்வுப்பணியினை நெறிப்படுத்திச் செறிவுரைகளை அறிவுரைகளாக நல்கி உரிய திருத்தங்களைச் செய்துதவிய என் துறைத்தலைவர் முனைவர் எ. சுப்பராயலு அவர்கள்,

தந்தை மகற்காற்றும் உதவியாக முந்தியிருந்து என் பணிக்கு முத்தாய்ப்பாக அமைந்த முனைவர் (புலவர்) செ. இராசு அவர்கள்,

நெடுந்தொலைவில் இருந்தாலும் என்னை நினைவில் இருத்தி வழிகாட்டும் முன்னாள் இந்திய முதன்மைக் கல்வெட்டாளர் திருமிகு கே.ஜி. கிருட்டிணன் அவர்கள்,

கல்வெட்டுகளை ஒப்புநோக்கக் காலம் கருதாது கனிவுடன் உதவிய இந்தியக் கல்வெட்டியல் இயக்குநர் முனைவர் கே.வி. இரமேசு அவர்கள், இந்திய முதன்மைக் கல்வெட்டாளர் திரு மாதவ் என். கட்டி அவர்கள், தலைமைக் கண்காணிப்பாளர் முனைவர் எம்.டி. சம்பத் அவர்கள்,

பாதங்கள் படாத பட்டி தொட்டிகள் எவையும் சேலம் மாவட்டத்தில் இல்லையெனும் அளவிற்கு என்னுடன் அலைந்து திரிந்து, தாம் தொகுத்த கல்வெட்டுகளை வழங்கி உதவிய வெள்ளக்கால் இரா. துரைசாமி அவர்கள், வரலாற்று முகிழ்நர் சேலம் தமிழ்நாடன் அவர்கள்,

படியெடுத்த கல்வெட்டுகளை உடனிருந்து படித்துதவிய உழுவலன்பர் முனைவர் கா. இராசன், இரா. கோவிந்தராசு, பா. செயக்குமார் அவர்கள்,

அருஞ்சொற்களை அகரவரிசைப்படுத்தி நூலில் பிழையில்லாமல் பெருமைப்படுத்திய முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி அவர்கள்,

களப்பணியின்போது உடனிருந்து கல்வெட்டுகளைக் கடமையுணர்வோடு படியெடுத்துக் கண்ணெனக் காக்கும் மைப்படி உதவியாளர் மு. செல்வராசு அவர்கள்,

கணிப்பொறி வழி மெச்சத்த நந்த வகையில் அச்சுப்பணி புரிந்த பல்கலைக்கழகப் பதிப்புத்துறை அலுவலர்கள் செய்தியைச் செம்மையுடன் ஏற்றிய மாணிக்கம் அச்சகத்தார் அவர்கள்,

என்றும் என் நினைவில் நின்று போற்றுதலுக்குரியவர்கள்.

இவர்களுடைய உதவிகள் உள்ளி மகிழத்தக்கன.

இவர்களுக்கு என் அன்பினைக் காணிக்கையாக்கக் கடன்மைப்பட்டுள்ளேன்.

திருவள்ளுவராண்டு
2032, சித்திரை

நன்றியுடன்
(அ. கிருட்டினன்)

பொருளடக்கம்

			பக்கம்
	முன்னுரை		
1.	அம்மன்கோவில்பட்டி	(1 -)	36
2.	அமரகுந்தி	(2 - 6)	ˀ7
3.	அலைவாய்ப்பட்டி	(7 - 8)	42
4.	ஆட்டையாம்பட்டி	(9 -)	44
5.	ஆத்தூர்	(10 - 16)	45
6.	ஆலத்தூர்	(17)	53
7.	ஆறகளூர்	(18 - 65)	54
8.	இடங்கணசாலை	(66 - 67)	131
9.	இராசபாளையம்	(68)	134
10.	இராசிபுரம்	(69 - 74)	135
11.	இருப்பல்லி	(75 -)	141
12.	இலவம்பட்டி	(76 - 78)	142
13.	உத்தமசோழபுரம்	(79 - 82)	147
14.	எருமைநாயக்கன்பாளையம்	(83 -)	153
15.	எருமைப்பட்டி	(84)	154
16.	ஏழூர்	(85 - 88)	155
17.	கதிராநல்லூர்	(89)	159
18.	கபிலர்மலை	(90 - 91)	160
19.	கருங்காடு	(92 -)	162
20.	கல்பகனூர்	(93 -)	163
21.	கல்ராயன்மலை	(94 -)	164
22.	காக்காவேரி	(95 - 96)	165
23.	கார்குடி	(97 - 100)	167
24.	குச்சிக்காடு	(101 -)	173
25.	குஞ்சாம்பாளையம்	(102 -)	175
26.	குமாரசாமிப்பட்டி	(103 -)	176
27.	குருசாமிப்பாளையம்	(104 -)	177
28.	குன்னமலை	(105 -)	178

29.	கூளிப்பட்டி	(106 - 108)	179
30.	கூனவேலம்பட்டி	(109 - 110)	182
31.	கொக்கராயன்பேட்டை	(111 - 114)	184
32.	கொல்லிமலை	(115 - 133)	191
33.	கோபிநாதபுரம்	(134 -)	214
34.	சங்கரசெட்டிப்பட்டி	(135 -)	215
35.	சிங்களாந்தபுரம்	(136 - 138)	216
36.	ந்தளந்தூர்	(139 - 140)	219
37.	சி கப்பாடி	(141 -)	221
38.	க்கம்பட்டி	(142 -)	222
39.	சேலம்	(143 - 167)	223
40.	டேனிசு பேட்டை	(168 -)	251
41.	தசவிளக்கு	(169 -)	252
42.	தடாஹூர்	(170 - 178)	253
43.	தம்மம்பட்டி	(179 - 182)	265
44.	த ரமங்கலம்	(183 - 198)	269
45.	திருச்செங்கோடு	(199 - 236)	293
46.	து சூர்	(237 -)	335
47.	தேவணாங்குறிச்சி	(238 - 239)	336
48	தொற்றிபாளையம்	(240 -)	338
49.	நங்கவல்லி	(241 - 243)	339
50.	நஞ்சைஇடையார்	(244 -)	342
51.	நாட்டாமங்கலம்	(245 -)	343
52.	நாமக்கல்	(246 - 257)	344
53.	நெத்திமேடு	(258 - 259)	368
54.	நெய்க்காரன்பட்டி	(260 -)	370
55.	நைனாமலை	(261 -)	372
56.	பருத்திப்பள்ளி	(262 - 276)	373
57.	பள்ளத்தாண்டனூர்	(277 -)	389
58.	பனைமரத்துப்பட்டி	(278 - 279)	390
59.	பாலமேடு	(280 -)	392
60.	பாண்டமங்கலம்	(281 -)	393
61.	புதுப்பாளையம்	(282 - 285)	396
62.	புல்லூர்	(286 - 287)	401

59.	பாலமேடு	(280 -)	392
60.	பாண்டமங்கலம்	(281 -)	393
61.	புதுப்பாளையம்	(282 - 285)	396
62.	புல்லூர்	(286 - 287)	401
63.	பூலாம்பட்டி	(288 -)	403
64.	பேரூர்	(289 - 293)	404
65.	பொட்டிபுரம்	(294 -)	409
66.	பொம்மசமுத்திரம்	(295 - 297)	411
67.	பொன்குறிச்சி	(298 -)	414
68.	போதமலை	(299 -)	415
69.	மங்கலம்	(300 -)	416
70.	மணப்பள்ளி	(301 - 304)	417
71.	மதியம்பட்டி	(305 -)	422
72.	மருதூர்	(306 -)	423
73.	மல்லசமுத்திரம்	(307 - 309)	424
74.	மல்லூர்	(310 -)	428
75.	மின்னக்கல்	(311 -)	430
76.	மூக்குத்திபாளையம்	(312 -)	432
77.	மூணுசாவடி	(313 - 314)	433
78.	மேச்சேரியாம்பாளையம்	(315 -)	435
79.	மோகனூர்	(316 -)	436
80.	வள்ளிபுரம்	(317 -)	437
81.	வாசலூர்ப்பட்டி	(318 -)	438
82.	வாழக்குட்டப்பட்டி	(319 - 321)	439
83.	விலாரிபாளையம்	(322 -)	442
84.	வெள்ளாளர்	(323 -)	443
85.	வெள்ளரிவள்ளி	(324 -)	444
86	வேட்டாம்பாடி	(325 -)	445
87.	வேலம்பாளையம்	(326 -)	446

பின்னிணைப்புகள்:

தெ.இ.க.தொ. வெளியிடப்பெற்ற கல்வெட்டுகள் 447

இ.அ.தொ.அ.து. படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுகள் 449

சொல்லடைவு 452

முன்னுரை

'சேலம் - நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்' என்னும் இந்நூலில் 350 கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 252 கல்வெட்டுகள் மைசூரிலுள்ள இந்திய அரசின் தொல்லியல் அளவீட்டுத்துறை, கல்வெட்டு இயக்குநர் அலுவலகத்தாரால் படியெடுக்கப் பெற்றுள்ளவையாகும். 70 கல்வெட்டுகள் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளியிடப் பெற்றுள்ளன. 98 கல்வெட்டுகள் புதியனவாகக் கண்டுபிடிக்கப் பெற்று இடம்பெற்றுள்ளன. இம்மாவட்டத்தின் ஊர்களிலிருந்து இக் கல்வெட்டுகள் தொகுக்கப் பெற்றுள்ளன. சில ஊர்களில் அதிக அளவிலான கல்வெட்டுகளும், பல ஊர்களில் ஒன்றிரண்டு கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. பெரும்பான்மையான கல்வெட்டுகள் கோவில்களிலிருந்தும், சில கல்வெட்டுகள் மலைக்குகைகள், பாறைகள், தூண்கள், நடுகற்கள், ஊர் நிலத்தில் ஆங்காங்குக் கிடந்த கல்துண்டுகள் ஆகிய இடங்களிலிருந்தும் படி எடுத்துத் தொகுக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் உள்ள கல்வெட்டுகள் சீரிய முறையில் படியெடுக்க இயலாத நிலை ஏற்பட்டது. இக்குறையை மைசூரிலுள்ள 'இந்திய அரசு தொல்லியல் அளிவீட்டுத்துறையின் கல்வெட்டியல் இயக்கநர் அலுவலகம் நிறைவு செய்தது. படியெடுத்த கல்வெட்டுகளை ஒப்புநோக்கிப் பார்க்க அனுமதி அளித்தது.

கி.பி. 13ஆம் நூற்றாணடு தமிழக அரசியலில் பல்வேறு சூழ்நிலை மாற்றங்கள் ஏற்பட்ட காலமாதலால் அக்காலகட்டத்தில் அனைத்து அரசர்களுடைய மேலாண்மை மிக்கிருந்தமையால் மிகுதியான கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இம் மாவட்டத்தில் மட்டும் அந்நூற்றாண்டில் 125 கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் 27 கல்வெட்டுகளும் 11ஆம் நூற்றாண்டில் 20 கல்வெட்டுகளும் 12ஆம் நூற்றாண்டில் 21 கல்வெட்டுகளும் 14ஆம் நூற்றாண்டில் 14 கல்வெட்டுகளும் பொறிக்கப் பெற்றுள்ளன. 16,17,18,19 ஆகிய நூற்றாண்டுகளில் 112 கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. சில கல்வெட்டுகள் வடமொழியிலும் கன்னட மொழியிலும் இடம் பெற்றுள்ளன. அவை கிரந்த எழுத்துகளால் பொறிக்கப் பெற்றுள்ளன.

இம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தில் 80 கல்வெட்டுகளும், இராசிபுரம் வட்டத்தில் 27 கல்வெட்டுகளும், ஓமலூர் வட்டத்தில் 35 கல்வெட்டுகளும், சேலம் வட்டத்தில் 54 கல்வெட்டுகளும், திருச்செங்கோடு வட்டத்தில் 81 கல்வெட்டுகளும், நாமக்கல் வட்டத்தில் 73 கல்வெட்டுகளும் படியெடுக்கப்பெற்று இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இம் மாவட்டத்தில் சோழ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் 90 கல்வெட்டுகளும், பாண்டியர் ஆட்சியில் 57 கல்வெட்டுகளும், விசயநகர அரசின் 63 கல்வெட்டுகளும், ஒய்சளர்களின் 10 கல்வெட்டுகளும் கொங்குச் சோழர்களின் 4 கல்வெட்டுகளும் கொங்கு பாண்டியர்களின் 2 கல்வெட்டுகளும் தொகுக்கப் பெற்று இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சோழர்களில் முதலாம் இராசேந்திரன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய இரு அரசருடைய ஆட்சிக் காலங்களில் கல்வெட்டுகள் மிகுதியாகப் பொறிக்கப் பெற்றுள்ளன. பாண்டியரில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் கல்வெட்டுகள் மிகுதியாகப் பொறிக்கப் பெற்றுள்ளன. விசயநகர ஆட்சினரின் கல்வெட்டுகள் கி.பி. 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் மிகுதியாகப் பொறிக்கப் பெற்றுள்ளன.

இந்நூலில் 66 கல்வெட்டுகளின் காலம் (நாள், மாதம், ஆண்டு) கணிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் விசயநகர ஆட்சியினரின் கல்வெட்டுகள் சகாப்த ஆண்டு, ஞாயிறு, திதி, நட்சத்திரம், நாள் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுவதால் காலத்தை சரியாகக் கணிக்க முடிந்தது. அறிஞர் சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களின் Indian Ephemeris என்னும் ஆண்டு விளக்கக் குறிப்புநூல் தொகுதிகள் இக்கணிப்புக்குப் பெரிதும் பயனுடையனவாக அமைந்தன. சோழர்களுடைய கல்வெட்டுகள் அனைத்தும் ஆட்சியாண்டை மட்டும் குறிப்பிடுவதால் அவ்வரசர்களின் ஆண்டு மட்டும் கணக்கிடப் பெற்றுள்ளது. பாண்டியர் கால 9 கல்வெட்டுகளின் காலம் சரியாகக் கணிக்கப் பெற்றுள்ளது.

சில கல்வெட்டுகளின் காலத்தைக் கணித்தபோது நாள், திதி, நட்சத்திரம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று பொருந்திவராத நிலையில் அமைந்துள்ளன. விசயநகரர் ஆட்சிக்காலத்தில் பொறிக்கப் பெற்றுள்ள சில கல்வெட்டுகளில் சகாப்த ஆண்டின் எண்ணும் குறிப்பிட்டு அந்த ஆண்டின் பெயரும் குறிப்பிடப் பெற்றுள்ளன. ஆனால் அவை பொருந்திவராத நிலையில் அமைந்துள்ளன. கல்வெட்டுகளில் ச சா கூ (4,6,9) என்ற எண்களின் வரிவடிவத்தால் இத்தகைய இடர்ப்பாடுகள் நிகழ்ந்திருக்கலாம். இக் கல்வெட்டுகளைப் படியெடுத்துப் படித்தபோது எழுத்தொற்றுமையின் காரணமாகவும் இவ்வேறுபாடுகள் நிகழ்ந்திருக்கலாம். அக்குறிப்பு கல்வெட்டின் கீழ் இடம்பெற்றுள்ளது.

ஆறகளூரில் விசயநகர அரசர் வீரகம்பண்ண உடையார் காலத்தில் பொறிக்கப் பெற்றுள்ள ஒரு கல்வெட்டு (28)* 3.1.1376 இல் பொறிக்கப் பெற்றதாக அறிஞர் சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் தம்முடைய ஆண்டுவிளக்கக் குறிப்புநூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] அக்கல்வெட்டில் விருச்சிக ஞாயிறும் வெள்ளிக் கிழமையும் குறிப்பிடப் பெற்றுள்ளது. ஆனால் அவர் வியாழக்கிழமையையும் மேஷ ஞாயிற்றையும் குறிப்பிட்டுக் கணித்துள்ளார். இக்கல்வெட்டு 7.12.1375 ஆம் நாளுக்குப் பொருந்தி வருகிறது. பிறிதொரு கல்வெட்டு (50) சாளுவ அரசர் தருமராயர் ஆட்சிக்காலத்தில் 23.8.1504 இல் பொறிக்கப் பெற்றுளளது. இக் கல்வெட்டில் ஆண்டும், ஞாயிறும், நாளும், திதியும், நட்சத்திரமும் பொருந்தி வருகிறது. ஆனால் அதன் காலத்தை 26.04.1504 என்று சாமிண்ணுப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[2] அவர் குறிப்பிட்டுள்ள சிம்மஞாயிறும் திதியும் நட்சத்திரமும் பொருந்தி வரவில்லை. இவ்வாறு காலக்கணிப்பின் பொருந்தாநிலையும் காணப் பெறுகிறது.

காலத்தால் முற்பட்ட கல்வெட்டு :

சேலம் - நாமக்கல் மாவட்டத்திலுள்ள கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்பெறுவது ஓமலூர் வட்டம் அம்மன்கோவில்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டாகும். இக் கல்வெட்டு (1) தமிழ் எழுத்து வளர்ச்சியின் நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. நாமக்கல் அரங்கநாதர் குடைவரைக் கோவிலிலுள்ள அதியமான் மரபினர் கல்வெட்டுகள் கி.பி. 7,8 ஆகிய நூற்றாண்டுகளைச் சார்ந்தனவாகு ம். அ. கல்வெட்டுகள் அக்கோவில் கொடையாளர் சிலருடைய பெயரையும். சிறப்புப் பட்டப்பெயரையும் குறிப்பிடுகின்றன. அவை பல்லவ கிரந்த எழுத்து முறையில் பொறிக்கப் பெற்றுள்ளன. அக் கல்வெட்டுகள் அனைத்தும் வெளிவந்தன வாகும். கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓமலூர் வட்டக் கேத்தநாயக்கன் புதூர் ஏரியின் மதகருகில் வட்டெழுத்துக் கல்வெட்டொன்று(168) உள்ளது. அதில் 'கிடங்கில் புலிமார்மகன் நல்லி' என்பவன் மதகு ஒன்றை ஏரிக்கு வைத்துக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

சோழர் கால ஆட்சியைச் சார்ந்த முதன்மையான கல்வெட்டு(106) முதலாம் பராந்தகனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 917) பொறிக்கப்பெற்ற கூளிப்பட்டி நடுகல் கல்வெட்டாகும். இக் கல்வெட்டில் 'மதிரை கொண்ட கோபரகேசரி' என்று குறிப்பிடப் பெற்றுள்ளமையால் இது வரலாற்றடிப்படையில் முதலாம் பராந்தக சோழன் காலத்தது என்று கூறலாம். இதனையடுத்து அதே ஊரில் இரண்டாம் ஆதித்த கரிகால சோழனின் நான்காம் ஆட்சியாண்டு (கி.பி. 960) கல்வெட்டொன்றும் காணப்பெறுகிறது. அடுத்து கொல்லிமலைப் பகுதியில் உத்தமசோழனின் பத்தாம் ஆட்சியாண்டு முதல் பதினாறாம் ஆட்சியாண்டு வரையிலான நான்கு கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. சோழ அரசர்களுடைய மெய்க்கீர்த்திகள் அடங்கிய கல்வெட்டுகளில் கதிராநல்லூரில் முதலாம் இராசேந்திர சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் (89) 'திருமன்னி வளர' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி இடம் பெற்றுள்ளது. மல்லசமுத்திரம் என்னும் ஊரில் சோளீசுவரமுடையார் கோவிலிலும் அவ்வரசசின் மெய்க்கீர்த்தி பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு

*. பிறைவளைவிற்குள் இடம்பெற்றுள்ள எண்கள் இந்நூலின் கல்வெட்டு வரிசை எண்களைக் குறிக்கும்.

1. சாமிக்கண்ணுப்பிள்ளை, Indian Ephemeris தொகுதி 1 பகுதி 2, ப.

2. சாமிக்கண்ணுப்பிள்ளை, Indian Ephernmris தொகுதி 1 பகுதி 2, ப.

(307) இடம் பெற்றுள்ளது. திருச்செங்கோடு வட்டக் கொக்கராயன் பேட்டையில் முதலாம் குலோத்துங்க சோழனின் நான்காம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்ற 'புகழ்மாது விளங்க' என்னும் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கப் பெற்ற கல்வெட்டு காணப்பெறுகிறது.

தடாவூரில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த நான்கு கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. அவ்வரசனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'குலோத்துங்க தேவர்' என்று மட்டும் குறிப்பிடப் பெற்றுள்ளது. 9,10 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகளில் 'விசய இராசேந்திரசோழ தேவர்' எனப் பட்டப்பெயரால் அவர் குறிப்பிடப் பெற்றுள்ளார். 27 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அவருடைய வெற்றியின் சிறப்பை விளக்கும் 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்க சோழ தேவர்' எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளார்.

கொல்லிமலைக் கல்வெட்டு :

கொல்லிமலையிலுள்ள அறப்பள்ளி ஈசுவரர் கோவிலில் கோப்பரகேசரி வர்மரான உத்தம சோழனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 980) பொறிக்கப் பெற்றுள்ள இரு கல்வெட்டுகளில் (115, 116) அக்கோவிலில் கார்த்திகை விழா நிகழ்த்த, சாலைப்புறமாக நிலம் விட்ட செய்தி காணப்பெறுகிறது. மேலும் பன்னிரண்டு ஊராரிடம் நூறு கழஞ்சுப் பொன் கொடுத்து அதன் வட்டி வருவாயைக் கொண்டு அக்கோவில் பூசை நடத்தப் பெற்றுள்ளமையைக் கல்வெட்டு விளக்குகின்றது. ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஆறு திங்களுக்கு ஐங்குறுணி நெல் வட்டியாகப் பெறப் பெற்றுள்ளது. ஒரே காலத்தில் வேறுபட்ட வகையில் வட்டி வாங்கியுள்ளமையை அறியலாம்.

அறப்பள்ளி ஈசுவரர்க்குக் கொல்லிமலை நாட்டினரும் கோவில் தனத்தாரும், பலமண்டலத்து மாயேசுவரர்களும் சேர்ந்து வணலூராரிடமிருந்து நான்கு கல நெல் விதைப்பு அளவிலான நிலவருவாயை அறப்பள்ளி இறைவர்க்கு உரிமையாக்கியுள்ள செய்தி ஒரு கல்வெட்டில் (122) குறிப்பிடப்பெற்றுள்ளது. அதில் நிலம் இவ்வளவு என்ற அளவு குறிக்கப் பெறவில்லை. நெல்விதை அளவைக் கொண்டு நிலத்தின் அளவு கணிக்கப் பெற்றுள்ளது. கொல்லிமலை நாட்டு மலையாளர்கள் தங்கள் நிலத்தின் கடமையை ஒன்பதாவது ஆண்டு முதல் செலுத்த உறுதியளித்துக் கோவிலில் கல் வெட்டிக் கொடுத்துள்ளனர். எனவே முன்னர் எட்டாண்டுகள் வரை அம்மலையாளர்கள் தங்கள் நிலத்திற்கு வரிவிலக்குப் பெற்றிருந்தமையை அறியலாம்.

சோழங்கதேவர் :

இராசேந்திர சோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் இராசிபுர வட்டம் காக்காவேரியிலுள்ள சிவன் கோவிலில் கல்வெட்டொன்று (95) பொறிக்கப் பெற்றுள்ளது. அதில் 'சேலநாட்டு அஞ்சாத பெருமாளான சோழங்கதேவர் பொன் பரப்பினான்' என்பவன் குறிப்பிடப்பெற்றுள்ளான்.

சேலம் நாட்டு சீரகப்பாடியில் மாணிக்கன் என்பவன் தான் கட்டிய மன்றீசுவரமுடைய நாயனார்க்குப் பூசைக்கும் திருப்பணிக்கும் முதலாக அவனால் கட்டப்பெற்ற உப்பிறப்பழகியான் என்னும் ஏரியின்கீழ் நீர்பாய்ந்தநிலத்தைப் பொன்பரப்பின சோழங்கதேவரிடம் பொன் கொடுத்து விலைக்கு வாங்கிய செய்தி ஒரு கல்வெட்டில் (141) குறிப்பிடப்பெற்றுள்ளது. இராசிபுரம் வட்டம் கூனவேலம்பட்டி அழியா இலங்கையம்மன் கோவிலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் பதினைந்தாம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டில் (109) 'அழகிய சீயனான சோழங்க தேவன்' என்று குறிப்பிடப்பெற்றுள்ளான்.

வாழக்குட்டப்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டில் (319) 'எல்லாம் தலையான சோழங்கதேவ முதலி' என்று குறிப்பிடப்பெற்றுள்ளார். இங்குப் பணிபுரிந்த திருநீற்றுப்பல்லவராயன் என்பவர்

இடபதேவரை எழுந்தருளுவித்துக் கோவிலையும் கட்டிப் பூசைச் செலவினங்களுக்கு நிலத்தையும் கொடையாக அளித்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. இவ்வூரிலுள்ள மற்றொரு கல்வெட்டு (320) சோழங்கதேவர் என்னும் தன் தலைவனுக்கு நன்மை உண்டாகும்பொருட்டு சோழக்கோன் என்பவர் மூங்கில் பள்ளம் என்னும் ஏரியின்கீழ் இருந்த நிலத்தைப் பொன்பரப்பீசுவரமுடைய நாயனார்க்குத் தேவதான இறையிலியாக அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இவர்களுடைய தலைநகரம் மல்லூரை அடுத்த பொன்பரப்பி என்னும் ஊராக இருந்துள்ளது மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம் தொடங்கிச் சோழப் பேரரசு முடிவுறும் வரையில் இவர்கள் குறுநிலத்தலைவர்களாக இருந்துள்ளனர்.

பாண்டியர் கல்வெட்டுகள் :

பாண்டியர் ஆட்சியின் கல்வெட்டுகளில் முதன்மையுடைய கல்வெட்டு இடைக்காலப் பாண்டியரின் முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1256) பொறிக்கப்பெற்றுள்ள திருச்செங்கோட்டிலுள்ள கல்வெட்டாகும். அவ்வரசன் இருபத்தேழாம் ஆட்சியாண்டுவரை ஆட்சி புரிந்துள்ள காலத்தில் பொறிக்கப் பெற்ற பதினைந்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அடுத்து இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியனின் பதினான்காம் ஆட்சியாண்டு முதல் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுவரை பொறிக்கப்பெற்றுள்ள நான்கு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் இரண்டாம் ஆட்சியாண்டு முதல் பதினெட்டாம் ஆட்சியாண்டு வரையிலான பதினாறு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. பாண்டியர் காலக் கல்வெட்டுகள் பதினேழு ஊர்களில் பொறிக்கப் பெற்றுள்ளன.

திருவரங்கத்திலுள்ள கல்வெட்டொன்று[3] சுந்தரபாண்டியனின் ஆட்சியில் பொறிக்கப்பெற்றது. அக் கல்வெட்டு குலசேகரனின் தம்பியான சுந்தரபாண்டியனைக் குறிக்கும். அவன் கேரள, சோழ, ஒய்சளர்களைப் போரில் வென்று தன் தம்பியான வீரபாண்டியனைக் கொங்கு நாட்டின் அரசனாகப் பொறுப்பேற்கச் செய்தான் என்பதைத் தெரிவிக்கிறது. அக்கல்வெட்டு கிரந்த எழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. என். சேதுராமன், “முதலாம் சடையவர்மன் வீரன் 1253 - 1283 வரை அரசாண்டான். இரண்டாம் சடையவர்மன் வீரன் 1254 - 1265 வரை காணப்படுகிறான். 1266இல் இராசகேசரி வீரபாண்டியன் என்பவன் கொங்கு மண்டலத்தில் முடி சூடுகிறான். இவன் இருபது ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளான். இவனுடைய கல்வெட்டுகள் கொங்கு மண்டலம் முழுவதும் கிடைக்கின்றன. எனவே சுந்தரபாண்டியனால் நியமிக்கப்பெற்றவன் என்பதில் ஐயமில்லை. எனவே இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் 1266இல் மதுரையைவிட்டு நீங்கி இராசகேசரி வீரபாண்டியன் என்ற பெயரில் கொங்கில் முடி சூடினான் என்பதை அறியலாம். கொங்கு நாட்டு மரபுப்படி வீரபாண்டியன் இராசகேசரி என்ற பட்டமும் புனைந்தான்” என்று விளக்கியுள்ளார்.[4] இவ் இராசகேசரி வீரபாண்டியனுடைய மூன்று கல்வெட்டுகள் (136,137,138) சிங்களாந்தபுரம் என்னும் ஊரில் கற்பூரநாராயணப் பெருமாள் கோவில் கருவறையில் காணப்பெறுகின்றன. இக் கல்வெட்டு அவ்வரசனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றதாகும். இவ்வரசன் காலத்து ஏழு கல்வெட்டுகள் நான்கு ஊர்களில் காணப்பெறுகின்றன. கோவில் திருப்பணிக்குச் செக்கு முதலியவற்றால் வந்த வரியை நிலையான முதலீடாக ஆக்கிக் கொடுத்த செய்தியும், திருநிலைக்கால்கள் அமைத்துக் கொடுத்த செய்தியும் இக்கல்வெட்டில் விளக்கப் பெற்றுள்ளது.

---

3. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 24 - 197.

4. என் சேதுராமன். <u>பாண்டியர் வரலாறு</u>, ப.

சேலம் கல்வெட்டுகள் :

சேலம் சுகவனேசுவரர் கோவிலில் கோப்பரகேசரிவர்மனின் 2,5,6ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் ஆண்டு குறிப்பிடப்பெறாத ஒரு கல்வெட்டும் உள்ளன. இவற்றில் கிளிவண்ணமுடையாருக்கு நந்தாவிளக்கு எரிக்கப் பொன்னைக் கொடையாக அளித்த செய்தி இடம் பெற்றுள்ளது. கோவிராசகேசரிவர்மருடைய 3,5 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ள இரு கல்வெட்டுகள் (147,148) உள்ளன. அவை முதலாம் ஆதித்த சோழனுடைய காலத்தில் பொறிக்கப் பெற்றவையாகும்.

அக்கோவிலிலுள்ள பாண்டியர் கல்வெட்டுகளில் 'கோச்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்' என்று ஒரு கல்வெட்டிலும் (151) 'ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவருக்கு' என எட்டுக் கல்வெட்டுகளிலும் (152 - 157, 159 - 160) குறிக்கப் பெற்றுள்ளன. இக் கல்வெட்டுகள் அனைத்தும் அவ்வரசனுடைய 24 ஆம் ஆட்சியாண்டு முதல் 27ஆம் ஆட்சியாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பொறிக்கப் பெற்றவையாகும். சடையவர்மன் மரபில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மட்டும் கி.பி. 1250 முதல் 1284 வரை ஆட்சி புரிந்துள்ளமையை அறியலாம். எனவே அக் கல்வெட்டுகள் அவ்வரசனுடைய காலத்தைச் சார்ந்தவை எனக் கொள்ளுதலே பொருந்தும். அவை சுகவனேசுவரர் கோவிலில் கொடையாளர்கள் பலர் போதிகை, தூண், நிலைகால் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

தம்மம்பட்டிக் கல்வெட்டுகள் :

தம்மம்பட்டி என்னும் ஊரில் நரசிங்கப்பெருமாள் கோவிலில் நான்கு கல்வெட்டுகள் பொறிக்கப்பெற்றுள்ளன. அவை கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் விசயநகர ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவை. அக்கோவிலுக்குத் தேவர்மறி, புளியங்குறிச்சி, பூடிதிபறுகு, அருளம்பள்ளி, மாறாடி சீர்மைக்குட்பட்ட மங்கைவார்பட்டி, மண்மலைச் சீர்மைக்குட்பட்ட செங்கிணறு ஆகிய கிராமங்களைத் திருவிடையாட்டமாக அளிக்கப் பெற்றதாக மூன்று கல்வெட்டுகள் (179, 180, 182) கூறுகின்றன. ஒரு கல்வெட்டு (181) திம்மயநாயக்கர் என்பவர் கோவிலுக்குக் கொடையாக நிதியைச் சேர்க்க வழிசெய்த முறையை விளக்குகிறது. நான்கு திசைகளுக்கும் சென்று வாணிகம் புரிந்த செட்டி வியாபாரிகள் அவ்வூருக்குள் கொண்டு வந்த பொருள்களுக்கும், வெளியில் கொண்டு சென்ற பொருள்களுக்கும் தலைச்சுமையாகக் கொண்டு வந்த பொருள்களுக்கும் விதிக்கப்பெற்ற வரியின் வருவாயில் பாதியை அக்கோவில் கருவூலத்தில் கொடையாகச் சேர்க்கப் பெற்ற செய்தியைக் கூறுகிறது.

திருச்செங்கோடு கல்வெட்டுகள் :

திருச்செங்கோட்டில் 38 கல்வெட்டுகள் (199 - 236) பொறிக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் காலத்தால் முந்தியது கோவிராசகேசரிவர்மரான முதலாம் ஆதித்த சோழனின் ஆறு கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. கோப்பர கேசரியான முதலாம் இராசேந்திர சோழனின் 'திருமன்னி வளர' என்ற மெய்க்கீர்த்தி தொடங்கிய கல்வெட்டொன்றும் இடம்பெற்றுள்ளது. அரசன் பெயர் குறிப்பிடாத 'கோப்பரகேசரிவர்மரான' எனத் தொடங்கும் ஒன்பது கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு கல்வெட்டில் (209) 'கோப்பரகேசரி பன்மராகிய ஸ்ரீ ராசேந்தர சோழ தேவர்க்கு யாண்டு 18 ஆவது' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. அக் கல்வெட்டுகள் அனைத்தும் கொடைச் செய்தியைக் குறிப்பிடுகின்றன. அக் கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கொண்டு அவையனைத்தும் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் பொறிககப் பெற்றனவாகக் கருதலாம். அவ்வரசனின் ஐந்தாம் ஆட்சியாண்டுத் தொடங்கி 28ஆம் ஆட்சியாண்டு வரையுள்ள கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் திருச்செங்கோடு கோவில் பெருதிரு ஏகாதசி கணப்பெருமக்கள் திருவாதிரை கணப்பெருமக்கள் திருவோணக் கணப்பெருமக்கள் துவாதசி கணப்பெருமக்கள் ஆகியோர் குறிப்பிடப்பெற்றுள்ளனர். கணப்பெருமக்கள் என்போர் ஊரில் இன்றியமையாத செயல்களைக்கண்காணித்து வந்த

பொறுப்பாளர்கள் ஆவர். இக்கணப் பெருமக்களிடம் 'காசெட்டாங்கல்' என்னும் அளவினால் நிறுக்கப்பெற்ற பொன்னைக்கொடுத்து அதனின்றும் வந்த வட்டியால் கோவில் பிராமணர்களுக்கு உணவு படைத்துள்ள செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வறச்செயலுக்குப் பலர் கொடை அளித்துள்ளனர். இவ்வாறு பல்வேறு கொடையாளர்கள் அளித்த பொன்னைப் பெற்ற கணப்பெருமக்கள் அதனை வட்டிக்கு விட்டு அதனின்றும் வந்த வருவாயைக் கொண்டு இருவர் வீதம் பிராமணர்களுக்கு உணவு ஊட்டுவதாக உறுதியளித்த செய்தி ஒரு கல்வெட்டில் (213) இடம்பெற்றுள்ளது. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் காலத்தைச் சார்ந்த மூன்று கல்வெட்டுகள் (215, 216, 218) பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்று உலகம் காத்த கன்னையன் என்பவருக்கு அவருடைய சிறப்பைப் போற்றி நடுகல் எடுத்த செய்தி குறிப்பிடப் பெறுகிறது. விசயநகர அரசர் கிருட்டிணதேவராயர் ஆட்சியின்போது (கி.பி. 1522) பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில் அலுவலர்கள் பலரை நியமித்துள்ள செய்தியுடன் உழவுக் குடிக்கு ஏரி ஒன்றுக்கு ஐந்து பணம் வீதமும் கைக்கோளர் முதலியார்க்கு முதலிரண்டாண்டுளுக்கு வரிநீக்கம் செய்யப்பெற்றுப் பின்னர்த் தறிக்கு இரண்டு பணமும் மனை ஒன்றுக்கு ஒருபணமும் ஆக மூன்று பணம் வரிவிதிக்கப்பெற்ற செய்தி விளக்கப் பெற்றுள்ளது.

இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகள் :

திருச்செங்கோட்டுக் கைலாயநாதர் கோவில் தெற்குச்சுவரின் அடித்தளத்தில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டொன்று (221) விசயநகர அரசர் சதாசிவராயர் (கி.பி. 1561) காலத்தைச் சார்ந்தது. அக் கல்வெட்டு சீரிய விருத்தபாவால் அமைந்தது. இப்பாடல் கி.பி. 1685இல் சதாசிவ பண்டிதரால் எழுதப்பெற்ற 'திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை' என்னும் நூலில் சதாசிவராயரின் சிறப்பைப் போற்றும் பாடலாக இடம் பெற்றுள்ளது.

சீரார்ச் காப்தத்தி லாயிரமு நானூறு செல்கவெழு பத்துமூன்றின்
திரமான துன்மதிச் சித்திரைத் திங்களைச் சேர்ந்தவிரு பத்தைந்தினிற்
பூராய பூர்வபட் சந்திசக ஞந்தசமி பூசமாம் மேனாளிலே
புவியாள் சதாசிவ மகாராயர் ஜெகதேவு பூபால னுக்குதவவே
வீராக மப்பிரபு நரசிங்க ராமாஞ்சி மிகுகொங்கு நாடாளுனாள்
விப்ரகுல சர்வயன் தேவசா யாதிபன் வீறா வனந்தபூபன்
ஏரான செங்கோட்டில் மேவு கைலாயர்முன் எழிலான கற்கம்பமே
இன்பொடு நிறுத்தினன் கீர்த்திப் பிரதாபமது வீமசேத னவுநிற்கவே[5]

என்பது அப்பாடலாகும்.

கி.பி. 1584 இல் மதுரையில் விசுவநாத சொக்கலிங்க நாயக்கர் ஆட்சிபுரிந்தபோது அவர் தலைமையின் கீழிருந்த சேஷாத்திரி பிள்ளை என்பவர் திருச்செங்கோட்டுத் திருக்கைலாயநாதருக்குக் கோபுரம் ஒன்றைக் கட்டுவித்துக் காசிவிசுவநாதர் ஆலயக் கந்றளியை எடுப்பித்த செய்தி பாடல் கல்வெட்டாக (229) இடம்பெற்றுள்ளது. அப்பாடல் கல்வெட்டுக்கு முன் 'ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1585 இதன்மேற் செல்லாநின்ற சோபகிருது வருஷம் ஆவணி மாதம் ஸ்ரீமது விசுவநாத சொக்கலிங்க நாயக்கரவர்கள் ராஜ்ஜிய பரிபாலனம் பண்ணுகையில்' என்ற செய்திக்குப்பின் இவ் வெண்பா வடிவில் கல்வெட்டு இடம்பெற்றுள்ளது.

நணிய கயிலாய நாதருக்குப் பூசை
அணிகிளரும் கோபுரமுண் டாக்கிப் - பனிமலைமேற்
காசிவிசுவ நாதருக்குக் கற்கோ யிலும்பணித்தான்
தேசருணற் சேஷாத் திரி[6]

5. சதாசிவ பண்டிதர், திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, 1913, பாடல் எண் 59, பக் : 15-16
6. சதாசிவ பண்டிதர், திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை, 1913, பாடல் எண் 154, பக் : 37

இப்பாடல் பகுதி மட்டும் திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையில் சேஷாத்திரி பிள்ளையின் பெருமையை உணர்த்தும் ஏழு பாடல்களில் ஈற்றுப் பாடலாக இடம் பெற்றுள்ளது.

விசயநகர ஆட்சியில் அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் என்பவரால் கல்மண்டபம் ஒன்று கி.பி. 1600இல் கட்டப்பெற்ற செய்தி பொறிக்கப்பெற்றுள்ளது. அக் காங்கேயன் சுப்பிரமணியர் கோவிலின் முன்மண்டபத்தைக் கட்டுவித்த செய்தி வேறொரு கல்வெட்டில் (220) குறிப்பிடப் பெற்றுள்ளது. மீண்டும் அவரால் கி.பி. 1619இல் குமாரசாமியார் மண்டபத்திற்கும் பெரியாண்டார் சன்னதிக் கூடத்திற்கும் சிங்கக்காலும், குதிரைக்காலும், தூண்கள் இருபத்திரண்டும், சக்கரம் கண்டக்கால் பன்னிரண்டும், தளவரிசையும் அமைத்துத் திருப்பணி செய்வித்த செய்தி (225) குறிப்பிடப் பெற்றுள்ளது.

கி.பி. 1012 இல் திருச்செங்கோடு வட்டக் குமாரமங்கலம் என்னும் சிற்றூரான மேட்டுப்பாளையத்தில் வசித்த தோட்டிகள் பதினால்வர் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். அக்கிராமத்தில் அத்தோட்டிகள் அனைவருக்கும் அரசாங்கத்தால் ஊதியம் வழங்கப் பெற்ற பின்னர் அவர்களுக்குள் ஊதியவேறுபாடு இருப்பின் அவ்வேறுபாட்டைக் களைந்து அனைவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுதல் வேண்டுமென்று அவர்களுக்குள் உடன்பட்டுக் கல் வெட்டிக் கொண்டனர். ஊழியத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பினும் ஊதியத்தில் சமபங்கீடு செய்து கொண்ட முறை போற்றத்தக்கது.

பருத்திப்பள்ளிக் கல்வெட்டுகள் :

பருத்திப்பள்ளி என்னும் ஊரிலுள்ள கோவில்களில் 15 கல்வெட்டுகள் (262 - 276) பொறிக்கப்பெற்றுள்ளன. இக் கல்வெட்டுகளில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டொன்றும், விசயநகர ஆட்சிக்காலத்தில நான்கு கல்வெட்டுகளும், பாண்டியர் ஆட்சியின் போது பொறிக்கப்பெற்ற ஆறு கல்வெட்டுகளும் அடங்கும். பாண்டிய அரசன் மூன்றாம் சடையவர்மன் வீர பாண்டியனின் ஒரு கல்வெட்டும் ,கோச்சடையவர்மன் சுந்தரபாண்டியன் பெயரில் ஒரு கல்வெட்டும், பட்டமும் சிறப்புப் பெயருமின்றி 'ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு' எனத் தொடங்கும் நான்கு கல்வெட்டுகளும் இடம்பெற்றுள்ளன. இந்த ஐந்துகல்வெட்டுகளும் முதலாம் சடையவர்மன சுந்தரபாண்டியன் காலத்தைச் சார்ந்தவை எனக் கொள்ளுதல் பொருந்தும். சேலத்திலுள்ள கிளிவண்ணமுடையார் கோவில் கல்வெட்டுகளைப் போலவே இவையும் கருத்தமைப்பில் ஒத்துள்ளன.

இச்சடையவர்மன் சுந்தரபாண்டியனின் பருத்திப்பள்ளிக் கல்வெட்டுகளைக் கருத்தில் கொண்டு சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் "இவன் ஒரு கொங்கு பாண்டியனோ அல்லது மதுரைப் பேரரசனோ என்று கூற இயலாது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இவன் இருபத்தெட்டு ஆண்டுகள் வரை ஆட்சி செலுத்தி இருக்கிறபடியால் மதுரைப் பேரரசனாக இருக்க முடியாது. கொங்கு பாண்டியனாகவே இருக்கக்கூடும் என்று கூறலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.[7] இவ் ஆசிரியர் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சிக்காலம் கி.பி. 1251-1272 என்று இருபது ஆண்டுகளாக எண்ணி இவ்வாறு கூறியுள்ளார். ஆனால் மதுரைப் பாண்டியப் பேரரசில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி. 1250 மதல் 1284 வரை முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சிபுரிந்துள்ள செய்தியைக் கல்வெட்டுகளின் அடிப்படையில் ஆய்ந்து என். சேதுராமன் விளக்கியுள்ளார்.[8] இவர் கூறியுள்ள காலவரை ஏற்புடைத்தாகும்.

பருத்திப்பள்ளி ஏரியில் புவனேசுவரர் கோவிலில் உள்ள கல்வெட்டு (273) சாளுவ அரசர் தர்மராயர் காலத்தைச் (கி.பி. 1498)ச் சார்ந்தது. அக் கல்வெட்டு சுவாதபுரம் என்னும் ஊரில்

7. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார், <u>கொங்கு நாட்டு வரலாறு</u>, பாகம் : 2, பக்கம் : 58.

8. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் : 123 - 130.

கோவிலுக்குக் கொடை அளித்த செய்தியை விளக்குகிறது. அக்கல்வெட்டின் மற்றொரு பிரதி சுவாதபுரம் (சௌதாபுரம்) என்னும் ஊரிலுள்ளது. இதேபோன்று ஓமலூர் வட்டம் கோபிநாதபுரத்திலுள்ள கல்வெட்டு கி.பி. 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக் கல்வெட்டின் பிரதியொன்று (134) சக்கரச்செட்டிப்பட்டி என்னும் ஊரில் பொறிக்கப்பெற்றுள்ளது. கொல்லிமலை அறப்பள்ளி ஈசுவரர் கோவிலில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு ஒன்று வடலூர்பட்டி என்னும் ஊரின் தொடக்கப்பள்ளி அருகில் (318) பொறிக்கப் பெற்றுள்ளது.

தாரமங்கலமும் கட்டிமுதலிகளும் :

தாரமங்கலப் பகுதியைக் கெட்டிமுதலிகள் என்னும் மரபினர் ஆண்டனர். அன்றைய அரசர்களாகிய ஒய்சளர்களுக்கும், பாண்டியர்களுக்கும் பணிந்து சிற்றரசாக ஆட்சிபுரிந்தனர். ஒய்சளரும் பாண்டியரும் வீழ்ச்சியுற்ற பின்னர் விசயநகரப் பேரரசர்க்குப் பணிந்து ஆட்சி புரிந்தனர்.

தாரமங்கலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் கொங்கான வீர சோழ மண்டலத்து வடபூவாணிய நாட்டைச் சார்ந்திருந்தது. இவ்வுண்மையை அவ்வூர்க் கயிலாயநாதர் கோவிலில காணப்பெறும் கல்வெட்டில் (192) 'கொங்கான வீர சோழ மண்டலத்து வடபூவாணி நாட்டுத் தாரமங்கலம்' எனும் தொடர் தெரிவிக்கிறது.

இப்பூவாணி நாடு கொங்கு மண்டலத்தின் இருபத்து நான்கு பிரிவுகளுள் ஒன்று என்பதைக் 'கொங்கு மண்டல சதகம்' குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டுகள் அச்சுதராயர், சதாசிவராயர் ஆட்சிக் காலத்தில் வெட்டப் பெற்றுள்ளன. இவற்றில் 'வணங்காமுடிக் கட்டிமுதலி' என்பவர் குறிக்கப் பெறுகிறார். விசயநகர ஆட்சியினரின் கல்வெட்டுகளில் வணங்காமுடி பற்றிய செய்தி அறியப்பெறுவதால் இவ்வணங்காமுடி முதலி விசயநகர ஆட்சியின் கீழ் ஒரு சிற்றரசனாக ஆட்சி புரிந்துள்ளமை தெளிவாகிறது. கி.பி. 1541ஆம் ஆண்டின் அச்சுதராயர் கல்வெட்டும் (194) கி.பி. 1568 ஆம் ஆண்டின் வேங்கடன் கல்வெட்டும் (195) வணங்காமுடி முதலி இருபத்தாறு ஆண்டுகள் தாரமங்கலத்தை ஆட்சி புரிந்ததாகத் தெரிவிக்கிறது. கல்வெட்டுகளில் 'வண்ணத்தடுக்கும் புலிக்கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டை முதலியார் இம்முடி கட்டி முதலியார்' என்று குறிப்பிடப்பெற்றுள்ளனர். வணங்காமுடி கட்டிமுதலி மரபினர் சங்க இலக்கியம் கூறும் கட்டி மரபினராக இருத்தல் கூடும் எனவும்[9] தொண்டை மண்டலத்து வேளாள மரபினர் எனவும்[10] கொங்கு வேளிர் மரபினர் எனவும்[11] அவர்கள் கவுண்டர்களின் ஒரு பிரிவினரே எனவும்[12] பல்வேறு வகையில் அறிஞர் பலர் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர். தாரமங்கலத்துக்கோவில் கல்வெட்டுகளில் கட்டிமுதலிகள் 'வெள்ளாளர் நிலங்கிழார் . . . . வணங்காமுடி முதலியா' என்று குறிப்பிடப் பெற்றுள்ளனர். இவர்கள் வேளாளர் மரபினர் என்பதை இத்தொடர் உறுதி செய்கிறது.

கயிலாயநாதர் கோவில் கல்வெட்டுகள் 'மஸ்தகுடோரி மகுடசூடாமணி மன்னர் வணங்கிலும் வணங்காத முடியான் முதலியார்' எனச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவ்வூரிலுள்ள இளமீசுவரர் கோவில் கல்வெட்டுகள் 'மஸ்தகுடோரி மகுடசூடாமணி வண்ணத்தடுக்கும் வாடாமாலையும் புலிக்கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார்' (193) எனக் குறிப்பிடுகின்றன. இவைகட்டி முதலிகள் பெற்ற பட்டமும் விருதும் சிறப்புமாகும். அவர்களுடைய வலிமையையும் பெருமையையும் விளக்குகின்றன. வண்ணத்தடுக்கு, வாடாதமாலை ஆகியவை அவர்களுடைய அரச சின்னங்களாகவும் புலி அவர்களுடைய கொடியின் சின்னமாகவும் இருந்துள்ளன.

---

9. மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, ப : 315, மயிலை சீனி. வேங்கடசாமி, கொங்கு நாட்டு வரலாறு, ப : 20.
10. மு. ஆரோக்கியசாமி, கொங்குநாடு - ஆங்கிலம், ப : 333.
11. புலவர் குழந்தை, கொங்குநாடு, ப : 162.
12. வீ. இராமமூர்த்தி, கொங்கு நாட்டு கவுண்டர்கள், ப : 302.

வணங்காமுடி கட்டிமுதலி தாரமங்கலத்துக் காவேரிப்பட்டணத்தைக் 'கோட்டை சமுத்திரம்' எனப் பெயர் மாற்றம் செய்து பிராமணரின் குடியிருப்பாக வழங்கியதை இளமீசுவரர் கோவிலிலுள்ள கல்வெட்டு (193) குறிப்பிடுகிறது. தாரமங்கலத்து இராமகூடலுக்கு 'வணங்காமுடி சமுத்திரம்' எனப் பெயரிட்டு அதையும் பிராமணர்களின் குடியிருப்பாகக் கொடுத்ததை சதாசிவராயர் கல்வெட்டு (195) குறிப்பிடுகிறது. தாரமங்கலத்துத் திருத்தோன்பட்டியை 'இளமசமுத்திரம்' எனப் பெயர் மாற்றம் செய்து கயிலாயநாதர்கோவிலுக்கும் இளமீசுவரர் கோவிலுக்கும் தேவதான இறையிலியாக வழங்கப் பெற்ற செய்தியும் (192) குறிப்பிடப்பெற்றுள்ளது. இக் கட்டிமுதலி சிதம்பரத்தில் தன்னுடைய பெயரில் 'வணங்காமுடி' என்னும் சைவ மடத்தை நிறுவியுள்ளார். அதனைப் பேணும் பொருட்டு ஏழுகரை நாட்டுப் பகுதியில் பல்வேறு வரிகளின் வாயிலாக வந்த வருவாய் அனைத்தையும் கொடையாக வழங்கியுள்ளார். இச் செய்தியை இளமசுவரர் கோவில் கல்வெட்டு (194) குறிப்பிடுகிறது. இக்கட்டிமுதலி காலத்தில் கயிலாயநாதர் கோவில் திருப்பணி செய்து முடிக்கப்பெற்றுள்ளது. இக்கோவில் கி.பி. 13ஆம் நூற்றாண்டு முதலே இருந்தது என்பதற்கு இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகளும் ஒய்சள வீரராமநாததேவர் கல்வெட்டுகளும் பொறிக்கப்பெற்று சான்றாக நின்று நிலவுகின்றன.

கயிலாயநாதர் கோவில், இக் கட்டிமுதலிகளின் குலதெய்வக் கோயிலாகக் கருதப்பெறுகிறது. தாரமங்கலத்தை அடுத்த இலவம்பட்டி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு (76) 'இம்மடி கட்டி முதலியாரோம் தேவஸ்தான தர்மம் . . . நம்முடைய குல ஸ்வாமியான தாரமங்கையின் சிவன் க்ஷேத்திரத்தில் வாழும் கைலசநாத சுவாமியார்க்கு' என்னும் கல்வெட்டுத் தொடரால் இதனையறியலாம். இக் கட்டிமுதலிகள் விசயநகரர் ஆட்சியின்போது பாளையக்காரர்களாக இருந்துள்ளமை "சாலிவாகன சகாப்தம் 1400 மேல் (கி.பி. 1478) அமரகுந்திக்குச் சேர்ந்த பாளயப்பட்டுக் குடையோன் 'கெட்டி' என்ற பேர் பெற்று வெள்ளாள சீயாத்தியானபடியாலே கெட்டி முதலியார் என்று பேர் வந்து பாளயக்காரனாயி சீர்மை அனுபவிச்சுக் கொண்டு வரும் காலத்தில்" என்னும் பகுதியால் அறியலாம்.[13] 'கெட்டி' என்பது அவருடைய பட்டம் என்பதையும் வெள்ளாளர் என்பது அவரது இனத்தையும் குறிப்பிடுகின்றது.

இளமீசுவரர் கோவிலிலுள்ள கல்வெட்டு (186) 'இவ்வூரிலுள்ள வெள்ளாழரில் நல்ல உடையப்பர் உள்ளிட்ட ஆறு முதலிகளும்' என்று குறிப்பிடுகிறது. இக் கோவிலிலுள்ள வீரராமநாத தேவரின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'நீருணி பெரிய இளமண், பெரிய உடையாண்டை முதலிய ஆறு முதலிகள்' குறிப்பிடப் பெற்றுள்ளனர். இம் முதலிகளின் தலைவராக இருந்தவர் சோமநாததேவர் என்பவராவார். இவருடைய மகன் ஸ்ரீ கண்ட தேவர். இவர் 'கௌட குடா மணி', 'வித்யாசமுத்திரம்' என்னும் பட்டங்களைப் பெற்றவர். ஸ்ரீ கண்ட தேவர் தம் தந்தையின் நினைவாக இளமீசுவரர் கோவிலில் சோமநாத தேவரின் திருவுருவத்தை எழுந்தருளுவித்தார். அதற்குத் தாமங்கலத்து ஆறு முதலிகளும் குருதட்சணை வழிபாட்டுக்காக நிலத்தைக் கொடையாக வழங்கியுள்ளனர். இவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் காணியான நிலத்தை இளமீசுவர் கோவிலுக்கு கொடையாக வழங்கியுள்ளனர்.

கண்டியதேவர் :

ஒய்சள வீரராமநாதன் ஆட்சிக்காலத்தில் ஆறு முதலிகளில் ஒருவராக இருந்த இளையபெருமாளின் மகன் நல்லுடையப்பர். சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி.1282) தன் தந்தையின் பெயரில் இளையபெருமாள் அகரம் என்ற இலட்சுமணச் சதுர்வேதி மங்கலத்தை அமைத்து பிராமணர்களுக்குக் கொடையாகக் கொடுத்தார். இளையபெருமாள் என்பது இலட்சுமணனின் பெயர். சுந்தரபாண்டியனின் 27 ஆம் ஆட்சியாண்டில் கண்டியதேவர் என்பவர் குறிப்பிடப் பெற்றுள்ளார். அவர் பூவாணிய நாட்டின் தலைவராக இருந்துள்ளார். அவர் கீழ் இம்

---

13. இரா. நாகசாமி (ப.ஆ), பாளையப்பட்டுகளின் வமிசாவளி தொகுதி 1, ப : 4.

முதலிகள் அறுவரும் ஊர்த்தலைவர்களாக இருந்துள்ளனர். சுந்தரபாண்டியன் திருமேனிக்குக், கண்டியத்தேவர் வாளுக்கும் தோளுக்கும் நன்மை உண்டாகும் பொருட்டுப் பூவாணி நாட்டுக், கோனகப் பள்ளியை இளமீசுவரர்க்கு கண்டியத் தேவரும் நாட்டவரும் கொடுத்துள்ளனர். (183) இவ்வூர் இன்று கோனகப்பாடி என வழங்கப்பெறுகிறது.

பெயர் சூடிய வழக்கம் :

இக் கெட்டிமுதலிகள் தங்கள் பெயரைக் குறிப்பிடும்பொழுது முன்னோர் பெயரை வரிசையாகக் குறிப்பிட்டோ அல்லது முன்னோர் பெயருடன் தம்முடைய பெயரைச் சேர்த்தோ குறிப்பிட்டனர். 'வணங்காமுடி முதலியார் நல்லுடையப்பர் கோட்டை முதலியார் இம்முடி கட்டி முதலியார்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளனர். இவ்வழக்கம் விசயநகர மன்னர்களின் நாயக்கர்கள் 'விசுவநாதநாயக்கர் வீரப்ப நாயக்கர் கிருஷ்ணப்ப நாயக்கர் திருமலை நாயக்கர்' என்று குறிப்பிடுவதை ஒட்டி அமைந்துள்ளது.

வாய்மைச் சிறப்பு :

இளமீசுவரர் கோவிலின் முகவாயிலில் கெட்டி முதலிகளின் வாய்மையைச் சிறப்பித்துக் கூறும் பாடல் கல்வெட்டொன்று (198) இடம்பெற்றுள்ளது. இக் கோவிலிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் இந்திய அரசு கல்வெட்டுத் துறையினரால் கி.பி. 1900 ஆம் ஆண்டில் படியெடுக்கப் பெற்றுள்ளன. ஆனால்

செங்கதிர் பன்னிரண் டீசர் பதினொன்று திக்கும்பத்து
கங்கையு மொன்பது வெற்பெட் டெழுகடல் கார்த்திகையா
றைங்கணை நான்மறை முச்சுடர் சாதி யவையிரண்டு
மங்கை வரோதயன் கட்டி முதலிதன் வார்த்தையொன்றே

எனும் இப்பாடல் கல்வெட்டு மட்டும் படியெடுக்கப் பெறாமல் இருப்பது வியப்பிற்குரியதாக உள்ளது. 'எழுகரை நாட்டு நம்பி' என்று பட்டம் பெற்ற சதாசிவ பண்டிதர் என்பவரால் கி.பி. 1685 இல் பாடப்பெற்ற 'திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை' என்னும் நூலில் கெட்டிமுதலிகளைச் சிறப்பித்துப் பாடிய 14 பாடல்கள் (246 - 261) இக் கல்வெட்டுப் பாடலின் சாயலை ஒத்து விளங்குகின்றன.[14]

சடையவர்மர் மரபு :

தாரமங்கலத்திலுள்ள பாண்டியர் கல்வெட்டுகளில் ஒன்று (186) சுந்தர பாண்டியனின் பதினான்காவது ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றுள்ளது. அக் கல்வெட்டின் காலம் 15-05-1290 ஆகும். அது இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டாகும். அக் கோவிலிலுள்ள பாண்டியர் கல்வெட்டுகள் நான்கும் இரண்டாம் சடையவர்மன் சுந்தரனின் ஆட்சிக்கு உரியவை என்று சிவகளை மு. சுப்பையா குறிப்பிட்டுள்ளார்.[15] ஆனால் அக்கல்வெட்டுகளில் ஒன்றில் (183) பாண்டியனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டு குறிக்கப் பெற்றுள்ளது. இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1277-1294) பதினேழு ஆண்டுகளே ஆட்சி புரிந்துள்ளான். எனவே அக் கல்வெட்டு முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பொருந்தி வருகிறது. காலக்குறிப்பும் ஓரளவு துணை செய்கிறது. அக் கல்வெட்டு முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் இருபத்தேழாம் ஆட்சியாண்டில் 26-12-1277இல் பொறிக்கப் பெற்றிருக்க வேண்டும்.

---

14. சதாசிவ பண்டித், <u>திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை</u>, பக்கம் : 60-64.

15. சிவகளை மு. சுப்பையா, <u>கொங்குநாட்டுக் கோவில்கள்</u>, பக்கம் : 255.

மற்றொரு கல்வெட்டு (186) இரண்டாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் ஆட்சியில் 15-05-1290 இல் பொறிக்கப் பெற்றுள்ளது. ஆனால் என். சேதுராமன் அக் கல்வெட்டு நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சார்ந்தது என்றும், அது 16-05-1317 இல் பொறிக்கப் பெற்றதாவும் குறிப்பிட்டுள்ளார்.[16] பிறிதொரு கல்வெட்டை (185) ஐந்தாம் சடையவர்மன் சுந்தரன் ஆட்சிக்காலத்தில் 02-08-1316 இல் பொறிக்கப்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.[17] ஆனால் அவரே சேலம் மாவட்டக் கார்குடியில் பொறிக்கப்பெற்றுள்ள மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியனின் (1297-1347) கல்வெட்டின் (95) காலம் 30-10-1318 என்று கணித்துக் குறிப்பிட்டுள்ளார்.[18] எனவே ஒரே காலத்தில் பாண்டிய நாட்டுத் தலைநகரை விட்டு நெடுந்தொலைவில் மூன்று பாண்டியர்கள் ஆட்சி செய்திருக்க இயலாது. அக் கல்வெட்டுகள் இரண்டும் இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்துக்குப் பொருந்தி வருவதால் அக் கல்வெட்டுகளும் அவர் காலத்தில் பொறிக்கப் பெற்றதாகக் கொள்ளுதலே பொருந்தும்.

மற்றொரு கல்வெட்டு (184) எட்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 1130-1347 ஆட்சியில் 24-07-1335 இல் பொறிக்கப்பெற்றதாகக் காலத்தைக் கணித்துக் குறிப்பிட்டுள்ளார்.[19] ஆனால் சேலம் மாவட்டத்தில் பாண்டிய அரசனுடைய கல்வெட்டுகளில் இறுதியாகக் கிடைத்திருப்பது மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியனின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் 30-10-1318இல் பொறிக்கப்பெற்ற கார்குடிக் கல்வெட்டேயாகும். (98). அக் கல்வெட்டிலும் பாண்டியர் ஆட்சியின்போது அவ்வூர்க்கோவிலைத் திருப்பணி செய்த குலசேகர தேவர் பெருமான் என்பவர் குறிப்பிடப் பெற்றுள்ளார். அதற்கும் சற்று முன்னர் ஒய்சளர்களின் ஆட்சி நிலைபெற்று இருந்தமைக்குச் சான்றாக அவ்வூரில் ஒய்சள வீரராமநாத தேவனின் 14 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1274) பொறிக்கப்பெற்ற இரு கல்வெட்டுகள் (188,189) இடம் பெற்றுள்ளன. ஒய்சளர்கள் சுந்தரபாண்டியனைத் தோற்கடித்து அவனிடமிருந்து திறையும் பெற்றனர். வெற்றிக் களிப்பில் ஒய்சளப் படைத்தலைவனாகிய கோபய்ய தண்டநாயக்கன் என்பவர் சிதம்பரம் கோவிலுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான். இராசராசனின் பதினேழாம் ஆட்சியாண்டின் சிதம்பரம் கல்வெட்டு இச் செய்தியைத் தெரிவிக்கிறது. கி.இ 1310இல் மன்னர் மாலிக்காபூர் படையெடுப்பும் நிகழ்ந்துள்ளது.எனவே அதற்குப் பின்னர் எட்டாம் சடையவர்மன் என்ற ஒருவன் ஆட்சி புரிந்து அவனுடைய கல்வெட்டு சேலம் மாவட்டத்தில் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்ளல் பொருந்தாது. காலக்குறிப்புகள் சுழற்சியாக குறிப்பிட்ட ஆண்டுகளின் இடைவெளிக்குப் பின் மீண்டும் பொருந்தும் என்பது இயல்பான ஒன்று. அதை அடிப்படையாகக் கொண்டு வலியுறுத்த இயலாது. தாரமங்கலத்துக் கல்வெட்டுகளில் மூன்று இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடையவை என்பதும் ஒரு கல்வெட்டு முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனுடையது எனவும் கொள்ளுதலே உண்மையாகும்.

கொங்குச் சோழர் மற்றும் கொங்குப் பாண்டியர் கல்வெட்டுகள் ஆறு மட்டுமே சேலம் மாவட்டத்தில் கிடைத்துள்ளன. அவற்றுள் சில ஆய்வுக்குரியவை. மேலும் சேலம் மாவட்டத்தைக் கொங்குப் பாண்டியர்களும், கொங்குச் சோழர்களும் ஆண்டமைக்குரிய அடிச்சுவடிகள் காண இயலவில்லை. பெரும்பான்மையான தஞ்சைச் சோழர், மதுரைப் பாண்டியர் கல்வெட்டுகளே மாவட்டம் முழுவதும் காணப்பெறுகின்றன. மேலும் அம் மன்னர்களின் ஆட்சியில் தலைமைப் பொறுப்பேற்ற குறுநிலத் தலைவர்கள் ஆண்டுள்ளமை தெளிவாக விளங்குகிறது. கொங்கு நாட்டின் காவிரியாற்றுக்கு மேற்கே கொங்கு சோழர்கள் மற்றும் கொங்கு பாண்டியர்களுடைய ஆட்சி நிலவியுள்ளது. காவிரியாற்றுக்குக் கிழக்கே சேலம் மாவட்டத்தில் தஞ்சைச் சோழர், மதுரைப் பாண்டியர் ஆட்சியே நிலவி இருந்தது என்பதை இக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம்.

---

16. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் : 161.

17. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் : 168.

18. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் : 158.

19. என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக்கம் : 208.

ஆறகளூர் கல்வெட்டுகள் :

ஆத்தூர் வட்ட ஆறகளூர் என்ற ஊரில் 48 கல்வெட்கள் உள்ளன. திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் 37 கல்வெட்டுகளும், கரியவரதராசப்பெருமாள் கோவிலில் 9 கல்வெட்டுகளும், சோளீசுவரமுடைய நாயனார் கோவிலில் இரு கல்வெட்டுகளும் பொறிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் சோழ அரசர்களுடைய கல்வெட்டுகள் எட்டும், பாண்டிய அரசருடைய கல்வெட்டுகள் ஏழும், விசயநகர அரசர்களின் கல்வெட்டுகள் பதின்மூன்றும், ஒய்சளருடைய கல்வெட்டு ஒன்றும், பெயர் தெரியாத பிற கல்வெட்டுகள் பத்தொன்பதும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பெரும்பான்மையான கல்வெட்டுகள் கோவிலுக்குக் கொடையாக வழங்கிய பொன், நிலம், கிராமங்கள் ஆகியவை பற்றியன. பிராமணர்களுக்கும் நிலம் இறையிலியாக வழங்கப் பெற்றுள்ளது. கொடைகள் அரசு மரபைச் சார்ந்தோராலும், தலிப்பட்டவர்களாலும் வழங்கப் பெற்றுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்தையது மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளாகும்.

உடன்படிக்கை :

இவற்றுள் இரு கல்வெட்டுகள் (21,38) அவ்வரசர் காலத்தில் குறுநிலத் தலைவர்களுக்கிடையே நிகழ்ந்த உடன்படிக்கையைத் தெளிவுபடுத்துகின்றன. இதேபோன்று இம்மன்னர் காலத்தில் குறுநில மன்னர்களிடையே நடந்த உடன்படிக்கைகள் பற்றிய கல்வெட்டுகள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உள்ளன. குலோத்துங்க சோழனின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலிசோழச் சம்புராயர் என்பவர் பொன்பரப்பின வாணகோவரையர்க்கும், குலோத்துங்க சோழ வாணகோவரையர்க்கும், அவர் மைத்துனர் காடவரையர்க்கும் உடன்பட்டு எழுதிக் கொடுத்த அடர் முறைமை உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது. அம் மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழ வாண கோவரையர்க்கும், திருக்கோவிலூரிலுள்ள மலையமானுக்கும் தங்கள் நாட்டெல்லைகள் பற்றிக் கருத்து வேறுபாடும் பூசலும் நேர்ந்தபோது, இருவரும் உடன்பட்டு ஆள்விளையாற்றின் தென்பகுதி வாணகோவரையனுக்கும், வடபகுதி மலையமானுக்கும் உரியவை என்றும், இருவரும் தங்கள் அரசனான குலோத்துங்க சோழரின் அரசுச் செயல்களுக்கு ஒத்துநின்று வேண்டிய உதவி புரியக் கடவர் என்றும் உடன்படிக்கையை மேற்கொண்டனர். திருவண்ணாமலை யிலுள்ள கல்வெட்டில்[20] குறுநிலத் தலைவர்கள் பதின்மர் சேர்ந்து அரசுக்குக் கேடு சூழக் காரணமாக இருந்த வாணகோவரையனுடன் பகைத்துச் செய்துகொண்ட உடன்படிக்கை இடம்பெற்றுள்ளது. மற்றொரு கல்வெட்டில் மலையன் ஆடையூர் நாடாழ்வானுக்கும் விக்கிரம சோழச் சம்புவராயர்க்கும் விடுகாதழகிய பெருமாளான இராசராச அதிகைமான் உடன்பட்டு எழுதிக்கொடுத்த உடன்படிக்கை இடம் பெற்றுள்ளது. மேலும் சம்புவராயனும் மலையமானும் செய்துகொண்ட உடன்படிக்கையும், இராசராச நீல கங்கரையன் என்பான் சம்புவராயன் காடவராயன் மூவேந்தரையன் என்ற மூவரோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளும் இடம் பெற்றுள்ளன. எனவே இவ்விரு ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் ஒரே அரசர் காலத்தில் பொறிக்கப் பெற்றுள்ளன. இருவிடங்களிலும் அதே குறுநிலத் தலைவர்கள் இடம் பெற்றுள்ளனர் என்பதும் கருதத்தக்கது. இதனால் சோழ அரசர் காலத்தில் குறுநிலத்தலைவர் பலர் தத்தம் நாடுகளில் தனித்தன்மையோடு ஆட்சி புரிந்து வந்தனர் என்றும், அவர்கள் அனைவரும் சோழ அரசனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு ஊறு நேர்ந்தபோது உரிய காலத்தில் உதவினர் என்பதும், குறுநிலத் தலைவர் பகைமை பூண்டபோது மக்கள்மீது பற்றுகொண்ட பிற தலைவர்கள் அவரை எதிர்த்து ஒழித்தனர் என்பதையும் அறியலாம்.

இக்குலோத்துங்க சோழ வாணகோவரையன என்ற குறுநிலத்தலைவன் தடாவூர் ஏகாம்பரேசுவரர் கோவிலில் கொடை அளித்த செய்தி பற்றி நான்கு கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. திருப்பணி, திருவமுது, சாத்துப்படி முலியவற்றுக்காக நன்செய் புன்செய் நிலம் அளித்த செய்தி

20. <u>தென்னிந்தியக் கல்வெட்டு, தொகுதி 8,</u> 106.

இடம்பெற்றுள்ளது.

கொடைகள் :

திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் அவ்வூரில் வாழ்ந்த சிறுத்தொண்டன் என்பவன் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய எம்பெருமானடிகளை எழுந்தருளச்செய்தார். அத் திருமேனி களுக்குத் திருமஞ்சனம் ஆட்டவும், திருவிளக்கு எரிக்கவும், திருப்பள்ளித்தாமம் கட்டவும் மற்றும் கோவில் செலவினங்களுக்கும் ஐயாயிரம் காசுகள் கொடையாக வழங்கிக் கோவில் கருவூலத்தில் சேர்க்கப் பெற்றன. (20) குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு மலையனுடையான் செம்பை ஆழ்வான் ஏன்பவன் தன் காணியான இலத்திப்பாடி நிலத்தை 135 பொன்னுக்கு விற்ற செய்தி ஒரு கல்வெட்டில் (18) குறிப்பிடப்பெற்றுள்ளது. இரண்டாண்டுகள் கழித்துப் பொறிக்கப்பெற்றுள்ள வேறொரு கல்வெட்டில் (19) அந்நிலத்தின் மீதான வரிகளை அரசன் நீக்கி ஆணை பிறப்பித்த செய்தி கூறுகிறது. அக்கோவில் அமுதுபடிக்காக தொண்டைமான் தங்கை நாச்சியார் நான் ஒன்றுக்கு இருநாழி அரிசி கொடுத்ததையும் (23) நந்தாவிளக்கெரிக்கக் காவிரிப்பாக்கத்துக் கவுசிகன் ஒற்றிக்கொண்டான். என்பவனிடமிருந்து கோவில் முப்பது வட்டத்துச் சிவ பிராமணர் ஈராயிரம் காசுகளைக் கொடையாகப் பெற்ற செய்தியையும் ஏழு திருநந்தாவிளக்குகளை எரிக்க நாற்பத்தொன்பது பசுக்களைக் கொடையாகப் பெற்ற செய்தியையும் குறிப்பிடுகிறது. அந்நாளில் ஒரு நந்தாவிளக்கு நாள்தோறும் எரிய ஏழு பசுக்கள் வீதம் கொடையாக அளிக்கப்பெற்று ஈடுசெய்யப் பெற்றுள்ளது. பிறந்தநாள் விழாவின்போது கோவில் திருவிழாவும் திருப்பணியும் நடைபெறுதல் வேண்டிக் கொடையாக நிலம் வழங்கப் பெற்றுள்ளது. (26) திருநந்தவனம் ஒன்றை அமைத்து அதைக்காக்க இறையிலி நிலம் (27) வழங்கப்பெற்றுள்ளது.

கோவில் பூசைநாள் உரிமையைப் பெற்றிருந்த தேவ... சானி என்ற பெண் கோவில் அணிகலன்களைத் திருடிய காரணத்தால் அவளைச் சிறை வைத்து அவளுடைய பூசை உரிமையையும், அவளுடைய மருமகள் பூசை உரிமையையும் பறித்தனர். அவ்வுரிமையைத் திருஞானசம்பந்த பண்டிதர் 250 பணம் கொடுத்து விலைக்கு வாங்கி கோவில் முப்பதுவட்டத்துக் காணி உடைய சிவ பிராமணர்க்கு(29) விற்றுள்ளார். கோவில் பூசை செய்த பொன்பரப்பினான திருஞானசம்பந்தபிரமராயர் உள்ளிட்ட மூவர் தங்கள் கோவில் பூசை உரிமையை 'விலைப் பிரமாணம்' செய்து விற்றுள்ளனர். அந்நாளில் ஒருவர்க்கு உரிமையுடைய பூசை உரிமையைப் பிறருக்கு விற்கும் உரிமை பெற்றிருந்தமையை அறிய இயலுகிறது.

ஆறகளூரிலுள்ள திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புற மண்டபத்திலுள்ள கல்வெட்டில் (20) அவ்வூரில் வாழ்ந்த செல்வனான சிவத்தொண்டன் என்பவர் குறிப்பிடப் பெற்றுள்ளார். அவர் அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னும் தேவார அடியவர்கள் மூவரை எழுந்தருளுவித்து பூசை செய்ய ஐயாயிரம் காசுகளைக் கருவூலத்தில் ஒடுக்கிய செய்தி கூறப்பெற்றுள்ளது. ஈண்டு மாணிக்கவாசகர் குறிப்பிடப்பெறவில்லை என்பது கருதத்தக்கது. சுந்தரர்பாடிய திருத்தொண்டத்தொகையிலும், திருத்தொண்டத் திருவந்தாதியிலும், சேக்கிழாரால் பாடப்பெற்ற பெரிய புராணத்திலும் மாணிக்கவாசகர் குறிப்பிடப்பெறவில்லை, இக்கல்வெட்டு பதின்மூன்றாம் நூற்றாண்டில் பொறிக்கப் பெற்றுள்ளது. எனினும் திருமுறைகள் நம்பியாண்டார் நம்பியவர்களால் தொகுக்கப்பெற்றமையால் மணிவாசகர் காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டாகவே கருதலாம்.

இவ்வூரிலுள்ள மற்றொரு கல்வெட்டில் (11) திருமேற்றளி நக்கன் என்று சிவபெருமான் குறிப்பிடப் பெற்றுள்ளார். நக்னன் என்ற வடசொல்லே நக்கன் என்று மருவியது. ஆடையில்லாதவர் எனறு பொருள்படும். சிவபெருமானின் ஐந்து திருமுகங்களில் மேற்கு நோக்கிய முகத்தைக் குறித்து வழிபடுதலைக் குறிக்கும். திருமேற்றளி என்பது ஊரின் மேற்கே உள்ள கோவிலையும் குறிக்கும்.

பிறிதொரு கல்வெட்டில் (22) பரிவார நாயன்மார்க்குத் திருவிளக்கெரிக்க வரிவிலக்கு அளிக்கப்பெற்ற செய்தி இடம்பெற்றுள்ளது. பரிவார தெய்வங்கள் என்பது கோவிலின் இன்றியமையா உறுப்பாகும். சிவன் கோவிலில் வினாயகர், முருகர், சூரியர், சந்திரர், பைரவர், தட்சிணாமூர்த்தி, துர்க்கை ஆகியோர் பரிவாரத் தெய்வங்களாகப் புடைசூழ இருப்பது வழக்கம். ஆனால் இக்கல்வெட்டில் அறுபத்து மூன்று நாயன்மார்களும் பரிவாரத் தெய்வங்களாகக் குறிப்பிடப் பெற்றுள்ளமை சிறப்பாகக் கருதத் தக்கதொன்றாகும்.

பசு என்பது ஆவுக்கும் காளைக்கும் பொதுப்பெயராகக் குறிப்பிடும் வழக்கம் இருந்துள்ளது. 'பசுவேறித் திரிவானோர் பவன்' என்று இடபத்தைக் குறிப்பிடுகிறது.[21] 'நம் பசுக்களிற் சேக்களிலே ஆண்டுதோறும் பத்து சே ரிஷபமாக விடவும்' என்றும் கல்வெட்டுத் தொடரில் (46) காணும் சே ன்னும் சொல் ஆண்பால் பெயரைக் குறிக்கும். தொல்காப்பியர் கால வழக்கிலும்

சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு
யாத்த ஆண்பாற் பெயரென மொழிப[22]

என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. சே எனும் அவ்வழக்கு தொன்று தொட்டு இருந்துள்ளமையை அறியலாம். இக்கல்வெட்டில் ரிஷபம் என்பது கோவில் காளையைக் குறிக்கும்.

பிறிதொரு கல்வெட்டில் (57) கரிய வரதராசப்பெருமாள் கோவில் ஸ்தானிகர் மூவர்க்கு அரசர் 'பச்சை வடம் குல்லாவும் குடுத்து குதிரை குடையும் குடுத்து' சிறப்பு செய்துள்ள செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. பச்சைவடம் என்பது மேலாடையைக் குறிக்கும். இன்றைய வழக்கில் பொன்னாடை போர்த்திச் சிறப்பு செய்தலைப் போலவாகும். குல்லா என்பது தலையணியாக சுற்றும் ஆடையைக் குறிக்கும். அந்நாளில் சிறப்பு செய்தல் வழக்கும் இருந்துள்ளதை இதனால் அறியலாம்.

மற்றொரு கல்வெட்டில் (26) கோதண்டராமன் சந்திக்கும் திருநாளுக்கும் திருப்பணிக்கும் உடலாக மகதை மண்டலத்தில் நன்செய், புன்செய் நிலம் விடப்பெற்ற செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. 'கோதண்டராமனாகிய ஐந்தாம்சடையவர்மன் சுந்தரன் 1304இல் மார்ச்சு மாதம் 18 ஆம் தேதியிலிருந்து ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதிக்குள் முடிசூடினான்'[23] என்பதால் பாண்டியர் தன் பெயரில் அந்திகாலப் பூசை நடத்தியுள்ளமை விளங்கும். இக் கல்வெட்டில் 'இவ்வூர் நாயன்மார்க்கும் புறவூர் நாயன்மார்க்கும்' தேவதானம் திருவிடையாட்டமாக நிலம் விடப்பெற்றுள்ள செய்தி இடம் பெற்றுள்ளது. நாயன்மார் என்பது உள்ளூர் வெளியூரில் வாழ்ந்த சிவனடியார்களைக் குறிக்கும்.

பல கல்வெட்டுகளில் 'திருவெழுத்து இவை துல்யம் (27), இவை திருவெழுத்து துல்யம் (31), திருஎழுத்து துல்யம் (32) என இறுதியில் குறிப்பிடப் பெற்றுள்ளன. அது அரசனின் ஒப்புதல் பெற்றமையைக் குறிக்கும் சொல்லாகும்.

வழக்கும் நீதியும் :

ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் முப்பது நாள் பூசை வட்டமும் திருஞானசம்பந்த பண்டிதர்க்கு உரிமையாக இருந்தது. பசுபதி பண்டிதர் என்பவர் நம்பியார் அழகியார்க்குரிய அப்பூசை உரிமையும் பதினைந்து நாள் உரிமை தனக்கு உண்டு என்றும் அதற்கான

---

21. தேவராம் 760 - 4

22. <u>தொல்காப்பியம்</u>, பொருள். 557.

23. என். சேதுராமன், <u>பாண்டியர் வரலாறு</u>, பக்கம் : 166.

கோவில் ஆணை ஓலை உண்டென்றும் கூறி உரிமை கொண்டாடினர். பின்னர் அவர்க்கு ஏழரைநாள் பூசை உரிமை அளிக்கப்பெற்றது. அதை மறுத்து அவர் பத்தெட்டுத் தலைமுறையாக அப்பதினைந்துநாள் உரிமையைத் துய்த்து வருவதாகக் கூறி அம்முடிவை ஏற்க மறுத்தார். பின்னர் ஊரைவிட்டு வெளியில் சென்றிருந்த நாட்டார் திருஞானசம்பந்தரை ஓலை கொடுத்து வரவழைத்தனர். வழக்கை எடுத்துரைத்தனர். பின்னர் அந்நாட்டார் முற்றுப்பெறாத நிலையிலிருந்த அவ்வழக்கைக் கேட்டுத் திருமலை நாயக்கரிடம் எடுத்துரைத்து அவருடைய தலையீட்டின்பேரில் அவர்தம் ஆணையின்படி அனைவரும் கூடி வழக்கைக் கேட்டுக் காலம்காலமாகத் தொடர்ந்து பூசை உரிமையைத் துய்த்து வந்த திருஞானசம்பந்த பண்டிதர்க்கு முப்பதுநாள் பூசை உரிமையை அளித்து தீர்ப்பு வழங்கினர். (62)

மகதை மண்டல நாட்டார் பல்வேறு வரிச்சுமையின் காரணமாகத் தங்கள் குடிகளின் நலம் குறைந்ததாகக் கூறி தியாகணநாயக்கரிடம் முறையீடு செய்தனர். அதனடிப்படையில் அம்முறையீட்டைக் கேட்ட தியாணநாயக்கர் புதிய அடையோலை (வரி நிர்ணய ஓலை) கொடுத்து மிகுந்திருந்த வரிச்சுமையை (அடர்ந்தோற்றம்) தளர்த்திக் குடிமக்களைக் காப்பதாக உறுதியளித்த செய்தி கல்வெட்டில் (63) இடம் பெற்றுள்ளது.

இராசிபுரத்து ஊர்ச்சபையாரும் நாட்டாரும் சேர்ந்து (70) கயிலாயநாதர் திருமடைவளாகத்தில் குடியேறிய நெசவாளர் குடும்பத்திற்குத் தறிக்கு மூன்று பணம் வீதமும், வெள்ளாளர் குடியேறியமைக்காகக் குடிக்கு இரண்டு பணம் வீதமும், குற்றம் புரிந்தோர் எவரேனும் இருப்பின் அக்குற்றத்திற்காகப் பத்துப் பணம் வீதமும் தண்டனை விதித்து அதனைக் கோவில் கருவூலத்தில் சேர்த்தனர்.

'இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் 1265 இல் மதுரையை விட்டு நீங்கி 1266இல் இராசகேசரி வீரபாண்டியன் என்ற பெயரில் கொங்கில் முடிசூடினான் என்பதை அறியலாம். கொங்குநாட்டு மரபுப்படி வீரபாண்டியன் இராசகேசரி என்ற பட்டம் புனைந்தான்'.[24]

இராசிபுரத்துப் போதமலை என்னும் ஊரிலுள்ள இராசகேசரி வீரபாண்டியனின் (கி.பி. 1286) கல்வெட்டொன்று (299) அன்றைய வரி செலுத்த இயலா நிலைமையைத் தெரிவிக்கிறது. கருங்காலி மலையில் சுக்கம்பூண்டி என்னும் ஊரில் வாழ்ந்த மலைவாசிகள் கடமை என்னும் வரிசெலுத்த இயலாமையால் ஊரைவிட்டுக் குடிபெயர்ந்தனர். அந்நிலையறிந்த அவ்வூர் நாட்டவரும் நகரத்தவரும் கூடி முடிவெடுத்தனர். அதன்படி இனிவரும் நாளில் கொல்லிமலைவாசிகள் ஆண்டொன்றுக்குக் குடிக்கு ஒரு பணம் வீதம் கடமை வரி செலுத்தி வந்ததைப்போல இம் மலைவாசிகளும் அதே முறையில் குடிக்கு ஒருபணமாகச் செலுத்த ஆணை பிறப்பித்துக் கல்வெட்டிய செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. இதனால் ஒரு மலைவாசிகள் செலுத்தும் கடமை என்னும் வரி பிற மலைவாசிகள் செலுத்தும் வரிக்கு ஒப்பாகப் பெற்றுள்ளமையை அறியலாம்.

ஏழூர் நாட்டுத் திருவாரைக்கல் என்னும் ஊரில் வாழ்ந்த பதினேழு கம்பளத்தாரும் சுக்காடர் என்பவருக்கு இசைந்து இசைமுறை கொடுத்த செய்தி ஒரு கல்வெட்டில் (255) இடம் பெற்றுள்ளது. எறமாஞ்சி அய்யன் அவர்கள் காலத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டைச் செகதேவராயர் என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவருடைய காரியகர்த்தரான தம்மரசையன் அவர்கள் மரபினரும், பூந்துறை நாட்டு நாலுகவுண்டர்களும், பருத்திப்பள்ளி நாட்டுக் கொண்டராக் கவுண்டர்களும், இராசிபுர நாட்டுத் துலுக்கண கவுண்டர்களும், கரையூரைச் சேர்ந்த நல்ல நாயனாரும் மற்றும் குடியானவர்களும் கூடியிருந்து அவ் வழக்கைக் கேட்டு நீதி வழங்கினர். சுக்காட நாயனார்க்கு அவர்கள் நாள்தோறும் சூடிவந்த மாலை உரிமை இல்லையென்று மறுக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கு நிகழ்ந்துள்ளது. கல்வெட்டுச் சிதைந்துள்ளமையால் செய்தி தொடர்ந்து அறிய இயலவில்லை.

---

24. என். சேதுராமன், <u>பாண்டியர் வரலாறு</u>, பக் : 141

புதுமையான செய்தி :

மூன்றாம் இராசராச சோழ தேவர் காலத்தில் இராசிபுரத்தில் வாழ்ந்த வணிகர்க்குப் பல மண்டலத் வணிகர்கள் கூடி வீரபட்டணம் என்று கல்நாட்டிக் கொடுத்துள்ள செய்தியை ஒருகல்வெட்டு (69) விளக்குகிறது. வீரபட்டணம் என்பது வணிகர்கள் தங்களுக்குரிய அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பினையும் கொண்ட வாணிக நகரமாகக் கொள்ளலாம். இன்று அவ்வூர் இராசிபுரத்தையடுத்துப் பட்டணம் என்று வழங்கப்பெறுகிறது.

இராசிபுரத்துக் கயிலாயநாதர் கோவிலுக்கு உற்சவம் நடத்த இராசிபுரம் நாட்டைச் சேர்ந்த பாச்சல், குருசாமிபாளையம் முதலிய ஏழு ஊர்களில் வாழ்ந்த கைக்கோளர்க்கு மட்டும் உரிமை இருந்தது. (74)

மல்லூர் அருகில் எருமைநாயக்கன்பாளையம் என்ற ஊரில் அம்மன்மலை எனப்பெறும் பொன்சொரிமலை ஒன்றுள்ளது. அங்குள்ள தாமரைப்பாழியின் மேற்பாறையில் திருக்குறள் ஒன்று பொறிக்கப்பெற்றுள்ளது. அத் திருக்குறள் புலால் மறுத்தலை வலியுறுத்துகிறது.

நாமக்கல் வட்டம் எருமைப்பட்டியிலுள்ள கல்வெட்டொன்றில் (84) தேவன் என்பவர்அரச ஆணையால் நல்லூர் என்னும் ஊரில் நன்செய் புன்செய் நிலத்தின் உரிமையைப் பெற்றார் என்று தெரிவிக்கிறது. அக்கல்வெட்டில் 'ஐவர் இராசாக்கள் ஆணை' என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. அது முதலாம்சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டில் (கி.பி.1257) பொறிக்கப் பெற்றுள்ளது. அங்குக் குறிப்பிடப்பெற்றுள்ளவர் ஐவர் இராசாக்கள் பாண்டியர்களாவர். "தொகுத்து நோக்கினால் இரண்டாம் சடையவர்மன் குலசேகரன் (கி.பி. 1237) இரண்டாம் மாறவர்மன் சுந்தரன் (கி.பி. 1238) இரணடாம் மாறவர்மன் விக்கிரமன்" (கி.பி. 1250) முதலாம்சடையவர்மன் சுந்தரன் (கி.பி. 1250) இரண்டாம் சடையவர்மன வீரபாண்டியன் (கி.பி. 1254) ஆகியோர் உடன்பிறந்தவர்களாவார்கள் என்பதை அறியலாம்.[25] மேற்குறிப்பிட்ட பாண்டியர் ஐவரே ஐவர் இராசாக்கள் என்று வழங்கப் பெற்றிருக்கலாம். இக் கல்வெட்டில் 'அடுத்தூண்' என்னும் இலக்கியச்சொல் ஆளப்பெற்றுள்ளது.

ஏழூரில் பாவடிப் பிள்ளையார் கோவில் ஒன்றுள்ளது. அக்கோவில் மேடையில் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று (86) பொறிக்கப் பெற்றுள்ளது. 'படைபிடித்த பல்லாயிரவர்க்கும் ஐம்பெருங்குழுவிற்கும் அடைக்கலம் இவை' என்னும் தொடர் குறிப்பிடப் பெற்றுள்ளது. பழைய இலக்கியங்களில் குறிப்பிடப்பெறும் ஐம்பெருங்குழுவிற்கும் இங்குக் குறிப்பிடப்பெறும் ஐம்பெருங்குழுவிற்கும் ஏதேனும் தொடர்புண்டா? என்பதை ஆராயவேண்டும்.

ஏழூர் நாட்டிலிருந்த வானவன் மாதேவி என்னும் சிற்றூரை மருத்துவர் ஒருவர்க்கு இறையிலியாக அரசன் அளித்த ஆணை ஒன்று பொறிக்கப் பெற்றுள்ளது. நாங்கூரைச் சார்ந்த அங்க வைத்தியர் சுவர்ணன் பாராசிரியன் ஆதித்ததேவன் என்பவருக்கு அவ்விறையிலி நிலம் வழங்கப் பெற்றது. நாங்கூா மக்களால் அம் மருத்துவர் 'வைத்தியபுரந்தரன்' என்று அழைக்கப் பெற்றுள்ளான். அது இயற்பெயரா? பட்டப்பெயரா? என்பது ஆய்வுக்குரியது. அக்கல்வெட்டுகள் (250, 251) சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப் பெற்றனவாகும்.

நாமக்கல் நரசிங்கப் பெருமாள் கோவில் தானிகர் மணியக்காரர், கண்ணக்கப்பிள்ளை, பாளையக்காரர் ஆகியோர் சேர்ந்து 'மரியாதைமுறை ஆவணம்' என்ற ஒன்றை அளித்துள்ளனர். அக்கோவில் திருமடைப்பள்ளியில் இறைவர்க்குப் பூசை செய்து படைக்க சர்க்கரைப் பொங்கல் அமுது முதலியன செய்யாமல் இருந்ததாகவும் அவற்றைப் பூசைக்குப் படைக்காமல் யாரேனும் வாங்கினாலும் விற்றாலும் பாவம் அடைவர் என்னும் செய்தியையும் அக் கல்வெட்டு (256) குறிப்பிடுகிறது. இக்கோவிலிலுள்ள கல்வெட்டுகள் அனைத்தும் கொடை பற்றிய செய்தியையே கூறுகின்றன.

25. என். சேதுராமன், <u>பாண்டியர் வரலாறு</u>, பக்கம் : 143.

திருச்செங்கோடு வட்டம் மதியம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உள்ள கல்வெட்டு (305) மல்லமசமுத்திரத்தில் இருக்கும் இராசேந்திர சோமீசரக்கு உத்தியரப்பட்டியான திரயம்பகபுரம் என்னும் ஊர் திருவிடையாட்டமாக விடப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது. திருமாலுக்கு விடப்பெறும் நிலம் மட்டுமே திருவிடையாட்டம் எனப்பெறும். இங்குச் சிவபெருமான் நிலமும் திருவிடையாட்டம் என்றே குறிப்பிடப் பெறறுள்ளது. சங்ககிரி வட்டம் மருதூரில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில் சிற்றூர் குளக்குரிச்சி முதலிய கிராமங்களைக் காணி உரிமையாகப் பெற்றிருந்த வெங்கச்சி வேட்டுவரான திருவாலயப்பிள்ளை என்பவர் மருதூரில் (காணி உடைய) காளியை எழுந்தருள்வித்தார். மருதூர்க் காளி என்பது இன்று மதுரகாளி என மருவி வழங்கப்பெறுகிறது.

தற்காலத்திலும் இத்தகைய கொடைகள் அருள் உள்ளம் கொண்ட அறவோர் பலரால் தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. குஞ்சாம்பாளையம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு (102) நகரத்தாருள் சடையன்செட்டி என்பவன் தண்ணீர்ப்பந்தல் வைக்க நிலம் வாங்கி அளித்த செய்தி இடம்பெற்றுள்ளது. இராசிபுர நாட்டில் பொன்குறிச்சி சிவன்கோவில் பூசைக் கட்டளைக்காக ஒன்பது பொன் மதிப்புள்ள நிலத்தை அளித்த செய்தியை ஒரு கல்வெட்டு (104) விளக்குகிறது. அறப்பள்ளி ஈசுவரர் தாயம்மனுக்குத் திருக்குடமுழுக்குச் செய்யப்பெற்றமையையும் அம்மனுக்கு விமானம் அமைத்த செய்தியையும் கல்வெட்டில் (132) காணலாம். திருச்செங்கோடு கைக்கோளர் தெருவில் பொருத்தப்பெற்றுள ஓர் கல்லில் இலக்குமி என்பவர் தன் அன்னை பழனியம்மாள் பெயரில் சுமைதாங்கிக் கல் ஒன்றை அமைத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. சேலம் புதுப்பேட்டையில் வாழ்ந்த நகரத்தாருள் தித்தா செட்டியார் என்பவர் கருடசேவை மண்டபம் ஒன்றைக் கட்டுவித்த செய்தியைக் கல்வெட்டு (241) குறிப்பிடுகிறது. இவ்வாறு இருபதாம் நூற்றாண்டு வரை தொடர்ந்துள்ள பல கொடைச் செய்திகளை இத்தொகுதியில் காணலாம்.

நில உரிமை முறைகள் :

அந்நாளில் கோவிலுக்குக் கொடையாக நிலம், பொன் முதலியவற்றை அறவோர் பலர் அளித்தனர். அவற்றின் வருவாய் கோவிலைப் பாதுகாக்கவும், பூசை வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறவும் பயன்படுத்தப்பெற்றன. கோவிலுக்கு நிலத்தை உரிமையாக்கும்போது பல்வேறு பெயர்களில் உரிமையாக்கியுள்ளனர். தனிப்பட்டவர்களுக்கு நிலத்தை உரிமை செய்தபோதும் இவ்வழக்கம் இருந்துள்ளது. சில நிலஉரிமை முறைகள் இங்குக் காட்டப்பெறுகின்றன.

இராகுத்தராயன் என்பவரால் அவருக்கு முன்னாளில் அரசால் வழங்கப் பெற்ற ஜீவிதப்பற்று நிலத்தைத் திருக்காமீசுவரமுடையான் கோவிலுக்குத் <u>தேவதான இறையிலி</u>யாக வழங்கப்பெற்றுள்ள செய்தியைக் குறிக்கிறது. எறமாஞ்சி அக்கிதிம்மய நாயக்கரும் ஊர்க் கோவில் பண்டாரத்தாரும் சேர்ந்து வேங்கடன் மகன் ஊராண்டாற்கு <u>'ஊராமை இறையிலி பட்டயம்'</u> கொடுத்த செய்தி (31) இடம் பெற்றுள்ளது.

கோவில் திருவிழா நடத்தும் உரிமையை அந்நாளில் வாணிக நகரத்தாரும் செட்டிகளும் ஏற்றிருந்தனர். அவர்களுள் முரண்பட்ட காரணத்தால் கோவில் பூசை தடைபட்டு இருந்தது. பின்னர் வாணிக நகரத்தார் கோவில் குழுவிடம் வேண்டி இவ்வுரிமையைப் பெற்றனர். அதன் பின்னரும் பூசை தடைப்பட்டமையால் அவ்வூர் நாட்டவர் பொறுப்பேற்றுத் தலைவாய் என்ற ஊரைக் குடிநீங்காத் தேவதான இறையிலியாகக்(34) கொடுத்து மீண்டும் கோவில் பூசைப்பணிகளைத் தொடரச் செய்துள்ளனர்.

வாணகோவரையன் ஆணையின்படி கரியவரதராசப் பெருமாள் கோவிலுக்குத் <u>திருவிடையாட்ட இறையிலி</u> நிலமாகப் பல்வேறு மக்களிடம் நன்செய் நிலம் 3170 குழியும், புன்செய் நிலம் 7115 குழியும் விலைக்கு வாங்கப் பெற்றுள்ளது. நன்செய் நிலம் குழி ஆறு காசுகள் வீதமும் புன்செய் நிலம் குழி இரண்டு காசுகள் வீதமும் விலை கொடுக்கப் பெற்றுள்ளது. நன்செய்

புன்செய்க்கு மூன்றுக்கு ஒன்று என்ற விகித அளவில் அன்றைய நிலத்தின் விலை(39) வேறுபட்டு இருந்ததை அறியலாம்.

திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் அரசர் பெயரால் நிறுவப்பெற்ற உலகமுழுதுடையார் சந்திக்கு (பூசைக்கு) அமுதுபடி சாத்துப்படி முதலிய செலவினங்களுக்குத் திருநாமத்துக்காணியாக ஆலம்பளம் என்ற ஊரில் வாரப்பற்று நிலமாக இருந்தநன்செய் புன்செய் நிலம் வாங்கப்பெற்று அது வன்னெஞ்சர் என்னும் அளவுகோலால்(44) அளவிடப்பெற்றுள்ளது.

கோவிலில் பணிசெய்த தேவரடியார்களுககு நாள்தோறும் உணவுக்கு நாழி அரிசியும் ஒருமனையும் வழங்கி, சர்வமானிய இறையிலி நிலமான கண்ட மரத்தான்பட்டன் நிலத்தில் இருநூறு குழி வழங்கப் பெற்றுள்ளது.

திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் பாண்டியர் ஆட்சியின் காலம் முதல் திருத்தேர் இல்லாத நிலை இருந்தது. விசயநகரர் ஆட்சிக் காலத்தில் திருத்தேர் செய்து, மாசித்திங்கள் விழாவில் தம்பிரானாரைத் திருத்தேரில் எழுந்தருளச் செய்து தேரையும் ஓட்டுவித்துள்ளனர். (52) இத்தேர் இயக்கிய நாளில் (ஏதோ காரணத்தால்) உயிரிழந்த கைக்கோளன் பெருமான் மகன் பறையர் என்பவனுக்குக் கோவில் அறங்காவலர் குழுவினர் கூடி உதிரப்பட்டி நிலமாக நன்செய் நிலம் 250 குழி கொடையாக அளிக்கப் பெற்றுள்ளது. புன்செய் நிலம் ஓர் இணை ஏர் உழக்கூடிய அளவுக்குரிய (53) நிலம் வழங்கப் பெற்றுள்ளது. இத் தேர்த் திருவிழாவை நடத்துவதற்காகக் கூவேங்கி மகன் கண்ணன் என்பவருக்கு ஒருமனையும், ஒரு தனிமனையாக மூன்று குழி நிலமும் அனைத்து உரிமைகளுடன் அளித்துள்ளனர். (60)

ஏறமாஞ்சி அக்கி திம்மய நாயக்கர் கோவில் தானத்தார் சேர்ந்து ஊராண்டார் என்பவருக்கு ஓர்இணை ஏர் உழக்கூடிய புந்செய் நிலத்தை ஊரமை இறையிலி (ஊர்க்கீழ் இறையிலி)யாகக் கொடுத்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. இரண்டு ஏர்கள் ஒரு நாள் முழுவதும் உழுத நிலப்பரப்பின் அளவினதாக(55) இருக்க வேண்டும்.

கரிய வரதராசப்பெருமாள் கோவில் ஸ்தானிகர் மூவர் கிருட்டிணதேவ மகாராயரை விசயநகரத்தில் சந்தித்துக் கோவில் மீது வழக்கத்துக்குமாறாக அரசு வரி (இராசகரம்) வசூலிக்கப் பெறும் அநீதியை எடுத்துரைத்து நீதி வேண்டினர். அரசர் அக்கோவில் ஸ்தானிகர் மூவரையும் வரவேற்று உரிய சிறப்புகள் செய்து 900 குழி நிலத்தை ஸ்தானமானிய இறையிலியாக(57) அளித்துள்ளமையை அறியலாம்.

பல கல்வெட்டுகளில் 'பூதான யிறையிலி' (26, 185, 186) பூதானம் (92) பூதான கரதானம் (159,190) பூதானம் தான சாதனம் (101) என்று பூமிதானம் பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளது. வினோபாஜி அவர்களும் 'பூதான இயக்கம்' நடத்தியமையால் இவ்வழக்கம் தொடர்ந்துள்ளது.

திம்மயநாயக்கர் என்பவர் தன்னுடைய தலைவனான குமார அம்மணநாயக்கர் பெயரில் நரசாநாயக்கன் வெற்றி பெறவேண்டிப் பூசைசெய்த ஆழ்வார் மூவருக்கு அர்ச்சன விருத்தி தானியாக(58) நானூற்று ஐம்பது குழி நிலம் வழங்கப் பெற்றுள்ளது.

சோபிநாதபுரத்தில் மல்லய நாயக்கர் காலத்தில் கட்டப்பெற்ற திணைகுளம் என்னும் ஏரி உடைந்தபோது உடைந்த அந்த ஏரியைச் செப்பனிட்டுக் கட்டுவித்தவர் பசுபத செட்டியார் ஆவார். அவருக்கு ஆயிரம் குழி நிலம் காணியாட்சி சாசனப் பட்டயமாக(134) வழங்கப்பெற்றது. இக் கல்வெட்டின் பிரதி சக்கரசெட்டிப்பட்டி என்னும் சிற்றூரின் பாறையிலும் காணப்பெறுகிறது.

பொட்டிபுரம் என்னும் ஊரிலுள்ள திருமால் கோவிலிலுள்ள கல்வெட்டு முகைநாட்டு அருமணி மங்கலத்து நெட்டிபுரப்பற்றிலிருந்த நன்செய் புன்செய் நிலங்களை அனைத்து உரிமைகளுடன் தருமசாதனம்(294) செய்து கொடுத்த செய்தியை விளக்குகிறது.

இவ்வாறு பல்வேறு வகைகளில் நிலத்தை உரிமையாக்கியுள்ளதை எண்ணற்ற கல்வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இக் கல்வெட்டுகளில் பல்வேறு வகையானஅளவுப் பெயர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. திருவெள்ளறை காணம் (118), கொங்கம் (120, 129) சோழியம் (278), குலகம் (282) ஆகியன அரிசியை அளக்கும் முகத்தல் அளவைகளாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. குடிஞைக்கல் (117), மலைக்கல் (119) ஆகியன பொன் முதலியவற்றை நிறுக்கும் அளவைகளாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. 'தன்மசங்கரதி கோலால்' (247), வன்னெஞ்சன் அளவு கோலால் (44), புறவாய் மூலையென்று பேருடைய தடியால் (253), இருபத்து நாலடிக் கோலால் (249) நிலம் அளக்கப் பெற்றுள்ளமையை அறியலாம்.

சேலம் - நாமக்கல் மாவட்ட மக்களின் வாழ்வியல் வரலாற்றுப் பெட்டகங்களாக இக் கல்வெட்டுகள் அமைவு பெற்றுள்ளன.

எண் :1

இடம் : ஊர் - அம்மன்கோவில் பட்டி வட்டம் - ஓமலூர்
பாறைக் கல்வெட்டு

அரசர் : . . . .

காலம் : கி.பி. 4ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழி (பிராமி)

செய்தி : பரம்பன் கோசுர்கிழாரின் மகன் வியக்கன்கோபன் குணதேவன் என்பவர் தோண்டிய சுனை. சேலம் மாவட்டத்தின் மிகப்பழமையான கல்வெட்டாக இது கருதப்பெறுகிறது. தமிழ் எழுத்து வளர்ச்சிநிலையை இக் கல்வெட்டால் அறியலாம்.

கல்வெட்டு :

1. பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்
2. கன் கோபன் கண தேவன் தொட சுனை

எண் :2

இடம் : ஊர் - அமர்குந்தி வட்டம் - ஓமலூர்
சண்டேசுவர் கோவில் கோபுரத்தின் முன்பகுதியில் பதிக்கப்பெற்றுள்ள கல்

அரசர் : . . . .

காலம் : 28.11.1916

மொழி : தமிழ் க.ஆ.அ. 312 - 1956

செய்தி : அமர்குந்தி சௌடேசுவரி அம்மன்கோவில் தேவாங்க பிராமணர்களுக்கு உரிய பழமையான சன்னதியைச் சேலம் குகையில் வாழ்ந்த திருமலை செட்டியார் என்பவர் புதுப்பித்தமை.

கல்வெட்டு :

1. கலியுக வருஷம் 5018 இத
2. ன்மேல் சொல்லானின்ற நள
3. வருஷம் கார்த்திகை மாதம் 14 தேதில்
4. அமரகுந்தி ஸ்தலத்தின் கன
5. தேவாங்க ப்ராம்உறணர்களனை
6. பேருக்கும் சேர்ந்த ஸ்ரீ சௌடே
7. ஸ்வரியம்மனுடைய புராத
8. னச் சன்னதியை சேலம் குகையிலி
9. ருக்கும் மேகரை ரங்கய்ய செட்டியார்
10. குமாரன் திருமலை செட்டியார் ஜீர்ணோ
11. த்தாரம் சௌடேஸ்வரியம்மனுக்கு உப
12. யம்

எண் :3

இடம் : ஊர் - அமர்குந்தி வட்டம் - ஓமலூர்
விநாயகர் கோவிலின் வாயிற்படி

அரசர் : . . . .

காலம் : கி.பி. 19ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 313 - 1956

செய்தி : செங்கழனி முதலியார் என்பவர் விநாயகர் கோவிலில் ஒரு கட்டடமும் படியும் கட்டிக் கொடுத்தமை.

கல்வெட்டு :

முதற்படி

1. ஆனந்த வருஷம்
2. ஆணி மாசம் (3) கோ
3. வாண்டை முதலியார் ம
4. கன் செங்கழனி முதலியார் பா
5. பை வினாயகன் திருவளை மகா

இரண்டாம்படி

6. ளும் படியும் கட்டி முகி
7. ஞ்சு கோணா வட்ட
8. மும் . . . ப்பகா . . . ச
9. தா சேர்வை (தேவிளம்)

எண் :4

இடம் : ஊர் - அமர்குந்தி வட்டம் - ஓமலூர்
கணேசர் சிலையின் அருகிலுள்ள தேவரடியாள் கிணறு

அரசர் : . . . .

காலம் : கி.பி. 19ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 314 - 1956

செய்தி : நாள்தோறும் வணங்கிய அடியார் பரிபெருமாள் விநாயகர் என்பவர் குறிப்பிடப் பெறுகிறார்.

கல்வெட்டு :

1. பரி
2. ப்பெ

3. ருமா
4. ள் வி
5. ளாய்கன்
6. சதாசேர்
7. வை

எண் :5

இடம் : ஊர் - அமர்குந்தி வட்டம் - ஓமலூர்
தேவரடியாள் கிணற்றின் அருகிலுள்ள கல்தொட்டி

அரசர் : . . . .

காலம் : கி.பி. 19ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 315 - 1956

செய்தி : சாமா கவுண்டன் மகன் மாரயணன் என்பவர் கல்தொட்டியைக் கொடையாகக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. (அங்கிரஸ) வருஷம்
2. மாக மாசம்
3. 15 தேதி சாமா
4. கவுண்டன்
5. மகன் மா
6. ரயணன்
7. உபயம்

எண் :6

இடம் : ஊர் - அமர்குந்தி வட்டம் - ஓமலூர்
வீரேசுவரர் கோவில் மண்டபத் தூண்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 19ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் - 1 க.ஆ.அ 316 - 1956
தெலுங்கு - 2

செய்தி : முதல் தூணில் வெங்கயனசாந்தன் என்பவரும், இரண்டாம் தூணில் ஜங்கம்மய்யனு (தெலுங்கு) என்பவரும் குறிக்கப் பெறுகின்றனர். அத்தூண்கள் அவர்களுடைய கொடையாக இருக்கலாம்.

கல்வெட்டு :

முதல்தூண்

1. வெ (ப) ந
2. யன சா
3. ந்தன்

இரண்டாம் தூண்

1. ஐங்கம்
2. மய்யனு

எண் : 7

இடம் : ஊர் - அலைவாய்ப்பட்டி வட்டம் - இராசிபுரம்
ஏகாம்பரமுடைய நாயனார் கோவில் தென்புறச்சுவர்

அரசர் : சோழன், இரண்டாம் இராசாதிராசன்

காலம் : கி.பி. 1177

மொழி : தமிழ்

செய்தி : எல்லாம் தலையான சோழங்க தேவர் திரு ஏகாம்பரமுடைய நாயனார் கோவிலுக்கு ஏரியின்மேல் மதகின் கீழ்ப்பகுதியில் நிலம் விட்ட செய்தி. கல்வெட்டுகள் சுவரில் மாற்றிப் பதிக்கப்பெற்றுள்ளன.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராஜாதிராஜ சோழ தேவர்க்கு
2. யாண்டு 14ஆவது எல்லாம் தலையான
3. சோழங்க தேவர் நக்கன் உடையார் திரு
4. வேகம்ப உடைய நாயனாற்கு என்
5. ஏரியில் மேலைத் தூம்பில் அடிவாரத்து
6. . . . .
7. . . . தீர்க சோழங்க தேவர்க்கு நன்றாக
8. விட்டேந் . . . குல . . . . தேவனாக மாறுவான்
9. ஏழ் எச்சமறுவர் சோழங்க தேவர் . . . .
10. . . . .

எண் : 8

இடம் : ஊர் - அலைவாய்ப்பட்டி வட்டம் - இராசிபுரம்
மலை மேலுள்ள சுப்பிரமணியர் கோவிலின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : 20.01.1796
மொழி : தமிழ்

செய்தி : ஸ்தானி கலிங்கப்பிள்ளை என்பவர் கோவிலை நிறுவிய செய்தி.

கல்வெட்டு :

1. சறுவதாரி வருஷம் தை மாதம் 11 தேதி
2. சுக்கிரவாம் அனுஷம் தசமியில்
3. பிற திட்டை ஸ்தானிகர் கலிங்கபிள்ளை
4. ஸதா சேர்வை

எண் : 9

இடம் : ஊர் - ஆட்டையாம்பட்டி வட்டம் - சேலம்
திருமணி முத்தாற்று அணைக்கரையின மேற்குப் பக்கம் உள்ள துண்டுக்கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : செல்லர் என்ற கொங்கு வேளாளர் கூட்டம் குறிப்பிடப் பெற்றுள்ளது. கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. பரிதாபி வருஷம்
2. 19 தேதி பரித்திப்ப
3. ள்ளியிலிருக்கு
4 ம் வெள்ளாளர் செ
5. ல்லர்களில் கொண்
6. டாகவுண்டர் மகன்
7. காக(த்) தலைக் கவுண்ட
8. ன் நல்லமயில் கவுண்டனும் மல்லசமுத்தி
9. ரத் . . . க்கும் செ
10. ர . . . . . ர . . . . . ர . . விழு
11. யர்களில . . . .

எண் : 10

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
கரியநிர்மலேசுவரர் கோவில் கருவறையின் மேற்குப்புற அடித்தளம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 405 - 1913

செய்தி : ஆற்றூரில் திருமேற்றளி உடைய நாயனார் கோவிலுக்குத் திருவிளக்குக்குத் தன் நிலக்கொடைபற்றி வன்னெஞ்சப் பெருமாள் என்ற அதிகாரியின் ஓலை ஆற்றூர் ஊரவருக்கு அனுப்பப்பெற்ற செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வன்னெஞ்சப் பெருமாள் ஒலை ஆற்றூர் ஊரவர் கண்டு விடை
2. தங்களூர் உடையார் திருமேற்றளி உடைய நாயனார்க்கு சந்திராதித்தவந் திருவி
3. ளக்குப் புறத்துக்கு இவ்வூர் நன்செய் நிலத்து முதல் தர நிலத்திலே இருநூறு குழி
4. இறையிலியாக முப்பத்திரண்டாவது முதல் குடுத்தோம் இப்படிக்கு திரு சூலத்தாபனம் பண்ணி
5. கல்லிலும் வெட்டிக் கொண்டு திருவிளக்குச் செலுத்துவதே இவை வன்னெஞ்சப் பெருமா னெழுத்து
6. இவை விழுத்தரையனெழுத்து

எண் : 11

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
கரியநிர்மலேசுவரர் கோவில் கருவறையின் மேற்குப்புறச்சுவர்

அரசர் : கோப்பரகேசரிவர்மன் (சோழன்)

காலம் : கி.பி. 10ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 19 - 351

செய்தி : ஆற்றூர்க் கூற்றத்துப் பிரமதேயம் மலையமான் ஆற்றூர் இறைவர்க்கு அரசனுக்குக் காரியம் செய்கின்ற மூவர் சேர்ந்து நாள்தோறும் குறுணி நெல்லால் வந்த அரிசியைக் கொண்டு அமுது படைக்க ஆவன செய்யப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்
2. பரகேசரிபன்மர்க்கி
3. யாண்டு 14 ஆ
4. வது மிலாட்டு ஆ(ற்)
5. றூர் க்கூற்றத்து ப்ர
6. உறமதேய மலையமா

7. னாற்றூ (ர்) திருமேறறளி
8. நக்கர்க்கு பெருமாள்
9. கந்மிகள் பெருமங்க
10. லமுடையானும இரும
11. டி மாயில (ட்) டிக்குமாக மி
12. லா (டும்) வாஸைக்பாடியு
13. ம் மோரமுஞ் சுங்கமும்
14. பாட்டத்துக்கு ஆழ்கின்ற
15. (நிந்னா) வடுதுறை (ய) நும்
16. கழஞ்சேகாற் த . . . கா
17. மனும் இம்முவோ(ம்) இவ்வூ
18. ர்த் திருமேற்றளி ஆள்வார்க்
19. கு வைத்த திருச்செந்நடை
20. நிசதி நெல்லுக் குறுணி (னா)
21. (ஶ்ரீ) யரியால் சந்திராதிந்தவ
22. ற் வைத்தோ (மு)த்துரை
23. யரில் சங்கமாழ்வார் இ
24. ய ந்மம் ரக்ஷிக்க இரக்ஷி
25. த்தார் ஶ்ரீபாதம் எங்கள்
26. தலைமேலின இதுக்கு (அ)
27. உறிதஞ் செய்வான் ஏவகத்து
28. (க்கீ)ழச்ச மறுவான்

எண் : 12

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
கரியநிர்மலேசுவரர் கோவில் கருவறையின் வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர்

காலம் : 21.10.1509

மொழி : தமிழ் க.ஆ.அ. 406 - 1913

செய்தி . துலுக்கண நாயக்கர் ஆற்றூர் நாட்டு ஆற்றூர்ப் பிரிவில் இருந்த நிலாவாற்று வடகரையில் கள்ளிநத்தம் என்னும் ஊரை மாயித்தாய்அகரம் என்று பெயர் மாற்றம் செய்து பற்பநாபட்டர் என்ற அந்தணருக்குக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. சகாத்தம் 1431 இதன்மே செல்லானின்ற சுக்கில வருஷம் அற்பசி 22 தேதி ஆ . . வா துலுக்கண நாயக்கர் இறைவன் . . . ஆரத கோத்ரத்து . . . த்திர்தது அருணகிரிநாதர்.
2. பற்பநாப பட்டர் மகதை மண்டலத்து ஆறறூர் நாட்டு ஆற்றூர் பிறிவான நிவாவாறறு உடகரை கள்ளிநத்தம் என்று பேரான இவ்வூர் அம்மன் திருநாமத்தாலே மாயித்தாய்அகரம் என்று தாரை வார்த்து இவ்வூர்
3. நான்கெல்லையும் கல்லும் நாட்டி ஆற்றூர் உடையவர் திருமேநித் தெளிவுடைய தம்பிராநார் சன்னதியில் குமுதப்படையில் கல்லிலும் எழுதிக்குடுத்த படியாலே இந்த தன்ம்மத்தை சந்திராதித்யவரை
4. யும் னாங்களே செலுத்தி கொண்டு வரக்கடவோம் ஆகவும் இப்படிக்க ஆற்றூர் நாட்டு . . நாட்டு குல . . . . க்கு ஆற்றூர் நாட்டு வேளார் அம்பலவர் எழுத்து

எண் : 13

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
காயநிர்மலேசுவரர் கோவில் கருவறையின் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவராயர்

காலம் . 08.04.1513

மொழி : தமிழ் க.ஆ.அ. 403 - 1913

செய்தி : மகதைமண்டலத்து சனனாத வளநாட்டில் ஒருபகுதியைக் கிருட்டிணதேவ ராயரிடம் நாயக்கத்தனச் சீர்மையாகப் பெற்று ஆட்சி புரிந்த அக்கிதிம்மயநாயக்கர் நிவா என்ற ஆற்றின் வடகரையில் அமைந்த வில்லவராயநத்தம் என்னும் ஊரை அருணகிரிநாதர் குமாரர் ரங்கராச பட்டர் என்பவர்க்குக் கொடையாக அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. அந் நத்தத்தின் அனைத்து வரிகளும் உரிமைகளும் மரபு வழியாகத் துய்க்க அளிக்கப்பெற்றது. அந் நத்தம் கொடையாளர் பெயரில் அக்கிதிம்மயநாயக்கச் சதுர்வேதிமங்கலம் என்று பெயரிடப்பெற்றது.

கல்வெட்டு :

1. *சுபமஸ்து*
2. *ஸ்வஸதிஸ்ரீ சகாப்தம் 1435 இதன்மேல் செல்லாநின்ற ஸ்ரீ முக வருஷம் சித்திரை மாதம் 13 தேதி ஸ்ரீ மா . . . யங்கர சாதுர்யந் பாஷைக் குத் தப்புவ பயங்கர*
3. *கண்டந் நரகலோகக் கண்டந் வஞ்சிநாராயணன் சாடிக்காறார் கண்டந் மறைபுக்கார் காவலன் ஸ்ரீ மது . . . ணாரி (அக்) கித் திம்மயநாயக்கர் ஙிறைவன் . . . யூர் உறாரிதகோ*
4. *த்ரத்து ஆஸ் வலாயநஸூத்ரத்து அருணகிரிநாதர் (குமாரர்) ஸ்ரீ ரங்கராசபட்டற்கும் சாஸனபட்டயம் குடுத்தபடி நமக்கு சுவாமி கிருஷ்ணராயர் பாலித்த நாயக்கத்தன சீர்மையான மகதை மண்டல மிலா ாகிய ஜநநா*
5. *த வளநாட்டு ஆற்றா ற் கூற்றத்து ஆற்றூர் நாட்டு நிவாவாற்று வடகரை வில்லவராயநத்தம் நஞ்செய் புஞ்செய் நத்தம் செய்த்தலைத்திடர் மாவடை மரவடை குளவடை சாரடை ஏற்கடமை பொற்கடமை தறிக்கடமை வா*
6. *சல்மனை காசாய மந்தைவரி செக்காய நகரிகை ஆய மற்று எப்பேர்ப் பட்ட பலவுபாதியுமுன் . . . . தியையும்சுக்கரவாரமும் பெற்ற . . . நட்சத்திரமும் சௌபக்கியமும் பெற்ற இற்றை நாள் ஸ்ரீ ரங் . . . நெதியிலே சந்திர பு*
7. *ட்கரணி தீர்த்தக்கறையிலே . . . . லவராயநத்தத்தை தம்முடையாராலே அகித்திம்மையநாயக்கர் சதுர்வேதி மங்கலமென்று இதற்கு ஸ்ரீஉறிரண்யோத (க)யாரா பூர்வமாக பண்ணிக் குடுத்தோம் இந்த அக்கித்திம்மயநாயக்க*
8. *சதுர்வேதிமங்கலத்து சது சீர்மைக்குள்பட்ட நிதிநிக்ஷேப ஜலதரு பாஷாண ஆகாமி கோபுமியாத்ய அஷ்ட போக தேஜ ஸ்வாம்யாங்யிகளும் உட்பட தாராபூர்வமாக பண்ணிக் குடுத்தோம் இந்த அக்கித்திம்மய நாயக்க ச*

9. துர்வேதிமங்கல மிவற்கு மிவர் வர்கத்தாற்கும் தாநாதிவிநிமய விக்ரம் கருக்கு யோக்யமாக ஆசந்த்ரக ஸ்யாமியாக சர்வமான்யமாக தாரை வாத்து குடுத்து நான்கெல்லையும் கல்வெட்டி நாம் குடுத்தோம்

10. இந்த தன்மத்தை பரிபாலனம் பண்ணினவர் கங்கைக் கரையிலே ஆயிரங் கோடி கோதாநம் பண்ணின பத்தை பெற கடைவராக

11. வும் உ.

எண் : 14

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
கரியநிர்மலேசுவரர் கோவில் கருவறையின் மேற்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், கிருட்டிணராய மகாராயர்

காலம் : 15.08.1529

மொழி : தமிழ் க.ஆ.அ. 404 - 1913

செய்தி : முந்தைய கல்வெட்டில் உள்ளது போன்ற செய்தி. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மன் மகா மண்டலேசுரன் பாஷைக்குத் தப்புவ
2. கண்டனே கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் பூறுவ தக்ஷிண பச்சிம
3. உத்ர சது சமுத்திதிபதி கெசவேட்டை கண்டருளிய ஸ்ரீ வீர
4. பிறதாபன் ஸ்ரீ வீர கிருஷ்ணராயர் மகாராயர் பிறுதிவி ராச்சி
5. யம் பண்ணி அருளாநின்ற சகாத்தம் 1451 இதின்மேல் செல்
6. லா நின்ற விரோதி சங்வசரத்து சிங்கநாயற்று பூறுவ பக்ஷத்து
7. ஏகாதெசியும் ஆதித்தவாரமும் பெற்ற பூராட நட்சத்திரத்து நாள் பா
8. ராத்துவாச கோத்திரத்து ஆசிலான சூத்திறத்து குரவைசேரி . . .
9. துலக்கண . . . கிறாமம் ஒன்றுக்கு நான்கெல்லை கு
10. ட்பட்ட நஞ்சை புஞ்சை நத்தம்ட்டுகை மாவடை மரவடை நல்
11. லெருது நற்பசு நாட்டு விநியோகம் மற்றும் யெப்பேற்பட்ட சகல சமுதா
12. ய பிறாத்தியும் உட்பட சறுவமானியம் ஆக ஏகாதேசி புண்ணி
13. ய காலத்திலே சுவாமி கிறுஷ்ணராய மகாராயற்கு தன்மற்கு த
14. ந்தபடியாலே இன் . . . க்ஷேபம் சல பாஷாண இக்ஷண்ணி
15. யாகாமி சித்த சாத்தியம் என்னிால்பட்ட அஷ்டபோக தேச சுவாம்
16. மியங்களும்.

எண் : 15

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
கரியராமர் கோவில் முன்பக்கமுள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 4 - 455

செய்தி : தள்ளரையக் கவுண்டரும் மதுரை வீரையக் கவுண்டரும் மேல்மலை நாட்டவரும் சேர்ந்து கரிய பெருமாளுக்கு நிலம் இறையிலியாகக் கொடுத்தமை.

கல்வெட்டு :

கிழக்குப் பக்கம்

1. (வி) ரோதிகிறி வருஷம் மார்
2. கழி மாதம் 21 தள்ள
3. (ை)ராயகவுண்டர் ம(துர)
4. (வீ)ரைய கவுண்டர் மேல்ம
5. (லை)நாட்டாரும் கரிய
6. (ெ)பருமாளுக்கு மேலைச்
7. செம்பறக்கை திருவி
8. யைாபாட்டம் குடுத்த
9. படி நஞ்சை புஞ்சை
10. நாற்பாக்கெல்லை
11. யூ(ம்) சகலமும் யுள்பட ச
12. ந்தி(ர) சூரி(ய)ர்வரை
13. அ(கு)தம் பண்(ணின)
14. வ(ர்) கெ(ங்கையி)லை

மேற்குப் பக்கம்

15. க(ர)ராம் பசு(ை)வ
16. கொன்ற பா
17. வத்திலே (போ)
18. க(க்)டை(வர்கள்)

எண் : 16

இடம் : ஊர் - ஆத்தூர் வட்டம் - ஆத்தூர்
கரியராமர் கோவில் முன்பக்கமுள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 4 - 456

செய்தி : கல்வெட்டு படிக்க இயலாத நிலையில் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. . . . . சித். . . . .
2. . . . . .த். . . . .
3. . . . . மு . . . .
4. . . . . ழ . . . .

5. . . . . முறை	12. . . . . நம்பிதுக்கு . . . .
6. . . . . குத.	13. . . . . தமதன் . . . .
7. . . . . தங். . . .	14. . . . . பெற்றுக். . . . . த
8. . . . க்கு.	15. . . . . ண்ணில . . . .
9. . . . . ஆக்க	16. . . . . ரை . . . .
10. . . . . ச்சன் உ	17. . . . எட்டு. . . . .
11. . க்கு. . . . . வமானி. .	

எண் : 17

இடம் : ஊர் - ஆலந்தூர் (பட்டணம்) வட்டம் - இராசிபுரம்
வௌவால்கரட்டின் மேல் பாறையிலுள்ள கல்வெட்டு

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்.

காலம் : கி.பி. 1184

மொழி : தமிழ்

செய்தி : சேலநாட்டு பொன்பரப்பியிலுள்ள நக்கசோழங்க தேவர் திருமேனிக்கு நன்மை உண்டாகும்பொருட்டு அவருடைய தலைமை ஊழியருள் ஒருவரான சோழக்கோன் என்பவன் ஆலத்தூ ரிலுள்ள ஈசானதேவர்க்கு ஏரியில் நிலம் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ நன் மங்கல
2. ம் சிறக்க திரபுவனச் சக்கரவர்திகள்
3. திரு வீரராஜேந்திர சோழ தேவற்கு
4. யாண்டு ஆறாவது சேல நாட்டு
5. பொன்பரப்பியில் நக்க சோழங்க தேவர்
6. முதலிகளில் நக்கன்மரான சோழகோனே
7. ன் ஆலத்தூரில் ஈசான தேவர் நாயனாற்கு
8. என்னேரியில் கழனியிலே பத்துக் கழனி
9. நாயனாற்கு விட்டேன் சோழங்க தேவர்
10. திருமேனிக்கு நன்றாக விட்டேன் இத்தன்ம
11. ம் இறங்காமே கொண்டு பெருகுமவன்
12. அவன் சீ பாத மிரண்டும் என் தலைமேல்
13. யித்தன்மமிறங்கப் படுத்துவானுக்கு
14. என் குதிரைக்குப் புல் சுமக்கும்
15. பறையனுக்கு தன் மிணாட்டியைக்
16. குடுப்பான்

எண் : 18

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரருடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புறமுள்ள மண்டபத்தின் தென்புறச் சுவர்.

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1191

மொழி : தமிழ் க.ஆ.அ. 417 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனர் கோவிலுக்கு மலையனூருடையான் செம்பையாள்வான் என்பவன் தன் காணியான இலத்திப்பாடி நிலத்தை 135 பொன்னுக்கு அனைத்துநில உரிமைகளும் அடங்க விற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்
2. க சோழ தேவர்க்கு பதின்மூன்றாவது ஆற்றூர் கூற்றத்து
3. ஆறகளூருடையார் திருக்காமீசுரமுடைய நாயநார்க்கு
4. இக்கோயிலலசிமாகேசுர கண்காணி தேவகந்மி கோ
5. யிற் கண்க்கற்கும் மலையநூ ருடையான் செம்பை ஆழ்வாநே
6. ந் என்காணியான இலத்திபாடி நாந்கெல்லைக்குள்பட்
7. ட நன்செய் புன்செய் ஏந்தல்களுமுட்பட இந்நாயநாற்க்கு விற்
8. று நான் பற்றின பொன் 135 இப் பொன் நூற்று முப்பத்த
9. ஞ்சும் பற்றி என் காணியான இலத்திபாடி எறபேற்பட்ட
10. உரிமைகளும் இந்நாயநாக்குக் குடுதகேந் இக் கோஇலி
11. ல் சீமாகேசுரக் கண்காணி தேவகந்மி கோயில் கணக்க
12. ற்கு மலைய நுடையாந் செம்பை ஆழ்வாநேன் இவை என் எழு
13. த்து இப்படியறிவேன் வெம்பாருடையான் முப்புளியா
14. . . . .

எண் : 19

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புறமுள்ள மண்டபத்தில் தென்புறச்சுவர்

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1193.

மொழி : தமிழ் க.ஆ.அ. 416 - 1913

செய்தி : மேற்குறிப்பிட்ட கல்வெட்டில் நிலத்தின் மீதான பொன்வரி, நாட்டு வினியோகம் முதலிய வரிகள் (அரசன்) நீக்கியதாகத் தெரிவிக்கிறது. வாணகோவரையன், வில்லவராயன் என்ற இரு அலுவலர்கள் இவ்வாணையை நிறைவேற்றினர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்
2. க சோழ தேவர்க்கு யாண்டு பதினஞ்சாவது ஆற்றூர் கூ
3. ற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுரமுடைய நா
4. யனார் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார்க்கு தாங்கள்
5. மலையனுடைச் செம்பை பக்கல் கொண்டுடைய இல
6. த்திப்பாடி நான்கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செ
7. ய் ஏந்தல் பற்று உட்பட பொன்வரி உள்ளிட்ட அனைத்தாய
8. ங்களும் நாட்டு வினியோகமு முட்பட இன்னா (யனா)ர்க்கு இறையிலிய
9. ாகப் பூசைக்கும் திவநாளுக்கும் திருப்பணிக்கும் உடலா
10. க தந்தோம் இவை வாணகோவரையன் எழுத்து
11. இவை வில்லவராயன் எழுத்து

எண் : 20

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புறமுள்ள மண்டபத்தில் தென்புறச்சுவர்

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : 26.09.1207

மொழி : தமிழ் க.ஆ.அ. 418 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய எம்பெருமானடிகளை எழுந்தருளச் செய்த செல்வனான சிவத்தொண்டன் அத்திருமேனிகளுக்குத் திருமஞ்சனம், திருவிளக்கு, திருப்பள்ளித்தாமம் மற்றும் கோவில் பூசை, செலவினங்களுக்கு ஐயாயிரம் காசுகளைக் கொடையாக வழங்கிக் கோவில் கருவூலத்தில் சேர்த்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபதொன்பதாவ
2. து மிலாடாகிய சனநாத வளநாட்டு ஆற்றூர் கூற்றத்தாறகளூரில் உடையார் திருக்காமீசுவரமு
3. டைய நாயனார் கோயிலில் எம்பெருமக்கள் மூவரையும் எழுந்தருளுவித்த மேற்படி யூரில் இருக்கு
4. ஞ் செல்வனான சிவத்தொண்டனேன் எம்பெருமக்களுக்குச் சந்திராதித்தவர் பூசை செய்யும்

5. படி நாள் ஒனறுக்கு ஆறறில திருமஞ்சனந் தூணிப்பதக்கும் அந்திச்சந்தி விளக்குக்கு இர
6. ண்டுஞ் சாத்தியருள பரிசட்டமுந் திருப்பள்ளித்தாமமுந் திருஅமுதுக்கு அரிசி நா நாழியுங்
7. கறியமுது நாற்பலமு இதுக்குத் தக்க வுப்பு மிளகு நெய்யமுதுஞ் செல்வதாக இன்னாய
8. நார் ஸ்ரீ பண்டாரத்து ஸ்ரீ மாகேசுவரக் கங்காணி செய்வார்களுக்குந் தேவர் கன்மி கோ
9. யிற் கணக்கனும் முன்னிலையாக இவ்வாண்டைக் கன்னி நாயற்றுப் பூர்வபக்ஷ
10. த்து தியதியையும் புதன்கிழமையும் பெற்ற அத்தத் திருநாள் ஒடுக்கின அன்றாடு நற்காசு
11. 5000 இக்காசு ஐய்யாயிரமும் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கி இப்படி சந்திராதித்தவரை
12. பூசை செலுத்தக் கடவதானமைக்கு இது பன்மாகேசுவரர் இரக்ஷை இது அழிவு செ
13. ய்வான் கெங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவங் கொள்வான் சுப
14. மஸ்து உ இவன் எம்பெருமக்களுக்கு இடபரிகல மூன்றிநால் எடை 48 பலம் திருவட்டணை காலொன்றினால் எடை
15. 70 பலம்
16. தரா

எண் : 21

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புற மண்டபத்தின் கிழக்குப்புறச்சுவர்

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1213

மொழி : தமிழ் க.ஆ.அ. 435 - 1913

செய்தி : குறுநிலத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட அரசியல் உடன்படிக்கையைக் குறிக்கிறது. செங்கேணி அம்மையப்பன் அழகிய சோழனான எதிரிலிச் சோழ சம்புவராயன் என்பவர் பொன்பரப்பின வாணகோவரையர்க்கும், குலோத்துங்கச் சோழ வாணகோவரயர்க்கும் அவர் மைத்துனர் காடவராயர்க்கும் இசைந்து எழுதிக்கொடுத்த உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது. இது போர் முறையைக் (அடா் முறைமை) குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. 'தனக்கு இம்மூவர் தீங்கு செய்யலாகாது எனவும் தானும் தீங்கு செய்யாது இருப்பேன் எனவும் அவ்வாறு தீங்கு நினைக்கின் தன்னுடைய பகைவர்களான முமமலராயர்க்கச் செருப்பும் தம்பனமும் எடுத்தவனாவேன்' என்று சூளுரைக்கப்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுனச் சக்கரவத்திகள் குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 35வது ஐய்யர்
2. பொன்பரப்பின வானகோவரயர்க்கும் ஐய்யர் குலோத்துங்க சோழ வாணகோவரயர்க்கும்

3. மைச்சுனார் காடவராயர்க்கும் செங்கேணி அம்மைஅப்பன் அழகிய சோழனான எதிரிலி சோழச் ச
4. ம்புவராயநேன் ஆரகளூரில் திருக்காமீசுரமுடையார் கோயிலிலே தப்பாமைக்கு அடர்முறைமை சொல்
5. லிக் கல்லு வெட்டிக்குடுத்த பரிசாவது என்னக்கும் என் த . . . றைக்கும் இவர்கள் விரோதமாய்த் தப்பின் ஒழு
6. ய்தல் செய்வித்தல் செய்யாதேய் என்னை நோக்க(க்) கா வர்களாகவும் இவர்களுக்கு நான் உள்ளதனையு
7. ம் ஒருநாளும் தப்பாதே இருக்க கடவேனாகவும் தப்பினேநாகில் எங்களுக்கு இன்னாதாராய் வ
8. ருகிற மும்மலராயர்களுக்கும் மற்றும் என் சத்துருக்களாயிருப்பார்க்கும் செருப்பும் தம்பலமு
9. ம் எடுத்தே நாகிறேன் பல்லவரையன் சத்தியமேய் இப்படி தப்பினே நாகில் அப்பாண்
10. டார்க்கு பிறந்திலேநாகிறேன் இப்படிக்கு கல்லுவெட்டிக் குடுந்தேன் எதிரிலி சோழச்சம்
11. புவராயனேன்

எண் : 22

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆததூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1220

மொழி : தமிழ் க.ஆ.அ. 410 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் திருக்கோவிலில் இரவில் நந்தா விளக்கெரிக்க நரைத்தலைநாவலூர் என்னும் ஊரை நான்கெல்லைகள் வரையறுத்து நன்செய், புன்செய், ஏந்தற்பற்று உட்படத் திருவிளக்குப் புறமாகக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சககரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தே
2. வர்க்கு யாண்டு நாலாவது மகதை மண்டலத்து ஆற்றூர் கூ
3. ற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீசுவரமுடைய நாய
4. னார் கோஇல் தானத்தார்க்கு இன்னாட்டு நரைத்தலை நா
5. வலூர் நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புஞ்செய் ஏந்தல்
6. பற்று உட்பட இன்னாயநார்க்கும் பரிவார நாயன்மார்க்கும் தி
7. ருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்கும் இராக்கா
8. லத்துக்கு திருமுன் பெரியுந் திருவிளக்கு 150 இத் திருவிளக்
9. கு நூற்றைம்பதுக்கும் பொன்வரி உள்ளிட்ட அனைத்
10 தாயமு மற்றும் எற்பேர் பட்டனவு உட்பட இந்த நரைத்தலை
11. நாவலூர் சந்திராதித்தவரையும் திருவிளக்குப்புற இறையிலியா
12 கத்தந்தோம் இப்படி நான்கெல்லை திருச்சூலத் தாபன
13 ம் பண்ணி கல்லிலும் செம்பிலும் வெட்டி திருவிளக்கு எரித்து போதுக
14. இவை வாணகோவரையன் எழுத்து இவை விழுப்பாத ராயன் எழுத்து

எண் : 23

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புற மண்டப இடப்புற வாயில் அருகில்

அரசர் : சோழர், மூன்றாம் இராசராசன்

காலம் : கி.பி. 1228

மொழி : தமிழ் க.ஆ.அ. 437 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் பெரியபேறு முதலியார்க்கு அமுதுபடிக் காகத் தொண்டைமான் தங்கை நாட்டியார் நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசி கொடுத்தமை.

கல்வெட்டு :

1. . . . . ராஜராஜ தேவற்கு யாண்டு 12வது ஆறகளூர் உடையார் திருக்கா . . . .
2. . . . . யனார் கோயிலில் பெரியபேறு முதலியாற்கு அமதுபடி
3. . . . . தொண்டைமான் தங்கை நாச்சியேன் இன்னாயநாற்கு
4. . . . . நவில் உள்ளிட்டார் வெட்டின நல்லஞான சம்பந்தன் எ
5. . . . . பதினாறில் என்னோபாதி(படி)கு இரண்டும் இன்னாயனாற்கு
6. . . . . காணியாக கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு இருநாழி
7. . . . . ம் சந்திராதித்தவரை செல்லக் கடவதாக குடுத்தேன் நாச்சியேன்

எண் : 24

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டபத் தெற்குப்புறச்சுவர்

அரசர் : சோழர், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : 06.05.1230

மொழி : தமிழ் க.ஆ.அ. 415 - 1913

செய்தி : ஆறகளூரில் அரசன் தொண்டைமான் தங்கை நாச்சியார் என்பவர் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலுக்குத் திருமஞ்சனம், திருப்பள்ளித்தாமம், சந்திவிளக்கு, பூசைப்பேறு முதலியவற்றுக்குக் கோவில் அலுவலர்களிடத்தில் அன்றைய வழக்கிலிருந்த நற்காசுகள் பதினையாயிரம் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸதிஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவறகு யாண்டு 14
2. இஷப நாயற்று அபர பஷத்து சப்தமியுந் திங்கட் கிழமையும் பெற்ற அவிட்ட
3. த்து நாள் ஆறகளூருடை திருக்காமீ வரமுடைய நாயனார் கோயிற் ஸ்ரீ ஆஹேவ்வ
4. ரக் கண்காணி செய்வார்ளந் தேவர் கன்மி கோயிற் கணக்கரும் இவ்வூரில் அரைசந் தொ
5. ண்டை மாந் தங்கை நாச்சி பக்கல் உபையங்கொண்ட பரிசாவது இன்னாயனார் கோயிலில் முதற்திரு
6. மாளிகையில் வடமேலை மூலையில் ஆஸ்ரீயமாக எழுந்தருளின உடையார் காரியான ஈஸ்வரமுடைய நாயனா

7. ற்கு நாள் ஒன்றிக்கு ஆற்றிற் தி நமஞ்சனகலசத்துக்குந் திருப்பள்ளத்தாமம் நானாழிக்குஞ் சாத்தியருளத் திரு
8. ப்பரி சட்டத்துக்குஞ் சந்தி திருவிளக்கு ஐஞ்சுக்குஞ் சனிபாதிகரு வன ஊர் பண்ணைக்குங் காப்புக்கு நம்பியாற்கும்
9. பூசைப் பேற்றுக்கும் இற்றைநாள் ஒடுக்கின காசு 3000 இககாசு மூயிரமுந் திருஅமுதுக்கு ஆரைநாயக
10. ன் நாழியால் அரிசி ஆறுநாழிக்குங் கூறியமுது அறுபலத்துக்கும் உப்பமுது மிளகமுது நெய்யமு
11. து அடைககாயமுது உள்ளிட்ட வெஞ்சிளத்துக்கும் விஸவெலன சங்கு முள்ளிட் . . . . . பெங்கமு வுள்ளிட்ட விஷேச
12. பூசைக்கும் இற்றைநாள் ஒடுக்கின காசு 12000 இக்காசு பன்னிராயிரமும் ஆக அன்றாடு
13. நற்காசு 15000 இக்காசு பதினையாயிரமும் இன்னாச்சிவுமையார் திருக்காமீஸ்வர
14. முடைய நாயனார் ஸ்ரீ பண்டாரத்திலே இற்றைநாள ஒடுககினமையில் இந்நாயனார் ஸ்ரீ பண்டா
15. ரத்தும் நின்றும் புறப்பட்டு இன்னிமந்தக்கட்குச் சந்திராதித்தவரை இக்காரியான ஈஸ்வர
16. முடைய நாயனாற் இப்பூசை செலுத்தக் கடவதாக இது தொண்டைமான் தங்கை நாச்
17. சக்கு உபையங் குடுத்துக்த கல்வெட்டிக் குடுத்தோஞ் ஸ்ரீ மாஹேஸ்வரக் கண்காணி செய்
18. வார்களுந் தேவகன்மி கோயிற் கணக்கரும் இவ்வணைவோம் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை
19. இது அழிவு செய்வான் கங்கையிடைக் குமரியிடை செய்தார் செய்த மஹாபாபங் கொ
20. ள்வர் சுபமஸ்து இக்காரியான ஈஸ்வரமுடைய நாயனாற்கு இன்னாச்சி இட்ட பரிகலமுங் காலும்
21. எடை நூற்றெறம்பதின் பலம்

எண் : 25

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டபத்தில் வலப்புறவாயில் அருகிலுள்ள துவாரபாலகர் சிலையின் பின்புறம்

அரசர் : சோழர், மூன்றாம் இராசராசன்

காலம் : கி.பி. 1216 - 1256

மொழி : தமிழ் க.ஆ.அ. 436 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் திருநந்தாவிளக்கெரிக்கக் காவிரிப் பாக்கத்துக் கவுசிகன் ஒற்றிக் கொண்டான் . . . பிரமாதி ராசரிடமிருந்து கோவில் முப்பது வட்டத்துச் சிவபிராமணர் ஈராயிரம்காசுகளைப் பெற்றனர். மேலும் கோவிலில் ஏழு திருநந்தாவிளக்குகளை எரிக்க நாறபத்தொன்பது பசுக்களை எழுவரிடமிருந்து கொடையாகப் பெற்ற செய்தியையும் குறிப்பிடுகிறது. கல்வெட்டின் இறுதிப் பகுதி சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராஜராஜ தேவ . . .
2. துலாநாற்று அபர பக்ஷத்து சதுத்தியும் திங்கட்கிழமையும் பெற்ற . . .
3. டையார் திருக்காமிஸ்வரமுடைய நாயனார் திருமுன்பு எரிய திரு நுந்தா வி .
4. ரிக்க கடவோமாக காவிரிப்பாக்கத்து கௌசிகன் ஒற்றிகொண்ட ான் ப (ர் சு
5. ந்தர ஸ்ரஹமாதிராசர் பக்கல் இக்கோயில் முப்பது வ ந்து காணி உடை ய .
6. யும் இற்றை நாளால் கைச்சொண்ட அன்றாடு நற்காசு 2000 இக்காச இரண்டாயிர . . .
7. சந்திராதித்தவரை எரிக்க கடவமானதிருநுந்தா விளக்கு ஒன்றும்மான . . .
8. . . . . பம் கிடாரரையன் பசு 32ம் வாணியின் எடுத்த பாதமுனை யா . . .
9. பசு தொண்ணூற்று ஆறுக்கும் உடையார் திருமுன்பு எரிக்கும் திருநு . . .
10. கூத்தாடுவார் திருமுன்பு எரிக்கும் திருநுந்தா விளக்கு ஒன்று சிறு . . .
11. இவேளார் பசு ஏழும் கட்டிமாணி பசு ஏழும் வாதைமாள பசு ஏழும் வரி . .
12. நாட்டு வேளான் பசு ஏழும் மடபடைகண்டன் பசு ஏழும் வண்ணரிமுதே . . .
13. ஆக பசு நாற்பத்தொன்பதுக்கும் எரிக்கும் சந்தி விளக்கு ஏழும் ஆகத் திருநு.........
14. க்குள் . . . .

எண் : 26

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டபத் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : சோழர், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1259

மொழி : தமிழ் க.வெ.ஆ.அ 424 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் அரசன் தன் பெயரில் கோதண்டராமன் சந்தி என்ற பூசைக்கும், திருப்பணிக்கும், திரு நாளுக்கும் முதலியன மகதை மண்டபத்தில் ஆலம்பலம் என்னும் ஊரில் நன்செய், புன்செய் நான்கெல்லை வரையறுக்கப்பெற்றுத் தானத்தார்க்கு உரிமையாக்கினார். தம் பிறந்த நாளில் கோவிலில் திருவிழாவும், திருப்பணியும் நடத்த வேண்டுமென ஆணை வழங்கினார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்ரவர்த்தி கொனேரின்மேல் கொண்டான் ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இந்நாயனார்க்கு நம்முடைய பேரால் கோதண்டராமன் சந்திக்கும் திருநாளுக்கும் திருப்பணிக்கும் உடலாக மகதை மண்டலத்தில் அலம்பலம் நான்கெல்லைக்குள்பட்ட நஞ்செய்
2. புன்செயும் இவ்வூர் நாயன்மாரகும் புறவூர் நாயன்மார்க்கும் தேவதானம் திருவிடையாட்டம் பட்டர்கள் இறையிலி பள்ளிச்சந்தம் பூதானம் பிறையிலி நீக்கலாக பதினாறாவது வைகாசி மாதமுதல் பொன்வரி யுள்ளிட்ட பல கடமை அனைத்தாயமுட்பட முதலடங்கல் இறையிலியாக சந்ரா

3. தித்தவரையும் செல்வதாக தந்தோம் இப்படிக்கு இவ்வூர் நான்கெல்லை யிலும் திருச்சூலத் தாபனமும் பண்ணுவித்துக் கல்லிலும் செம்பிலும் வெட்டி நம்முடைய பேரால் சந்தியும் ஆட்டைப் பிறந்தநாளிலே திருநாளும் எழுந்தருளப்பண்ணிவித்துத் திருப்பணியும் செய்வித்துபோ

4. துக இவை இளான்குடி உடையான் எழுத்து இவை காலிங்கராயன் எழுத்து திருவெழுத்து துல்யம் உ யாண்டு பதின்மூன்றாவது நாள் 319

எண் : 27

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டப வடக்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியர், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 31.01.1259

மொழி : தமிழ் க.ஆ.அ. 429 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலுக்கு அரசனால் திருநந்தவனப் புற இறையிலியாக இரண்டாயிரம் குழி நன்செய் நிலம் வழங்கப்பெற்றது. இந்நிலம் குலசேகரன் பெரிய ஏரியின்கீழ் இருந்த முதல்தர நன்செய் நிலமாகும்.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி ஸ்ரீ கோச்சடபன்ம
2. ரான திருபுவன சக்கரவத்திகள் எம்மண்டலமும் கொ
3. ண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு ஒன்
4. பதாவது மாசி மாதம் பத்தொன்பதாம் திய
5. தி மிலாடாகிய ஜனனாத வளநாட்டு ஆற்றூ ர்
6. கூற்றத்து ஆறகளூடையார் திருக்காமீ
7. ஸ்வரமுடைய நாயனார்க்குத் திருநந்தவன
8. ப்புற இறையிலி ஆக இவூர் குலசேகரன் பெ
9. ரி ஏரியில் முதற் தரத்திலே நன்செய் அனைத்
10. தாயம் உட்பட இரண்டாயிரம் குழி
11. இறையிலியாக குடுத்தோம் இப்படிக்கு ஒலைபிடி
12. பாடாக திருச்சூலத்தாபனம் பண்ணித் சந்திராதித்தவ
13. ரையும் செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்
14. வது இப்படிக்கு பாண்டிமண்டலத்து முத்தூ ற்றுக் கூற்
15. றத்து கப்பலூ ரான உலகளந்த சோழ நல்லூர் ஆதித்த
16. ன் கணபதி ஆழ்வானான காடுவெட்டி எழுத்து
17. திரு எழுத்து இவை துல்லியம்

எண் : 28

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்பகுதி
வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், வீரகம்பண்ணஉடையார்

காலம் : கி.பி. 1375. 07.12.1375

மொழி : தமிழ் க.ஆ.அ. 131 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் ஆறைநாயகர் திருமண்டபத்தில் ஸ்ரீ ருத்திரர் ஸ்ரீ மாயேசுவரர்தேவகன்மியர் கோயில் கணக்கர் முதலிய அனைவர்களும் அகோரசிவம் முதலியார் மகனுக்குத் திருமடைவளாகத்துத் தெற்குவீதியில் ஒருமனையும் அதைச் சூழ்ந்த இடமும் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேஸ்வரந் ஹரியராய விபாடந் பாஷைக்குத் தப்புவராயர்கண்டன் சதுச்சமுத்திராபதி ஸ்ரீ வீரபுக்கண்ண உடையார் குமாரன் ஸ்ரீ வீரகம்பண்ணஉடையார் பிருதிவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம்

2. 1297ந் மேல் செல்லாநின்ற ராக்ஷச வருஷத்து விருச்சிக நாயற்று பூர்வபக்ஷத்து ஏகாதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உரோகிணி நாள் மலாடாகிய ஜனநாத வளநாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீஸ்வரம் உடைய நாய

3. னார் திருக்கோயிலில் ஸ்ரீ ருத்ரர் ஸ்ரீ மஹேஸ்வரர் தேவகன்மி கோயிற்கணக்கர் இவ்வனைவரோம் ஆறைநாயகன் திருமண்டபத்து நிறைவுற நிறைந்து குறைவறக் கூடி எழுந்தருளி இருந்து பாரத்துவாஜ கோத்திரத்து மாறராதென் உள்ளத்

4. திருந்தாரான அகோரசிவமுதலியார் மகன் என்னுடைய நாயனார்க்கு இத்திருக் கோயில் கண்காணிப் பணிகளிலே இன்னாயனார் இவர்க்குக் காணியாகக் குடுத்தருளின பலமுதல் கண்காணிப்பணியும் இவர்க்கு மனையாகக் குடுத்தரு

5. ளின திருமட வளாகத்துத் தெற்கில் திருவீதியில் அந்நாச்யார் மனையாய் நம்பியர் திருஞானசம்பந்த பண்டிதர் கொண்ட மனைக்கு மேற்கும் உவச்சன் பெரிய உடையான் மனைக்குக் கிழக்கும் ஆக் இதுக்கு நடு உட்பட்ட மனை ஒன்றும் மனைப்

6. படப்பையும் மேனோக்கின மரமும் கீழ்நோக்கின கிணறும் மற்றும் உள்ள சகல பிராப்திகளும் உரித்தாவதாகவும் இவரும் இவருடைய தம்பிமாரும் அனுபவித்து கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டு சந்திராத்திவரையும் அனுபவித்து விற்றும்

7. ஒற்றிவைத்தும் கொள்ளக் கடவார்களாகவும் இப்படி சம்மதித்துக் குடுத்தோம் என்உடைய நாயநார்க்கு ஸ்ரீ ருத்ரர் ஸ்ரீ மாஹேஸ்வரர் தேவகன்மிகளும் கோயிற் கணக்கர் இவ்வனைவரோம் இவை முதலியார் அகோரசிவர் எழுத்து இவை நாயனார்.

8. என்னுடைய நாயனார் எழுத்து இவை திருசிற்றம்பலவர் எழுத்து இவை தடுத்தாட்கொண்ட நாயனார் எழுத்து இவை திருஞான சம்பந்தப் பிரமராயர் எழுத்து இவை வளர்த்தார் எழுத்து இவை திருவேகம்பம் உடையான் எழுத்து இவை இக்கோயில் கணக்கு காணி

9. உடைய நெடுவாயில் உடையான் பிச்சன் திருக்காமீஸ்வரப்பிரியன் எழுத்து

எண் : 29

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் இரண்டாம் சுற்றுச் சுவரின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியர், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 08.06.1263

மொழி : தமிழ் க.ஆ.அ. 439 - 1913

செய்தி : கோவில் பூசை நாளில் 3 1/8 பங்கு உரிமை உடையவளாகத் தேவ . . சாணி என்ற ஒருபெண் இருந்தாள். அவள் கோவில் அணிகலன்களைத் திருடியமையால் அவளும் அவளுடைய மருமகளும் சிறைப்படுத்தப் பெற்றனர். சாணி 2 1/2 பங்கு உரிமையும் அவள் மருமகள் 5/8 பங்கு உரிமையும் பெற்றிருந்தனர். அவ்வுரிமையப் பறித்து விலைக்கு விற்றனர். அதன் விலை 250 பணம் என்று நிச்சயிக்கப்பெற்றது. திருஞானசம்பந்தப் பண்டிதர் என்பவர் அப்பணத்தைக் கொடுத்து அப்பூசை உரிமையைப் பெற்றிருந்தார். அவரிடமிருந்து அக்கோவில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்கள் விலைக்குப் பெற விழைந்தனர். அவர்கள் தங்களுக்குரிய உரிமைகளைச் சேர்த்து 250 பணத்துக்கு விற்று அத்தொகையைத் திருஞானசம்பந்தப் பண்டிதர்க்குக் கொடுத்து நாள்பூசை உரிமையைப் பெற்றனர். அவ்வுரிமையைத் தாங்கள் விற்ற உரிமைக்கேற்பப் பகிர்ந்து கொண்டனர். ஒருபணம் என்பது நூறு சோழியக் காசுகளைக் குறிக்கும்.

கல்வெட்டு :

1. . . . . திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 12 ஆவது செ. . . பற்று பூர்வபக்ஷத்து பூர்ணையும் வியாழக்கிழமை பெற்ற சோதி நாள் மலாடாகிய ஜனநாத வளநாட்டு ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் உடை . . .

2. டய நாயனார் கோயிற் காணி உடைய சிவபராமணர் பாரத் வாஜன் ஆண்டான் தனவாசி கட்டின பட்டனும் இவந்தமபி ஊருடை பெருமாளாந பன்மாகேசுவர பட்டனும் இந்த கோத்ரத்து நாயன் தாழி ஆறைநாயக பட்டனும் இவற் தம்பி.

3. கோத்ர தெப்பமழகியான் மருதப்பட்டதும் காசிபன் திருக்கழிப்பாலை புகலியும் ஆபன காமன் விரதமுடித்த பட்டனும் இந்த கோத்ரத்து தாழி கண்டா மாத்தாண்ட பிரமராயனும் இந்த கோத்ரத்து உடையாந் செய்யா சேவக பட்டனும் அண்ணாமலை

4. ரன் பரப்பிநான் ஐய்வற்க்கு அரியான் காசிபனும் இவ்வனைவோம் கோயில் காணி விலை பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது இகோயில்ஜவா சாரியக்காணி உடைய தேசிகன் பாரத் வாஜந் ஆட்கண்ட தேவன் . . . .

5. ந்த பண்டிதற்கு நாங்கள் விற்றுக்குடுத்த காணியாவது இக்கோயில் முப்பது வட்டத்து காணி உடைய நாங்களும் ஆய்யன் உமையன் . . ஹரிதேவங்ங மாணி உள்ளிட்டாரும் கோயில் முறைசெய்து போதுகிற நாளிலேய் இந்நாயனார் திருவாபரணங்களிலே செ

6. இவ்வூர் நிலங்கலந்த மாகேசுவரரும் நாயனார் முதலிகளும் திருமண்டபத்திலே இருந்து கேட்ட இடத்து இத்திருவாபரணச் சொற்றி தேவா . . . சாணி உள்ளிட்டார் பக்கலே . . . இவளையும் இவள் மருமகளையும் சிறையிலே வைத்து இதுக்கு தெண்டமாக இவள் காணியம் இவள் உள்ளிட்டார் காணியும்

7. ற்று திருப்பணி செய்வதென்று நாயனார் அருளிச் செய்கையில் இவள் காணியான நாள் 2 1/2யும் இவள் கொண்டுடைய நாள் 5/8ஆக நாள் 3 1/ 8 விலை நிச்சயித்த பணம் 250 இப்பணம் 250துக்கு இவள் நாளும் இவள் உள்ளிட்டார் நாளும் . . .

8. வதென்று நலிவு செய்கையில் எங்களுக்கு உற்பத்தி இல்லாமையில் இவள் உள்ளுட்டார் நாள் 3 1/8வும் முப்பது வட்டத்தில் . . . ட்டிலே நாங்கள் வீசிக் கொண்டு எங்களுக்கு க்ரமாகதமாய் நாங்கள் அனுபவித்து போது கிற காணிகளிலேய் . . . . .

9. கு விற்றுக்குடுத்த நாளாவது ஆறகளூருடையார் திருக்காமீசுவரமுடை ய நாயனார் கோயில் அடியாக கொண்டு இவ்வூர் பலதளி உள்ளுட்ட நாயன்மார் கோயில்களிலும் ஆற்றூர் நாட்டில் ஊர்களில் பலதளி உள்ளுட்ட நாயன்மார் கோயில்கலிளும். . . .

10. ர் கோயில்களிலும் மற்றும் எப்பேற்பட்ட பிராப்திகளிலும் எங்கள் காணியான நாட்களிலே திருஞாநசம்பந்த பண்டிதர்க்கு விற்று குடுத்த நாள்கள் தேவாசி காட்டின பட்டர் உள்ளுட்டார் நாள் 3/4லும் ஆறைநாயகன் பட்டன் உள்ளிட்டார் நாள் 7/8 . . . . . .

11. மாத்தாண்ட பிரமராயன நாள் 3/8 யும் விரதமுடித்த பட்டன் நாள் 3/8யும் செவகபட்டன் உள்ளுட்டான் நாள் 3/8யும் ஆ . . சபட்டன் நாள் 3/8யும் ஆக நாள் 3 1/8 இந்த நாள் 3 1/8லுக்கு வரும் மனையும் . . ன் பிராப்திகளும் யிடியிம்ப . . வா

12. ன் வருவன் . . ம்பர விருந்தநவும் மற்றும் எப்பேற்பட்ட உரிமை பிராப்திகளும் பாகாசிரியங்களும் இற்றைநாளால் இவற்கு விற்றுக் கொள்வதாக அம்மிலிசைந்த விலைபொருள் அன்றாட நற்பணம் 250 இப்பணம் 250துக்கும் அன்றாடு விலைப்படி காசு பணம் ஒன்றுக்கு

13. சோழிய காசு 100 ஆக பணம் 250க்கு காசு 25000இக்காசு இருபத்தைய்யாயிரத் துக்கும் பணம் 250 மேல் விலையாவதாகவும் இது வேறு பொருள் மாற்றுதப் பொருள் செல . . . இப்படி விழக்காட்ட வந்த நாள் . . . . .

14. 250ம் ஆவணக்கள்ளிபே . . . றறிகிழிச்செலவமுக் கைக்கொண்டு விற்பு விலை பிரமாணம் பண்ணி கல்லெட்டிக் குடுத்தோம் முப்பது வட்டத்துக் காணி உடைய சிவப்பிராமணரோம் ஒருகாலாவதும இருகாலாவதும் முக்காலாவதும்

15. விலைக்குற விற்று பொருளறக் கைக்கொண்டு திருப்பணியிலே ஒடுக்கி செலவற்ற படிக்கு கல்லெட்டிக் குடுத்தோம் முப்பது வட்டத்துக்காணி உடைய சிவப்பிராமரோம் இத் திருஞாந சம்பந்த பண்டிதற்கு இப்படி . . . விடுவித்துக் குடுத்தோம்.

16. முப்பது வட்டத்து காணி உடைய இவ்வனைவோம்

எண் : 30

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் வாயில் அமைந்துள்ள குமுதப்படை

அரசர் : ஒய்சாளர், வீரராமநாததேவர்

காலம் : கி.பி. 1267

மொழி : தமிழ் க.ஆ.அ. 414 - 1913

செய்தி : இராகுத்தராயன் என்பவருக்குச் சேலநாட்டிலுள்ள நாட்டமங்கலம் என்னும் ஊர் சீவிதப்பற்றாக முன்னாளில் அரசனால் வழங்கப்பெற்றது. அந்நிலத்தைத் தேவதான இறையிலி நிலமாகத் திருக்காமீசுவரமுடைய நாயனார்க்குப் பூசைக் கட்டளைக்கும், திருப்பணிக்கும் வழங்க பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ராகுத்தராயன் ஒலை ராமனாத தேவர்க்கு யாண்டு பதின்மூன்றாவது நாள் ஆறகளூர் உடையார் திருக்காமீசுவர

2. முடைய நாயனார்க்கு இனக்கு முன்னாள் ஜீவிதமாக அடைத்த சேலநாட்டு நாட்டாமங்கலம் நான்கெல்லைக்குட்பட்ட நன்

3. செய் புன்செய்யும் கடமை வற்க்கம் மற்றும் எற்பேற்பாட்டு இறை முறைமையும் இவ்வாட்டை தை மாதமுதல்

4. இவ்வூர் முதலடங்கலும் தேவதான இறையிலியாக தந்தோம் இப்படி சந்திராதித்தவற் செல்ல நான்கெல்லையும்

5. திருக்கூலத்தாபனம் பண்ணி பூசையும் திருப்பணியும் நடத்துவிப்பது இவைராகுத்தராயன் எழுத்து

எண் : 31

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டப வடக்குபுறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1286

மொழி : தமிழ் க.ஆ.அ. 426 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் தன்னுடைய அண்ணாழ்வி பெயரில் கண்டியதேவர் என்பவர் எழுந்தருளுவித்த குலசேகர ஆவுடையாருக்கு அமுதுபடி சாத்துபடி முதலியவற்றுக்காக அரசனால் ஆறகளூர் குலசேகரப் பெரிய ஏரியின் கீழ்ப்பற்றில் நன்செய் முதல்தர நிலம் கொடுக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி கோச்சடபன்மரான திருபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு
2. யாண்டு எட்டாவது எதிராமாண்டு ஆடி மாதம் மிலாடாகிய ஜனநாத வளநாட்டு ஆற்றூ ற்
3. கூற்றத்து ஆர்களூருடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனர் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார் கே
4. ரயிலில் அண்ணாழ்வினாமத்தால் கண்டியதேவர் எழுந்தருளுவித்த ஆவுடையார் குலசேகர ஆவுடையார்க்கு
5. அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்த நியமத்துக்கு உடலாக இவ்வூர்க் குலசேகரன் பெரிஏரியில் கீழ்பற்று நன்
6. செய் முதற்தரத்திலே அனைத்தாயம் உட்பட மூவாயிரம் குழி குடுத்தோம் இப்படிக்கு இஒலைப் பிடிபாடாக கொண்
7. டு இந்நிலம் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொண்டு நான்கெல்லையும் திருச்சூலத்தாபனம் பண்ணி சந்திராதித்த வரை
8. ரயும் அனுபவித்துப் போவது இப்படிக்கு இவை பாண்டிமண்டலத்து உரையக்குடி உடையான் எழுத்து
9. இவை திருவெழுத்து துல்லியம்

எண் : 32

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டப வடக்குபுறச்சுவர்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 27.02.1287

மொழி : தமிழ் க.ஆ.அ. 425 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய கோவில் தானத்தார்க்குக் கண்டியதேவர் என்பவர் தன்னுடைய அண்ணாரின் பெயரில் எழுந்தருளச்செய்த குலசேகர ஆவுடையார் கோவில்அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு நிலம் வழங்கப் பெற்றனர். இந்நிலம் இராச நாராயண நல்லூர்ப்பற்றில் நன்செய் நிலத்தில் முதல்தர நிலமாக வழங்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமுகப்படி கோச்சடபன்மரான திரிபுவனச்சக்கரவத்தி ஸ்ரீ சுந்தரபாண்டி
2. யதேவற்கு யாண்டு 10வது மீனநாயற்று பூர்வபக்ஷத்து திரயோதசியும் வியாழக்கிழமையும் பெற்ற
3. மகத்துநாள மலாடாகிய ஜனநாத வள்நாட்டு ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திரு
4. க்காமீசுவரமுடைய நாயனார் கோயில்த் தானத்தார்க்கு இக்கோயிலில் அண்ணாழ்வி திருநாமத்

5. ண்டியதேவர் எழுந்தருளுவித்த குலசேகர ஆவுடை யார்க்கு பள்ளியா
6. வாழ்வித்த மங்கையார்க்கு தேவதான இறையிலியாக பொன்யாயின இராஜநாராயண கல்லூர
7. ரிர் வாரப்பற்று நன்செய் நிலத்து முதல்தரத்திலே அறுநிலம் அறைக் குடிமக்களும் உர்ய இறையிலி
8. யாகத் தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபா க கொண்டு இநிலம் சந்திராதித்தவரையும் செல்வதாக கல்
9. லிலும் செம்பிலும் வெட்டி தேவதான இறையிலியாக அனுபவித்துப் போதுவது இப்படிக்கு பண்டி மண்டலத்து மு
10. த்துற்று கூற்றத்து கப்பலூர் ஆன உலகளந்த சோழநல்லூர் ர் ஆதிச்சன் கணபதி ஆள்வானான காடுவெட்டி எழுத்து உ திருவ
11. முதது குலசேகரம் உ

எண் : 33

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் வெளிச்சுற்றின் தென்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1287

மொழி : தமிழ் க.ஆ.அ. 138 - 1913

செய்தி : அரசன் சுந்தரபாண்டியன் கோவிலுக்குப் புதிதாகக் குடிமக்களைக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூ ர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடை ய நாயனார் கோயில்த் தானத்தார்க்கு
2. ஆறகளூர் வடக்கு வாசலுக்குப் புறம்பு தாங்கள் வறுவிக்கு குக்குலயர்க் குடிமக்களை பத்தாவது ஆனிமாதம் இக்கோயில்க் க
3. ண்டியதேவர் எழுந்தருளுவித்த குலசேகர ஆவுடை யார்க்கு தேவதானக் குடிமக்களாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபா
4. டாகக் கொண்டு தேவதானக் குடிமக்கள்சந்திராதித்தவரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கடமை போக (போக்கறு)
5. ப்பித்துக் கொள்க இப்படிக்கு இவை பண்டி மண்டலத்து முத்தூ ர்க் கூற்றத்துக் கப்பலூர் ஆன உலகளந்தசோழநல்லூ ர் ஆதித்
6. த கணபதியாழ்வானான காடுவெட்டி எழுத்து

எண் : 34

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் உட்பிரகார வடக்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1287

மொழி : தமிழ் க.ஆ.அ. 132 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் வாணிக நகரத்தாரும் செட்டிகளும் பிணங்கியிருந்த காரணத்தால் திருநாள் திருவிழாக்கள் நடைபெறாமல் தாழ்வுபட்டு இருந்தன. பின்னர் வாணிக நகரத்தார் கோவில் மாகேசுவரக் கண்காணி செய்யும் பெருமக்களிடம் வேண்டிக் கொண்டு உறுதியளித்ததற்கிணங்க அக்கோவில் திருப்பணி செய்யும் உரிமை மீண்டும் அளிக்கப்பெற்றது. அத் திருப்பணியை அவர்களும் தொடர்ந்து செய்யாமையால் தடைப்பட்டது. ஆறகளூர் நாட்டார் கோவிற்பணி தாழ்வுபடலாகாது என்று எண்ணிக் கோவில் தானத்தார்க்கு ஆற்றூரில் தலைவாய் என்ற ஊரைக் குடிநீங்காத் தேவதான இறையிலியாகக் கொடுத்து மீண்டும் கோவில் பூசைகள் மற்றும் விழாக்களைத் தடையின்றி நடைபெறச் செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மரான த்ரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பதின்மூன்றாவது மிதுனநாயற்று பூர்வ பக்ஷத்து த்ரயோதிஸியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற அநிழத்து நாள் மலாடான ஜனனாத வளநாட்டு ஆற்றூ ர் கூற்றத்து ஆறகளூருடையார் திருக்காமீஸ்வரமுடைய நாயனார்க்கு திருவானித் திருநாளுக்கும் திரு மார்கழித் திருநாளுக்கும் திருமாசித்

2. திருநாளுக்கும் முன்னாள் வாணிக நகரத்தார் செட்டிகளுடன் ப ங்கி இவர்களைத் தாழ்வு காட்டி நாங்கள் இத்திருப்பணி ஏறிட்டுக் கொள்ள என்ற அளவில் நீங்கள் சண்டேஸ்வரப் பெருவிலையாகக் கொண்ட திருநாள்படி தேவை உள்ளது குறைவறுக்கிறோம் என்கைஇல் இவர்கள் இத்திருச்சாந்துச் சாத்தி எழுந்தருளிப் புறப்படும்படிக்கு திருமேல்பூச்சு திருப்பரிவட்டம் திருமாலை திருக்காப்பு நான் திருப்பாவாடை

3. க் குறைவறுப்பு திருவினைக்குடை திருவாலவட்டம் திருக்கோடி ஆடை சட்டத்துக்கு மிலி உள்ளிட்டவை பந்தம் எண்ணை தட்டுப்படாமல் செய்விக்க கடவதாக ஸ்ரீ மாஹேஸ்வரகண்காணி செய்வார்களுக்கு முறி குடுத்து இவர்கள் சண்டேசுவரப் பெருவிலை கொண்டு உடையதான இத்திருப்பணி தாழ்வு படுகையாலேய் ஆற்றூ ர் நாட்டவர் கண்டு இத்தாழ்வு கேட்டு இப்படி தாழ்வுபடலாகா தென்றும் ஆற்றூ ர் நாட்டுக்கு ஆறகளூருடையார்

4. திருக்காமீ வரமுடைய நாயனார் திருநாள் தேவை எங்களுக்கு பூர்வ்வம் என்று இடையிலெ தாழ்வு காட்டி படாமல் நடத்தும்படி சீமாஹேஸ்வரர்க்கும் தானத்தார்க்கும் இசைய நாங்கள் நாடாக குடுப்பதான ஆற்றூ ர் நாட்டு தலைவாய் இத்தலைவாய் நான்கெல்லைக்கு உள்பட்ட நன்செய் புன்செய் கரைப்புன்செய்க்கு பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களும்

5. நாட்டு வினியோகமும் உள்பட திருநாள் தேவைக்கு தலைவாய்குடி நீங்காத் தேவதானம் இறையிலியாகத் தந்தோம் ஆற்றூ ர் நாட்டு நாட்டவரோம் இப்படிக்கு நான்கெல்லையும் திருச்சூலத்தாபனம் பண்ணி கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் இப்படிக்கு ஆற்றூ ர்க் காணிப் பற்று ஆற்று கடனாம் கொள்ளகடவது இப்படிக்கு நாட்டுக்குச் சமைந்து பெரியநாட்டு வேளாண் எழுத்து

எண் : 35

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டபத் தெற்குப்புறச் சுவரின் அடித்தளம்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1292

மொழி : தமிழ் க.ஆ.அ. 419 - 1913

செய்தி : ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் ஓதுதற் பொருட்டு இரு அந்தணர்கள் சேதிராயர் என்பவரால் நியமிக்கப் பெற்றனர். அவர்களுக்குக் குலசேகரன் பெரிய ஏரியில் காடுவெட்டித் திருத்திய ஆயிரம் குழி நிலம் இறையிலியாக வழங்கப்பெற்றது. மேலும் அரசன் ஆணையின் பெயரில் அவ்வூர் நாட்டவர் வேம்பற்றாற்றுக்கும் பெண்ணையாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியில் சில குறிப்பிட்ட வரிகளை விதித்துக் கோவிலுக்கு அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ கோச்சடபன்மரான திரிபுவனச் சக்ரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாம்டு 15வது ஆறகளூர் உடையார் திருக்காமீசுரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார்க்கு அதிஅயனம் பண்ண சேதிராயர் கடைக்கட்டினபிராமணர் பேர் இருவர்க்கு இவ்வூர்க் குலசேகரன் பெரி ஏரியில் இவர் காடுவெட்டிக் காணியான நன்செய் நிலத்திலே பதின்மூன்றாவது புரட்டாதி மாதம் முதல் ஆயிரம் குழி பொ

2. ன்வரி உள்ளிட்ட காசாயவற்கமும் அனைத்தாயங்களும் உட்பட இறையிலியாகத் தன்தோம் இவ் அதிஅயனத்துக்கு இன்னிலம் சன்திராதித்வரை செல்வதாக இப்படிக்குக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்வது இவை திருஎழுத்து துல்யம் உ இவை காடுவெட்டி எழுத்து ஸ்வஸ்திஸ்ரீ அருளுச் செயல் வெம்பராற்றுக்கு வடக்கு பெண்ணை ஆற்றுக்குத் தெற்கு உள்பட்ட பற்றில் நாட்டாற்கு ஆறக

3. ளூர் நாயன்மார் தேவதானம் திருவிடையாட்டத்துக்கு நாட்டு வினிஓகம் காணிக்கை சம்மாதம் உள்பட்ட அனைத்தாயங்களும் தவித்த இம்முதல் இட்டு நமக்கு நன்றாக திருநாள் எழுந்தருளப் போகச் செய்தே 15வது காணிக்கை பணத்துக்கு வகுப்பட்டு தரவு பிறித்தார்களாக கேட்டோம் இப்படி செய்யக்கடவர்கள்ல்ல இவ்வோலை கண்டபொழுதே இப்பற்றில் பிறித்த தரவுகளும் தவிரக் கழித்துக் கொண்டதுண்டாகிலும் திர

4. யக் குடுப்பித்து மேலும் இப்படி இருக்குமிவை பரிகரிக்க இவை திருஎழுத்து துல்யம் உ இவை வாணாதராயர் எழுத்து

எண் : 36

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் கிழக்குப்புற அடித்தளம்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1290

மொழி : தமிழ் க.ஆ.அ. 448 - 1913

செய்தி : ஆறகளூர் கரியபெருமாள் கோவிலில் அமுதுபடிசாத்தப்படி உள்ளிட்ட நித்த நிவத்தங்களுக்கு இறையிலியாகப் பொன்பரப்பியான இராசநாராயண நல்லூர் என்னும் பெயருடைய ஏரியின்கீழ் நன்செய் நிலத்திலே ஆயிரம் குழி நிலம் இறையிலியாக அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூர்க்கூற்றத்து ஆறகளூர்க்கரிய பெருமாள் கோயிலில் திருவடிப்பிடிக்கும் நம்பிமார்க்கும் ஸ்ரீ வைஷ்ணவக் காணி செய்வோர்களுக்கும் இக்கோயில் சிங்கர்க்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட நித்த நிமந்தங்களுக்கு

2 ம் திருப்பணிக்கும் உடலாக அண்ணாழ்வி சுந்தர பாண்டிய தேவர்க்குப் பதிமூன்றாவது புரட்டாசி மாதத்தில் கிரகண சாத்தி யேர்த்தமாகப் பொன்பரப்பியான இராசநாராயண நல்லூர் ஏரிகீழ் வாரப்பற்று நன்செய் நிலத்தில் முதற்தரத்திலே தடிசேர ஆயிரங்குழி பொ

3. ன்வரி காசாயங் காத்திகைப் பச்சை ஊசிவாசி மாதிருசாந்தி நல்லெருது நற்பசு வேலிஎருது காணிக்கை நாட்டு வினிஓகம் ஆளமஞ்சி தேவை உட்ப்பட்ட அனைத்தாயங்களும் உட்பட இந்நாள்முதல் திருநாமத்துக் காணி இறைஇலியாகத் தந்தோம் இப்படிக்கு இவ்வோலை

4. பிடிபாடாகக் கொண்டு இந்நிலத்திந் நான்கெல்லையிலும் திருவாழிக் கல்லும் நாட்டிக்கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்டுச் சந்திராதித்த வரையும் திருநாமத்துக்காணி இறையிலியாக அனுபவிக்க இப்படிக்கு இவை பாண்டிமண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூர் ஆன உலகள

5. ந்த சோழநல்லூர் ஆதித்தன்கணபதி ஆழ்வானான வாணாதராயன் எழுத்து திரு எழுத்து துல்லியம்

எண் : 37

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
கமலமங்கைக் கோவில் கருவறையின் தெற்குப்புறச்சுவர்

அரசர் : வாணகோவரையன்

காலம் : கி.பி. 1295

மொழி : தமிழ் க.ஆ.அ. 453 - 1913

செய்தி : கோவில் வழிபாட்டுக்கும் திருப்பணிக்கும் முதலீடாக மகதை மண்டலத்தைச் சேர்ந்த தொழுவூரில் வாரப்பற்று நிலம் ஆயிரம் குழி வரிநீக்கிய திருவிடையாட்டமாக இக்கோவில் ஸ்ரீ வைணவரிடத்தில் கொடுக்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆறகளூர் மலைமண்டலம் பெருமான் கோயிற் திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவற்கு இந்நாயனார்க்கு திருவாராதனமும் திருப்பணிக்கும்

2: உடலாக மகதமண்டலத்துத் தொழுவூர் வாரப்பற்று நன்செய் நிலத்திலே பதினெட்டாவது பிசானம் முதல்பெற ஆயிரங்குழி பொ

3. ன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களும் திருவிடையாட்ட இறையிலியாகத் தந்தோம் இந்நிலங் கைக்கொண்டு இந்நாயனாற்குத் திருவா

4. ராதனமும் திருப்பணியும் நடத்தவும் இப்படிக்குத் திருவிடையாட்ட இறைஇலியாக சந்திராதித்தவரை செல்வதாகக் கல்லிலும் செம்பிலும்

5. வெட்டிக்கொள்க குழி ஆயிரத்துக்கும் இவை வாணகோவரையன் எழுத்து

எண் : 38

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் இரண்டாம் சுற்றுக் கிழக்குப்புறச் சுவரின் வலப்புற வாயில் அண்மையில்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 14ஆம் நூற்றாண்டு

மொழி : தமழ க.ஆ.அ. 440 - 1913

செய்தி : குறுநிலத்தலைவர்கள் இருவரின் அரசியல் உடன்படிக்கையைக் குறிப்பிடுகிறது. இராசராச தேவர் பொன்பரப்பின குலோத்துங்கச்சோழ வாணகோவரையர்க்கும் திருக்கோவிலூருடைய கிளியூர் மலையமானுக்கும் இடையே நிகழ்ந்த உடன்பாட்டு ஆவணம். அவர்கள் தங்கள் நாட்டு எல்லைகளாக ஆள்வினையாற்றுக்குத் தெற்கும்

வடக்குமாகப் பிரித்துக் கொண்டனர். இருவரும் இடையீடின்றி ஒன்று சேர்ந்து அரசு புரிவதாகவும் இருவரும் இணைந்து படையெடுத்துப் போர் புரிவதாகவும் போர்க்காலத்தில் ஒருவர்க்கொருவர் படையும் குதிரையும் படைமுதலிகளையும் அனுப்பி உதவுவதாகவும் உடன்பட்டமை.

கல்வெட்டு :

1. 13ஆவது ஆறகளூருடைய இராசராசதேவன் பொன்பரப்பினான குலோத்துங்க சோழ வாணகோவரையற்குத் திருக்கோவலூருடைய கிளியூர் மலையமான் . . .
2. ங்களில் நாடு நிற்குமிடத்து ஆழ்வினையாற்றுக்குத் தெற்கு இவற்கு நிற்கவும் இவ்வாற்றுக்கு வடக்கு எனக்கு நிற்கக் கடவதாகவும் கிழக்கு நாடு நிற்குமிடத்துக் கல்லியா . . .
3. டவதாகவும் எங்களிலிருவோமும் நாங்களுள்ளதனையும் பிழையாதே நின்று இராசகாரியஞ் செய்யிலும் வன்னியஞ் செய்யிலுங் கூடவே செய்யக்கடவோ மாகவும் . . . . .
4. டவோமாகவும் இவற்கு வ'னையுண்டாகில் என முதலிகளும் படையுங் குதிரையும் புகவிட்டு என்வினையாக ஏறட்டுக் கொண்டு நோக்கக் கடவேனாகவும்...
5. வனாகவும் எனககு வ'னையுண்டாகில் இவருள் தம் முதலிகலும் படை . . குதவிட்டு தம்வினையாக ஏறட்டுக் கொண்டு நோக்க கடவராகவும் இத்தாலும் நோ . . .
6. ழ மலையகுலராயன வினையிடைப் பாட்டம் ..னுடனே கூட நோக்கித்தக் கடவராகவும் என் . . . மென்று சொன்னானா முதல்மையாக்கி பரி சரிக்கக்க . .
7. ாமையானுக்கு என் பெண்டுகளைக் குடுத்தேனாவேன் இப்படிக்கு ஆறகளூரில் உடையார் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிலிலே கல்வெட்டிக் கு . . .
8. குலராயன் எழுத்து உ

எண் : 39

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
கரியவரதராசப் பெருமாள் கோவில் கருவறையின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : வாணகோவரையன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 446 - 1913

செய்தி : வாணகோவரையன் ஆணைப்படிக் கரியவரதராசப் பெருமாள் கோவிலுக்குத் திருவிடையாட்ட இறையிலி நிலமாகப் பல்வேறு மக்களிடமிருந்து நன்செய் நிலம் 3170 3/4 குழியும் புன்செய் நிலம் 7115 குழியும் வாங்கப்பெற்றது. இந்நிலம் திருநாமத்துக்காணிப் பெருவிலையாகப் பெறப் பெற்றது. நன்செய் நிலம் குழி ஆறு காசு வீதம் 19024 காசுகளும் புன்செய் நிலம் இரண்டு காசு வீதம் 14230 காசுகளும் செலுத்தப் பெற்று இந்நிலம் உரிமையாக்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வாணகோவரையன் ஓலை ஆறகளூரில் கரிபெருமாள ஸ்ரீ பண்டாரிகளும் ஸ்ரீ வைஷ்ணவக் கண்காணி செய்வார்களும் கண்
2. டு இவ்வெம்பெருமான் திருவிடையாட்ட இறைமிலி காசாறன படமான செயநாட்டுச் சருப்பெதி மங்கலத்து கால்வழி காணிப்பற்று ஏந்தலிலும் கரைப்புன்செயிலு
3. ம் மாதுயாந்தீத்தான் அனுபவிதத சாபெர் பெரிய செல்வநம்பி பறறு கரை புன்செய் குழி ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஒன்றே கால் இந்நிலத்து இலுப்பை மாமரமும்
4. நன்செய் குழி எழுநூறும் அறுபத்தாறுளுட் கொள்வதான பெருமான் பற்று நன்செய்க்கு நூறு ஆக நன்செய் குழி எண்ணூ ற்று எழுபத்தாறு கரைப் புன்
5. செய்குழி ஆயிரத்து முன்னூற்று அறுபத்து ஒன்றேகால் இலுப்பை மா மரமு சாபே போய் அனுபவித்த சாபேர் தில்லைநாயகநம்பி பற்று நன்செய் குழி எழுநூ ற்று நாற்பத்
6. தேழரை கரைப் புன்செய்க் குழி அஞ்ஞூற்று எழுபத்தொனறு சாபேர் பெரியநாயகநம்பி பற்று குழி நூற்று முப்பதே கால் ஆக நன்செய் குழி அஞ்ஞூற்று எழுபத்தேழு முக்கால்
7. கரைப் புன்செய் குழி அஞ்ஞூற்று எழுபத்தொண்பது தேவப்பெருமாள் அனுபவித்த சாபேர் திருக்காமீசுவரமுடையா பற்று நன்செய் குழி இருநூற்று
8. எண்பது கரைப்புன்செய் குழி இருநூ ற்றுத் தொண்ணூ று சாபேர் தில்லைநாயக நம்பிப் பற்றுக் கரை புன்செய் குழி எண்பத்து நாலு ஆக நன்செய் குழி இருநூ
9. ற்று எண்பது கரைப் புன்செய் குழி முன்னூ ற்று எழுபத்து நாலு விசலூ ரிலிருக்கும் பிராமணரில் திருகாமன் அனுபவித்த சாபேர் சாத்தனுடையான் ப
10. ற்று நன்செய் குழி நானூ ற்றொருபத் அஞ்சேகால் கரைப் புன்செய் குழி . . தறுநூ ற்று அறுபத்து நாலேமுக்கால் இன்னிலத்து இலுப்பை மா மரமும் சேர்த்து அ
11. னுபவித்து சாபே தில்லைநாயகநம்பி பற்று நன்செய் குழி நூற்று அறுபது கரை புன்செய் குழி எண்ணூற்று ஆறரை சாபேர் அணுக்க நம்பி பற்று நன்செய்
12. குழி நூ ற்றொருபத்தொன்றேகால் சாபேர் வண்டுவராயதி நம்பி பற்று நன்செய் குழி முன்னூற்று முப்பத்துநாலேகால் சாபேர் சிங்கப்பெருமாள் பற்று கரைப் பு
13. ன்செய் குழி தொளாயிரத்து இருபத்தேழரை இன்னிலத்து இலுப்பை மா மரமும் நன்செய் குழி அறுநூற்று ஒருபத்து ஒன்றரை கரைப் புன்செய் குழி ஆயிர
14. த்து எண்ணூற்று இருபத்துநாலு இலுப்பை மாமரமும உடையான் அனுபவித்த சாபேர் பொன்னம்பலநம்பி பற்று நன்செய் குழி நூற் றொருப
15. தேகால் கரை புன்செய் குழி ஆயிரத்து நூற்றொருபத்திரண்டு ஆக நன்செய் குழி மூவாயிரத்து ஒருநூ ற்று எழுபதேமுக்கால் கரைப் புன்செய் குழி
16. ஏழாயிரத்து ஒருநூ ற்றொருபத்துஅஞ்சி இந்நிலத்து இலுப்பை மாமரம் பதினொன்றும் இக் காணியாளார் பக்கல் இவர்கள் கொண்டுடையார்களாய் அனுபவித்த
17. மையில் இநத நன்செய நிலம் குழி மூவாயிரத்தொரு நூ ற்றெழுபதே முக்கால் கரைப் புன்செய் குழி ஏழாயிரத்தொருநூ ற்றொருபத்து அஞ்சி இலுப்

18. பை மரம் பத்தினாலும் மா ஒன்றும் நாலாவிது பங்கும் மாதத்து பன்னிரண்டாந் தியதி முதல் இவ்வெம்பெருமானுக்குத் திருநாமத்துக் காணியாகக் கொண்டு வீரமா
19. கதப் பெருவிலையாக ஒன்றுக்குக் காசு ஆறாகப் பத்தொன் பதினாயிரத் திருபத்து நாலும் கரைப் புன்செய்க்கு இலுப்பை மரமும் உட்பட குழிக்கு காசு இ
20. ரண்டாகக் காசு பதனாலாயிரத்து இருநூ ற்று முப்பது ஆகக் காசு முப்பத்து மூவாயிரத்திருநூ ற்று ஐம்பத்துநாலும் நம் சாக்கில் ஒடுக்கி இந்தக் காணி
21. ப்பற்று நன்செய் குழி மூவாயிரத்தொரு நூ ற்றெழுபதே முக்காலும் கரைப் புன்செய் குழி ஏழாயிரத்தொரு நூ ற்றொருபத்து
22. அஞ்சும் இன்னிலத்து இலுப்பை பதினாலும் மா ஒன்றும் இவ்வெம்பெருமான்
23. . . . சந்தராதத்தவரையும் திரநமத்துக்காணியாய் விலையும் ஒற்றியுஞ் செல்லச் கடவதாகச சொன்னோம் இப்படி
24. செய்வதே இவை வாணகோவரையன் எழுத்து இவை தாயிலு நல பிரமராயர் எழுத்து

எண் : 40

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
சோழீசுவரர் கோவில் கருவறையின் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : வாணகோவரையன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 454 - 1913

செய்தி : குறுக்கைப்பாடி நான்கெல்லைக்குட்பட்ட நன்செய், புன்செய், நத்தப் புன்செய், ஏந்தல் பற்று முதலியவற்றால் வந்த காசாயங்களும் பிற வரிகளும் தாயிலும் நல்ல சோழீசுவரர் கோவிலுக்குத் தேவதான இறையிலியாக வழங்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விலாடராயரும் புரவரியாரும் செயக்கடவபடி குறுக்கைபாடி நான்கெல்லைக்குட் . . . ன்செய் புன்செய் கரைப்புன்செய் . . . தப் புன்செய் ஏந்தல் பற்று
2. பொன்வரி காசாயம் காத்திகைப்பச்சை நல்லெருது நற்பசு ஊசிவாசி மாதிருசாந்து உள்ளிட்ட காசாயங்களும் தறியிறை மனையிறை செக்கிறை ஆட்டிறைப் பாட்டம்
3. மகண்மையும்உட்பட ஆறகளூர் உடையார் தாயிலும் நல்ல சோளீசுவரமுடைய நாயனார்க்கு ஒ(ன்பதா)வது பங்குனி மாதத்து எட்டாந்தியதி முதல் பூசைக்கும் திருப்பணி
4. க்கும் உடலாக தேவதான இறையிலியாக இட்டோம் இப்படிக்கு சந்திராதித்தவரையும் செல்வதாக கற்றளியிலே கல்லும் வெட்டி ஊர் நான்கெல்லையிலும் திரு
5. ச்சூல ஸ்தானமும் பண்ணிக்கொள்ளக் கடவதாகவும் சொன்னோம் இப்படி கணக்கிலும் நிறுத்திக் குடுப்பதே இவை வாணகோவரையன் எழுத்து இவை விழுப்பாத
6. ராயன் எழுத்து

எண் : 41

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
சோழீசுவரமுடைய நாயனார் கோவிலின் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : பாண்டியன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 455 - 1913

செய்தி : தாயிலும் நல்ல சோழீசுவரமுடைய நாயனார் கோவிலுக்குக் கீழ்மகறுர் மறவனேந்தல் என்ற நிலங்களில் மூவாயிரம் குழி நன்செய் நிலத்தைக் குமாரன் தகையூர்த்தேவன் என்பவன் கோவிலுக்குத் திருநாமத்துக் காணியாக அளித்தான். இந்நிலத்தின் மேலுள்ள அனைத்து வரிகளும் அரசனால் நீக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விலாடராயரும் புரவரியாரும் செயக்கடவபடி ஆறகளூர் உடையார் தாயிலுநல்ல சோளீசுவரமுடைய நாயனார்க்கு கீழ்மகறுர் மறவ னேந்தல்லும் உலகங்காத்த செருமானேந்தல்லும் குமாரன் தகையூர்த் தேவன் இந்நாயனாற்கு ஏழாவது
2. திருநாமத்துக் காணியாக குடுத்த நன்செய் நிலத்துக குழி மூவாயிரமும் திருநாமத்துக்காணி இறைமிலியாக பொன்வரி காசாயம் காத்திகைப் பச்சை நல்லெருது நற்பசு உள்ளிட்ட அனைத்தாயமு இழக்க திருநாமத்துக் காணி இறைஇலியாக சந்திராதித்தவற்கு குடுத்தோம்.
3. இப்படி கணக்கில் நிறுத்திக் குடுப்பதே இவை வாணகோவரையன்னே னெழுத்து இவை விழுப்பாதராயனெழுத்து

எண் : 42

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் இரண்டாவது சுற்றுக் கிழக்குச் சுவரின் இடப்புற வாயில் அண்மையில்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூறறாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 441 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் பூசைகள் நடத்துவதற்கும் திருப்பணிகள் செய்தற்கும் முதலீடாகத் தேவியர்குறிச்சி என்னும் ஊரில் நன்செய் நிலம் மூவாயிரம் குழி காடுவெட்டித் திருத்தி இறையிலியாக அளிக்கப் பெற்றது. அதன் அனைத்து வரிகளும் அரசனால் நீக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸதிஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இக்கோ
2. யில் குலசேகர ஆவுடையார்க்கும் வாழ்வித்த மங்கயார்க்கும் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாக ஆற்றூர் நாட்டில் எனை வளர்த்த
3. பெருமானக்குக் காணியாகக் குடுத்த தேவியாகுறுச்சி நன்செய் நிலத்திலே பதின்மூன்றாவது புரட்டாதி மாதம் முதல் காடுவெட்டித் திருத்தும் நிலத்
4. திலே மூவாயிரங்குழி பொன்வரி உள்ளிட்ட அனைத்தாயங்களும் ஆளமைஞ்சி தேவையும் உட்பட இறையிலியாகத் தந்தோம் இப்படிக்கு ச
5. ந்திராதித்தவரை செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டி இறையிலி யாக அனுப
6. வித்துப் போதுக இவை பாண்டி மண்டலத்து முத்தூர்க்கூற்றத்து
7. க் கப்பலூ ரான உலகளந்த சோழநல்லூர் ஆதித்தன் கணபதி ஆழ்வா னான காடுவெட்டி எழுத்து திருவெழுத்து துல்யம் உ

எண் : 43

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் இரண்டாவது சுற்றுக் கிழக்குச் சுவரின் இடப்புற வாயில் அண்மையில்

அரசர் : பாண்டியன

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 442 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் திருநந்தவனம் அமைந்தோர்க்கு அரசனால் ஆற்றூர் வாரப்பற்று நன்செய் நிலத்தில் முதல் தரமுடைய நிலம் ஒருவேலி இறையிலியாக அனைத்து வரிகளும் நீக்கம் செய்யப்பெற்று அளிக்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக காமீசுவரமுடைய நாயனார் கோயில் தானத்தார்க்கு இன்னாயனார்
2. க்கு சிற்றேரிக்கு கிழக்கு ஆற்றுக்குத் தெற்குமாக இராசநாராயணச் சதுர்வே திமங்கலத்து எல்லைக்கு வடக்கு காடுவெட்டிகளுக்கு . . . ஆர் ஆண்ட
3. ரர் பெருங்கருணை ஆளச்செய்கிற தெ . . த்துவாய்த்தான் திருநந்தவனஞ் செய்யும் பேர்க்கு சீவனத்துக்கு பதினொன்றாவது ஆவணி மா
4 தம் முதல் ஆற்றூர் வாரப் பற்று நன்செய் முதல்த் தரத்திலே வேலி நிலம் வரி உள்பட அனைத்தாயங்களும் ஆளமைஞ்சி தேவையும் உ
5. ட்பட திருநந்தவனப்புற இறையிலியாக தந்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு புரவிலும் கழித்து சந்திரா
6. தித்தவற் செல்வதாகக் கல்லும் வெட்டி நிலத்தில் திருக்சூலத்தாபனமும் பண்ணிக்

கொண்டு திருநந்தவனப்புற இறையிலியாக அனுபவித்து

7. ப்போதுக இப்படிக்கு இவை பாண்டி மண்டலத்து முத்தூற்றுக் கூற்றத்து கப்பலூரான உலகளந்த சோழநல்லூர் ஆதித்தன் கணபதி ஆழ்வானான கா

8. டுவெட்டி எழுத்து திருவெழுத்து துல்யம்

எண் : 44

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் இரண்டாவது சுற்றுக் கிழக்குத் திருமதில் இடப்புற வாயில் அண்மையில்

அரசர் : பாண்டியன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 443 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் அரசன் பெயரால் நிறுவப்பெற்ற உலகமுழுதுமுடையாள் சந்தி (பூசை)க்கு அமுதுபடி, சாத்துப்படி முதலிய செலவினங்களுக்கு வரி நீங்கிய திருநாமத்துக்காணியாக ஆலம்பளம் என்னும் ஊரில் வாரப்பற்று நிலதில் நன்செய் நிலம் மூவாயிரத்து ஐந்நூறு குழியும் புன்செய் நிலம் ஐயாயிரம் குழியும் அளிக்கப் பெற்றது. இந்நிலம் வன்னெஞ்சன் என்னும் அளவுகோலால் அளக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடைய
2. நாயனார் கோயில் தானத்தார்க்கு நம் பெராலால் கட்டின உலகமுழுதுடையாள் சந்
3. திக்கு அமுதுபடி சாத்துபடி உள்ளிட்ட நிமந்தங்களுக்கு தாங்கள் இட்ட உடற்கோள்படி நெல்லு
4. க்கும் பணத்துக்கும் உடலாக நம்பற்றான மிலாடாகிய ஜனநாத வளநாட்டு நுறையூர் கூற்றத்து ஆலம்பளத்தில் பெ
5. ரிய ஏரி வாரப் பற்று நன்செய் நிலத்து முததரத்தில் தடி கோ . . . லொழுகினபடி வன்னெஞ்சன் அளவுகோலால் நன்
6. சை குழி மூவாயிரத்து ஐஞ்நூறும் புன்செய் குழி ஐய்யாயிரமும் ஆக நன்சை புன்சை குழி எண்ணாயிரத்து ஐந்நூறும் . . . ந் தோப்புகள்
7. அடங்கவும் இன்த நிலதிருமாத்துக் காணியாக கைக்கொண்டு காண் வேண்டும் குடிக்கு அடைத்து கார் பசானம் உள்ளிட்
8. டு தாங்கள் வேண்டும் பயிர்ச் செய்து கொண்டு இன்னிலத்துக்கு கடமை பொன்வரி காசாய காத்திகைப் பச்சை மாதிரி
9. சாத்து நெல்லெருது நற்பசு ஊர்கணக்கு சீவிதம் ஒன்று பாதி ஆள் அமஞ்சி தேவை எற்சோறு உள்ளிட்ட மற்றும் எற்பேர்ப்பட்ட
10. அனைத்தாயமு உட்பட இழந்து இன்னிலத்தால் வரும் நீர் உருமை கால் உருமை மற்றும் எப்பேர்பட்ட உருமைகளும் உட்பட முதல் அ
11. ங்கிலும் இறையிலி திருமாத்துக் காணியாக சந்திராதித்தவரையும் செல்வதாக குடுத்தோம் இப்படிக்கு இவோலை பிடிபாடாக
12. க் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டி திருச்சூலத்தாபனமும் பண்ணிக் கொள்க இவை . . . உடையான் எழுத்து துல்யம் மகேசுவர ரக்ஷை

எண் : 45

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் இரண்டாவது சுற்றுக் கிழக்குச் சுவரின் இடப்புற வாயில் அண்மையில்

அரசர் : பாண்டியன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 444 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் ஆண்டார் பதின்மர் உண்ணுதற் பொருட்டு ஆற்றூ ர் வாரப்பற்று நன்செய் நிலத்தில் நாலு வேலி நிலம் வரிநீக்கி அரசனால் அளிக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் ஆற்றூர்க் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக் காமீசுவரமுடைய நாயனார் கோயில் தானத்தாற்கு இக்
2. கோயிலில் உண்ணும் ஆண்டார்கள் பேர் பத்துக்கு பதினொன்றாவது ஆடி மாத முதல் இறையிலியாக ஆற்றூர் வாரப்பற்று நன்செயில் மு
3. தல் தரத்திலே நாலுவேலி நிலம் பொன்வரி காசாயம் காத்திக பச்சை உள்ளிட்ட அனைத்தாயங்களும் ஆளமஞ்சி சேர்வையும் உட்பட இறை இ
4. லியாக தன்தோம் இப்படிக்கு இவோலை பிடிபாடாகக் கொண்டு இன்னிநிலம் புரவிலும் வரியிலும் கழித்து கணக்கிலு நிறுத்தி சந்திராதித்தவற் செல்வ
5. தாக கல்லிலும் செம்பிலும் வெட்டி இன்நிலத்திலே திருச்சூலத்தாபனமும் பண்ணி இறையிலியாக அனுபவித்து போதுக இப்படிக்கு பாண்டி மண்ட
6. லத்து முத்தூ க்கூற்றத்து கப்பலூ ரான உ ளந்த சோழ நல்லூர் ஆதித்தன் கணபதி ஆழ்வானான காடுவெட்டி எழுத்த நிவெழுத்து துல்யம்

எண் : 46

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ர்
காமநாதீசுவரர் கோவில் கருவறையின் முன் பத் தென்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் 1 - 1913

செய்தி : வாணகோவரையன் ஆண்டுகதாறும் கோவில் ய் பத்துப் பசுக்களாயும் திருக்காமிசுவரமுடைய நாயனார் கோவில் தி க விட்ட செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ஏழாவது முதல் நம் ப
2. சுக்களிற் சேக்களிலே ஆண்டுதோறும் பத்
3. துச்சே ரிஷபமாக விடவும் நீக்கி நின்ற சே
4. க்கள் திருக்காமீசுவரமுடை நாயனார் கோ
5. யில் பொன்பரப்பின பெருமாள் திருமதிலு
6. க்கும் உட்பட்ட திருப்பணிகளுக்கும் சந்திராதித்த
7. வரையும் குடுத்தோம் வாணகோவரையன் எழுத்து
8. இவை வில்லவராயன் எழுத்து

எண் : 47

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
கரியவரதராசப் பெருமாள் கோவில் கருவறை மண்டபத்தின் வடக்குப் புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 447 - 1913

செய்தி : ஆறகளூர் கரியவரதராசப் பெருமாள் கோவில் விமானத் திருப்பணி இராசராசன் வாணகோவரையன் மனைவி புண்ணியவாட்டியால் செய்து முடிக்கப்பட்டது. இவள் கீழருடையான் இரணன் கோவலராயன் என்பவனின் மகளாவார். இவ்வழியினர் நன்றாதற்பொருட்டு இவ்விமானம் கட்டித் திருப்பணி செய்யப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராசராச விண்ணகரில் இக்கரியபெருமாள் கோயில்
2. விமானம் திருக்கற்றளித் திருப்பணி செய்வித்தார் இராசராசன் வாணகோ
3. வரையன் தேவியார் புண்ணியவாட்டியார் இது இவர் தன்மம் ந
4. ன்றாக இவர்கு கீழருடையான் இரணன் கோவலராயன்
5. மகளார் இவ்வம்சம் (நித்தம்) ஸ்வஸ்திஸ்ரீ

எண் : 48

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமு நாயனார் கோவில் கருவறையின் முன்புற மண்டபத்தின் வடக்குப்புற அடிததளம்

அரசர் : விசயநகரர், விருப்பண்ணஉடையார்

காலம் : 06.04.1384

மொழி : தமிழ் க.ஆ.அ. 430 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலில் பூசை செய்த அடியார்கள் மூவர் தங்கள் பூசை உரிமையை விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது. இப்பூசை உரிமையைச் சனநாத வளநாட்டில் துணைப்பிரிவாகிய பாளூர்க் கூற்றத்து வலஞ்சிபுரம் என்னும் ஊரிலுள்ள அடியவர் தடுத்தாண்ட நாயனார் என்பவர் பெற்றார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா மண்டலேசுரந் அரியராய விபாடந் பாஷைக்குத் தப்புவராயயகண்டன் சதசமுத்திராதிபதி ஸ்ரீ வீர அரியண்ண உடையார் குமாரகுரு மான விருப்பண்ணஉடையார் பிருதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1306ன் மேல் செல்லாநின்ற ரக்தாக்ஷி சம்வத்சரத்து மேஷநாயற்று பூறுவ பக்ஷத்து பௌணையும் புதன்கிழமையும் பெற்ற சோதிநாள் மகதை மண்டலம் மலாடாகிய ஜனனாத வளநாட்டுப் பாளூர்க்கூற்றத்து வ . . . ரத்து உடையார்

2. திருவலஞ்சிரம் உடைய நாயனார் கோயில் காணி உடைய சிவபிராமணரில் காசிபன் நமச்சிவாய தேவர் மகன் . . . தாண்டநாயனார்கு ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் உடையார் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிற் . . . பன் தாழிப்பள்ள . . . பல நம்பியும் மேற்படி கோயில் காணி உடைய காசிபன் நமச்சிவாயபட்டராயர் மகன் பொன்பரப்பினாரான திருஞானசம்பந்த பிரமாராயரு இக்கோயிற் காணி உடைய பாரத்துவாஜன்

3. திருவுடையான் கச்சிபட்டர் மகன் திருநீற்றுவீரரும் ஆக இவ்வனைவரோம் காணி விலை பிரமாணம் பண்ணிக்குடுத்தபடிக் குடுத்த பரிசாவது இந்த தடுத்தாட்கொண்ட நாயனார்க்கு நாங்கள் காணியாக கல்வெட்டிக் குடுத்தபடி என் பிராதா இசபதேவர் மகள் இந்த தடுத்தாட்கொண்ட நாயனார் மாதா நல்ல தாயார்க்கு முன்னாள் நாஞ் சீதன பிராப்தியாக குடுத்த எங்கள் செல்லம்மான நாள் 2 1/2ம் நாங்கள் கொண்டுடையோமான நாள் 14/16 ஆக நாள் மூன்றே காலே அரைக்காலும் மனையும்

4. உள்ளூர் தாயிலு நல்ல சோளீசுரமுடைய

5. கொண்டுடையேனான நாளாய் யிவர் . . ற்நால்கும் மேற்படி உள்ளூர் . . தளி கோயில்களிலும் பிடாகைகளில் தளி கோயில்களிலும் இந்த நாள் 1/2 னால் வரும் சகலப் பிராத்தகளும் உரியதாவதாகவும் பாரத்துவாஜன் கச்சிபட்டன் திருநீற்று வீரமுன்னாள் என் மாமாவுக்கு பரிசத்துக்கு எங்கள் பிதாக்கள் குடுத்து எங்கள் மாமனார் தாழிப் பிள்ளையான திருச்சிற்றம்பலநம்பி இனக்குத் தந்த நாளாய் இவர்க்கு நான் விற்ற நாள் 1/2 உள்ளூர் பல தளி கோயிலும் மேற்படி பிடாகைகளில் பல

6. தளிக் கோயில்களிலும் இன்னாள்வரைக்கும் வரும் சகல பிராப்திகளும் உரித்தாவதாகவும் இப்படி சம்மதித்து ஆக நாள் 4 3/8 மனையும் உரித்தாவதாக சமதித்து பிரமாணப்படிக்கு கல்வெட்டிக் குடுத்தோம் தடுத்தாட்கொண்ட நாயனார் தாழிப்பிள்ளையான திருச்சிற்றம்பல நம்பியும் பொன்பரப்பினானான திருஞானசம்பந்த பிரம்மராய . . சி பட்டன் மகன் திருமீ . . . . . ஆக இவ்வனைவரோம் அகோரசிவர் எழுத்து

எண் : 49

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
கரியவரதராசப் பெருமாள் கோயில் கருவறையின் வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், சாளுவ நரசிங்கராயர் மகன் தருமராயர்

காலம் : 08.08.1502

மொழி : தமிழ் க.ஆ.அ. 445 - 1913

செய்தி : கரியவரதராசப் பெருமாள் கோவிலுக்கு அம்மணநாயக்கர் என்பவர் கைக்கோளர் வாயிலாகப் பெற்ற காசுகளைத் தேவரடியாளான சேவகநாச்சி என்பவளுக்கு நாள்தோறும் நாழியரிசி உணவுக்காக வழங்கப்பெற்றது. திருமடை வளாகத்தில் ஒரு மனையும் அளிக்கப்பெற்றது. தேவியர்குறிச்சியில் சர்வமானிய நன்செய் நிலத்தில் இருபது குழியும் சர்வமானிய இறையிலி நிலமான கண்டமாத்தான்பட்டன் நிலத்தில் இருநூறு குழியும் கொடுக்கப்பெற்றது. இவ்வளவும் தன் தலைவர் நரசநாயக்கர் வெற்றியின் அடையாளமாக அளிக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேசுரந் அரியராயவிபாடந் பாஷைக்குத் தப்புவராய கண்டந் மூவராயர் கண்டந் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூர்வ தக்ஷண பச்சிம உத்தர சத் சமுத்ராதிபதி கெசவேட்டை கண்டருளிய ஈழந்திறை கொண்ட ராசாதிராச பரமேசு வரன் ஜக
2. தேகராயந் ராயர் சாளுவ நரசிங்கார் குமாரர் தன்மராயர் பிருதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1424 இதன்மேற் செல்லாநின்ற துன்மதி சம்வத்சரத்து சிம்மநாயற்று பூர்வபக்ஷத்து தசமியு சோமவாரமும் பெற்று அத்து நாள் மலாடாகிய ஜனனாத வளநாட்டு மகதை மண்டலம் வேறு பிரிந்த ஆற்றூர் கூற்றத்து ஆறகழூர் பெருமாள் கரிவற்கு
3. சுவாமி நரசா நாயக்கர் திக்குவிசயம் பண்ணவேணும் என்று அம்மண நாயக்கர் கரியவரத கோயில் தானத்தார் கரியவரத திருமலை அப்பன் சிறுக்கரியவர மூவரையும் முன்னிட்டுக் கொண்டு நலமாகக் கைக்கோளற் குடுத்த வடிமைகாசையுங் குடுத்து முதலடைப்பு செழிகோன் பிள்ளையான் மகள் சேவுக நாச்சியை எம்பெருமாளடியாக விடுவித்து படித்தரம நிற்றம் நாழி அரிசோட யிம்மடை விளாகத்தில்
4. ஒருமனையும் திருவிடை ஆட்டம் சறுவமான்யம் ஆன தேவியர்குறுச்சி ஏரிகீழ் நஞ்சை நிலத்திலே அறுபது குழியும் திருவிடைஆட்டம் சறுவமான்ய மான இறையிலி கண்டமாத்தாந்பட்டன் நிலத்தில் இருநூறு குழி சறுவ மானியமும் குடுத்தபடிக்கு கல்வெட்டுபடி சந்திராதித்தவரையும் நடத்த கடவதாகவும இதுக்கு அஹிதம் பண்ணிநவன் கெங்கை கரையிலே காராம் பசுவை
5. கொன்ற பாவத்திலே போக கடவராகவும

எண் : 50

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறையின் மேற்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், சாளுவதருமராயர்

காலம் : 23.08.1504

மொழி : தமிழ் க.ஆ.அ. 412 - 1913

செய்தி : மகதை மண்டலத்தில் நரையூர்க் கூற்றத்தின் தென்கரையில் பாக்கம்பாடி என்னும் ஊர் சர்வமானிய இறையிலியாக நீண்ட காலமாக இருந்தது. பின்பு சிலகாலம் வரி காணிக்கை முதலியன விதிக்கப்பெற்றன. துலுக்கண நாயக்கர் பாக்கம்பாடியின் நான்கெல்லைக்குட்பட்ட நன்செய் புன்செய் நிலத்தை மீண்டும் வரையறுத்து அனைத்து வரிகளையும் நீக்கிக் கோவில் திருப்பணி நன்கு நடைபெறுதற்பொருட்டுக் கல்வெட்டி ஆவணம் அளித்தமை.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலெசுரந் அரிய இராய விபாடன் பாஷைக்குத் தப்புவ இராயர் கண்டன்
2. கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாதான் பூறுவ தெஷண உத்தர பஸிமசத சமுத்திராதிபதி யீழம் திறைகொண்டு கெஜ
3. வேட்டை கண்டருளிய இராசாதி இராசந் இராச பரமேசுரன் மேதினி மீசுர கட்டாரி சாளுவ நரசிஹ்க புசபெல தேவமகாராயர் குமாரர்
4. தந்மஇராயர் ப்றுதிவி ராச்சியம் பண்ணி அருளாநின்ற ஸகாத்தம் 1426 இதின்மேல் செல்லாநின்ற இர்த்தக்ஷதி ஸங்வசரத்து சிங்க
5. நாயற்று பூறுவ பக்ஷத்து திரயோதிசியும் சுக்கிற வாரமும் பெற்ற சோதி நாள் மலாடாகிய ஜநநாத வளநாட்டு மகதை மண்டலத்தில்
6. தென்கரை நறையூர் கூற்றத்து பாக்கம்பாடி பூறுவம் நான்கெல்லையும் தேவதானம் ஆக சறுவமானியம் ஆயி நடக்கையில்
7. பிந்பு யிராசகரம் காணிக்கை கொள்ளுகையில் ஸ்ரீமன் மகாநாயங்கா சாரியன் பாகைஷக்கு தப்புவராய பயங்கர கண்டன் நரலோகா கண்டந்
8. வஞ்சி நாராயணன் சாடிக்காற கண்டன் எறமாஞ்சி நாயக்கர் துலுக்கண நாயக்கர் ஆற்றூ ர் கூற்றத்து ஆறகளூர் உடையார்
9. திருக்காமீசுவரமுடைய நயினார்க்கு பாக்கம்பாடி நான்கெல்லையும் உள்பட நன்சை புன்சை காணிக்கை விநியோகம் நல்லெரு
10. து நல்பசு நல்க்கிடா நல்எருமை கோணி விரிமுட்டு ஆயம் தலையாரிக்கம் நாட்டு விநியோகம் மாவடை மரவடை குளவடை
11. ஆள்அமஞ்சி மற்றும் எப்பேர்பட்டதும் மகா திருப்பணிக்கு சந்திராதித்த வரையும் நடக்கும்படிக்கு கல்வெட்டி குடுத்தோம்
12. இந்த தந்மத்துக்கு யாதுயொருவர் அகிதம் பண்ணிநவர் கெங்கைக் கரையில் கோவதை பிறம்வதை பண்ணிநவந்
13. பாவத்திலே போக கடவர் ஆகவும்

எண் : 51

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறையின் முன்மண்டபத் தென்புற அடித்தளம்

அரசு : விசயநகரர், இம்முடிநரசநாயக்கர்

காலம் : 28.12.1505

மொழி : தமிழ் க.ஆ.அ. 420 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய நாயனார் தருக்கோவிலுக்குச் சூரிய சந்திரர் உள்ள காலம் வரை திருநந்தாவிளக்கு எரிக்கவும், சந்திவிளக்கு எரிக்கவும் கொடையளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. துலுக்கணநாயக்கரின் திருமேனிக்கு நன்மை உண்டாகும் பொருட்டு ஆவன செய்யப்பட்ட இவ் விளக்குகள் எரிய ஆற்றூர்க் காணியுடைய அல்லாளநாத இளையநாயக்கர் என்பாரும் முலைப்பாரு நாட்டினரும் இணைந்து நாள்தோறும் நாழிக் கொட்டை அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரியராயவிபாடந் பாஷைக்கு தப்புவராய கண்டந் மூவராய கண்டந்
2. கண்டனாடு கொடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சது சமுத்திறாதிபதி கசவேட்டை கண்டு அருளிய ஸ்ரீ
3. வீரபிறதாப தேவராய மகாராயர் மேதிநி மீசுர கண்டந் கட்டாரி சாளுவ தமராய இம்மடி நரசாணாயக்கர் பிறுதி
4. வி இராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1427 இதன்மேல் செல்லா நின்ற குறோதன சம்வத்சர
5. த்து மகர நாயற்று பூர்வபக்ஷத்து திரிதிகையும் ஆதித்த வாரமும் பெற்ற அவிட்டத்து நாள் மலாடாகிய ஜந
6. நாத வளநாட்டு மகதை மண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகழூர் நயினார் திருக்காமீசுவரமுடைய நயினார்த் திருக்கோயிலுக்கு திருநுந்தா விளக்கு சந்தி விளக்
7. குக்கும் நரலோகர்கண்டன் வயிர . . நாராயணன் மறைபுக்கார் காவலன் சாடிக்காறர் கண்டந் ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்காணநாயக்கர் திருமேனிக்கு ஸகலபாக்கியமும்
8. உண்டாக வேணும் என்று துட்டர் கண்டந் துட்ட நெட்டூரன் ஆற்றூர் காணி உடை முளைவேட்டுவரி அல்லாளநாத இளையர் நாயக்கரும் ஆற்றூர் நாட்டவரும் வெண்பார் நாட்டில் வேறு பிறிந்த முலைப்பாரு நாட்டவரும்
9. ஆறகழூர் திருக்காமீசுவரமுடைய நயினார் சன்னதியிலே குறைவற கூடி இருந்து மகாசங்கிறாந்த புண்ணிய காலத்திலே எங்கள் நாட்டில் ஊர் வழியிலே ஏற்கு நாழி கொட்டை ஆக திருவிளக்கு எண்ணைக்கு கட்டளை பண்ணிக் குடுத்தோம்.
10. இந்த தன்மம் சன்திறாத்யவரை நடத்தக் கடவோம் ஆக இந்த தருமத்துக்கு யாதொருத்தரும் அகிதம் பண்ணினவர்கள் கங்கை கரையிலே காராம் பசுவைக் கொன்றப் பாவத்திலே போக கடவர்க(ள்)
11. ஆகவும் இவை நாட்டவர் பணியால் நாட்டு கணக்கு ஆற்றூர் நாட்டு வேளாள் எழுத்து

எண் : 52

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறை மண்டப வடக்குபுறச்சுவர்

அரசர் : விசயநகரர், வீரநரசிம்மபுசபல வசந்தராயர்

காலம் : 26.01.1509

மொழி : தமிழ் க.ஆ.அ. 408 - 1913

செய்தி : எறமாஞ்சி திம்மய நாயக்கர மகன் துலுக்கண்ண நாயக்கர் திருத்தேர் ஒன்றைச் செய்து அதில் மாசிமாதம் தோறும் தம்பிரானாரை எழுந்தருளச் செய்து தேரை ஓட்டுவித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. கல்வெட்டின் பின்பகுதி சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேஸ்வ
2. ரந் ஹரியராயவிபாடந் பா
3. ஷைக்கு தப்புவராயர் கண்டந் மூவ
4. ராயர் கண்டந் கண்டநாடு கொண்டு கொண்டநாடு
5. கொடாதான் பூர்வ தக்ஷண பக்ஷிம உத்தர
6. சத சமுத்திராதிபதி ஈழத்திறை கொண்டு கஜவே
7. ட்டை கண்டருளிய ராஜாதிராஜந் இராச பரமேசுவரன்
8. ஸ்ரீ வீரப்பிரதாப தேவரராயர் மகாராயர் மேதிநி மீசுரகண்டன்
9. கட்டாரி சாளுவன் நரசிங்கராயர் குமாரர் மஹாராயர் நரஸா நா
10. யக்க உடையர் ஸ்ரீமந் குமார வீரநரசிங்க புஜபல வச
11. ந்தராயர் பிருதிவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம்
12. 1430 இதன்மேல் செல்லாநின்ற விபவ சம்வத்சர
13. த்து கும்ப நாயற்று பூர்வபக்ஷத்து ஸத்தமியும் சக்கரவார
14. ம் அசுவதி சுபயோகமும் பெற்ற நாள் மலாடாகிய ஜநநா
15. த வளநாட்டு மகத மண்டலத்து ஆற்றூ ற் கூற்றத்து ஆற
16. களூர் நயினார் திருக்காமீசுவரமுடைய தம்பிரானாற்கு ஸ்ரீமந் ம
17. கா நாயங்காசாரியன் பாஷைக்கு தப்புவார் நயங்கர் கண்
18. டன் நரளோக கண்டன் வங்கினாராயணன்
19. மறைபுக்கார்க் காவலன் சேர சோழ பாண்டிய வல்லாளராய பயங்கரந்
20. ருபாயாதவராய ஸ்தாபனாசாரியன் சம்புவராய சத்தாங்க வயிரி
21. சாடிக்காறர் கண்டன் ஸ்ரீமந் எறமாஞ்சி திம்மய நாயக்கர்
22. ஸ்ரீ மது குமாரர் துலுக்கண னாயக்கர் திருக்காமீசுவரமுடைய த
23. ம்பிரானாற்கு பாண்டியன் நாள் முதல் இன்னாள் வரைக்கு தி
24. ருத்தேர் இல்லாமல் இருக்க இல் நரளோக கண்டன் தி
25. ருத்தேரும் சமைக்க மாசி மாசத்து பூர்வ பக்ஷத்து சு . . .
26. யிலே திருக்கொடி ஏற ஆயிலித்திலே ஆ . . .
27. னாயகர் திருத்தேரிலே எழுந்தருள திருத்தேரும் ஓட்டிவித்து

எண் : 53

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறை மண்டபத்தென் புறச்சுவர்

அரசர் : விசயநகரர்

காலம் : 04.02.1509

மொழி : தமிழ் க.ஆ.அ. 111 - 1913

செய்தி : முன்கல்வெட்டில் குறிப்பிட்ட தேர்த் திருநாள் தொடக்கக் காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது தாமதநல்லூரிலிருந்த கைக்கோளன் பெருமாள் மகன் பறையன் என்பவன் உயிரிழந்தமையால் அக்கோவில் அறங்கோவலர்கள் ஆறைநாயகன் மண்டபத்தில்கூடி உதிரப்பட்டி நிலமாக ஆறகளூரில் நன்செய் நிலம் 250 குழி கொடையாக வழங்கப்பெற்றது. புன்செய் நிலம் ஓரிணை ஏர் உழும் அளவுக்கு அளிக்கப்பெற்றது. குடியிருக்க இரு மனையும் ஒரு தோட்டமும் நாள்தோறும் கோவிலில் இருநாழி அரிசியளவு சோறும் வழங்கப்பெற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது. உதிரப்பட்டி என்பது போரில் இரத்தம் சிந்தி உயிர் நீத்தமைக்காக அளிக்கப்பெறும் கொடையாகும்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1430 இதன்மேல் செல்லாநிற்ற விபவ சம்வத் சரத்து கும்பநாயற்று பூர்வபக்ஷத்து தெசமியும்
2. ஆதித்த வாரமும் ஆயிலிபத்து நாள் மகதை மண்டலம் ஆறகளூர் நாயனார் திருக்காமீசுரமுடைய நாயனார் பாண்டியன் னாள் முதல் இந்நாள் வரைக்கும்
3. திருநாளும் நடவாதிருக்கையில் சுவாமி நரஸோக கண்ட நீ வங்கி நாராயணந் மறைபுக்கார் காவலந் வள்ளாள இளப பயங்கரந் சாடிக் காற கண்ட
4. நீ ஸ்ரீமது எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் நாயனார் திருக்காமீசுரமுடைய நாயனாற்கு தேரும் சமைத்து திருநாளும் மாசித் திருநாளாக ஆயிலியத் தில் கண்ட
5. யகத்திலே திருமஞ்சனமும் ஆக கட்டளை பண்ணி திருநாள் நடக்கயில் தாமதநல்லூரில் கைக்கோளந் . . . பெருமான் மகன் பறையற் பறை எடுத்து முதலியார் சன்னகமல
6. னாயனார் ஆதிசண்டேசுர நாயநாரும் மாகேசுரரும் ஆக ஆறைநாயக மண்டபத்தில் நிறைவு நிறைந்து குறைவறக் கூடி இருந்து ஆதிசண்டேசுர னாயனார்
7. திருவாய் மலந்தருளநபடி இந்த பறையனுக்கு உதிரப்பட்டி ஆக ஆறகளூர் நன்செய் நிலத்தில் காளி அம்மை உடைப்புக்கு மேற்கு தியாகணநல்லூர் வாய்(க்)
8. (கா)லுக்கு கிழக்கு நன்செய் குழி 250 * ஓரிணை ஏர் நடந்தமட்டு புன்செய் மா நிலமும் ஒருமனையும் ஒரு . . மானிபமும் திருமஞ்சன வழுக்கு தெற்கு இரண்
9. டு ஒரு தோட்டமும் கோயிலிலே நிற்றம் இருநாழி அருசியல் சோறும் மனையாவது சந்நதி தெருவில்(க்கு) வட சிறகில் ஒருமனையும் குடுத்தருளி
10. . . . ஆதிசண்டேசுரனார் திருவாய் மலந்தருலிநபடியாலே இம் மந்திரம் உண்டானது இவற் த . . . ன் பெருமாளும் இவன் வற்கத்தாரும் சந்திராதித்
11. (தவரையும்) அனுபவித்து கொள்ள கடவர்களாகவும் இவை திருஞான சம்பந்த பண்டிதர் எழுத்து இவை பல முதல் கங்காணி பெரிய நயினார் எழுத்து உ

கல்வெட்டு தொடர்ச்சி இல்லை

*ஓரிணை

எண் : 54

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறையின் முன்மண்டப வடக்குப்புறச் சுவர்

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவராயர்

காலம் : 28.02.1510

மொழி : தமிழ் க.ஆ.அ. 427 - 1913

செய்தி : மேற்குறிப்பிட்ட தேர்த் திருநாள் தொடங்கிய பிறகு அது தொடர்பாக சீபாதம் தாங்கும் பணி செய்யக் காணி அளிக்கப்பட்டமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்டலேஸ்வரந் பாஷைக்கு தப்பும் இராயர் கண்டந்
2. மூவராயர் கண்டந் மேதினி மீசுவரகண்டந் கட்டாரி சாளுவந் சதுத் சமுத்திராதிபதி
3. ஸ்ரீ கிருஷ்ணராயர் பிறுத்விராஜ்சியம் பண்ணி அருளாநின்ற சகாபதம்
4. 1430 இதந் மேல் செல்லாநின்ற சுக்கில . . . சம்வற் சரத்து மீந நாயற்று
5. பூர்வபக்ஷத்து சப்தமியும் பிரஹஸ்தபதி வாரமும் பெற்ற விசாகத்து நாள்
6. மகதை மண்டலத்து ஆற்றூ ர் கூற்றத்து ஆறகழூர் நாயினார் திருகா
7. மீசுரமுடைய தம்பிரானாற்க்கு ஸ்ரீமந் மகாநாயங்காசாரியன் . . . . .
8. பாஷைக்கு தப்பும் நாயங்கர கண்டன் நரலோக கண்டந் வங்கி நா
9. ராயணந் ஸ்ரீமந் எறமாஞ்சி துலுக்கண நாயக்கர் திருக்காமீசுரமுடைய
10. தம்பிரானாறக்கு பாண்டிய நாள்ளுக்கு தேரில்லாமல் இருக்கயில் தே
11. தரும் சமைத்து திருநாளும் நடத்தி . . நாயகர் திருமுன் எழுந்தருளும்படி க
12. ட்டளை இடுகையில் . . . நாயகர்க்கு சீபாதம் தாங்கும்படி நாச்ச ராண்
13. டார்க்கு காணி ஆட்சி ஆக கோயிலிலே திநமும் நானாழி அருசியில் அ
14. ம்முதும் முள்ளி(ட்ட) குழி நஞ்சை நிலம் . . ஒரு மனையும் சந்திராதித்த
15. வரையும் நாச்சராண்டாரும் யிவந் வங்சகாரரும் காணி ஆக அனு பவித்துக் கொ
16. காள்ளவும் இதுக்கு அகுதம் பண்ணிநவர்கள் காராம் பசுவைக் கொன்ற
17. பாவத்திலே போகவும் . . . . இவை திருஞானசம்பந்த பண்டிதந்
18. எழுத்து

எண் : 55

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறையின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவராயர்

காலம் : 12.06.1514

மொழி : தமிழ் க.ஆ.அ. 423 - 1913

செய்தி : எறமாஞ்சி அக்கிதிம்மய நாயக்கரும் கோவில் தானத்தாரும் சேர்ந்து ஊராண்டார் என்பவருக்கு ஓர் இணை ஏர் உழக்கூடிய புன்செய் நிலத்தை ஊரமை இறையிலி (ஊர்க்கீழ் இறையிலி) ஆகக் கொடுத்த செய்தி. கல்வெட்டின் பின்பகுதி சிதைந்துள்ளதால் எதன் பொருட்டுக் கொடுக்கப் பெற்றது என்பதை அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாமண்டலேஸ்வரந் பாஷைக்கு தப்பும் இராயர் கண்ட மூவராய கண்டந் மேதிநி மீஸ்வ
2. ரகண்டந் கட்டாரி சாளுவந் கிறுஷ்ணதேவ மஹாராயர் ப்ருதவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகாப்தம்
3. 1436 இதன்மேல் செல்லாநின்ற யுவ ஸம்வத்ஸரத்து மிதுந நாயற்று பூர்வ பக்ஷத்து பஞ்(ச)மியும் சோம வாரமும் பெற்ற
4. அவிட்டனாள் ஸ்ரீமந் மகா நாயங்காசாரியன் பாஷைக்கு தப்புவ நாயங்கர் கண்டந் நரளோக கண்டந் வங்கி நாராயணந் மறை
5. புக்கார் காவலந் சேர சோழ பாண்டிய வள்ளாளராய பயங்கரந் யாதவராய சாளுவ நாசாரியந் சம்புவராய சவுத்தாங்க வயிர சாடிக்காறர்
6. கண்டந் ஸ்ரீமந் எறமாஞ்சி அக்கி திம்மய நாயக்கரும் மகதை மண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் நாயினார் திருக்காமீசுரமுடை
7. ய தம்பிரனார் கோயில் பண்டாரத்தாரும் ஸ்ரீ மாயேசுரரும் இவூர் வேங்கடம் மகன் ஊராண்டாற்கு ஊரமை இறையிலி பட்டையம் குடுத்த
8. படி காளியம்மை நாச்சியார் கோயிலுக்கு வடகிழக்கு முன்னாள் தான் திருத்தின நிலம் உட்பட நஞ்சை நிலம் 250 குழியும் அக்குழிக்குள்ளே ப
9. யிற் செய்து கொண்டு புஞ்சை ஒரிணை ஏற்க்குமான . . . தானத்தாற்க்கு பின்பு ஊர்க்கழனி . . .

எண் : 56

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயில் கருவறையின் வடக்குப்புறச் சுவர்

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவராயர்

காலம் : 30.08.1514

மொழி : தமிழ் க.ஆ.அ. 409 - 1913

செய்தி : ஆறகளூர் நத்தத்தின் வடக்கில் பனந்தலை என்னும் ஊர் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவிலின் சர்வமானிய தேவதான நிலமாக இருந்தது. பாழடைந்த நிலையிலிருந்த அவ்வூர் எறமாஞ்சி அக்கிதிம்மய நாயக்கரால் மீண்டும் புதுப்பிக்கப் பெற்று இம்மடிதுலுக்கண்ண நாயக்கன் பேட்டை என்று பெயரிடப்பெற்றுள்ளது. இப்பேட்டையில் புதிதாகக் குடியேறிய கைக்கோளார்க்கும் பிற குடிகளுக்கும் வரிச் சலுகை அளிக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மநு மஹா மண்ட
2. லேஸ்வரந் பாஷைக்குத்
3. தப்பும் இராயர் கண்டற் இராயந்
4. கண்டந் மேதிநி மீசுர கண்டந் கட்
5. டாரி சாளுவர் கிருட்டிணதேவ மஹா
6. இராயர் ப்ருதிவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சகா
7. ப்தம் 1436 இதின்மேல் செல்லாநின்ற பாவஸம்
8. வற்சரத்து சிங்க நாயற்று பூர்வ பக்ஷத்
9. து ஏகாதெசியும் புதவாரமும் பெற்ற சோதி
10. நாள் ஸ்ரீமன் மஹாந் நாயஹ்ரகாசாரியன் பாஷைக்கு
11. த் தப்பும் நாயங்கர் கண்டந் நரளோக கண்டந்
12. சம்புவராய சவ்ஆங்க வயிரி யாதவராய ஸ்யாபநாசா
13. ஸியந் சாடிக்காறர் கண்டந் ஸ்ரீ மது எர்ரமஞ்சி அக்கி
14. த்திம்மய நாயக்கர் மகதை மண்டலத்து ஆற்றூ ர் கூற்றத்து
15. ஆறகளூர் நயினர் திருக்காமீசுரமுடைய தம்பிரான் திருநாமத்
16. துக்காணி ஆந தேவதாநம் சருவமாநியம் ஆறகளூர் நத்தத்தி வடக்கில் நத்த
17. ம் பனத்தலைப் பாழாகயில் இன்த நத்தம் இம்மடி துலுக்கண ஆயக்கன் பேட்டை
18. ட என்று கட்டி இதுக்கு எல்லை கிழக்கு ஆற்றுக்கு மேற்கு தெற்கு முட்டைய் கிண
19. ற்றுக்குத் தெற்க்கில் கரைக்கு வடக்கு மேற்கு தூர்கா தேவி கரைக் கிழக்கு ஆற்று
20. க்கு தெற்க்கு இந் நாற்கெல்லைக்கு உட்பட இந் நத்தத்தில் வந்தேறும கை
21. ய்க்கோளரும் இராச்சோறு வரிசோறு அமஞ்சி நாட்டுக்கு பிறக்
22. கும் பழவரி புதுவரி கூடுவற்கம் அரைவாசி இனிமேல் பிறக்கும் வரி உள்ப
23. ட மனையாங்கட்டு குத்தகை யா தறிக்கு மூன்று பணமும் செருதுக்கு மூன்று
24. (பே)ாதுக இவை வாணகோவரையன் எழுத்து இவை விழுப்பாதராயன் எழுத்து
25. இது கருகாலமுடையாற் கல்வெட்டு உ

எண் : 57

இடம்	:	ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர் கரியவரதராச பெருமாள் கோவில் கருவறையின் கிழக்குப்புற அடித்தளம்
அரசர்	:	விசயநகரர், கிருட்டிணதேவராயர்
காலம்	:	10.06.1519
மொழி	:	தமிழ் கூ.ஆ.அ. 449 - 1913
செய்தி	:	கரியவரதராசப் பெருமாள் கோவில் ஸ்தானிகர் மூவர் கிருட்டிண தேராயரை விசயநகரத்தில் சந்தித்துக் கோவிலில் வழக்கத்திற்கு மாறாக வரி வசூல் (இராசாகரம்) செய்யப்பெறும் அநீதியை எடுத்துரைத்து நீதி வேண்டினார். அமரம் திம்மரசையயன் அம்மூவரையும் அரசர்முன் அழைத்துச் சென்று அவர்களுக்கு வேண்டியதைச் செய்தார். அரசர் கோவில் ஸ்தானிகரை அழைத்து மேலாடையும் தலைக்குல்லாவும் குதிரையும் கொடையும் அளித்துச் சிறப்புச் செய்து கல்லைக்குறிச்சி பற்றில் பொன்பரப்பின ஏரிக்கீழ் நன்செய் நிலம் ஸ்தான மானியமாக 300 குழியும் தேவியர்குறிச்சி ஏரிக்கீழ் 600 குழியும் திருவிடையாட்டமாக மூன்று ஸ்தானிகர்க்கும் கொடையாக அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மநு மஹாமண்டலேஸ்வரந அரியராயவிபாடந் பாஷைக்கு தப்புவராயர் கண்டந் மூவராய கண்டந் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சது சமுத்திராதிபதி ராசாதிராச பரமேசுவரந் ஸ்ரீ கிருஷ்ணதேவ மகாராயர் பிருதிவி ராச்சிம் பண்ணி யருளாநின்ற சகாப்தம் 1441 இதன்மேல் செல்ல நின்ற பிரமாதி சம்வத்சரத்து
2. மிதுந நாயற்று பூர்வபக்ஷத்து திரயோதிசியும் சுக்ரவாரமும் பெற்ற அநுராய நாள் மலாடாகி ஜந(நா)த வளநாட்டு மகதை மண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகழூர் பெருமாள் கரியவற்கு பூர்வம் நடந்து வருகிற திருவிளை யாட்ட மாந தேவியர்குறுச்சிக்கு அங்கிருக்கிற ராசகரம் அகிதம் பண்ணுகையில் யிது காரியம்மாக யிங்கே விசயநகரத்து யிக் கோயில் ஸ்தாநிகா வருகையில் கிருஷ்ணதேவ மஹாஆய்ஆசலில் ஸ்ரீமது அமரன் திம்மரசர்
3. சுவாமி பாதமும் காண்பித்து திருவிளையாட்டமாந தேவியர்குறுச்சியும் சர்வமாந்யம் ஆக பண்ணிக்குடுத்த யிக் கோயில் யிவ்வெம்பெருமான் ஸ்தாநிகர் அச்சநாளிருத்தி காணிய ஆத்ரகோத்ரத்து வைகாநஸ சூத்ரத்து வென்று மாலையிட்ட பெருமாள் புத்ரன் திருமலைய்ய . . . கட த்துரைவார் புத்ரன் கரியபெருமாள் பெரிய கரியவர் புத்ரந் வென்று மாலையிட்ட பெருமாளும் மூவற்கு பட்சைவடம் குல்லாவும குடுத்து
4. குதிரை குடையும் குடுத்து நமக்கு சுவாமி பாலித்தருளின சீர்மையான கல்லைக்குறிச்சிப் பற்று பொன்பரப்பின ஏரிகீழ் நஞ்செய் நிலம் யிவ் வெம்பெருமான் திருவிடையாட்டம் குழி 1000 யிதில் யிந்த மூன்று நிக்வாகதத்துக்கும் ஸ்தானமாந்ய யிறையிலி ஆக
5. குடுத்த குழி 300 யிந்த முந்நூறு குழியும் திருவிடையாட்டம் தேவியர் குறிச்சி ஏரிகீழ் நஞ்சை நிலத்தில் மூன்று நிர்வாகத்துக்கும் ஸ்தானமாந்ய யிறையிலியாகக் குடுத்த குழி 600 ஆக குழி துளாயிரமும் சர்வமான்ய யிறை
6. யிலி ஆக குடுத்தோம் யிந்த ஸர்வமாந்ய யிறையிலி யிவர்களும் யிவர்கள் புத்ரர்கள் தராதிகளும் ஆச்சந்தர காலமும் அநுபவித்துக் கொண்டு வரக் கடவர்கள் ஆகவும் அமரந் திம்மரசைய்யன் ஸ்ரீ கேசவய்ய வ்ராலு

எண் : 58

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
கரியவரதராச பெருமாள் கோவில் கருவறை மண்டபத்தின் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், சாளுவ திம்மயராயர்

காலம் : 01.08.1522

மொழி : தமிழ் க.ஆ.அ. 450 - 1913

செய்தி : திம்மநாயக்கர் என்பவரால் தன்னுடைய தலைவனாகிய குமார அம்பணநாயக்கர் பெயரில் நரசாநாயக்கர் வெற்றி பெற வேமடிக் கோவிலில் பூசை செய்யும் ஆழ்வார்கள் மூவருக்கு அர்ச்சனை விபவ காணியாகச் சர்வமானியாக 450 குழி நிலம் வழங்கப்பெற்றது. மற்றும் திருவாராதனை பூசைக்கு இம்மூவர்க்கும் 200 குழி நிலம் அளிக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவந் அரியராய விபாடந் பாஷைக்குத் தப்புவராய ராயர் கண்டன் மூவராயர் கண்டந் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பூர்வ தக்ஷிண பச்சிம உத்தர சது சமுத்திராதிபதி-கெஜவேட்டை கண்டருளி ஈழமும் திரை கொண்ட
2. இராசாதிராசந் இராசபரமேசுவரந் ஜகதேக ராமந் ராயர் சாளுவ நரசிங்கராயர்குமாரர் தம்மையராயர் பிருதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்ற சகாப்தம் 1444 இதன்மேற் செல்லாநின்ற ருதிரோத்காரி ஸவத்சரத்து சிம்ம நாயற்று பூர்வபக்ஷத்து தசமியும் சுக்கரவாரமும் பெற்ற
3 சோதிநாள் மலாடாகிய ஜநநாத வளநாட்டு மகதை மண்டலத் தாற்று ர்க் கூற்றத்து ஆறகளூர் பெருமாள் கரியவர் கோயிலுக்கு சுவாமி நரசாநாயக்கர் யுடையார் திக்கு விசையம் பண்ணி எழ வேணும் என்று குமாரர் சுவாமி அம்மணநாயக்கர் தன்மம் ஆக தம்மைய நாயகக்கர் இக்கோயில் அர்ஜ்ஜநா விபவ காணியுடைய
4. ஆத்ரேய கோத்ரத்து வைகானச சூத்ரத்து திருவனந்தாழ்வார் புத்ரந் கூறியவற் வென்று மாலையிட்ட பெருமாள் புத்ரந் திருமலை அப்பன் உள்ளிட்டாரும் வேங்கடத்துறைவார் புத்ரன். . கரியவர் உள்ளிட்டாற்க் கும் மானியம் பண்ணிக் குடுத்தபடி இம்மண்டலத்து இக்கூற்றில் இவ்வூர் பிடாகை ஆன சிற்றேரி
5. ஏரிக்கீழ் நஞ்சை நிலத்திலே இவ்வெம்பெருமான் திருவிடை ஆட்டம் சறுவமாணியம் இறைஇலி வாரப்பற்று நிலம் 450 இதில் இவர்கள் மூன்று பேற்கு திவாராதநத்துக்கு இறையிலி ஆக சேத்த நிலம் 200 இதுவும் திருவிடை ஆம்டம் கண்டமாத்தால் புஞ்சை நிலத்தில் . . . . மாணியமும் தாதன் ஏரிகீழ் கொ . . . கராயன் . . . ஏந்தல் கீழ் நஞ்சை நிலத்திலே திருத்தி பெறும்
6. குளம் இம்மருவாதிக்கு சறுவமானியம் ஆக சந்திராதித்தவரையும் அனுபவித்து வரக்கடவர்களாகவும் இந்த தன்மத்துக்கு அகிதம் பண்ணின வர்கள் கங்கை கரையிலே காராம் பசுவை கொன்ற பாபத்தில் போக கடவர்களாகவும் இவை அம்மணநாயக்கன் எழுத்து
7. திருவெழுத்து துல்யம் உ

எண் : 59

இடம்	:	ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர் கரியவரதராச பெருமாள் கோவில் கருவறையின் முன்மண்டபடி தெற்குப்புற அடித்தளம்
அரசர்	:	விசயநகரர், கிருட்டிணதேவராயர்
காலம்	:	06.01.1525
மொழி	:	தமிழ் க.ஆ.அ. 451 - 1913
செய்தி	:	ஆறகளூர் கரியவரதராசப் பெருமாள் கோவிலுக்குக் கோவில்பணி செய்தற் பொருட்டு அடியவர் எண்மர் அமர்த்தப் பெற்றனர். அவர்கள் கோவில் பிரசாதம் செய்தருளவும் திருவமுதுபடிக் கட்டளைக்கும் சர்வமானிய நிலமாக 1000 குழி திருமலைநாயக்கருக்கு நன்மை உண்டாகும் பொருட்டு மிறுத்தஞ்சைய நாயக்கரால் வழங்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா மண்டலேஸ்வரந் ராசாதிராசந் ராஜ பரமேஸ்வரன் ஸ்ரீமந் பூர்வ தக்ஷண பக்ஷிம உத்தர சதா சமுத்திராதி பதி தம்மராய ஸ்ரீ வீரப்பிரதாப நரசா னாயக்க வீரஸோக வசந்த ராய ஸ்ரீ கிருஷ்ணதேவ மஹாராயர் பிருதிவிராச்சியம் பண்ணி அருளாயிநின்ற சகாப்தம் 1446 இதன்மேல் செல்லாநின்ற தாருண ஸ்ம்வக்ஷரது மகர நாயற்று ஏகாதசியும்
2. ரேவதியும் பெற்ற சுக்ரவாரத்து நாள் மலாடாகிய செநநாதவளநாட்டு மகதை மண்டலத்து ஆற்றூர் கூற்றத்து ஆறகழூர் பெருமாள் கரிய பெருமாளுக்கு மலை நாயக்கர் காபத்துக்கு கடவார் மிறுத்தஞ்செய நாயக்கர் சுவாமி திருமலை நாயக்கர் நமக்குபாலித் தருளின தென்கரை சீர்மையில் நரையூர் கூற்ரத்து ராகவேஸ்வரன் காலில் மேலை வெட்டி நஞ்சை நிலத்தில் திருமலை நாயக்கர்
3. தன்மமாக இவ்வெம்பருமானுக்கு எட்டுபேர் எம்பெருமானடியாரையும் விட்டு இவர்களுக்கு ப்ரசாதத்துக்கு அமுதுபடிக் கட்டளைக்கும் இவர்களுக்கு இறலிக்கும் ஆதிசங்கிறம புண்ய காலத்தில் தாராபூர்வமாக சர்வமானியமாக விட்ட நிலம் குழி 1000 இந்த நிலம் ஆயிரங்குழிக்கும் அணைவரி நீர்வழி காணிக்கை நாட்டு வெச்சம் விலாடம் பழவரி புதுவரி மற்றும் எற்பேற்ப்
4. பட்ட சகல ப்ராபிதியும் நாங்கலாகச் சர்வமானியமாக கட்டளையிட்டு விட்டபடியாலே இந்த நின்றயத்திலே ஆசந்தராக் காலமும் அனுபவித்து வர 'கடவதாகவும் இந்த தம்மம் யாதொருவர் பரிபாலனம் பண்ணினவர் களுக்கு அனந்த புண்யம் பண்ணின பலம் உண்டாகவும் இதுக்கு அகிதம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற போவத்திலே போகக் கடவநாகவும் உ சுபமஸ்து சிதம்பரம்

எண் : 60

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
கரியவரதராச பெருமாள் கோவில் கருவறையின் முன்மண்டபத் வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், அச்சுதேவ மகாராயர்

காலம் : 27.01.1533

மொழி : தமிழ் க.ஆ.அ. 452 - 1913

செய்தி : குகையூரைச் சொந்தகைக்கோளரான வேங்கி மகன் கண்ணன் என்பவன் கரியவரதராசப் பெருமாள் கோவிலில் தேர்த் திருவிழா நடத்தியமைக்காக அக்கோவில சன்னதியில் கோவில் தானத்தாரும் சேனை முதலிகளும் கூடி அக்கண்ணனுக்கு ஒருமனையும் ஒருதறிமானியமும் 3 குழி நிலமும் மற்றும் அனைத்து உரிமைகளும் அளித்தனர். அவ்வுரிமையை அவன்தம்பியும் அவன் வழித்தோன்றல்களும் துய்த்துக் கொள்ளவும் விற்கவும் ஒற்றி வைக்கவும் உரிமை அளித்தனர்.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸவஸ்திஸ்ரீ மஹா மண்டலேஸ்வரந் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டந் கண்டநாடு கொண்டு கொ(ண்)ட நாடு கொடாதான் துலுக்க தளவிபாடன் துலுக்க மோகந்தவிழ்த்தான் எம்மண்டலமும் திறை கொண்டருளிய அச்சுததேவ மகாரயர் பிறுதுவி ராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1454 இன்மேல் செல்லா நின்ற நந்தன சங்வசரத்து கும்ப நாயற்கு பூறுவ பக்ஷ

2. திறுதிகையும் சோம வாரமும் பெற்ற உத்திரட்டாதி நக்ஷத்தரத்து நாள் மிலாடாகிய செனநாத வளநாட்டு மகதை மண்டலத்து வேறு பிறிந்த ஆற்றூர்க் கூற்றத்து ஆரகளூர் கரியபெருமாள் சன்னதியில்க் குகையூர் கோளகடவேங்கி மகன் கண்ணன் தேர் எடுக்கையில் பெருமாள் கரியபெருமாள் சன்னதியில் சேனைமுதலி ஆழ்வாரும் ஸ்ரீ காரியம் செய்வார் கோயில் அதிகாரம் ஸ்ரீ தானத்தாரும் ஆக சோபான மண்டபத்தில் நிறைவுற நிறைந்து குறைவறக் கூடி இருந்து சேனைமுதலி ஆழ்வார் திருவாய் . . .

3. ருளிநபடி ஆக இந்த கண்ணனுக்குக் காணி ஆட்சிஆக பண்ணிக் குடுத்தபடி கோயிலுக்கு தெக்கு தாதன்மனைக்கு கிழக்கு முதலியாள் மனைக்கு மேற்கு ஒருமனையும் ஒருதறி மானிபம் தியாகணநல் ஊரிலே பெரிய படாஇறைஇலிக்கு கிழக்கு வாய்க்காலுக்கு வடக் தெற்கு கொல்லை ஒன்றும் பொன்பரப்பி திருவிளையாட்டம் நஞ்சை நிலத்தில் பொன்பரப்பி தேவதானத்துக்கு வடக்குக்கு . . . மூன்று குழி நிலம் கோயில் தன் மானம் நாழி பிரசாதமும் மெருவாதி சேனைமுதலி ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளுகை

4. யாலே இந்த சுவந்திம்மனையான மறுவாதியும் இவன் தம்பி சின்னனும் இவன் வற்கத்தாரும் அனுபவித்து விற்றும் ஒற்றி வைத்துக் கொள்ள கடைவராகவும் மலைமண்டல பெருமாள் எழுத்து கரியபெருமாள் எழுத்து வென்று மாலை இட்ட பெருமாள் எழுத்து பேர்ரேற்றுப்பிள்ளை எழுத்து

எண் : 61

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டப வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், அச்சுதேவ மகாராயர்

காலம் : 19.09.1539

மொழி : தமிழ் க.ஆ.அ. 433 - 1913

செய்தி : திருக்காமீசுவரமுடைய கோவில் தானத்தார் கோவில் ஊழியம் செய்வார்க்கு நிலத்தையும் மாடாபத்தய உரிமையையும் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. கோவில் தானத்தார்கள் காணிக்குடியாளர் திம்மரசையன் என்பவருக்குப் பணத்தைப் பெற்றுக் கொண்டு நிலத்தையும் ஊழியத்தையும் உரிமையாக்கினர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா மண்டலேஸ்வரந் அச்சுததேவ மகாராயர் ப்றுதுவிராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1661 இதன்மெல் செல்லாநின்ற விகாரி சம்வத்சரத்து கன்னி நாயற்று பூர்வ பக்ஷத்து சப்தமியும் சுக்கிர வாரமும் மூல நட்சத்திரமும் பெற்ற மலாடாகிய செனநாத வளநாட்டு மகதை மண்டலம்

2. ஆற்றூர் கூற்றத்து ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய தம்பிரானார் திருக்கோயில் ஆ . . . மண்டபத்தில் நிறைவுற நிறைந்து குறைவறக் கூடி சண்டேசுவர நாயனார் திருவாய் மலரந்தருளிச் செயல்படிக்கு காணிக்குடி நிம்மரசயன் முத்தறை மனு . . ன் கோயில் அதிகாரம் காணிப் பணம் கொண்டு . . . .

3. . . தானத்தார் ஆன வித்த . . திருஞான சம்பந்த பண்டிதரும் பெரிய பெருமான் ஆன கங்காணி ஆண்டாரும் கோயில் கணக்குதிருக்காமீசுரம் . . . உடையான் அம்பலவன் செவ்வந்திநாதன் ஆற்றூர் நாட்டு வேளைிற்கு மாடாபத்தியத்து . . நாள் முப்பதும் உபையம் பண்ணிக் குடுத்த இந்த காணி ஆட்சிக்குள்ளாந . . .

4. ற்ற இறையிலி சுதந்தர இறை மாணியம் காணி . . . மேல் நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறு கோயில் சுவந்திரம் உண்டானதும் பெற்று கோயில் ஊழியம் எங்களுக்கு அற்றபடி பண்ணி சந்திராதித்தவரையும் தாமும் தம்மிட வற்கத்தாரும் இந்த மாடாபத்தியக் காணிச சுவந்தர . . . அநுபவித்துச் சுகத்திலே இருக்கவும்.

எண் : 62

இடம் : ஊர் - ஆறகளூர்   வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் வடக்குப்புற அடித்தளம்

அரசர் : திருமலைநாயக்கர்

காலம் : 26.11.1624

மொழி : தமிழ்   க.ஆ.அ. 413 - 1913

செய்தி : ஆறகளூர் திருக்காமீசுவரமுடைய கோவில் முப்பது நாள் பூசைவட்டமும் திருஞானசம்பந்த பண்டிதர்க்கு உரிமையாக இருந்தது. பசுபதி பண்டிதர் என்பவர் முன்னரே நம்பியார் அழகியார் என்பவர்க்கு அப்பூசை நாளில் பதினைந்து நாள் பூசை உரிமை உண்டென்றும் அதற்கான கோவில் ஆணை ஒன்று உண்டென்றும் கூறினார். அவருக்கு ஏழரை நாள் பூசை உரிமையாக்கப் பெற்றது. ஆனால் அவர் பத்தெட்டுத் தலைமுறையாக அப்பூசை உரிமையைத் துய்த்து வருவதால் அவ்வேழரை நாள் உரிமையை ஏற்கவில்லை. பழங்காலத்தி லிருந்து தொடர்ந்து துய்த்து வந்த திருஞான சம்பந்த பண்டிதரை நாட்டார் வரவழைத்து வழக்கைக் கேட்டுத் தீர்ப்பு வழங்கியும் வழக்கு முற்றுப் பெறாமையால் திருமலைநாயக்கர் தலையிட்டு அவர் ஏற்பாட்டின்படி நான்கு அகரத்துப் பொதுமக்கள் காமநாதன் சன்னதியில் கூடி இருவரின் வழக்கைக் கேட்டுப் பழங்காலமாகத் தொடர்ந்து பூசை முறையைத் துய்த்து வந்த திருஞான சம்பந்த பண்டிதர்க்கு முப்பது நாள் பூசையும் உரிமையாக்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ரக்தாக்ஷி வருஷம் கார்த்திகை மாதம் 27 தியதி ஸ்ரீமது திருமலைய் நாயக்கர் ஆறகழுர் தானத்தார்க்கு வரக்காட்டின காரியம் ஆவது ஆறகழுர் உடையார் திருக்காமீசுவரமுடைய நாயினார் பூசை நாள்
2. முப்பது வட்டமும் நம்பியார் திருஞாநசம்பந்த பண்டிதர் பூசித்துப் போந்த இதிலே முன்பே நம்பியார் அழகியார்க்கு பதின்அஞ்சு நாள் காணி உண்டு என்றும் காலற்ற கணி ஆட்சி அனுபவித்துப் போந்த இது திறப்பு ஆகவேணும் என்று இந்த அழகியார் காணி பதின்அஞ்சு நாளும் இறங்கல் இட்ட மரிஆதிக்கு
3. கோயிலிலே பட்டோலை உண்டு என்றும் பசுபதி பண்டிதரைத் தாங்கள் அழைப்பித்து இதிலே ஏழரை நாள் அவர்க்கு சண்டேசுவப் பெருவிலை ஆகத் தாங்கள் சாதனம் பண்ணிக்குடுத்தபடிஆலே பத்து எட்டு தலைமுறை ஆக நடந்து போந்த காணியைத் தாங்கள் வன்மையிலே ஏழரை நா
4. ள் சாதனம் பண்ணுவித்தக் குடுத்தார்கள் என்றும் பூறுவி ஆன திருஞான சம்பந்த பண்டிதர் புறப்பற்றே போய் இருந்தபடிஆலே நியாயம் ஆன மரியாதிக்கு நின்றயம் பண்ணுவித்து குடுக்கிறோம் என்றும் நாட்டவர் ஒலை வரக்காட்டி அழைப்பித்தபடிஆலெ வந்தேன் என்றும் இந்த திருஞா
5. னசம்பந்த பண்டிதர் முன்பே சொன்னபடிஆலே தங்களையும் அழைப்பித்து நாட்டவர் முன்பாக திருஞானசம்பந்த பண்டிதற்கும் பசுபதி பண்டிதற்கும் உண்டுஆன வழக்கு கேட்டு அவர்கள் நின்றயம் பண்ணின மரிஆதி கேட்க என்றும் அவளவும் தாங்கள் தீர்ப்பு என்று சொன்ன
6. பதின்அஞ்சு நாளும் கூலிஆள் இட்டு புசிப்பிக்க என்று முன்பே தங்களுக்கு நாம் ஒலை குடுத்தபடிஆலே நாமும் ஆறகழ் ஊற்கு வந்தபொழுது இந்த திருஞானசம்பந்த பண்டிதர் வழக்கு கேட்டு நியாயமான மரி யாதிக்கு நின்றயம் பண்ணவேணும், என்றும் சொ
7. ல்லுகைஆலே நாமும் நாட்டவரும்ஆக மகா ஜனங்கள் முன்புஆக இரண்டு திறத்தாரையும் வழக்கு கேட்டுக் கொள்ளச் சொல்லி மணித்தரையும் கூட்டி போகவிட்ட அளவிலே குளத்தூ ர் ஆலம்பளம் சடையன்பட்டு மட்டியக்குறுச்சி இந்த நாலு அகரத்தில் மஹா ஜநங்களும் காமநாதன் சன்னதியிலே இருந்து இரண்டு திறத்தர் சொல்லுகிற வழக்கும் கேட்டு பூறுவபரமாக அனுபித்துப் போந்த நம்பியார் திருஞானசம்பந்த பண்டிதர் இருக்க புறத்திலே பசுபதி பண்டிதர் கொ
8. ள்ள பணி அல்ல என்றும் தீர்ப்பு உண்டு ஆநாலும் பூறுவம் ஆன திருஞான சம்பந்த பண்டிதரே கொள்ள பிராப்தம் என்றும் நாலு அகரத்தில் மஹா ஜநங்களும் நியமித்தபடிஆலே நாள் முப்பது வட்டமும் திருஞான சம்பந்த பண்இதர் காணிஆக பூறுவம் அற்ற மரிஆதி அறுபவித்து
9. போதும்படி கற்பித்து நம்முடைய ஒலையும் திருஞானசம்பந்த பண்டிதர்கு குடுத்த அளவுக்கு தாங்கள் பசுபதி பண்டிதற்கு பண்ணக்குடுத்த சாதனமும் கிழித்து போகட்டு நாள் முப்பது வட்டமும் திருஞான சம்பந்த பண்டிதர் பூசிக்கும்படி கற்பித்து இம்மரிஆதிக்கு
10. கோயிலிலே கல்லும் வெட்டுவித்து நடத்திப் போதலும்

எண் : 63

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டபத் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 16ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 422 - 1913

செய்தி : தியாகண நாயக்கர் மகதை மண்டல நாட்டவர்க்குக் கல்வெட்டிக் கொடுத்த உடன்படிக்கையைத் தெரிவிப்பது, அந்நாட்டின் பல இடையூறுகள் காரணமாகக் குடிகளின் நலன் குலைந்தது என்று நாட்டவர் முறையிட்டனர். அதனடிப்படையில் தியாகண நாயக்கர் புதிய அடையோலை (வரி நிர்ணய ஓலை) கொடுத்து மிகுந்த வரிச்சுமைகளை (அடந்தேற்றம்) சுமத்தாமல் குடிகளைக்காப்பதாக உறுதி அளித்தமை.

கல்வெட்டு :

1. பிலவ வருஷம் மாசி மாதம் 10 தியதி ஸ்ரீமது தியாகண நாயக்கர் மகதை மண்டல நாட்வற்கு கல்வெட்டி
2. குடுத்தபடி மகதை மண்டலம் பல உபதுரோகத்தாலும் குடிக்குலைந் (து)து என்று நாடார்க(ள்) சொன்னபடிஆலே
3. இந்த மண்டலத்துக்கு நாளாவது முதலுக்கு நாம் குடுத்த அடை ஒலை படி ஒழுந்து அடந்தேற்றம் கொள்ளக்கடவது
4. அல்ல ஒருகுடிச் சேதம் பண்ணக்கடவோம் அல்ல அன்னியாயம் அடந் தேற்றம் பண்ணாமல் நியாயம் ஆ
5. ன மரிஆதி கொள்ளுற இதுக்கு சுவாமி யீசுநாயக்கர் நாததாணையே தம்பி யீ . . யன் ஆணையே தப்பாது
6. இந்த நின்றையப்படிக்கு தப்பினவன் கெங்கை கரையில் காராம்பசுவை கொன்ற பாவதிலே போக கடவ
7. னாகவும் உ

எண் : 64

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்புற மண்டபத் தென்புறச்சுவர்

அரசர் : விசயநகரர்

காலம் : கி.பி. 16ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 423 - 1913

செய்தி : இக் கல்வெட்டின் முன்பகுதி பொறிக்கப்பெற்ற இடத்தில் கட்டடம் கட்டப்பெற்றுள்ளது. இக் கல்வெட்டு வரிச்சுமை (அடைந்தேற்றம்) குறைக்கப்பெற்றுப் புதிதாக விதிக்கப் பெற்ற வரிவிகிதங்களைக் குறிப்பிடுகிறது. இது தொடர்பான ஒரு நாயக்கரின் ஆணை நாட்டவர்க்குக் கொடுக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. . . . . மாதம் . . . . இருமடி இராயப்ப நாயக்கத் . . . நாயக்கர் மகதை மண்டலம் நாட்டாற்கு கல்வெட்டிக் குடுத்தபடி
2. . . . . லே அடைந்தேற்றம் ஆகக் கொண்ட கால்வாசிகைய் விலை தானியம் அனுவற்தினை கோவைவற்தினை அதிகாரவற்தினை பலவும் வற்தினை கொள்ளு
3. . . . . தக்கதாகவும் கற்பித்து மரக்கால் வாசி பூறுவம் அற மரிஆத் முதல் காலுக்குப் படிக்கால் கலத்துக்கு குறுணி நானாழி உள் வட்டம் கட்டா
4. . . . . . நாத படியும் கற்பித்து வாரப்பற்று நெல்லு உள்ளது கொட்டாரக் கட்டாக அளக்கும் படியும் கற்பித்து காணிப்பற்று நெ
5. . . . . . கழித்து விட்ட மகண்கூலிக்கு நாற்றுக்கு ஒருபணம் கொள்ளத் தக்கதாகவும் கற்பித்து காணிக்கைக்
6. . . . . . . யாதி கழித்து கல்லும் வெட்டிக் குடுத்தோம் இம் மரிஆதிக்கு இந்த வரி உண்டான
7. . . . . . . யே தப்பாது ஆன அளப் . . . . . . க்கு இவை இருமுடி இ . . . . க்க திம்மைய நாயக்கர் எழுத்து

எண் : 65

இடம் : ஊர் - ஆறகளூர் வட்டம் - ஆத்தூர்
திருக்காமீசுவரமுடைய நாயனார் கோவில் கருவறையின் முன்மண்டப வடக்குப்புற அடித்தளம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 16ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 434 - 1913

செய்தி : சேரமான் என்பவருக்கு திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிலும் உடையார் தாயிலு நல்லசோளீசுவரமுடைய நாயனார் கோயிலும் பொன்பரப்பின சோழிசுரமுடயநாயனார் கோவிலும் காணியாக அளிக்கப் பெற்றது. மேலும் நன்செய் நிலம் 200 குழியும் புன்செய் நிலம் 2000 குழியும் வழங்கி உரியாக்கப் பெற்றது.

கல்வெட்டு :

1. சேரமானுக்கு சிறுமுறி உடையார் திருக்காமீசுவரமுடைய நாயனார் கோயிலும் உடையார் தாயிலு நல்ல சோளீசுரமுடைய நாயனார் கோயிலும் உடையார் பொன்பரப்பின சோளீசுரமுடைய நாயனார் கோயிலும் உட்பட்ட கோயில்களும் தங்களுக்கு காணியாகத் தந்தோம் இப்படிக்கு காணி ஆக
2. அனுபவித்து போதவும் தங்களுக்கு காணியாக பதின்மூன்றாவது பங்குனி மாதமுதல் குறுக்கைபாடியில் நஞ்செயில் நடுப்பற்றிலே கார் பாசானமு புஞ்செயும் நிலத்திலே இறையிலியாக அனுபவித்து அடைத்த குழி நாறும் பாக்கன்பாடியில் நஞ்செய் நிலத்தில் நடுப்பற்றில் அடைத்த இறையிலி குழி நூறும் இலத்திபாடியில் வரகு

3. விளையும் நிலத்தில் அடைத்த குழி ஆயிரமும் விசலூரில் வரகு விலைஉம் நிலத்தில் அடைத்த குழி ஆயிரமும் ஆக நஞ்செய் குழி இருநூறும் புஞ்செய் கழி இரண்டாயிரமு ஒலை பிடிபாடாக கொண்டு சந்திராதித்த வரையும் காணியாக அனுபவித்து போகவும் இப்படி கல்லிலும் வெட்டிக் கொள்ளவும் பாற்பது

4. முதலியார் நமசிவாய தேவர் எழுத்து னாயனார் திருககாமீசுவரமுடையார் எழுத்து தாயிலுநல்ல பட்டர் எழுத்து திருமேற்தளி உடையார் எழுத்து சேதிராய பிரமராயர் எழுத்து ஆறகளூற் கோயில் கணக்கு காணியுடைய நெடுவாயலுடையாந் பிச்சந் திருக்காமிசுவர வேளாளர் எழுத்து

எண் : 66

இடம் : ஊர் - இடங்கணசாலை வட்டம் - திருச்செங்கோடு
விநாயகர் கோவில் முன்புறம் கிடக்கும் கல்

அரசர் : கொங்கு, வீரபாண்டிய தேவர்

காலம் : கி.பி. 1281

மொழி : தமிழ் க.ஆ.அ. 7 - 1913

செய்தி : இடங்கணைசாலை தந்தரமரில் ஒருவராகிய கூத்தாடுவார் கொடுத்த கொடை

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவ
2. ற்கு யாண்டு 16வது இளங்கிடா
3. சானை இல் தந்தரிமாரி கூத்தாடுவ
4. ரர் தந்ம்ம்

எண் : 67

இடம் : ஊர் - இடங்கணசாலை வட்டம் - திருச்செங்கோடு
பெருமாள் கோவில் கருவறையின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்குப்புறச்சுவர்

அரசர் : கொங்கு, இராசராச தேவர்

காலம் : கி.பி. 14ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 6 - 1913

செய்தி : கோவில் திருப்பணியை வெள்ளான் முதலிகளும் வாணிய முதலிகளும் செய்வித்துத் திருவமுது படைக்க 200 கல அளவு விதை நிலமும் காணியாக விட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு மூன்று பகுதிகளாக உள்ளது. அவை தொடர்ந்து ஒரே செய்தியைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

முதல்துண்டுக்கல்

1. . . . ரஜராஜ தேவற்கு யாண்டு 17வது கொங்கா
2. . . . வெளியான் சவன்னமா தேவனும் பதரிய(ன்)
3 ன விரசோழ மண்டலத்து தென்பூவாணிய நாட்டு இளங்கிடாசானை வெள்ளான் முத . .
4. . . . ஆண்ட பிள்(ளை) சிறியானும் வாணிய முதலிகளில் வயரவன் . . . றுப்பிள்ளை பொன்னனும்

இரண்டாம் துண்டுக்கல்

1. . . . சம்மனும் சொக்கனான கூத்தாடுவானும் குமபந்னந் நாயனா
2. . . . நாஸதரலி பரிசந்தமாகத் திருக்கற்றளி செய்வித்து திருப்படி மாற்றுக்கு 200 . . . ரைம
3. . . . சல விதை விட்டோம் இக்கோயில் காணி உடைய பாப்பாரில் காசியந் பெரியநம்பி

மூன்றாம் துண்டுக்கல்

1. . . . ன் வெம்பனும் கரந்தை பூமன் பூமன்னும் கரந்தை ஆளு
2. . . . யத்து முதலிகளும் எங்கள் நாயனா(ர்) கஞ்சமல தேவர் கொ
3. . . . வில் பாரிசத்து பெரியேரியில் தூ ம்புக்கு தெற்க்கு அகரத்து இருகண்ட
4. . . று நம்பிதேவனு இ(நி)லம் உழக் கடவர்களாகவும் மாஹேஸ்வர ரக்ஷை

எண் : 68

இடம் : ஊர் - இராசபாளையம் வட்டம் - திருச்செங்கோடு
அப்பச்சிசுவாமி கோவில் அருகில் உள்ள பாறை

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 232 - 1913

செய்தி : குன்னத்தூாக கிராமத்தில் வேட்டுவக்குடியில் பெரிய கவுண்டன் மகன் ஆவுடைக்கவுண்டன் கருகஞ் சண்டையில் உயிர் நீத்தமைக்காக அவருடைய மகன் வடமலைக்கவுண்டன் செய்த அறச்செயல்.

கல்வெட்டு :

1. பிறசோற்பதி வரு
2. ஷம் ஆவணி மாதம் 5 தேதி
3. குண்ணத்தூ ர் கிற (ாம)
4. த்திலிருக்குங் குண்ண

5. ம் வேட்டுவரி பெரிய
6. கவன்டன் மகன்
7. ஆவுடைக்கவுண்ட
8. ன் கருகஞ் சண்டையில்
9. பட்டதுக்கு அவன் மகன் வட்ட
10. (மலை) க் கவுண்டன் உபையம்

எ௳ · 69

இடம் : ஊர் - இராசிபுரம் வட்டம - இராசபுரம
பொன் வரதராசப்பெருமாள் ப் முன்புறமுள்ள கல்

அரசர் : சோழன், மூன்றாம் இராசரா

காலம் : 10.10.1231

மொழி : தமிழ்

செய்தி : பல மண்டலத்து வணிகர்கள் ஒன்றுகூடி இராசிபுரத்து வணிகர்க்கு வீரபட்டணம் அமைத்துக் கொடுத்த செய்தியைப் பற்றிக் கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகல கு
2. லம் வை
3. த்த கோ
4. இராச இர
5. ரச தேவற்
6. கு 14வது
7. ஐப்பசி மாதம் 13 திய
8. தி பல மண்டலத்து வீ
9. ரபெருநிரவி யாரோம்
10. இராசபுரத்து ஊர் மன்
11. றத்து இவ்வூர் நகரத்த
12. ாற்கு சமஸ்த சகல
13. சந்திராதித்தியம் உரித்தா
14. வதாக வீரபட்டண
15. க்கல்ந் நாட்டிக் கு
16. டுத்தோம் பல
17. மண்டலத்த வீ
18. ரபெரு நிரவோயாரே
19. ராம் இதுபல ம
20. ண்டலத்து நிர
21. வியார்
22. ரசைடி

எண் : 70

இடம் : ஊர் - இராசிபுரம் வட்டம் - இராசிபுரம்
கைலாயநாதர் கோவில் வெளிப்பகுதி கோபுர வாயிலின் தெற்கிலுள்ள குத்துக்கல்

அரசர் : பாண்டியன், மூன்றாம் விக்கிரம பாண்டியன்

காலம் : கி.பி. 1288

மொழி . தமிழ்

செய்தி : கோவில் திருமடைவளாகத்தில் குடியிருப்பவர்கள் செலுத்திய வரி விகிதங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளது. குற்றம் செய்தோர்க்குப் பத்துப் பணம் தண்டம் விதிக்கப் பெற்றுள்ளது. திருமடைவளாகத்தில் கைக்கோளர் தேவரடியார் முதலியவர்க்குக் கொடுத்த மனையை விற்கவும் ஒற்றி வைக்கவும் அனுமதி அளிக்கப்பெற்றுள்ளது. இராசிபுரப்பற்றுசபையாரும் நகரத்தாரும் நாட்டாரும் இவ் விதிமுறைகளை நிறுவினர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வி
2. க்கிரம பாண்டிய
3. த் தொண்டை
4 மான் ஒலை இரா
5. சிபுரத்து உடை
6 யார் ஸ்ரீ கயில
7. ாய முடைய ந
8. ாயநார் கோயி
9. லில் தாநத்தா
10 ற்கு திருமை
11. ட விளாகத்து
12. ஏறின குடிக்கு த
13 றிக்கு மூன்
14. று பணமும்
15. கீழ்க் குடிய
16. ாய வெள்ள
17. ருக்கைய்
18. யிருக்கும்
19. குடிக்கு இர
20. ண்டு பணமு
21. ங் கொள்ள
22. க் கடவதா
23. கவும் குற்ற
24. ஞ் செய்த
25. ாருண்ட
26. ாகில் குற்
27. றத்துக்குப் ப
28. த்து பண
29. ந் தெண்
30. டங் கொ
31. ள்ளவு மிப்ப
32. ணம் சீ பண்ட
33. ாரமாவ தாக
34. வும் திருமை
35. ட விளாகத்தி
36. ல் கைக்கோ
37. ளர் தேவரடி
38. யாற்கு இட்ட
39. மனை ஒற்றியு
40. ம் விலையுஞ்
41. செல்வதாக
42. வுமிப்படிக்
43. கு இராசிபுர
44. ப் பற்று ச
45. பையே
46. ாமு நாட்
47. டோமும்
48. நகரத்
49. தோமும்
50. முதலிய
51. ார் அருளி
52. ச்செயல்
53. படியே
54. ஏழாவ
55. து தைம்
56. மாத முதல்
57. சந்திராதித்தவ
58. ரை செல்
59. வதாகவு
60. ம் இது வி
61. லங்கு வா
62. ரே ஜெ
63. ச்சமறுவ
64. ான்
65. இவை தி
66. ருமலை கண்
67. டன் எழுத்து

எண் : 71

இடம் : ஊர் - இராசிபுரம் வட்டம் - இராசிபுரம்
கைலாயநாதர் கோவிலிலுள்ள நந்தி மண்டபத்தின் மேற்பகுதி

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : பொன்பரப்பு நம்பியார் சபாபதி மண்டபம் கட்டியமை

கல்வெட்டு :

1. நந்தன ஸ்ரீ அற்பிசை மாதம் 19 கயிலாச ணாத சுவாமியாருக்கு
2. இதுவும் சபாபதி மண்டபமும் கட்ட பொன்பரப்பு நம்பியார் சதா சேர்வை

எண் : 72

இடம் : ஊர் - இராசிபுரம் வட்டம் - இராசிபுரம்
கைலாயநார் கோவில் தட்சிணாமூர்த்தி மண்டப மேல் விதானம்

அரசர் : . . . .

காலம் : 24.05.1844

மொழி : தமிழ்

செய்தி : தட்சிணாமூர்த்தி முன்மண்டபத்தை நாயனார் அழகிய சிற்றம்பலக் குருக்கள் கட்டியமை

கல்வெட்டு :

1. குரோதி வருஷம் வய்யாசி மாதம் 13 தியதி தெஷிணாமூற்தி
2. முன்மண்பம் நயினார் அளிகய சிற்றம்பல கு
3. ருக்கள் சதா சேவை

எண் : 73

இடம் : ஊர் - இராசிபுரம் வட்டம் - இராசிபுரம்
கைலாயநார் கோவில் வெளியில் கோட்டை வாயில் தூண்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : வீரராகவய்யன் என்பவர் கோட்டை வாயில் கட்டி வைத்தமை

கல்வெட்டு :

1. ரௌத்திரி
2. விராகவய்ய
3. னவரகள்
4. வச்ச கோட்டை
5. வாசல்

எண் : 74

இடம் : ஊர் - இராசிபுரம் வட்டம் - இராசிபுரம்
பேருந்து நிலையத்தின் அருகில் நாளிதழ் செய்தியாளர் நாகராசன் என்பவரின் வீட்ட வாயிலில் கிடக்கும் கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : இராசிபுரம் கைலாயநாதருக்கு உற்சவம் நடத்த இராசிபுர ஆடடைச் சேர்ந்த ஏழு ஊர்களின் வான்ந்த கைக்கோளர்க்குரிய உரிமையைக் காட்டுகிறது.

கல்வெட்டு :

1. இராசிபுரம்
2. கைலாசநா
3. த சுவாமிக்கு
4. மண்டபம் கட்ட(ளை)
5. உத்சவம் நடத்
6. துவதற்க்காக
7. இராசிபுரம் நா
8. ட்டைச் சார்ந்
9. த அடில கண்
10. ட பாச்சல் 1
11. குருசாமி பாள
12. யம் 2 கடந்த
13. பட்டி 3 புத்தூ ர் 4
14. அத்தனூ ர் 5
15. புதுப்பாளைய
16. ம் 6 சீறாப்ப
17. ள்ளி 7 இந்த கி
18. றாமங்களிலிருக்
19. கும் கைக்கோ
20. ள முதலிமார்கள்
21. பாத்தியப்பட்டது

எண் : 75

இடம் : ஊர் - இருப்பல்லி வட்டம் - திருச்செங்கோடு
தேவராசப் பெருமாள் கோவில் கருவறையின் வடக்குபுறச்சுவர்

அரசர் : ஒய்சாளர், வீரராமநாத தேவர்

காலம் : கி.பி. 1268

மொழி : தமிழ்

செய்தி : சத்திரிய சிகாமணிச் சதுர்வேதி மங்கலத்துத் தேவப்பெருமாளுக்குத் திருவிளக்குப் புறமாக ஊர்ச் சபைக்குப் பொதுவான நிலத்தில் இருபத்தைந்து குழி நிலம் கவுண்டச்சிப்பள்ளியில் முத்தண்ணன் எனவர் விலை கொடுத்து வாங்கி அளித்தமை. மேலும் அமுதுபடிக்குச் செல்லநம்பி என்பவனிடம் பொன் கொடுத்த செய்தி இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ராமநாத தேவற்கு யாண்டு 14ஆவது இருப்பல்லியான க்ஷத்திரிய சிகாமண சதுர்வேதி மங்கலத்து தேவப் பெருமாளுக்கு திருவிளக்குப் புறமாக
2. இவ்வூர் சபையார் தோட்டச் சுற்றில் சபை பொதுவான நிலத்து குழி 25ம் இச்சபையார் பக்கல் பொன்னைக் குடுத்து மண்ணறக் கொண்டு விட்டேந் கௌண
3. டச்சிப் பல்லியில் கேசிக் கவுண்டன் மகன் முத்தண்ணனேன் இக் குழி இருபத்தஞ்சும் விலங்குமவன் ஏழெச்ச மறுவான் இது நோக்குமவன் கால்களிரண்டு என் தலைமேல் பின்பு
4. மேற்படியான் அமுதுபடிக்கு இவர்களில் செல்லநம்பி பக்கல் பொன்னறக் குடுத்து மண்ணறக் கொண்டு விட்ட குழி ஐம்பதும்
5. சிறுகாலை சந்திக்கு வரி அரிசிக்கு குடுத்தனம் விலங்குமவன் ஏழெச்ச மறுவான் நோக்குமவன் கால்களிரண்டும் என் தலைமேல்

எண் : 76

இடம் : ஊர் - இலவம்பட்டி வட்டம் - ஓமலூர்
கன்னிமார் பாழி பாறை

அரசர் : திருமலைநாயக்கர்

காலம் : கி.பி. 08.06.1655

மொழி : தமிழ் (கிரந்தம் கலந்து) க.ஆ.அ 312 - 1919

செய்தி : வீரசோழ மண்டலத்துக் குன்றத்தூ ர்ச் சாவடியைச் சேர்ந்த பூவாணிய நாட்டுத் தாரமங்கலத்தில் வாழ்ந்த வெள்ளாளன் இம்முடி சீயால கட்டி முதலியார் தம் குலதெய்வமான கைலாசநாதர் - சிவகாமி அம்மைக்குப் பூசைக் கட்டளையாக இலவம்பட்டி என்ற ஊரைக் கைலாச நாதபுரம் என்று பெயர் மாற்றம் செய்து எல்லா வரிகளும் உட்படக் கொடையாகக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீமத் மஹா மண்டலேஸ்சுவரந் அரியராயர் விபாடந் ஓஷைக்கு தப்புவராயர் கண்டந் மூவராயர் கண்டந் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதாந் துலுகா மோகந்தவிழ்ந்தான் துலுகா தள விபாடந் எம்மண்யலுமும் மீழமுந் திறை கொண்டருளிய
2. ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வர ராஜ மாரத்தாண்ட ராஜ கம்பீர பூர்வ ஷக்ஷிண பஸ்யம உதர சுஸ்ஸமுஷராயிபதி ஸ்ரீ விரப்ரஷாப ஸ்ரீ ரங்ஒஷேவ மஹாராயர் ப்ரிதிவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற காலத்தில் கலியும் சகாப்தம் 1756 ஸாலியவாஹன சகாப்தம்

3. 1577 இதன்மேல்ச் செல்லாநின்ற மந்மதி வருஷம் ஆனி மாதம் 12 பூர்ணமை வெள்ளிக்கிழமையும் மூல நட்சத்திரமும் ஸ்ரீவிநாமயோகிமும் வெவ கரணமும் பெற்ற நாளில் மயிரை விசுவநாத நாயக்கர் வீரப்ப நாயக்கர் கிருஷ்ணப்ப நாயக்கர் திருமலை

4. நாயக்கர் சீமையி கொங்கர் (தே)வர் சோழ மண்டலத்தில் குன்றத்தூர்த் தி(ரு)வடிக்குச் செல்லாநின்ற பூவாணிய நாட்டுக் கெல்லா பிரதாந ஸ்தலமான தாரமங்கலத்தில் வாழ்ந்திருக்கும் நாடு வாழி வெள்ளாழர் நிலங்(க)யார் வணங்கா

5. முடி வண்ணத்தடுக்கு வாடாத மாலை புலிக்கொடி வில்க்கொடி மகரகப்காடி சிங்கக்கொடியும் மன்னர் வணங்கிலுந் தான் வணங்காத மஸ்தகக் குடோரி விருதம் மடைந்து(ள) வலிமையும்பெருமையு உடைத்தாய்

6. வாழ்கின்ற வணங்காமுடி முதலிமார்களில் ஸ்ரீ மது முதலியார் நல்லுடையப்பர் இம்முடியால் கட்டி முதலியாரய்யருக்கு ஸ்ரீமத் குமாரராகிய புரட்டாதி நட்சத்திரம் கும்பராசியில் உதயமான இம்முடி கட்டி

7. முதலியாரோம் தேவஸ்தாந தர்மம் ஸ்ரீலா (சாஸநம்) பண்ணிக் குடுத்தபடி நம்மிடையே குலஸ்வாமியாரான தாரமங்கைஇல் நிக்ஷேத்ரதில் வாழும் ஸ்ரீமது கைலாசநாய வ்வாமியாருக்கும் அம்மை சிவகாமித் தாயாருக்கும்

8. திருவனாதல் முதல் திருவுசாமம் மட்டு நடக்கிற . . . . ங்களில் அபிஷேக நிவேத்தியம் ஆடல் பாடல் அங்ரங்க வைபோகம் முதலாகிய பூஜை கட்டளை . . . ற்கு நம்முடையதான அமரக்குன்றி சீர்மையில் பூவாணிய

9. நாட்டில் இலவம்பட்டி கிறாமம் பட்டி பா . . யங்களுள்பட . . . திரு விடையாட்ட கிறாமமாக ஙிலாசசாஸநம் பண்ணி குடுத்தோம் இந்(த) கிறாமத்துக்கு எல்லை விபரம் கிழக்கு ஆரியூர் கருநாடு நாடு பாதி மட்டு (தென் கிழக்கராய் நாடு)

10. ண்டான் மட்டு தெற்குப் பெரிய ஸமுத்ரம் ஏரிக்கு மாரஸமுத்ரம் அடித . ம் மட்டு கரை கிழ(க்கு) மேற்கு (வன்பான) மட்டும் தென் மேற்க்கு செட்டிமாங்குறிச்சி எல்லை மட்டும் மேற்க்கு இருப்பாளி நாடு கண்டான் மேடு நடுப்பாதி மட்டும் வடமேற்க்கு

11. இ தாரமங்கலம் எல்லை மட்டும் வடக்கு வெள்ளிப் பாறை நாச்சினஞ் பட்டி நல்லண கவுண்டன் மகன் வ(ள்ளியர்) கவுண்டன் கொல்லை யுண்டான மட்டும் வடகிழக்குக் குன்றங் கல்லுக்கரடு கூட ஆரியூர் எல்லை குடுத்த காவா

12. ண்டை கவுண்டன் கொல்லையுண்டான மட்டும் இதுப்படிக்கு எட்டுத்திக்கும் எல்லை கண்டு ஊர் காணியான வேள்ளாழர் உத்தமகுலம் சிந்தாமணி கவுண்டன் சொல்லரிகுலம் காவாண்டை கவுண்டன் தண்டு ஸ்தாநத்து

13. மற்றுமுண்டான கட்டுக் கல்லணையுளும் கூட எட்டுத்திக்கும் எல்லை நடந்த படிக்கு இக்கிறாமம் இலவம்பட்டியை கைலாஸநாதபுர மென்று ப்ரதி நாமயேமும் உண்டுபணி சிலாசாஸநம் பண்ணி குடுத்தோம் ஆகை

14. யினால் இந்த கிறாமம் இன்று முதல் கைலாஸநாதபுர மென்று பெர் இந்த கிறாமம் கைலாதபுரத்துக்கு எட்டு திக்குக்கு உள்பட்ட நஞ்சை புஞ்சை மவிடை மரவிடை நத்தம் படுகை செய்தலை திடர் ஆற்றுக் கால் ஊற்றுக்கால் மேல்

15. நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறு தென்படு வரை மீன்படு . . . மனப்போம் ஸ்கல வ்வாமியங்களும் குடிபடைவரி வுண்ணும் கட்டாயம் கைவிலை வெட்டி ஆயம் . . க மற்றும் எப்பேற்பட்ட ஸகல ஸமுஷாய ப்ராப்தி

16. நியிநிக்ஷ பஜலதரபஷான க்ஷண்யாகாமி ஸிஷ்டஸாஷ்ட மென்று சொல்லபபட்ட அஷ்டபோகதேஜ வ்வாமியங்களும் ஸர்வ்வமாநய மாக புத்ர பௌத்ர பாரம்பரையாக ஆசந்ரார்க்க ஸ்யாமியாக (புத்ரரோசாரமாக)
17. (வம்ஸபாரம்) பரையாக நடத்தி வரக்கடவோமாகவும் உ இந்த தர்மமத்துக்கு யொதொருவர் விஹதம் பண்ணினாலும் அவர்கள் கங்மை கரையிலே காராம் பசுவைக் கன்ற தோஷத்திலே போவார்கள் இந் . . . .
18. தர்ம்ம சிலாசாசநம் எழுதின நன்மைக்கு நாட்டு கறணிக்கு மன்னபி . அதியாரி மகன் அசுரபபன் கை எழுத்துப்படிக்கு தாரமங்கல ஸ்தலம் நரவப்பா சாரி காறனாசாரி கல்வெட்டுப்படி . . .
19. . . . . . கைலாஸநாத உவாமி ரக்ஷிகா சுபமஸ்கு

எண் : 77

இடம் : ஊர் - இலவம்பட்டி வட்டம் - ஓமலூர்
மாரியம்மன் கோவில் அருகிலுள்ள பலகைக்கல்லின் பின்புறம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 14 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 317 - 1919

செய்தி : புலலூர்த் தேவர்க்கு நந்தாவிளக்கு எரித்தற்பொருட்டு ஐந்து கழஞ்சுப் பொன் கொடையாக அளிக்கப்பெற்ற செய்தி

கல்வெட்டு :

1. புழலூ ர்த் தேவ
2. . . . . கணா ெ
3. . . . .
4. . . . . விக்கு வைத்
5. த பொன் அஞ் கழஞ்
6. சு

எண் : 78

இடம் : ஊர் - இலவம்பட்டி வட்டம் - ஓமலூர்
மாரியம்மன் கோவில் அருகிலுள்ள பலகைக்கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 14 ஆம நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 313 - 1919

செய்தி : புலலூர்த் தேவர்க்கு திருநந்தா விளக்கு எரித்தற்பொருட்டு வாணிகத்தாரால் முப்பது கழஞ்சுப்பொன கொடையாக அளிக்கப்பெற்ற செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்ரீ புழலூ ர்
2. தேவர்க்கு க
3. ல் வாணிக த
4. (த்த) வை (த்த) பொ
5. ன் முப்பதின் கழஞ்
6. சு இப் பொன்னால் நொ
7. ந்தா விளக்குத் தி(ரு)வ
8. மிர்துக்கு . . . .
9. டை . . . . . யன
10. . . . எ . . . எழு (த்) து

எண் : 79

இடம் : ஊர் - உத்தமசோழபுரம் வட்டம் - சேலம்
கரபுரநாதர் கோவில் பெரிய மண்டபத்தில் உள்ள கல்

அரசர் : சோழன், முதலாம் இராசாதிராசன்

காலம் : கி.பி. 1027

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 4. - 166

செய்தி : கரபுமுடைய நாயனார் கோவில் வைகுந்தப் பெருமாள், சுந்தர தேவர், நாச்சிமார் இருவர், இடபதேவர் ஆகிய தெய்வங்கள் குறிப்படப் பெற்றுள்ளன. கல்வெட்டுச் சிதைவின் காரணமாக முழுச் செய்தியை அறிய இயலவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராரஜாதிரா
2. ஜ தேவர்க்கு யாண்டு (9)
3. (ஆ) வது . . . . . பல்லவரை
4 யன் நாட்டு உத்தம சோ
5. ழபுரத்து கரபுரமுடைய ந
6. ாயனார் கோயிலில் . . . .
7. . . . . குந்தவ (பெ) பருமாள்
8. சுந்தரதேவரும் நாச்சி
9. மாரிருவரும் பிள்ளையா (ர்) இ
10. ஷப (ரும்) இராஜேந்திர சோ
11. ழ தேவர்க்கு எட்டாவதி
12. ல் கலிகடி(ந்) த பச் செ . . . .
13. தெற்கு . . . . யோடுடைய (ந)
14. யினார் இத் தேவர்க் . . .

எண் : 80

இடம் : ஊர் - உத்தமசோழபுரம் வட்டம் - சேலம்
கரபுரநாதர் கோவில் கருவறையின் மேற்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 11 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 165

செய்தி : பாடலின் ஒருபகுதி மட்டும் உள்ளது.

கல்வெட்டு :

1. சங்கெட்டல் கோழிய (ர் ஏ) பா (ன்) கோட்டை வா
2. ழு சதிமறைபோன் செங்கேவடி (யர்) க்கு பொன்
3. சென்னி பொன்னாயன் செழு
4. ஞ் (ச்) சிலம்பில் கொங்கோனை

எண் : 81

இடம் : ஊர் - உத்தமசோழபுரம் வட்டம் - சேலம்
கரபுரநாதர் கோவிலின் தெற்குப்புறச்சுவர்

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவராயர்

காலம் : கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 164

செய்தி : மேல்மலைக் காவிரிப்பூம்பட்டணமாகிய உத்தமசோழபுரத்தில் இருககும் உத்தமசோழ செட்டி ஆதித்ததேவன் என்பான் கரபுரமுடைய நாயனார்க்கு முன்பு நடந்து வந்த தேவதான இறையிலி நிலம் சேலம் நாட்டின் சில ஊர்களில் நன்செய் புன்செய் நிலங்களையும் உத்தமசோழபுரத்தின் மகமையையும் கோவில் திருப்பணி, திருமேனிச்சாத்து, திருவிளக்கு, அமுதுபடி முதலியவற்றின் முதலீட்டுப் பொருளாகக் கொடையாகக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. சுபமஸ்து நன்றாக உ ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமநுமஹாமண்டலேஸ்வரந் ஹரி (ஹ) ராய விபாடந் பாஷைக்குத் தப்புவராயரகண்டன் மூவராயரகண்டன் கண்டனாடு கொண்டு கொண்டனாடு குடாதான் ஸ்ரீக்ருஷ்ணராயற்கு யாண்டு 27வது
2. மஹாப்ரதாபராயான் திப்பரச அய்யனுக்குச் செல்லாநின்ற காலத்து சேலநாட்டு உத்தமசோழபுரமான மேற்த்தலைக் காவேரிப்பூம்(ப்) பட்டணத்தில் உத்தமசோழச் செட்டி ஆதித்ததேவன் இன்னாட்டு உத்தம
3. சோழபுரத்துக் கரபுரமுடைய நயினாற்க்கு திருநாமத்துக்காணியான முன்னாள் நடந்த தேவதாநத்து . . . ள்ளான் இன்னாட்டு நட்டா மங்கலத்து நஞ்சை புஞ்சை நாற்பாங்கெல்லையும் மேல்னோக்கிய மர

4. முங் கீழ்னோக்கிய கிணறும் மான்படுகாடும் தேன்படுவரையு மீன்படு சுனையும் மற்றும் எப்பேற்பட்ட பல ஸ்வர்ணாதாயங்களும் இன்னாட்டு ஆலைவாயில் தச்சன் ஏரிகீழ் நஞ்சை உண்டானதும் இன்னாட்டு க
5. வாதபுரத்து பெரிய ஏரியில் ஒட்டுக்கீழ் நஞ்சை யுண்டானதும் என்னடைய உபையமாக இன்னாட்டு புத்தூ ரில்க் கீரைப்பள்ளத்து ஏரி நஞ்சை உண்டானதும் என்னிட ஏரியில் மேலைமதகு நீரேறு நஞ்சை உண்டானதுவும் இன்னாட்டு உத்தமசோ
6. ழபுரத்து முன்னாள் நடந்த மகமையும் இன்னாயினாற்கு த்ரிஸந்திநை வேத்யத்துக்கும் (த்) திருவிளக்கு (க்)கும் திருமேனிசாத்துப்படி திருப்பணிக்கும் உடலாக கரபுரமுடைய தம்பரானாற்கு செம்பி
7. லும் சிலையிலும் வெட்டிக் குடித்தேன் இத்தன்மம் சந்த்ராதித்தியவரையும் நடக்கக் கடவதாகவும் உத்தமசோழச்செட்டி ஆதித்ததேவன் இத்தன் (ம்) மத்தை நட்த்தினவன் சீபா
8. தம் இரண்டும் என் தைலமேலே இத்தம்மத்தை இலங்கனம்(ப்) பண்ணுவான் கெங்கை கரையில் குரால்ப்பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான் ப்ரமஹத்தி பண்ணு
9. வான் ஏழெச்சம் அறுவான்.

எண் : 82

இடம் : ஊர் - உத்தமசோழபுரம் வட்டம் - சேலம்
பெருமாள் கோவில் மேற்கில் வயலிலுள்ள பாறை

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவராயர்

காலம் : 19.11.1516

மொழி : தமிழ்

செய்தி : உத்தமசோழச்செட்டி மகன் ஆதித்தவதேவசெட்டி என்பவர் மேல்தலைக் காவிரிப்பூம்பட்டணமாகிய சேலநாட்டு உத்தமசோழபுரத்து அழகிய பெருமாளுக்குத் திருநாள் முதலிய விழாக்களுக்கு அவ்வூரில் உள்ள குடிகள் மீதான தறிவரி, மனைவரி முதலியவற்றுடன் முத்திரைக்காகக் காசுகள் மானியமாகக கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மஹாப்ரதாப கிருஷ்ணிராயற்கு செல்லா
2. நின்ற சகாத்தம் 1438ன் மேல் செல்லாநின்ற தாதுவருஷம் கார்த்திகை மாதம் 20
3. சேல நாட்டு உத்தமசோழச்செட்டி முதலியப் பள்ளி உடையான் இளைய நயினார்
4. செட்டியார் ஆதிச்சதேவ செட்டியார் சேல நாட்டு உத்தமசோழபுரம் ஆன மேல்
5. தலைக்காவேரிப் பூம்பட்டினத்து அழகிய பெருமாளுக்
6. கு திருநாள் இல . . . வைக்க உத்தமசோழபுரத்தில் குடி இருக்
7. கிற திரு . . . தம்பிராரு . . . குடிகளுக்குத் தறிக்கடமை மனைவரி
8. ஆயத்துக்கு உண்டான சமூ . . கும் முத்திரைக்காசு 30 காசு 100ம்
9. உண்டான பல இறையும் சந்திராதித்தவரைச் சறுவமான்னியம்
10. ஆக பூறுவத்திலே நடக்கும்படிக்கு சறுவமானியம் ஆக சந்தி

11. றாதித்தவரைக்கும நடக்கும்படிக்கு சிலையிலும் செம்பிலும் வெட்டிக்குடுத்
12. தோம் இந்தன்மத்தை பரிபாலனம் பண்ணனவன் ஸ்ரீ வயிஷ்ணவர் பொற்
13. பாதம் பெறக்கடவான் ஆகவும் அவன் சிரிபாதம் என் தலைமேல் இதுக்கு அகித
14. ம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே குரால் பசுவைக் கொன்ற
15. தோஷத்திலே போகக்கடவான் ஏழெச்சம் அறுவான் ஏழு சிவாலயத்தை யழித்த ப
16. ாவத்திலே போவான் ஆசாரியனைத் துரோகம் பண்ணின பாவத்தில் போவான்

எண் : 83

இடம் : ஊர் - எருமைநாயக்கன் பாளையம் வட்டம் - சேலம்
அம்மன்மலை எனப்பெறும் பொன்சொரி மலையின் தாமரைப் பாழியின் மேல் பாறை

அரசர் : . . . .

காலம் · கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : திருக்குறள், அதிகாரம் 26, புலான் மறுத்தல்

கல்வெட்டு :

1. தன்னூ ன்
2. பெருக்கற்
3. குத் தான்பி
4. றி தூ னுண்
5. பா னெங்ங
6. ன மாளு மருள்

தன்னூ ன் பெருக்கற்குத் தான்பிறி தூ னுண்பா
னெங்ஙன மாளு மருள் (குறள் 251)

எண் : 84

இடம் : ஊர் - எருமைப்பட்டி வட்டம் - நாமக்கல்
ஊர்த் தெற்கில் நத்தமேடு என்னும் நிலத்தில் கிடக்கும் கல்

அரசர் : பாண்டியன், சுந்தரன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : தேவன் என்பவன் அரசாளுகையில் வீற்றிருந்த பெருமாள் நல்லூ ர் என்னும் ஊரில் நன்செய், புன்செய் நிலத்து வாரத்தில் பாதியுரிமை பெற்றமை தெரிவிக்கிறது. 'இவர் ராசாக்கள் ஆணை' குறிப்பிடப் பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தர
2. பாண்டிய தேவர்க்
3. கு யாண்டு ஏழாவது
4. வீற்றிருந்த பெருமா
5. ள் நல்லூ ர் இவ்வாண்
6. டு முதல் தேசமாள தே
7. வனேன் எனக்கு இவ்
8. வூர் பெருமாள்
9. அடுத்தா ணாக தந்தரு
10. ளுகையில் நன்செய்
11. புன்செய் இருகை
12. யில் ஒருகை வார
13. ம் கொள்ளக் கடவே
14. வன் ஐவர் இராச
15. ராக்களாணையே

எண் : 85

இடம் : ஊர் - ஏழூர் வட்டம் - நாமக்கல்
மாரியம்மன் கோவில் அருகிலுள்ள சிங்கத்தூ ண்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 12 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : ஏழூரைச் சேர்ந்த பாராதாயன் நாராயணன் வுமாசகிதனான திருவேங்கடத்து நம்பி கொடுத்த தூ ண்

கல்வெட்டு :

1. ஸ்வ்ஸதிஸ்ரீ இக்கால் இவ்வூற் பாராதாயன்
2. நாராயணந் உமாசகிதநாத திருவேங்கடத்து
3. நம்பி தன்மம்

செய்தி : வடகரை ஆற்றூ ரைச் சேர்ந்த புல்லை வேட்டுவன் கூத்தாடுந் தேவன் இருங்கோளனான வலங்கை மீகாமன் அமைந்த தூ ண்

கல்வெட்டு :

1. ஸ்வ்ஸதிஸ்ரீ வடகரை யாற்றூ ர்ற் புல்லை
2. வேட்டுவன் கூத்தாடுந்தேவந் இருங்கோள
3. நான வலங்கை மீகாமந் தன்மம் இக்கால்

எண் : 86

இடம் : ஊர் - ஏழூர் வட்டம் - நாமக்கல்
பாவடிப்பிள்ளையார் கோவில் பீடம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 10 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : இக்கல்வெட்டில் ஐம்பெருங் குழுவினர் குறிக்கப்பெற்றுள்ளனர்.

கல்வெட்டு :

1. . . . முதல் தேவர்க்கும் பனை
2. ட பிடித்த பல்லாயிரவ
3. ற்கும் ஐம்பெருங் குழு
4. வுக்கும் அடைக்கலம் இவை
5. காத்தான் அ
6. டி தலைமேலின
7. இப்பனை வெட்டினா
8. ன் வழி ஏழச்சம் . . . ழியா
9. ன் தா . . . வான்வழி வ
10. ழா யிது

எண் : 87

இடம் : ஊர் - ஏழூர் வட்டம் - நாமக்கல்
பிள்ளையார் கோவில் மேல் தளத்தில் உள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : புல்லைவேட்டுவன் என்பவர் கோவில் திருவாசலும் போதிகையும் உத்திரமும் செய்வித்தமை

கல்வெட்டு :

1. . . . . . பெருந்திருவாசலும் கட்டிட கல்லும் போதிகையும் உத்தரமும் செய்வித்தான் வடக
2. ரையாற்றூ ர் புல்லை வேட்டுவன் (வளர்ந்த) அம்மத திருவ நாடாழ் வாநாந வீரசிங்கந் தம்மம்

இடம் : சிவன்கோயிலிலுள்ள கல்வெட்டு

1. ஸ்வஸ்திஶ்ரீ சுந்தர பாண்டிய டே
2. தவ யாண்டு 11வது விழுப்பரை
3. ய பிள்ளகளில்

எண் : 88

இடம் : ஊர் - ஏழூர் வட்டம் - நாமக்கல்
மாரியம்மன் கோவிலிலுள்ள கல்வெட்டு

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : புல்லைவேட்டுவன் கூத்தாடுவான் தேவனின் கொடை

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ வடகரையாற்றூர்
2. புல்லை வேட்டுவன் கூத்தாடு
3. ந் தேவந் இருங் கொ
4. ள (பாடி) நா . . . லெல்
5. ய்ச்சய

இடம் : பண்ணையம்மன் கோவில் சன்னதி முன்புறம்

1. மாணிக்க கவுண்டன் ம
2. கன் மாணிக்கன் உபையம்
3. இப்பலிபீடம்

எண் : 89

இடம் : ஊர் - கதிராநல்லூர் வட்டம் - இராசிபுரம்
பிள்ளையார் கோவில் மேல் தளத்தில் உள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : நத்தமேட்டுப் பகுதியிலுள்ள சிவன் கோவில் முழுவதும் இடிந்து கட்டிடக் கற்கள் ஆங்காங்குச் சிதறியுள்ளன. முதலாம் இராசேந்திரனின் 'திருமன்னிவளர' என்ற மெய்க்கீர்த்திக் காணப்பெறுகிறது. பராந்தக ஈசுவரமுடைய நாயனார் கோவில் திருமஞ்சனத்திற்குப் பதக்க அரிசியும் திருமஞ்சனப் புறம்பாக அரைக்காணி நிலமும் விட்ட செய்தி.

கல்வெட்டு :

1. திருமன்னி வளர இருநில மடந்தை . . . செயப் பாவையுஞ் சீர்த் தனிச் செல்வியும் தன்பெருந் தேவியராகி யின்புற
இடைதுறை நாடு துடர்வன வேலிப் படர்வன வாசியும் கள்ளிச்சூழ மதிள் கொள்ளிப் பாக்கமம் கண்ணத் . . .

இரண்டாம் கல்

2. . . . பந்ரமான ஸ்ரீ ராஜேந்திரசோழ தேவற்கு யாண்டு 3வது வடகரை . . .
. . . . கேசரி சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீ பராந்தக ஈசுவரமுடைய மஹா தேவர்
. . . நிறக்கு வைச்ச சாவா மூவாப் பேராடு 30 இத்தன்மம் சந்திராதித்தவற்

மூன்றாம் கல்

3. . . ரசீர் பராந்தக ஈசுரமுடையாற்க்கு நாந் திருமஞ்சனப் புறமாக னாந் . .
படி செய்வதாகவும் இந்நிலம் அரைக்காணியும்

நான்காம் கல்

4. . . றுணை ஈசபட்டனாந தில்லைநாயக நம்பிரன் இவ . . . . . ணரியும்
நாலு திருமஞ்சனத்துக்கும் நாலு பதக்கு அரிசிஅமுது

எண் : 90

இடம் : ஊர் - கபிலர்மலை — வட்டம் - நாமக்கல்
மலைமேல் உள்ள கல்வெட்டு

அரசர் : . . . .

காலம் : 21.11.1670

மொழி : தமிழ் — க.ஆ.அ. 438 - 1989

செய்தி : சித்தி செட்டியாரின் தாயார் படி அமைத்த செய்தி

கல்வெட்டு :

1. சாதா(ர)ண வருஷம் கார்த்திகை மாதம்
2. 21 சோமவார னாள் வசிகர் வங்
3. கிஷத்தில் நகரத்தாரில் வண்ணி
4. க்கா மக(ா)ரிஷி கோத்திரம் காவெ
5. வாச(ம்) குண்ணத்தூ ரிலிருக்
6. கும் நா . . ன் செட்டியார் கு
7. மாரன் . . . . . கு செட்டியார்
8. சித்தி செட்டியார் குமார
9. ன் குருவி செட்டியா(ர்) குமா
10. ரன் வசவி செட்டியார்
11. சித்தி செட்டியார் ருடை
12. ய மாதா சேர்வை உ
13. சுருளும் படியும்
14. முடிந்தது

எண் : 91

இடம் : ஊர் - கபிலர்மலை வட்டம் - நாமக்கல்
மலைமேல் உள்ள கல்வெட்டு

அரசர் : . . . .

காலம் : 01.01.1694

மொழி : தமிழ் க.ஆ.அ. 438 - 1929

செய்தி : தலையாரி சங்கரன் என்பவன் படிக்கட்டு அமைத்துக் கொடுத்த செய்தி

கல்வெட்டு :

1. தலையாரி குஞ்சுக்காளி மகன் சங்கரன்
2. படிக்கட்டு உபையம் கலியுக சகாற்த்தம்
3. 4794ல் னாளது வருஷம் முகஸ்ரீ தைய் மாதம் 12 புஷற்ன்
4. மையும் பூச நட்செத்திரமும் சுப்பிறமண்
5. ணியர் லடச்சிக்
6. கவும்

எண் : 92

இடம் : ஊர் - கருங்காடு வட்டம் - ஆத்தூர்
மாரியம்மன் கோவில் அருகில் நடப்பெற்றுள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 15 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 4 - 457

செய்தி : அவ்வையாரம்மைக்குப் பூதானமாகக் கள்ளநாட்டைச் சேர்ந்த கருங்காடு என்ற பகுதியைக் கரையப்பக் கவுண்டர் அன்னியப்பக் கவுண்டர் ஆகிய இரு தலைவர்களும் நாலுகரை நாட்டாரும் சேர்ந்து விட்டமை.

கல்வெட்டு :

1. வியய வருஷம் வய்யாசி மாதம் 27
2. அவைய்யாரம்மை
3. சுவாமியார்க்கு பூத
4. ானம் விட்டதுக்கு (க)
5. ள்ளரையக பெரிய
6. கரியப்பகவுண்ட(ர்)
7. பட்டத்து கள்ளை
8. ரய அண்ணியப்ப
9. கவுண்டர் இந்த ரண்
10. டு துரையளும் நாலு
11. கரைநாட்டரும் கள்(ள)
12. நாட்டில் செத்த கா(ங்)
13. நாடு பூதானம் விட்ட
14. துக்கு பூசை நிமத்தி
15. யம் பண்ணி வருகுறவர்
16. கள் நயினாவுண்டரு(ம்)பி
17. யார் உள்பட்டா யிந்தவு(ர்)
18. தானதத்துக்கு யாதா மொரு
19. வர் பூசை கட்டளை அவி
20 . . . . (மெ) கம் அதி

21. காமாகா நடததிவரு (கிற)
22. (வ)ர்கள் ஆயிராரோக்கி (ய)
23. (அய்)ஸ்வரியம் அவர்பி
24. . . வை தொழுது மாதா . .
25. யம் பண்ணி வருகுறவர்
26. யிந்த பூ (த)ானம் பூமி
27. ஆக(வும்) சந்திர(ா)தித்தர்
28. உள்ளமட்டும் நடத்தவு/ம் இ/
29. ப்படி யிதுக்கு (யாதா)
30. மொருத்தர ரண்டு(நி)
31. னைச்சவர்கள் கெங்
32. கைக்கரையிலே
33. க(ா)ராம் பசுவை(க்)
34. கொன்ற பாவத்தி
35. (லே)போவர் (கள்)

எண் : 93

இடம் : ஊர் - கல்பகனூ ர் வட்டம் - ஆத்தூர்
வேங்கடேசப் பெருமாள் கோவில் வாயிற்படி

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : பெரிய பாலு நாயக்கரய்யர் அவர்கள் அமைத்த நல்லூ ர் வாய்க்கால் பற்றியது. கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. கர வருஷம்
2. சித்திரை
3. மாதம் 17 தேதி
4. பெரிய பா
5. லு னாயக்
6. கரய்ய
7. ன் அவர்
8. கள்
9. . . . .
10. பெரிய
11. . . . . ன்
12. . . . .
13. மண்ட . . .
14. . . . த்தில் க
15. . . . த நல்
16. லூ ர்
17. வாய்க்
18. கால்

எண் : 94

இடம் : ஊர் - கல்ராயன்மலை வட்டம் - ஆத்தூர்
கரியராமன் கோவில் முன்பக்கமுள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : தள்ளரையக் கவுண்டரும் மதுரை வீரைய கவுண்டரும் மேல்மலை நாட்டாரும் சேர்ந்து கரியபெருமாளுக்கு மேலைச் செம்பறக்கையில் நிலம் இறையிலியாக வழங்கிய செய்தி

கல்வெட்டு :

கல்லின் கிழக்குப் பக்கம்

1. (ஸ்ரீ) ரோதிகிறி வருஷம் மார்
2. கழி மாதம் 21 தள்ள
3. (ஸ) ரபகவுண்டர் மேல்ம
4. வீரையகவுண்டர் மேல்ம
யுள்பட ச
5. (லை) நாட்டாரும் கரிய
6. (பெ) பருமாளுக்கு மேலைச்
7. செம்பறக்கை திருவி
8. ளையாட்டம்
9. படி நஞ்சை புஞ்சை
10. நாற்பாக்கெல்லை
11. யு(ம்) சகலமும்
12. ந்தி (ர) சூரியர்வரை(ர)
13. அ (கு) தம் பண்(ணின)
14. வர் கெ(ங்கையி)லே

மேற்குப் பக்கம்

15. க(ர)ராம் பசுவை
16. கொன்ற பா
17. வத்திலே (போ)
18. க (க) டைவர்கள்

எண் : 95

இடம் : ஊர் - காக்காவேரி வட்டம் - இராசிபுரம்
சிவபெருமான் கோவில் கருவறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1253

மொழி : தமிழ்

செய்தி : சேலநாட்டு அஞ்சாத பெருமாளான சோழங்க தேவன் பொன்பரப்பினான் என்பவன் குமரப்பெருமாளுக்குச் சிவபெருமான் ஏரிக் கீழ்க்கடையில் நூறு குழி நிலத்தை அமுதுபடிக்காக விட்டமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவர்த்திகள் சிரி இராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 7வது
2. சேல நாட்டு அஞ்சாத பெருமாளான சோழங்க தேவர் பொந்
3. பரப்பினானேன் இந்த குமரப் பெருமாளுக்கு சிவப்பெருமாள் ஏரியில் கீழ்கடையில் கொளம்
4. உட்பட குழி நூறும் அமுதுபடிக்கு விட்டேந் இது மாற்றுவான் ஏழெச்சம் மறுவான்

எண் : 96

இடம் : ஊர் - காக்காவேரி வட்டம் - இராசிபுரம்
சிவபெருமான் கோவில் கருவறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1260

மொழி : தமிழ்

செய்தி : சேல நாட்டு இராசிபுரப்பற்றில் இருக்கும் பட்டாகர் தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகளாக இறையிலியாகத் துய்த்து வந்த நிலத்தில் பதினாலாம் ஆண்டு முதல் பயிர் விளைந்த நிலத்திற்குக் கடமையாகக் குழி ஒன்றுக்குக் கடமைக்கால் என்னும் அளவால் வரியாக நெல்லைப் பெற்றுக்கொள்ள ஒப்புதல் அளித்து ஓலை அனுப்பப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் கோனேரின்மை கொண்டான் சேல நாட்டு இராசிபுரப்பற்றில் இருக்கும் பட்டாகருக்கு தாங்கள்
2. இப்பற்றில் பதின்மூன்றாவதுவரையும் இறையிலியாக அனுபவித்துப் போந்த நிலத்தில் பதினாலாவது முதல் பயிரேறின நிலத்துக்குக் கடமைக்காலாலே குழி ஒன்றுக்கு வரியாக
3. வந்த நெல்லுக் கொள்ளச் சொன்னோம் இப்படிக்கு திருமுகப்படிக்கு இவ்வோலையை பிடிபாடகக் கொண்டு
4. சந்திராதித்தவரை அனுபவிக்க இவை விழப்பாதரய் எழுத்து கலி 4361 இவா காலிங்கராயர் எழுத்து

எண் : 97

இடம் : ஊர் - கார்குடி வட்டம் - திருச்செங்கோடு
கைலாயநாத சுவாமி கோவில் மண்டபத்தின் தெற்குப்புறச்சுவர்

அரசர் : ஒய்சாளர், வீரரமநாத தேவர்

காலம் : 10.03.1266

மொழி : தமிழ் க.ஆ.அ. 40 - 1913

செய்தி : முதன்மை அமைச்சராக விளங்கிய பக்க திக்காறச் சோமைய தெண்ணை நாயக்கருக்குப்பணி செய்த இராமன் சக்கரவர்த்தி என்பவர் திருக்கயிலாயநாயனார் கோவில் தேவகன்மிகளுக்கு ஊர்விலை பிரமாண இசைவுத்தீட்டு எழுதிக்கொடுத்து நிலம் விற்பனை செய்து கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸர்வ்வலோக ச்சக்கரவத்திகள் ஸ்ரீ வீ
2. ர ரமனாத தேவர்க்கு யாண்டு 11வது மீன நாயற்று பூர்வ ப
3. க்ஷத்துப் புதன்கிழமையும் திரதியையும் பெற்ற அசுவதி நாள் ஸ்வஸ்தி
4. ஸ்ரீ மனு மஹா பிரதானி பக்கதிக்காறச் சோமைய தெண்ணாயக்கர் காரி
5. யஞ் செய்வார்களில் சீராமன் சக்கரவத்தியேன் ஊர்விலை பிரமாண இசை
6. வுதீட்டு வடகரை கரிகால கன்ன வளநாட்டுத் திருக்காரி குடியான விக்க்ரம
7. சோழபுரத்து உடையார் ஸ்ரீ கையிலாசமுடைய நாயனார் கோயில் ஆ
8. திசண்டேசுவர் அருளால் தேவர்கன்மிகளுக்கு நான் விற்றுக் குடுத்த ஊராவ
9. து புத்தா ருடையாந் நம்புசெயன் பக்கலிலும் பேருருடையான் சக்க . . .

எண் : 98

இடம் : ஊர் - கார்குடி வட்டம் - திருச்செங்கோடு
கைலாயநாதர் கோவில் முன்மண்டபத்தின் தெற்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், மூன்றாம் சடையவர்மன் வீரன்

காலம் : 30.10.1318

மொழி : தமிழ் க.ஆ.அ. 38 - 1913

செய்தி : திருக்கயிலாயமுடைய நாயனார் கோவில் ஆதிசண்டேசுவரர் தேவகன்மி கோவில் கணக்கர்க்குக் கரிகால்சோழ வளநாட்டு நாட்டவர்கள் அழகியகூத்த நல்லூரைச் சர்வமானிய இறையிலியாகக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. அக்கோவில் திருமதின் அழிந்தமையாலும் கோவில் திருப்பணி தடைப்பட்டமையாலும் அப்பணியை நிறைவுசெய்தற் பொருட்டு அவ்விறையிலி அளிக்கப்பெற்றது. குலசேகர தேவரும் உடன்கூட்டமும் விசயாலய தேவரும் இக்கோவிலை மீட்கப்பல போர்களை நிகழ்த்தினர். அப்பொழுது தடைப்பட்டிருந்த சித்திரைத் திருநாளும் பூசைகளும் மீண்டும் தொடர அவ்விறையிலி அளிக்கப் பெற்றது.

கல்வெட்டு :

1. கோச்சட பன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வரபாண்டிய தேவர்க்கு
2. யாண்டு இருபத்திரண்டாவது விருச்சிக நாயற்று பூர்வ பக்ஷத்து பஞ்சமியும்
3. திங்கட்கிழமையும் பெற்ற உத்திராடதது நாள் வடகரை கரிகால சோழ வளநாட்டு நாட்டவரோம்
4. இன்னாட்டு திருக்காரி குடியான விக்கிரமசோழபுரதது உடையாா ஸ்ரீ கையிலா
5. சமுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர்கன்மி கோயிற் கா
6. . . . இன்னாட்டு ஊற்றக்கரையான அழகியகூத்த நல்லூ ர் நான்கெல்லைக்கு
7. நன்செய் புன்செய் காடு மேடு களதிடர் உட்பட நிலத்து உள்ளூர் நாயினார் தெ
8. . . . .
9. இவ்வூர் திருமாணிக்க தேவநான சித்திரமேழி தட்டான் குழமி படுத்த இதுக்கு இவன் இறையிலி
10. நீக்கி நீக்கியுள்ள நிலத்து புன்செயும் இவ்வூர் குளங்கள் முன்னாள் வேடு கடிந்த நாள் முதல்
11. இன்னாள் வரையும் உடைகதல்ப் பாழாய்க் காணியழிந்து கிடக்கயில் இக்குளங்கள் அடைத்து
12. கொண்டு இக்குளங்காலுள்ள நன்செயும் மாவடை ஆயவற்கம் பஞ்சுபிலி சந்து விக்கிரக பே
13. று தரியிறை தட்டார்பாட்டம் தட்டொலி செக்கிறை ஏரிவரி இனவரி இடைவரி குளவடை ஒழுக்கு
14. நீர்பாட்டம் ஆனைச்சாலை குதிரைப்பந்தி காணிக்கை காத்திகை பட்டை நாட்டு விநியோகமும்
15. மற்றுமுள்ளிட்ட அனைத்தாயங்களும் இன்னாயனார் திருக்கோயிலிலே பெருமாள் குலசேகர தேவர் பலமு
16. தலிகளும் உடன்கூட்டமும் விசையாலய தேவரும வளைந்த இதுக்கும் பல கலகங்களுக்கும் நாடாடக புகு

17. ந்து பரிகாளப்படுகையாலேஇன்னாயனார்க்கு சித்திரைத் திருநாளுக்கு அமுதுபடி சாத்துபடிக்கு நிசத நிமந்தங்களுக்கு
18. இத்திருக்கோயில் திருமதிள் அழிவு சோரவும் பல திருப்பணிகளுக்கும் தேவர்தானமாக இந்த ஊற்றகரையாந அ
19. ழகிய கூத்தலூர் சர்வநமசியமும் இறையிலியாக குடுத்து இவூர் சந்தியாதிவத் செல்லவும் கல்லிலும்
20. செம்பிலும் வெட்டிக்கொண்டு இவ்வூர் நத்தத்திலும் நான்கெல்லையிலும் திருச்சூலத்தாபனம் பண்ணிக் கொள்ளவும்
21. இவ்வூர் முதலடங்க இறையிலியாக குடுத்தோம் உடையார் ஸ்ரீ கையிலாசமுடைய நாயனார் கோயில்
22. ஆதசண்டேசுவர தேவர்கன்மி கோயிற் கணக்கற்க்கு கரிகால சோவ வளநாட்டு நாட்டவரம் இப்படிக்கு இ
23. வை புத்துாருடையான் கண்ணுடைப் பெருமாளான நம்புசெய்வான் எழுத்து இப்படிக்கு இவை புத்தூ ருடை
24. யான் திருச்சிராப்பள்ளி உடையாநான நம்புசெய்வான் எழுத்து இப்படிக்கு இவை பாச்சிலுடையான் திருப்
25. பஞ்சிலி உடையான் எழுத்து இப்படிக்கு இவை பாலையூருடையான் திருச்சிராப்பள்ளி உடையான் சமய
26. சேநாதிபதி எழுத்து இப்படிக்கு இவை நல்லூ ர் கிழவன் திருச்சிராபள்ளி உடையான் அரிந்தவன் விழுப்பரையன் எழுத்து
27. இப்படிக்கு இவை கரும்பனூ ர் கிழவன் சாத்தப்பிள்ளையான சேர்க கோன் எழுத்து இப்படிக்கு இவை ஆறனிநல்லூ
28. ருடையான் பெரியவன் எழுத்து இப்படிக்கு இவை நல்லூ ருடையான் திருமாணிக்க தேவன் எழுத்து
29. . . . .

எண் : 99

இடம் : ஊர் - கார்குடி வட்டம் - நாமக்கல்
திருக்கயிலாயநாதர் கோவில் மண்டபத் தெற்குப்புறச்சுவர்

அரசர் : வியநகரர், இம்மடி இராமச்சந்திர நாயக்கர்

காலம் : 27.02.1620

மொழி : தமிழ் க.ஆ.அ. 41 - 1913

செய்தி : கயிலாயநாத சுவாமி கோவில் ஆதிசண்டேசுவர தேவகன்மிகளுக்கு இம்மடி இராமச்சந்திர நாயக்கர் என்பவர் நான்கெல்லைகளை வகுத்து நிலத்ைதைக் கொடையாக அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1541 இதன்மேல் செல்லாநின்ற சித்தாத்தி வருஷம் பங்கு
2. னி மாதம் 1 தேதி திருக்காரிகுடியாற் கயிலாசமுடைய நயனர் கோயில் ஆதிசன்
3. டேசுர தேவரருளால் கன்மிகோயிற் கணக்கற்கு இம்முடி ராசச்சந்திர . . ரம்.

4. வாயாப் பத்தி நாராயணச் செட்டி தோப்பு கிணத்துக்குத் தெற்கு . . . ணிக்கு வடக்உ விட்டபடியாலே சகல ஆ
5. தாயமு மனுபவித்துக் கொள்ளவும்

எண் : 100

இடம் : ஊர் - கார்குடி வட்டம் - நாமக்கல்
கைலாயநாதர் கோவில் கருவறையின் முன்மண்டபம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 37 - 1913

செய்தி : காசிபொடி நாயக்கர் என்பவர் வைரவர் சிலையைப் பிரதிட்டை செய்து அனைத்துப் பூசைகளும் நடைமுறைப்படுத்தியமை.

கல்வெட்டு :

1. குரோதி வருஷம் ஆடி மாதம் 13 தேதி காசிபொ
2. டீ நாயக்கர் வயிரவனார்ப்
3. பிறதிட்டை பண்ணி விச்சார்
4. சகல பூசையு உண்டாக்கி நடத்தி விச்சார்

செய்தி : இரேவதி நட்சத்திரம் மட்டும் குறிப்பிடப்பெறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. திருக்காரி
3. குடி பிறந்த
4. நான் ரேவதி

எண் : 101

இடம் : ஊர் - குச்சிக்காடு வட்டம் - இராசிபுரம்
(வடுகம் முனியப்பம்பாளையம்)
வீரன் காட்டில் உள்ள பாறை

அரசர் : விசயநகரர், திருமலைநாயக்கர்

காலம் : 20.08.1646

மொழி : தமிழ்

செய்தி : இராசிபுர நாட்டிலிருந்த செண்பகராய கவுண்டன் பேரனும் நல்லதம்பி கவுண்டன் மகனுமான செண்பகராய கவுண்டன் என்பவர் தம்முடைய பெரியவர்க்கும் பெற்றோர்க்கும் பேறு உண்டாகும்பொருட்டு மதுரை சொக்கர் - மீனாட்சி

திருக்கோவிலில் நெய் விளக்கு நடத்திவரச் சின்னவடுகத்துப் புன்செய் நிலமும் பொருளும் கேனேரியப்பன் என்பவரிடத்தில் ஒப்படைத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்ரீ மது சாலிவாகன சகாற்த்தம் 1568 இதின்மேற் செல்லாநின்
2. ற விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 20 தேதி ஸ்ரீ மன்மத் திரையோதெசி குரவாரம் குரு . . . . . ணை
3. நாட்ஷெத்திரமும் பத்திர கரணமும் பெற்ற சுபயோகமும் பெற்ற
4. சுகனாள் ஸ்ரீமன் மகாமண்டலேசுரர் ராசாதிராச
5. பரமேசுரர் ஸ்ரீ வீரவேங்கட தேவ மகாராயரையநுவர் பெருங்கொண்டை சிங்காதனத்திலே இருந்து பிறு திவி
6. சாம்ராச்சியம் பண்ணுகையில் மதுரை மண்டல விசுவனாத நாயக்கர்
7. திருமலை னாயக்கரையனவர் ராச்சிய பரிபாலனம் பண்ணுகையில்
8. வயித்தியப்ப அய்யனவர்கல் ராச்சியம் ஆளுகயில் கொங்
9. கு மண்டலம் குன்றத்தூர். கூற்றெத்துக்குச்
10. செல்லும் ராசிபுரநாட்டில் செண்பகராய
11. கவுண்டர் பவுத்திரன் நல்லதம்பி கவுண்டர்
12. புத்திரன் செண்பகராய கவுண்டர் சொக்கநாத
13. சுவாமியாற்கு அறக்கட்டளை அபிஷேக நெய்வேத்திய தி
14. ருமஞ்சனத் திருமாலைக்கு அங்கய்க்கண்
15. ணம்மன் சந்நிதியில் வடபுறத்தில் தம்மிட
16. அறைக்கட்டளைக்கு நெய் விளக்குக்குக்
17. கோனேரியப்பன் பவுத்திரன் சொக்
18. கனாதன் புத்திரன் கோனேரியப்பன் வசமாக
19. அந்த அறைக்கட்டளை நடத்திவரச் சொல்லி கட்டளையிட்ட படியினாலே அதுக்குப்
செய்தி : சேலநாட்டு சேலமான இராசாச்சிரயச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் அழகப்பெருமாளுக்குப் பஞ்சந்தாங்கி ஏரி, பெரிய ஏரி ஆகிய ஏரிகளின் கீழ் இருந்த 345 குழி நிலத்தை வாங்கிக் கொடுத்ததைப் பற்றியது. பலவிடங்களில் கல்வெட்டுச் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள்தேவர் ப்ரதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற யுவஸம்வக்ஸ
2. ரத்து துலாநாயற்று பூர்வபக்ஷத்து த்ரையோதஸியும் புதன்கிழமையும் (பெற்ற) அஸ்வதி நாள் வீரே
3. சாழ மண்டலத்து செலநாட்டுச் சேலமான ராஜாஸ்ரயச் சதுர்வேதி மங்கலத்து ஸபை .
4. யோம் நாயினார் அழகப்பெருமாளுக்கு ஸ்ரீ சேனாபதிப் பெருவிலை ஆன நிலவிலை ப்ரமாணம் பண்
5. ணிக்குடுத்த பரிசாவது . . . . ரோம்
6. யாக ஆணிப்பொன்னுக்கு அராம/ர/வை . . . . . பொன்னைஞ் சில வறுக்கச் சி . சே (கா)
7. (ட்) டை யூர் திரவம்லநம்பி கினிவனமுடை யார் முன்பு . . . . . வோரணையுமறுத்து ஓலை போ.
8. . . . . . ள இவ்வூற் பஞ்சந்தாங்கி ஏரியில் மழவறைவை . . . . . ல் கிழக்கு இவனுதான பெரிய வட
9. சாத்தான்குண்டு தடி இரண்டு குழி 75ம் திருத்த . . . . யார் பக்கல் சாறோடியில் தடி ஒன்று
10. (இவ்வூற்) பெரியேரியில் நடுவிற் குமுழிவாய்க்காலு . . . . குழி 27ம் ஆக தடி 4 குழி 122 க்கு
11. . . . முகண்டி ஊர்ஆள் (வரி) த (ர) கு நல்ல போக்கு . . . . க்கு 30 ம் பெருமருதூர் ஆள்கொண்
12. . . . . கைய் அழகியான் போக்கும் பழவாறையில் தடி ஒன்று குழி 22க்கு . . . . . ர அப்பிள்ளா (ர்) போக்கு பருத்திகால் பிறிவு . . . . . .
13. . . . க்கு பணம் 12ம் திருந்த . . . திருவையாருடையார் போக்கு தடி . . . . ழக்குத்தெற் . . . .
14. (வா) ழிகல்லுக்கு மேற்கு தடி 1க்கு குழி . . . மணிமங்கலம் வணிக நாராயணர் போ . . . . யில் நடுவிற் குமிழி

15. . . . . . ல் கிழக்கு புட்டகன் தடி 2 குழி 50க்கு . . . . ஆக தடி 10 தனால் குழி 340 (5க்கு) . . . . ஹாற்று நாற்பத்தைஞ் . . . . . .
16. . . . இற்றைநாள் விற்றுக்குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த விலைப் பொருள் . . . . பண்டாரத்தில் வாங்
17. . . தென்னாயக்கர் திருவக்க (ளி) ல் செட் (டி) ய்ப்ப (ன்வ) சம் செல்வறுத்த 150ம் மேற்ப . . . . . ச்சுரத்துக்கு கழித்தபடி
18. ாிச் செலவறுத்த 120ம் ஆக 270 இப்பணம் இருநூ ற்று எழுபதுக்கும் இன்னில . . . . . விற்று பொருளுறக்
19. கொள்கையில் இன்னிலங்கள் திருநாமத்துக்காணி இறையிலி திருவிடை (யாட் மாக) சந்திராதித்தவரை (செல்வ)
20. தாக ஸ்ரீசேனாபதிப் பெருவிலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் ஸ . . . . அழகப்பெருமாளு (க்கு)
21. . . . . . . தேவப்பெருமாள் நம்பி எழுத்து உ இப்படிக்கு . . . . .
22. . . . . கோபுரநம்பி எழுத்து உ இ (ப்படி) . . . . . .
23. . . . . . எழுத்து உ . . . . ம . . . .
24. வாணபட்டன் எழுத்து . . . .

எண் : 150

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் வடக்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், முதலாம் மாறவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1226

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 161

செய்தி : பராக்கிரமப் பாண்டியப் பிரமாராயற்குச் குடிநீங்காக் காணியாக நூற்றைம்பது குழி நிலம் வழங்கப்பெற்றமை. கல்வெட்டின் ஒருபகுதி மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. . . . . . கோமாறபன்மரான திர (புவன) ச் சக்கரவத்திகள் ஸ்ரீ . . . . கு யாண்டு
2. . . . . . 10வது அற்பசிமாதம் முதற்திபதிநாள் சேலநாட்டுச் சேலமா . . . கலந்து (நா)
3. (ய) னார் அழகப்பெருமாள் கோயில் ஸ்ரீ ஸேனாபதி அழ்வார் . . . ரமுடையா
4. ர் பராக்கிற (ம) பாண்டியப் பிரமாதராயற்குக் குடிநீங்காத் திருவி . . . . வட்டிக்
5. குடுத்த பரிசாவது முன்னாள் சிங்கப தெண்ணாயக்கர் கீழ்கரை . . . யிறக்கை
6. யில் வர தம்முடைய பெற்கு முன்னின்று செலவறாம்ல போ . . . இபுகுப்பெரி
7. (யஏ) ரி பட்நதாங்கியில் இவர் நிலமான தடி நாலு குழி நூ ற்றிரு பத்திரண் . . . . .ப்பிளர் தடி ஒ
8. ன்று குழி 30 (1) ஆகத் தடி 5ல் குழி 150 இக்குழி 150ம் நாயனார் அழகப் பெருமாளுக்கு திருநாமத்துக்கா
9. . . . . பாண் . . . .
10. . . . . படுகையில் இரண்டு. . . . .
11. . . . . வர் அனுபவி. . . . .

எண் : 151

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் கருவறை வாசல் போதிகை

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1274

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 157

செய்தி : சேலத்தைச் சேர்ந்த கண்மாளரில் அண்ணாமலைத்தட்டான் சூரியனான நூற்றெண்மத்தட்டான் ஆகியோர் செய்வித்த போதிகை.

கல்வெட்டு :

1. கோச்சடபர்மரான திருபு (வ) னச்சக்
2. கரவத்திகள் சிறிசுந்தரபாண்டி
3. யதேவற்கு 24வது சேலத்தில் க
4. ண்மாளரில் அண்ணாமலைத்தட்டா
5. ன் சூரிய (ன்) னான நூ ற்றெ (ண்) மத்தாட்
6. டான் செ (வ்) வித்த போதிகை

எண் : 152

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் கருவறையின் நுழைவாயில்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவாமன் சுந்தரன்

காலம் : கி.பி. 1274

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 158

செய்தி : வெள்ளப்பநாட்டுச் சந்திரக்கோன் செய்வித்துக் கொடுத்த போதிகை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சுந்தர
2. பாண்டிய தே
3. வற்கு யாண்டு
4. 24வது வெள்ள
5. ப்பநாட்டு சந்திரன்
6. கோன் செவித்த போ
7. திகை

எண் : 153

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் பெருமண்டபத்தூண்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1274

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 155

செய்தி : அழகப்பெருமாள் இரவீந்திரநம்பி என்பவரால் கொடையாக அமைக்கப் பெற்ற தூண்

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ சுன்தர (பா)
2. ண்டிய தே (வற்கு)
3. யாண்டு 24 பாரா
4. வாரி அழகப் (பெரு)
5. மாள் இர (வீந்)
6. திரநம்பி (செவித்)
7. த தூ ண்

எண் : 154

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் பெருமண்டபத்தூண்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1274

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 156

செய்தி : மலையன் என்ற தொடக்கப் பெயரை உடையவன் செய்வித்த தூண். கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ சுன்தர ப
2.. ரண்டிய தேவற்
3. க்கு யாண்டு (24)
4. மலையன் . . . . .
5. யான . . . .
6. வரிபா . . . .

எண் : 155

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர்கோவிலில் உள்ள தூண்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1276

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 151

செய்தி : சேலமான இராசாச்சிரயச் சதுர்வேதி மங்கலத்து வெள்ளாள வள்ளி மருதமுடையான் நிலையிட்டான் சொக்கி கொடுத்த தூண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ ஸு
2.. ந்தரபாண்டிய
3. தேவற்க்கு யாண்
4. டு 26 வது சேல
5. மான இராஜா
6. ஸ்ரிய சதுர்வேதி
7. மங்கலத்து வெள்
8. ளாள வள்ளிமருத
9. முடையான் நிலை
10. யிட்டான் சொக்கிற
11. ர்மம் இக்கால்

எண் : 156

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் நிருத்த மண்டபத்தூண்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1276

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 143

செய்தி : சேலமான இராசாச்சிரயச் சதுர்வேதி மங்கலத்துக் காசிபன்நம்பிப் பிள்ளை எடுத்தகையழகியானான சுந்தரபாண்டிய பிரமராயன் என்பவரால் கொடையாக அமைக்கப்பெற்ற தூண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ ஸுந்ரபாண்
2.. டிய தேவற்க்கு யாண்
3. டு 26வது சேலம
4. ான இராஜாவ்ரயவ

5. துர்வேதி மங்கலத்து
6. காஸிபபநம்பிப்பி
7. ள்ளை எடுத்தகைபழ
8. கியானான ஸுந்தர பாண்
9. டிய ப்ரஹமராயன் த
10. ர்ம்மம் இக்கால்

எண் : 157

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் நிருத்த மண்டபத்திலுள்ள தூண்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1276

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 144

செய்தி : சேலமான இராசாச்சிரயச் சதுர்வேதி மங்கலத்து வேளாளன் வள்ளி மருதமுடையான் சாத்தான் மானேந்திய கையன் என்பவரால் கொடையாக அமைக்கப்பெற்ற தூண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ ஸுந்தர பாண்
2.. டிய தேவற்கு யாண்
3. டு 26வது சேலம
4. ான இராஜாஸ்ரய க
5. துர்வேதி மங்கலத்து
6. வெள்ளாளன் வள்ளி
7. மருதமுடையான் சா
8. த்தன் மானேந்திய
9. கையன் தர்ம்மம் இக்
10. கால் உ

எண் : 158

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர் கோவிலின் வெளியிலுள்ள குத்துக்கல்

அரசர் : பாண்டியன், வீரபாண்டியன்

காலம் : கி.பி. 1276

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 152

செய்தி : அழகிய சொக்கனாரான வீரபாண்டியதேவனின் அலுவலர்களில் கண்ணகனான வழுதிநாராயணதேவன் சேலநாட்டுச் சேலத்து உடையார் கிளிவண்ணமுடையார்

கோவிலில் சித்திரைத் திங்களில் திருமதில், திருமடைவிளாகம், திருக்குளம் முதலியவற்றையும் தென்திசை வாசலில் மடமும் எடுப்பித்தார். இம்மடத்தில் பணி செய்பவர்களுக்காகவும் மடத்தின் பணிக்காகவும் இக்கோவிலின் தேவதானமாக மறவன் ஏரியின்கீழ் முன்னூற்றைம்பது குழி நிலமும் கொடையாக அளிக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. அழகிய சொக்க
2. னரான வீரபா
3. ண்டிய தேவற்
4. க்கு யாண்டு 10வது
5. இவர் முதலிகளில்
6. கண்ணகனான வ
7. முதிநாராயண
8. தேவனேன் சே
9. லநாட்டு சேலத்
10. து உடையார் கிளி
11. வண்ணமுடைய நாய
12. னார் கோயில் இவ்வா
13. ட்டை சித்திரை மா
14. தத்து திருமதிளும்
15. வி (ரி) ய இட்டும் திரும
16. டைவிளாகம் கண்
17. டும் திருவெடுத்துக்
18. கட்டி கண்டும் திருக்கு
19. ளமும் வ (கு) த்து
20. டும் திருவாசலில் தெ
21. ன் சிறகில் மாகேசுரர்
22. . . . நாயனாரை பூசிக்
23. குமவர்களுக்கு ம (ட)
24. ங் கண்டும் இம்மடம்
25. நோக்கும்
26. திரு (ம்) மேனிக்
27. கு இந்நாயனார்
28. தேவதானமா
29. ன மறவந் ஏரி (யி)
30. ல் குடிநீங்கா தே
31. வதானத்தில்
32. குழி 150 (ம்ப)
33. றம்பு பூதான கர
34. தானமாக கொ
35. ண்டு இட்ட குழி
36. 200 ஆகக்குழி (மு)
37. ன்னூற்று ஐம்ப
38. துங் கொண்
39. டு இம்மடம்
40. குத்துமெ
41. ழுகி திருவிளக்கு
42. (ம்) மிட்டு இரு
43. க்கும் அவர்களு
44. க்கு இக்கல் வெ
45. ட்டின்படி காணி
46. யாக கடவதாக
47. வும் இத்தன்மம்
48. நோக்கினவ
49. ன் திருவடி இரண்
50. டு (ம்)
51. மேலே இதுப (ந்மா)
52. கேசுரர் இரக்ஷை

வகுத்து - கட்டி

எண் : 159

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் மகாமண்டபத்தூண்

அரசர் : பாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1279

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 153

செய்தி : வள்ளிமருதமுடையான் அழகர் என்பவரால் கொடையாக அளிக்கப்பெற்ற தூண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ சுன்தர
2.. பாண்டிய தேவ (ர்)
3. க்கு யாண்டு 29
4. வள்ள . . . . தம்முை
5. டைய . . . . .த்தர்
6. அழக (ர் தர்) மம் இ
7. த்தூண்

எண் : 160

வட்டம் - சேலம்

இடம் : ஊர் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் மூலை அறையின் அருகிலுள்ள அடித்தூண் பகுதி

அரசர் : சுந்தரபாண்டிய தேவர்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : சுந்தர பாண்டியத் தேவர் ஸ்ரீ இராஜாசீரிய சதுர்வேதி மங்கலம் என்பது தெளிவாகத் தெரிகிறது. கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ ஸுந்தரப
2.. ாண்டிய தேவற் ய
3. ாண்டு 20 வது
4. . . . . லம (ான) ஸ்ரீ ராஜ
5. ாஸ்ர்ய சதுர்வேதி ம
6. ங்கல . . . .
7. க் அசற . . . .
8. மாறு . . . .
9. கொள் யிவந் . . . . . .

எண் : 161

வட்டம் - சேலம்

இடம் : ஊர் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் கருவறை வாயில் வலப்புறம்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

தெ.இ.க.தொ 4 - 140

மொழி : தமிழ்

செய்தி : கிளிவண்மை தேவரான சுகவனேசுவரருக்கு ஸ்ரீ அமுதனார் பெண் தலைக்கமைார் ஏகவீரன் கோலக்கப்பாவை என்பவளுக்காகவும் இரண்டு திருநந்தா விளக்குகள் எரித்தற்பொருட்டு ஐந்து கழஞ்சுப் பொன் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2.. இயாண்டு ஐஞ்
3. சாவது வாடன் . . . தெ . .
4. . . . . . . யிரனுக் (கு)
5. த்தேவியார் (ஸ்ரீ அ)
6. முதனார் கிளிவண்
7. மை தேவர்க்கு நெ
8. ந்தாவிளக்கொ
9 ன்றுக்கு வைத்
10. த பொன் மை
11. ங்கழஞ்சு தேவி
12. யார் ஸ்ரீஅ (மு) தினா
13. ர் தமக்கு வைத்த வி
14. ளக்கொன்று ஏகவீ
15. ரன் கோ (ல)க்கப்பாவை
16. க்கு வைத்த விளக்
17. கொன்று பன்மாஹே
18. ஸ்வரர் ரக்ஷை

எண் : 162

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் நிருத்த மண்டபத்தூண்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 145

செய்தி : குளத்துடையான் பூமன் நம்பி என்பவரால் கொடையாக அளிக்கப் பெற்ற தூண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ குளத்து
2.. டையாந் பூமன்
3. நம்பி தன்மம் இ
4. த்தூ ண்

எண் : 163

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் நிருத்த மண்டபத்தில் உள்ள தூ ண்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 142

செய்தி : மலைமண்டபத்து மலையாளரில் தாவைக்குறிச்சி சாத்தன் திறையன் என்பவனால் கொடையாக அமைக்கப்பெற்ற தூண்.

கல்வெட்டு :

1. மலாமண்டலத்து ம
2.. லையாளரில் தா
3. வைக்குறிச்சி சாத்த
4. ந் திறை (ய)ந் தந்ம (ம்) இ
5. க்கால்

எண் : 164

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சுகவனேசுவரர் கோவில் கல் சன்னல் கீழ்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 146

செய்தி : கஞ்சமலைப் பெரியபிள்ளை ஆழ்வார் மகன் சிவபெருமாள் என்பவரால் கொடையாக அளிக்கபெற்ற தூ ண்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இத்திருச்சாலகம்
2.. கஞ்சமலைப் பெரியபிள்ளை
3. ஆழ்வார் மகந் சிறுப்பெ
4. ருமாள் (தந்மம்)

சாலகம் - சன்னல்

எண் : 165

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
சௌந்தராசப் பெருமாள் கோவில் கருவறையைச் சுற்றியுள்ள பகுதி.

அரசர் : . . . .

காலம் : கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 163

செய்தி : கோவில் பட்டர்கள் நூற்று அறுபதின்மர்க்குத் தண்டநாயக்கன் என்பவர் தானப்பிரமாணம் செய்து கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மனுமஹா ப்ரதான ராகுத்தராய . . . சாதேவதண்ட னாயக்கனேன் செ . . . . கரநயற்று அபரபக்ஷத்து துவ..தஸியு . . . யும் பெற்ற கெட் . . . ங்கலத்து பட்டன் நூ ற்று அறுபதின்மற்கும் தானப்பிரமாணம்

பண்ணிக்குடுத்த பரிசாவது சேலத்து ஆற்றுக்கு கிழக்கு தங்களுக்கு குடிஇருப்பு நத்தத்துக்கு கீழ்பாற்கெல்லை கிடாரத்தரையன் பட்டிக் கீழை போ . . . .

2. ணிக் குடுத்த இன்னாட்டு முதலியப்பள்ளியும் சேந்தமங்கலமும் இவ்வூர்களில் நன்செ . . . எப்பட்ட நிலங்களும் இவ்வகரத்துக்குட் . . . றையிலியாக உத . . . மரங்களும் கீழ்நோக்கின கிணறுகளும் மற்றும் எப்பேர்ப்பட்ட உரிமைகளும் அனைத்தாயங்களும் உள்ப்பட ந (ம்) அப்பனுக்கும் இராசாவுக்கும் நாட்டுக்கும் னன்றாக இத்தை உத்தராய (ண) த் திலே இக்குடியிருப்பும் இவ்வூர்களும் . .

3. முதல் சந்திராதித்தவரையும் அனுபவிப்பதாக இத்தான ப்ரமாணம் பண்ணி . . பண்ணித் தந்தோம் இப்படிக்கு கல்லிலு . . . வெட்டிக் கொண் . . . யமாச்சிய தெண்ட நாயக்கனேன் எழுத்து ஸ்ரீகோநாத இது ஒப்பம் இத்தன்மம் ரக்ஷித்தவன் ஸ்ரீ பாதம் இரண்டும் என் தலைமேலே ஸ்வஸ்தி ஸ்ரீ இத்தை நாளிலே இச்சேலநாடுடையப் பொன் பரப்பி . . . . . .

4. ர்களுக்கு முன்புள்ள அணைகளும் கால்களும் ஏரிகளும் குட்டைகளும் மெ . . . . . ங்கலமும் இவ்வூர்களில் நன்செய் . . . நாற்பாற்கெல்லை . . . ப்பேற்பட்ட உரிமைகளும் இவ்வகரத்துக்கு குடிஇருப்பதாகக் குடுத்த நத்தத்துக்கு கீழ் பாற்கெல்லை கிடார்த்தரையன்பட்டி கீழைபொழிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை பஞ்சந்தாங்கி *(க) ட்டலுக்கு . . . . . .

* கட்டளை

ண : 166

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் கிழக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 159

செய்தி : பொன்னக்கூத்த முத்தரையன் செல்லன் செய்வித்த தூ ண். கல்வெட்டு முழுமை பெறவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வயிர
2.. வநார் வாசலில்
3. பேக்கடிகளில்
4. பொன்னக்கூத்த மு (த்)
5. தரையன் செல்லன்
6. தன் (ம) ம் செய் (வித்த)
7. தூ ண் பொவிச்சுரத்தா
8. ணனும் வுவியையா

எண் : 167

இடம் : ஊர் - சேலம் வட்டம் - சேலம்
கோட்டை சௌந்தராசப் பெருமாள் கோவில் கருவறை வாசல் போதிகை

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 4 - 162

செய்தி : சீரங்க இராசர் திருமலைநாதர் சுவர் அமைத்த செய்தி

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ காஸ்யபன் நம்பி
2.. பிள்ளை வடகோபுரநம்பி
3. சீரங்க இராசர் திருமலைநாத (ந்)
4. தந்மம் சுவர்படை

எண் : 168

இடம் : ஊர் - டேனிசு பேட்டை வட்டம் - ஓமலூர்
இராமமூர்த்தி நகர் வழியில் கேத்த நாயக்கன் புதூர் - பெரிய சக்கிலிச்சி ஏரி மதகருகில் உள்ள வட்டெழுத்து

அரசர் : . . . .

காலம் : கி.பி. 8 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : ஸ்ரீ கிடங்கல் புலியார் மகன் நல்லி என்பான் மதகு வைத்துக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்ரீ கிடங்கல் புலியார் ம
2.. கனல்லி ஒட்டை கண்டது

எண் : 169

இடம் : ஊர் - தசவிளக்கு வட்டம் - ஓமலூர்
சிவன் கோவில் குமுதப்படை.

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1291

மொழி : தமிழ்

செய்தி : பூவாணிய நாட்டுத் திசைவிளக்குக் கிராமத்தில் வெள்ளாளன் கண்ணந்தை குலத்துப் பெருமா கவுண்டர் என்பவர் உலகீஸ்வரமுடைய தம்பிரானாற்குத் திருமடைவளாகம் ஏற்படுத்தி ஏரியில் நன்செய் நிலத்தில் உலகீஸ்வரர்க்கு இருபங்கும் செல்வராயர்க்கு ஒரு பங்கும் பத்திரகாளிக்கு அரைப்பங்கும் விநாயகருக்கு அரைப்பங்கும் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடை பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு ஆண்டு 14வது பூவாணிய நாட்டு திசை விளக்கில் வெள்ளாளன் கண்ணந்தைகளில் உடையர்க் கவிண்டர் பூமநாயன் செங்களனியார் திருக்கை வேலர் காளியப்பர் பெருமாள் திருமலயப்பன் பெருமா கவிண்டர் உலகீஸ்வரமுடைய தம்பிரானாற்கு திருமடை
2. விளாகம் வச்சிபமாவது இம்மடை விளக்கம் மத்தத்துக்கு 12ம் ஏரி சடையர்முத்து நஞ்சை உலகீஸ்வரமுடைய தம்பிரானாற்கு இரண்டு பங்கும் சென்னராயனுக்கு ஒரு பங்கும் பத்திராகாளிக்கு அரைப்பங்கும் கண்ணந்தை விளாயகனுக்கு (அரைப்) பங்கும் நடத்த கடவதாகவுய இதுக்கு அகுதம் பண்ணினவன் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ர பாவத்திலே போவான்

எண் : 170

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் மண்டப வடக்குப்புறச்சுவர்

அரசர் : சோழன், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1183

மொழி : தமிழ் க.ஆ.அ. 461 - 1913

செய்தி : குலோத்துங்க சோழ வாணகோவரையர் திருவேகம்பமுடைய நாயனார்க்கு பூசைக்கும், திருப்பணிக்கும், திருநாள் செலவுக்கும் நன்செய் நிலமும் புன்செய் நிலமும் கொடையாக அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 5வது குலோத்துங்க சோழ வாணகோவரையனேன் மலா
2. டாகிய ஜநனாத வளநாட்டு ஆற்றூ ர் கூற்றத்து மேல்கங்கைபாடி நாட்டில் தடாவூர் உடையார் திருவேகம்பமுடைய நாயிநார்கு
3. இவூர் வாரபற்று பெரியேரி நஞ்செய் நிலம்த் . . . இரைபுஞ்சை கரை புஞ்சை பொட்டை புஞ்சை ஆற்றுக்கு வடக்கு நிலம் 45லிம் இநிலத் . . . .
4. . . .த்திகைப் பச்சை மாதரிசாதை ஆள்அமஞ்சி அனைத்தாயங்களும் இருந்து இன்நாயநாற்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும் திருநாள் அழிவுக்கும் சந்தி
5. ராதித்தவரையும் முதல்லடங்க இறையிலியாக குடுத்தோம் இப்படிக்கு குலோத்துங்க சோழ வாணகோவரையன் எழுத்து
6. . . . . . . எதிரிலி சோழ வேளாளர் ஸ்ரீ மாகேசுவரர் ரகைஷ

எண் : 171

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் மண்டப வடக்குப்புறச்சுவர்

அரசர் : சோழன், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1187

மொழி : தமிழ் க.ஆ.அ 462 - 1913

செய்தி : குலோத்துங்க சோழ வாணகோவரையன் திருவேகம்பமுடைய நாயனார்க்குத் தேவதான இறையிலியாக எல்லை வரையறுத்துப் பூசைக்கும் திருநாள் செலவிற்கும் திருப்பணிக்கும் நிலம் அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விசயராசேந்திர சோழ தேவற்கு யாண்டு 9வது குலோத்துங்க சோழ வாணகோவரையனேன் திடாவூர் உடையார் திரு
2. வேகம்பமுடையநாற்கு தேவதாந இறையிலியாக யிராசகேசரி நாட்டு பரிக்ஷுதா . . .நத்தமு இவூர்களில் நான்கெல்லை
3. க்குள்பட்ட . . . மும் ஆளமஞ்சு உட்பட சந்திராதித்தவரையும் தேவ
4. தான இறையில்லியாக இந்நாயனார்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும் திருநாளழிவுக்குங் குடுத்தோம் இப்படிக்கு குலோ
5. த்துங்க சோழ வாணகோவரையன் எழுத்து இவை எதிரி சோழ வேளார்

எண் : 172

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் தெற்குப்புறச்சுவர்

அரசர் : சோழன், மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : கி.பி. 1205

மொழி : தமிழ் க.ஆ.அ 458 - 1913

செய்தி : திருவேகம்பமுடைய நாயனார் கோவில் திருப்பணியை அக்கோவில் மாகேசுவரரும் கண்காணி ஆண்டாரும் தேவகன்மிகளும் கணக்கரும் செய்து முடித்தனர். இத் திருப்பணிக்காக முன்னாள் கோவிலுக்குக் கொடையாக அளிக்கப் பெற்றிருந்த திருவாபரணம் உள்ளிட்ட பொன்னும் அரசனால் கொடையாக அளித்த பொன்னும் சேர்த்து முப்பத்து நாற்கழஞ்சு மஞ்சாடி இரண்டு மா அளவு அளிக்கப்பெற்றது. அதில் ஒரு பகுதி திருப்பணிக்கும் பிறிதொரு பகுதி திருமண்டபம் கட்டுவதற்கும் செலவிடப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவற்திகள் மதுரையு பாண்டி
2. யனை முடித்தலையும் கொண்டருளின குலோத்துங்க சோழ தே

3. தவற்க்கு யாண்டு 27 மிலாடாகிய ஜனனாத வளநாட்டு
4. ஆற்றூர் கூற்றத்து ய்யல் கங்கப்பாடியான தடாவூர் உடையார் திருவைகம்பமுடை
5. ய நாயநார் கோயில் திருக்கற்றளி திப்பணிக்கு யின்னாயநார் திருவாபரணம் மாந
6. பட்டம் முன்னாளில் மிதாக்கண் பட்டம் முந்நாளில் குலோத்துங்க கோவலராய் இட்ட பட்டம்
7. இரண்டிநால் காசிடை பொன் எண்கழஞ்சே முக்காலே யரைக்காலும் மாற்று ஆணிக்கீழ் எ
8. ட்டும் சிறுபுலி வேளார் சோழியதரையர் உள்ளிட்டார் பலரு இட்ட பீடவாரிக்கர்வழி அரை
9. க்காலு கீழ்நாள் மில சில்லுருவாக பொன் காசிடை ஐங்கழஞ்செய் முக்காலே முப்பது மாவும்
10. மாற்று ஆணிக்கீழ் ஏழரை ஆக பொற் பதின்நார் கழஞ்சே முக்காலே மஞ்சாடியு மிரண்டு மாவும் நா
11. யநார் இட்ட பட்டம் ஒன்றிநால் கல்லிரை பொற் கழஞ்சும் நம் பிராட்டியாரில் இலைய நம்பிராட்டி
12. யார் இட்டபட்டம் க னாலிடை பொன் பத்தும் ஆகப் பொன் முப்பத்து நார் கழஞ்சே மஞ்சாடியும் இரண்
13. டு மா இதில்
14. . . . டை பொன் பதினாற் கழஞ்சே முக்காலே பத்து மாவும் திருக்கற்றிளி
15. இட்டு மின்பு திருமண்டபத்துக்கு கல்லிடை பொன் இருபதின் கழஞ்சும் இ
16. ட்டு மா இதில்
17. க் கண்காணி ஆண்டார் . . . வருடையான் பெறுமான் சிவதவநப் பெ
18. ருமாளாந சிவனீக்கிநியாநப் பெருமாளாரும் இக்கோயிலில் தேவகன்மி கோ
19. யில் கணக்கனும் இக்கோயில்லில் தாநத்தாரும் யிப்போந்திட்டு இதிருப்ப
20. ணி செய்வித்தோம்.

எண் : 173

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் தெற்குப்புறச்சுவர்

அரசர் : சோழன், மூன்றாம் குலோத்துஙகன்

காலம் : கி.பி. 1188

மொழி : தமிழ் க.ஆ.அ 457 - 1913

செய்தி : திருவேகம்பமுடைய நாயனார் கோவிலுக்கும் குன்றமெறிந்த பெருமாள் கோவிலுக்கும் திருவமுது படைக்கவும் திருப்பணி செய்யவும் நன்செய் புன்செய் நிலத்தைத் தேவதான இறையிலியாக அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விஜயராசேந்திர தேவற்கு 10ஆவது முதல் திருவேகம்பமுடையார்க்கும் குன்ற

2. மெறிந்த பெருமாளுக்கும் இளைஐய்யர் பொது அனுபோகமாய் வந்த நஞ்செய் புஞ்செயும் மாவ
3. டை மரவடையும் திருவமுது திருப்பணிக்கு இவ்வாண்டு முதல் தேவதான இறையிலியாக
4. க் கல்வெட்டிக் குடுத்தோம் இது ஸ்ரீ மாஹெஸ்வரர் ரக்ஷை

எண் : 174

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் வடக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 460 - 1913

செய்தி : உலகங்காத்த வாணகோவரையன் என்பவர் பெருக்காளப்பரையன் பக்கம் அழகியானுக்கு ஆற்றூ ர் நாட்டில் எல்லை வரையறுத்து ஐந்நூறு குழி நன்செய் நிலமும் இரண்டு குழி புன்செய் நிலமும் காணியாகக் கொடுத்து அதை விலைக்கு விற்கவும் அடகு வைக்கவும் உரிமை அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ மகதேசன் உலகங்கா
2. த்த வாணகோவரையன் பெருக்காளப்ப
3. ரையன் பக்கம் அழகியானுக்கு ஆற்றூ ர்
4. நாட்டில் தடாவூர் இருபதாவது ஆவ
5. ணி மாதம் முதல் இவ்வூரில் வாரப்பற்றி
6. ல் நன்செய் நிலத்துக்கு கீழ் பார்க்கெ
7. ல்லை கண்ணி வாய்க்காலுக்கு மேக்கு
8. ம் தென்பார்க் கெல்லைக்கு . . . . . பற்
9. றுக்கு கிணறு உட்பட வடக்கும் மேர்பா
10. க் கெல்லை பெரிய மதகு வாய்க்காலக்கு
11. கிழக்கும் வடபாக்கெல்லை தேவதான வாய்
12. க்காலுக்கு தெற்கு இன்னான்கெல்லைகுட்
13. பட்ட நன்செய் குழி அஞ்ஞூறு புன வாவழி
14. க்கு மேற்கு ஏறுகால் புன்செய் குழி இரண்டு
15. ம் சந்திராதித்தவரையும் காணி
16. யாக விலையும் ஒற்றியும் செல்வதா
17. கவும் சொன்னோம் இப்படி செல்வ
18. தே இவை சிங்களராயன் எழுத்க ாாண்டு
19. 20 ள் 57 நாள்

எண் : 175

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் வடக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 459 - 1913

செய்தி : திருவேகம்பமுடைய நாயனார் கோவில் தானத்தாருக்குத் தேவதான இறையிலியாக அளிக்கப்பெற்றிருந்த நிலம் அளிக்கப்பெற்ற நாளிலிருந்து பாழாகக் கிடந்தது. பின்னர்ப் பதினேழாம் ஆண்டில் அக்கோவிலுக்குத் தேவதான இறையிலியாக ஏழாயிரம் குழி நன்செய் நிலமும் மற்றுமிருந்த புன்செய் நிலமும் அளிக்கப்பெற்றது. அந்நிலத்தைத் திருத்திப் பயிர் செய்து நீர் பாய்த்துக் கொள்ளவும் உரிமை வழங்கப்பெற்றது. அவ் வேளாண்மை வருவாயைக் கொண்டு கோவில் திருப்பணிக்கும் திருநாள் விழாவிற்கும் முதலீடாகச் சேர்க்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ அருளிச்செயல் தடாவூரில் உடையார் திரவேகம்பமுடையார் கோயில்த் தானத்தார்க்கு இ
2. வ்வூர் வெளியில் நின்ற பெருமானேன் தலகால்வழி காணி பற்றான நிலம் அனைத்தாண்டும் பாழாய் காடெழுந்து கி
3. டக்கயில் ப்தினேழாவது வைகாசி மாதம் முதல் இன்நாயனார்க் குடி நீங்கா தேவதான இறையிலியாக இட்ட நிலத்துக் கெல்லை ய
4. ாவது கீழெல்லை ஆற்றுக்கு மேற்கும் தென்நெல்லை ஒடைக்கும் வாரப்பற்றுக்கு வடக்கும் மேல் எல்லை இன்நாயனார் பழ
5. ன்தேவதான இறையிலிக்கு கிழக்கும் வடவெல்லை ஆற்றுக்குத் தெற்க்கும் இன்னான்க் கெல்லைக் குட்பட்ட நன்செய் கு
6. ழி ஏழாயிரமும் நீக்கி உள்ள புன்செயும் குடிநீங்கா தேவதான இறையிலியாக தன்தோம் இன்நிலம் கை
7. கொண்டு வெட்டித் திருத்திப் பயிற் செய்யவும் பயிற் செய்யுமிடத்து கால் தாம்புமடையால் நீர் பாயவும் கால் தே
8. வை அணைத்தேவை செய்யுமளவில் பயிர்ரேறின நிலவிழுக்காட்டிலே தேவை செய்யவும் இப்படிக்கு பயிற்ச் செய்
9. வித்துக்கொண்டு இன்நாயனார்க்கு பூசைக்கும் திருப்பணிக்கும் திருநாளழிவுக்கும் உடலாகப் பொன்வரி உள்ளிட்ட அனைத்
10. தாயமும் உட்பட இறையிலியாக கொண்டு சந்திராதித்தவரையும் செல்க இப்படிக்கு இவை பாண்டி மண்
11. டலத்து முத்தூர்க் கூற்றத்து கப்பலூரான உலகளந்த சோழ நல்லூர் ஆதித்தன் கணவதி ஆழ்வானான வாணதராய
12. னெழுத்து . . . . துல்யம் . . . . காலை . . . . இது கங்கனாடாழ்வான் ஆவான் ஆளாக . . . .

எண் : 176

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் தெற்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 456 - 1913

செய்தி : திருவேகம்பமுடைய நாயனார் கோவிலுக்குத் தேவதான இறையிலியாக வீரசோழ நல்லூ ரில் ஏரிநீர்ப் பாய்ந்த ஏந்தல் நிலமும் ஏந்தல் சூழ்ந்த புன்செய் நிலமும் அனைத்து வரிகளின் உரிமையோடு விலாடராயர் என்பவரும் புரவரியாரும் ஏற்று நடத்த அளிக்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விலாடராயரும் புரவரியாரும் செய்யக் கடவபடி திடாவூர் உடையார் திருவேகம்பமு
2. டைய நாயனார்க்கு வீரசோழ நல்லூ ரில் பெரியேரி நீர் கோவைக்கு மேற்கு உடை
3. குளமர்ன வீரமாத்தன் ஏந்தலும் இவ்வேந்தல் சூழ்ந்த புன்செயும பொன்வரி
4. காசாயம் காத்திகைப் பச்சை மாதிருசாந்தி ஊசிவாசி நல்லெருது நற்பசு உள்ளிட்ட அனை
5. த்தாயங்களும் ஆளமைஞ்சி தேவையும் உள்ப்பட ஒன்பதாவது முதல் சந்திராதித்தவரையும் தே
6. வதான இறையிலியாகக் குடுத்தோம் இப்படி கணக்கில் நிறுத்திக் குடுப்பதே இவை தாஇலு நல்ல
7. பெருமாள் எழுத்து இவை விழுப்பாதராயன் எழுத்து ஸ்ரீ மாகேசுவர ரக்ஷை

எண் : 177

இடம் : ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் வடக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 463 - 1913

செய்தி : திருவேகம்பமுடைய நாயனார் கோவிலுக்குத் தேவதான இறையிலியாக ஆத்தூர்க் கூற்ற மேல்கங்கபாடியான புத்தூ ரில் நான்கெல்லை வரையறுக்கப்பெற்று அனைத்து வரிகளும் நீக்கி நிலம் அளிக்கப்பெற்றது. அக்கோவிலின் பூசைக்கும் திருப்பணிக்கும் உரிமையாக்கி விலாடராயரும் புரவரியாரும் அக்கொடையை ஏற்று நடத்த உரிமை வழங்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ விலாடராயரும் புரவர்யரும் செய கடவபடி தடாவூர் உடையாா திருவேகம்பமுடைய நாயனார்க்கு
2. ஆற்றூர்க் கூற்றத்து மேல் கங்கபாடி ஆன புத்தூருக்கு வடபாக்கெல்லைக்கு பெருவழிக்கு தெற்க்கு நான்கெல்லைக்கு உட்பட்ட நிலம் பூசைக்கும் திருப்பணிக்கும்
3. அனைத்தாயங்களும் இழக்க ஏழாவது முதல் பூசைக்கும் திருப்பணிக்கும் சந்திராதித்தவரையும் தேவதாந இறையிலி ஆக
4. குடுத்தோம் இப்படிக்கு கல்வெட்டிலும் நிறுக்கிக் குடுப்பதே இவை தாயிலு னல்ல பெருமாள் எழுத்து இவை விழுப்பாதராயன் எழுத்து ஸ்ரீ மாஹேஸ்வரர் ரக்ஷை

எண் : 178

இடம் . ஊர் - தடாவூர் வட்டம் - ஆத்தூர்
ஏகாம்பரநாதசுவாமி கோவில் கருவறை தீர்த்தநீர் வெளிவரும் கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ 464 - 1913

செய்தி : வாணியன் காவன் கூத்தாண்டான் கருவறை திருமஞ்சனத் தீர்த்த நீர் விழும் தொட்டியை அமைத்துக் கொடுத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இந்நின்மானியத் தொ
2. ட்டி செய்தான் வாணியன்
3. காவன் கூத்தாண்டான்

எண் : 179

இடம் : ஊர் - தம்மம்பட்டி வட்டம் - ஆத்தூர்
நரசிங்கப்பெருமாள் கோவில் கருவறையின் வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், வீரப்பிரதாப மகாராயர்

காலம் : 01.08.1425

மொழி : தமிழ் க.ஆ.அ 2 - 1931

செய்தி : வாசுதேவ நாயக்கர் என்பவர் கதிரி நரசிங்கப்பெருமாள் கோவிலுக்குத் தேவர்மறி புளியங்குறிச்சி ஆகிய இரு கிராமங்களைத் திருவிடையாட்டமாகக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸ்ரீ சகாத்தம் 1347 இதன்மேல் செல்லா நின்ற விசுவாவசு வருஷம் சுக்குல பக்ஷம் பஞ்சமியும் திங்ககிழமையினான் மகரமண்டலம் ஆற்றூ ர் கூற்றத்து தேவர் (ம) றி பெருமாள் கதிரி நரசிங்க பெரும (ா) ளுக்கு ஸ்ரீமந் மஹா மண்டலேசுரந் அரியராய விபாடந் பாஷைக்குத் தப்புவஇராயர் கண்டந் மூவராயர் கண்டந் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதாந் மஹா இராசாதிராசந் இராசபரமேசுரந் அஷ்டதிக்கு மனோபயங்க (ர)ன் பூறுவ தெக்ஷிண பக்ஷிமா உத்திரா சதிர் சமுத்திராதிபதி சிறிவீரப்பிராதாப மஹா இராயர் ஸ்ரீ தே

2. வராயர் மஹா இராயர் தந்மமாக ஆசிவசங்கரகுத்தி யிந்தம்பர கண்ட மஹா நாயங்காற்றான் வாசுதேவ நாயக்கர் தந்மம் பரி பாலிக்க வென்று மூலஸாதநம் தேவர்மறியு புளிய (ங்) குறிச்சியும் கதிரி நாதர் திருவிளையாட்டமாகவும் தந்மம் ப்றிபாலிக்கவும் இதுக்கு யாதாம் ஒருவர் இந்தக் கிறாமங்களுக்கு அகுதம் பண்ணிறவர்கள் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போகக் கடவராகவும் கோடி யாகசாலை குலைச்ச தோஷத்திலே போகக் கடவராகவும் கோடி பிறாமணரை கொன்ற தோஷத்திலே போக (க்) கடவராகவும்

எண் : 180

இடம் : ஊர் - தம்மம்பட்டி வட்டம் - ஆத்தூர்
நரசிங்கப்பெருமாள் கோவில் கருவறையின் வடக்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர்

காலம் : 19.05.1487

மொழி : தமிழ் க.ஆ.அ 1 - 1931

செய்தி : எறமாஞ்சி துலுக்கண்ண நாயக்கன் என்பவர் தம்மம்பட்டி தேவர்மறி கதிரி நரசிங்கப்பெருமாள் கோவிலுக்குத் திருவிடையாட்டமாக மாறாடி சீர்மைக்குள் இருந்த பூடிதிபறுகு அருளம்பள்ளி என்னும் இரு கிராமங்களைக் கொடையாக அளித்தமை.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸ்ரீ சகாப்தம் 1409 மேல் செல்லாநின்ற பிலவங்க வருஷம் சுக்கில பக்ஷம் ஏகாதெசியும் சனிக்கிழமை நாள் மாறடி (சீ) ர்மைக்குள் பூடிதிபறுகும் அருளம்பள்ளியும் இந்தக் கிறாமம் இரண்டும் ஸ்ரீமன் மஹாநாயங்கர ஆசாரியன் பாஷைக்கு தப்புவர நாயங்கர கண்டன் சாடிக்காற கண்டன் எறமாஞ்சி துலுக்கண நாய

2. க்கர் தன்ம (ம)ாக பெருமாள் கதிரி நரசிங்கப் பெருமாளுக்கு திரு விளையாட்டமாக விட்ட கிறாமம் இரண்டுக்கும் இயாத(ா)ம் மொருவர் அகுதம் பண்ணிநவர்கள் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்திலெ போக(க்) கடவராகவும் ஆயிரம் எக்ஞசாலை குலைச்ச தோஷத்திலே போகக் கடவராகவும் உ

எண் : 181

இடம் : ஊர் - தம்மம்பட்டி வட்டம் - ஆத்தூர்
நரசிங்கப்பெருமாள் கோவிலின் கருவறையின் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர்

காலம் : 18.10.1506

மொழி : தமிழ் க.ஆ.அ 4 - 1931

செய்தி : கதிரி நரசிங்கப்பெருமாள் கோவில் கருவூலத்துக்கு எறமாஞ்சி சிக்கதிம்மய நாயக்கர் மகன் பெரிய திம்மய நாயக்கன் என்பவர் கொடையாக நிதியைச் சேர்க்க வழிவகை செய்தமை. நான்கு திசையினின்றும் சென்று வாணிகம் செய்த செட்டி வியாபாரிகள் கொண்டு வந்த பொருள்களுக்கும் கொண்டு சென்ற பொருள்களுக்கும் தலையாரிக் கூத்துக்காக விதித்த வரியில் பாதியை இக்கோவில் கருவறையில் சேர்த்தமை.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸ்ரீ ஸகாப்தம் 1428 இதன்மேல் செல்லாநின்ற க்ஷய வருஷத்து துலாநாயற்று பூறுவ பக்ஷத்து திறுதியையும் அணிழமும் ஆதித்த வாரமும் பெற்ற இற்றைநாள் மகதை மண்டலம் ஆற்றூர் நாட்டு ஆற்றூர் கூற்றத்துத் தேவர்மறிப் பெருமாள் கதிரிநாதன் ஸ்ரீ பண்டாரந்துக்கு ஸ்ரீ மண்
2. மகாநாயங்கர் ஆசாரியன் பாஷைக்குத் தப்புவ நாயங்கர கண்டன் சாடிக்காறர் கண்டன் எறமாஞ்சி சிக்கத் திம்மய நாயக்கர் குமாரத் பெரிய திம்மய நாயக்கர் தம்மாக செட்டி வியாபாரி நானாதேசத்து பலபட்டடையாரும் கட்டிக்கு மகமை உபைய மாற்கத்துக்கு தீரும் புடவைக் கட்டுக்கு பணம் .1/8ம் செலவுக்கு பணம் 1/8ம் சல்லி சவரம் முத்து
3. ப் பவழம் வெள்ளாட்டி ஆடு மாடு வெல்லப்பொதி கொட்டைப்பொதி மிளகுபொதி எள்ளுப்பொதி பருத்திப்பொதி தவசப்பொதி மற்றும் எப்பேர்பட்ட பொதிக்கும் சந்தை கடை அள்ளும் இவையிற்றுக்கு தீர்வை தலையாரிக்கத்தில் பாதி தந்து கொள்ளக் கடவதாகவும் இந்த தன்மம் சந்திராதித்தவரையும் நடக்க கடவதாகவும்
4. இந்த தன்மத்துக்கு யொதொருவன் அகிதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலெ போகக் கடவராகவும்

எண் : 182

இடம் : ஊர் - தம்மம்பட்டி வட்டம் - ஆத்தூர்
நரசிங்கப்பெருமாள் கோவிலின் கருவறையின் தெற்குப்புற அடித்தளம்

அரசர் : விசயநகரர், கிருட்டிணராயர்

காலம் 14.01.1527

மொழி : தமிழ் க.ஆ.அ 3 - 1931

செய்தி : நரசிங்கப்பெருமாள் கோவிலுக்கு மாறாடி சீர்மைக்குட்பட்ட மங்கைவார்பட்டி என்னும் கிராமமும் மண்மலை சீர்மைக்குட்பட்ட செங்கிணறு என்னும் கிராமமும் திருவிடையாட்டமாக அளிக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸ்ரீ ஸகாப்தம் 1449 இதன்மேல் செல்லாநின்ற விய வருஷம் த்து துவாதெசியும் திருவாதிரை நக்ஷத்ரம் தினமும் சோமவாரமும் பெற்ற இற்றை நாள் மகரமண்டலம் ஆற்றூர் நாட்டு ஆற்றூர் கூற்றத்து தேவர்மறி பெருமாள் கதிரி நரசிங்கப் பெருமாளுக்கு

2. ஸ்ரீ மஹா மண்டலேசுரந் அரிய இரச(ய) விபாடந் பாஷைக்கு தப்புவ இராயர் கண்ந் மூவிராயர் கண்ந் பூர்வ்வ தெக்ஷிண பக்ஷம உத்திர சதிர் சமுத்திராதிபதி ஸ்ரீ வீரப்பிறதா (ப) மஹ இராயர் கிஷ்ணஇராயர் த (ன்)மமாக வெங்கப்ப திருமலை நாயகயன் தன்மம் பரிபாலிக்க கணைவாயகீழ் மாறாடி சீர்மைக்குள்

3. ப்பட்ட மங்காவார்பட்டியும் பச்சைமலைக்குள்பட்ட மண்மலை சீர்மைக்குள் செங்கிணறு கிறாமம் ஒன்றும் ஆக கிறாமம் யிரண்டும் திருவிடையாட்டமாகத் திருமலை நாயக்கர் விட்ட தறுமம் இரட்டியப்ப நாயக்கரய்க்கர் உபை(ய)மாகவும் தறுமம் பறிபாலிக்கவும் யிதுக்கு யாதாம் ஒருவர் இந்த கிறாமங்களுக்கு அகுதங்கள் பண்ணி

4. னவர்(க)ள் கைங்கைக்கரையில் காராம்பசுவை கொன்ற தோஷத்திலே போகக் கடவராகவும் கோடி எக்கு சாலை குலைச்சவர்கள் விழும் நரகம் புகக் கடவராகவும் கோடி பிறாமணரை கொன்ற தோஷத்திலே போகக் கடவராகவும்

எண் : 183

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் கருவறையின் மேற்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 26.12.1277

தெ.இ.க.தொ. 7 - 30

மொழி : தமிழ்

செய்தி : வடபூவானிய நாட்டுத் தாரமங்கலத்து இளமீசுவரமுடைய நாயனார்க்கு அந்நாட்டு நாட்டவரும் கண்டிய தேவரும் இறைவர் திருமேனிக்கும் கண்டிய தேவருக்கும் நன்மை உண்டாதற்பொருட்டுக் கோகனப்பள்ளி என்னும் கிராமத்தைக் கொடையாக அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமது கீத்திக்குமேல் கோச்சடபன்மரான த்ரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 27வது தை மாதம் முதற்தியதி கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து உடையார் இளமீவ்வரமுடையநாயனார்க்கு இந்நாடுடைய தே

2. வர் கண்டியதேவரும் இந்த நாட்டவரும் பெருமாள் திருமேனிக்கும் தேவர் கண்டியதேவர் வாளுக்குந் தோளுக்கும் இற்றைநாளில் உதகபூர்வ்வமாக பூதாந கரதாந இறையிலியாகக் குடுத்த ஊராவது இந்நாட்டுக் கோனகப்பள்ளி நன்செயி புன்செய் நாற்பாலெல்லையும் மேனோக்கின மரங்களும் கீணோக்கின கிணறுகளும்

3. மற்றும் இவ்வூரில் எப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் உட்பட இற்றை நாளில் சந்திராதித்தவரை செல்லக்கடவதாக உதகபூறுவமாகக் குடுத்தோம் உடையார் இளமிவ்வரமுடைய னாயனார்க்கு இக்கண்டய தேவரும் இப்பூவாணிய நாட்டவரும் உ

எண் : 184

இடம் ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத்தின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 21.07.1281

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 25

செய்தி : தாரமங்கலத்து நாட்டு முதலிகளில் நல்லுடையப்பர் என்பவர் தன்னுடைய தந்தையின் பெயரில் அமைத்த இலக்குமண சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்குப் பூவாணி நாட்டவர் விற்றுக்கொடுத்த நன்செய் புன்செய் நிலஉரிமை பற்றியது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்ச்சடபன்மரான த்ரிபுவனச்சக்கரவத்(தி)க(ள்) ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 6 (வது) ஆறாவது கற்கடக நாயற்று
2. பூர்வ்வ பக்ஷத்து சதுர்திஸியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் கொங்கான வீரசோழமண்டலத்து பூவாணியநாட்டுத் தாரமங்கலத்து முதலிகளில் நீருணி இளையான் நல்லுடையப்பன் தங்கள் பிதாக்க(ள்) பேர் வைத்த இளையபெருமாள் (க) ஸ்ரீலக்ஷமணச்சதுர்வ்வேதி மங்கலத்து பட்ட(ர்)களுக்கு இந்நாட்டு நாட்டவரோம்
3. விற்றுக்குடுத்த இந்நாட்டுக் காரக்குளம் நான்கெல்லைக் குட்பட்ட புன்செயும் நத்தமும் சேமப்பள்ளிஏரி உள்ளிட்ட ஏ(ரி)களால் நீர்பாயும் நஞ்சையும் இ(வ்)வூர்ப்பற்றில் நீர்நிலை மரநிலை உள்ளிட்ட ஸமஸ்த ப்ராப்த்திகளும் உட்படவையிற்றில் தேவதாநம் திருவிடையாட்டம் உள்ளிட்ட நி(ல)ம் நீங்கலாக இவ்வூர் விற்றுக் குடுத்தோம் ஸ்ரீ
4. லக்ஷமணச் சதுர்வ்வேதி மங்கலத்து அகரப்பட்ட(ர்)க்ளுக்கு இ(ந்) நாட்டு நாட்டவரோம் இப்படி விற்றுக்குடுத்த இவ்வூர்க்கு விற்றுக்குடுத்து
5. கொள்வதாந எ(ம்) மிலிசைந்து விலை(ப்)பொரு ளன்றாடு நற்பண(ம்) 1500 இப்பண(ம்) ஆயிரத்தஞ்ஞூற்றுக் (கு)ம் விலைக்குற விற்றுப் பொருளு(ற)
6. க் கைக்கொண்டு உதகபூர்வ்வமாக விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் இவ்வகரத்து பட்ட(ர்)களுக்கு இ(ந்)நாட்டு நாட்டவரோ (ம்)
7. இப்படி விற்றுக்குடுத்த இவ்வூர் இன்னாள்முதல் இவர்கள் கைய்க்கொண்டு தாங்கள் வேண்டும் அனைத்துப் பயிரும் செய்

எண் : 185

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத்தின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 01.08.1289

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 24

செய்தி : தாரமங்கலத்து முதலிகள் இளமாண்டை உள்ளிட்டார் சிலர் நல்லுடையப்பரிர் முதலியார் பெயரில் வைத்த அகரத்துப் பட்டர்களுக்குக் கொடுத்த செய்தி இடம்பெற்றுள்ளது. அவ்வூரின் குளம் உடைந்து பாழடைந்தமையால் அதைச் செப்பனிட்டு நீர் பாயத்துக் கொள்ளவும் நீர்பாய்ந்த விளையுளைத் துய்த்துக் கொள்ளவும் உரிமை வழங்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்சடபன்மரான த்ரிபுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பதி(ன்) மூன்றாவது ஸிம்ஹநாயற்று பூர்வ்வ பக்ஷத்து த்ரயோதஸியும் திங்கள் கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் கொங்கான வீரசோழ மண்டலத்து வடபூவாணிய நாட்டு

2. தாரமங்கலத்து முதலிகளில் க(டு)ந்தர்க்கமுதலியும் சாத்தர்முதலி உடையப்பனும் சு(ரி)யதேவர் பெரியமுதலியும் ஆனைக்குட்டி சிலம்பாண்டையும் உடையப்பன் ஆனையாரும் பிள்ளைமுதலியார் முதலியும் சிறு உடையான் முதலியும் மேல்ப்படி இளமாண்டையும் இ

3. வனைவோம் இ(வ்)வூர் நீருணி இளையான் நல்லுடையப்பர் தங்கள் முதலியார் பேரால் வைக்கிற அகரப்பட்ட(ர்)களுக்கு நாங்கள் உதகபூர்வ்வதர்ம்மதாந ப்ரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது இ(வ்)வூர் காரைகுளம் உடைகுளமாய்ப் பாழேகிடக்கிற குளம் உ(ட)புக்கு முன்பே மன லொழுக்கி குளமும் அடை

4. த்து இக்குளத்தால் நீர் காட்டி கொள்ளலாம் நிலம திருத்தி இன்னிலமும் இக்குளத்தில் நீர் கோவையும் மேனோக்கின மரமு(ம்) கீணோக்கின கிணறும் உட்பட உதகபூர்வ்வதர்ம்ம தாநமாகக் குடுத்தோம் இ(வ்)வக(ர)த்தில் பட்ட(ர்) களுக்கு இ(வ்)வணைவோம் இப்படி குடுத்த இந்நிலம் தான் வேண்டும் அணைத்து பயிர்களும் செ(ய்)து செ

5. காண்டு வேண்டும் வில்வ்ரக்ஷங்க(ளு)ம் வைத்து(க்)கொண்டு சந்ராதித்யர் செல்ல பூதாந இறையிலியாக அனு(ப)விக்ககடவர்களாகவும் இது இவர்களுக்கு தாநாதமநவிக்ரயங்களுக்கு உ(ரி)த்தாவதாகவும் இப்ப(டி) சம்மதித்து உதகபூர்வ்வதர்ம்ம தாந ப்ரமாணம் பண்ணிக குடுத்தோம் இ(வ்)வகரப்ப(ட்)ட(ர்) களுக்கு இ(வ்)வணைவோம்

6. இப்படிக்கு இவை சிறுஉடையான்முதலி எழுத்து இப்படிக்கு இவை பிள்ளை முதலியார் மகன் முதலி எழுத்து இப்படிக்கு சாத்தர்முதலி உடையப்பன் எழுத்து இப்படிக்கு சிறுஉடையான் இ(ள)மாண்டை எழுத்து இப்படிக்கு இவை ஆனையார் எழுத்து இப்படிக்கு இவை ஆனைக்குட்டி சிலம்பாண்டை எழுத்து இப்படிக்கு இவை

7. வ கடுதர்(க்)க முதலியார் எழுத்து இப்படிக்கு இவை பெரிய முதலியார் கைய் மாட்டாங்கானமைக்கு தாரமங்கலத்து தட்டான் திருக்(ண)கவெல் எழுத்து உ

எண் : 186

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத் தெற்குப்புறச்சுவர்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : 15.05.1280

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 23

செய்தி : பூவாணிய நாட்டு நாட்டவர்களுள் நல்லுடையப்பன் தன் முதலியார் பெயரில் இலக்குமண சதுர்வேதி மங்கலத்துப் பட்டர்களுக்குக் குளம் ஒன்றைத் தருமதான இறையிலியாக வெட்டிக் கொடுத்த செய்தி இடம் பெற்றுள்ளது. இக்குளத்தால் நீர் பாயும் நிலங்களின் விளையுளைத் துய்த்துக் கொள்ளச் சர்வமானிய இறையிலியாக அளிக்கப் பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோற்சபன்மரான திருபுவனச்சக(க்)ரவத்தி(க)ள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு பதினாலாவதுக் ெ(க)திராவது இஷப நாயற்று. . . . (ங்)கட் கிழமையும் பெற்ற பூசத்துனாள் கொங்கான வீரசோழமண்டலத்து பூவாணிய
2. னாட்டு னாட்டவரோம் இன்னாட்டு தாரமங்கலத்து முதலிகளில் நீருணி இளையான் நல்ல உடையப்பர் தங்கள் முதலியார் பேரால் வைக்கிற இளைய பெருமாள் அகரமான லக்ஷமண சதர்வேதி மங்கலத்து பட்டர்களுக்கு உதகபூர்வ்வ தர்ம்ம தானமாக குடுத்த குளமாவது இன்னாட்டு அமரகுன்றிபற்றில் செய்யபெரு
3. மாள்ஏரி என்று பேர் கூறப்பட்ட இக்குளத்தால் நீர்பாயும் நஞ்சை நிலத்து(க்)கு பெரு நான்கெல்லையாவது கீழ்பாற்கெல்லை (க)ஞ்சமலைநாயனார் தேவதானமா . . . . க்கு மேற்கும் உடை குளமும் உட்பட்ட நிலமும் தென்பாற்கெல்லை இக்குளத்தால் நீர்பாயும் எல்லை
4. அறுதியாகவும் மேல்பாற்க்கெல்லை இக்குளத்து நீர்கோவை யறுதியாகவும் வடபாற்க்கெல்லை இக்குளத்தால் நீர்பாயும் எல்லை யறிதியாகவும் இப்படி இன்னான்கெல்லைக்குட்பட் . . . . ம் உடைகுளமு மிதில் மேனோக்கின மரமும் கீணோக்கின கிணறு(ம்) மற்று மெப்பேற்பட்ட ஸ்மஸ்த ப்ராப்திகளும் உட்
5. பட ஸர்வ்வமாநிய இறைமிஇலயாக உதகபூர்வ்வ தர்ம்மதாநமாகக் குடுத்தோம் இவ்வகரத்து ஒட்டர்களுக்கு யிப்படி குடுத்த குளம் இன்னாள் முல கைக்கொண்டு உடைகுளங்களும் அடைத்து காடு வெட்டி தி(ரு)த்தி தான் வேண்டு மனைத்துப் பயிர்களும் செய்துகொண்டு சந்ராதித்யவ்ரை செல்ல கல்லிலும் செம்பி
6. லும் வெட்டி அநுபவிக்க கடவர்களாகவும் இது இவர்களுக்கு தாநாதம விக்ரயங்களுக்கும் உரித்தாவுதாகவும் இது இவரக்ளுக்கு ஸர்வ்வ(ா) மாந்ய இறைமிலியாவதாகவும் இப்படி சம்மதித்து இத்தர்மம்மதாந ப்ரமாணம் பண்ணிக்குடுத்தோம் ஸ்ரீ லக் (க்ஷம) ணச்சதுர்வ்ஏதி மங்கலத்து பட்ட(ர்)களுக்கு பூவாணியநாட்டு நாட்டவரோம் உ
7. இப்படிக்கு இவை அமரகுன்றியில் முதலிகளில் கடந்தர்க்க முதலியார் எழுத்து இப்படிக்கு இவை தாரமங்கலத்து முத்லிகலில் ஆனையார் எழுத்து இப்படிக்கு

இவை செம்மணிகூடல் முதலிகளில் ஆலப்பிறந்தார் முதலியார் எழுத்து இப்படிக்கு இவை கணபதிநல்லூ ர் முதலிகளில் பிள்ளையப்பன் எழுத்து

8. இப்படிக்கு இவை செட்டமாங்குறிச்சியில் முதலிகளில் இளமாண்டை சொக்கனாயன் எழுத்து யிபடிக்கு இவை முப்(ப)வ்வை சமுத்திரத்தில் குடியன் ஆண்(ட)ட பிள்ளைபப்பன் எழுத்து இப்படிக்கு இவை முப்பசமுத்திரத்தில் முதலிகளில் குடியன் நக்கன் முதலி எழுத்து இப்படிக்கு . இவை மாறமங்கலத்தில் முதலிகளில் சுவடன்

9. செய்யான் குன்(ற) காமுண்டன் எழுத்து இப்படிக்கு இவை வெள்ளறை பள்ளியில் (மு)தலிகளில் சாகாடன் இளமன் பெருமாள்க்காமுண்டன் *கைம்மாட்டாங்கானமைக்கு திருவெள்ளறையுடையான் பங்கயச் செல்வியா(ன) உலகன் எழுத்து உ

* தற்குறி

எண் : 187

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத்தின் தெற்குப்புறச்சுவர்

அரசர் : கோனேரின்மை கொண்டான்

காலம் :

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 22

செய்தி : தாரமங்கலத்தில் நல்லுடையப்பர் என்பார் இலக்குமண சதுர்வேதி மங்கம் என்ற அகரத்தை அமைத்தார். அங்கு வாழ்ந்த பட்டர்களுக்குப் பல இடங்களில் இருந்த நீர்பாய்ந்த நன்செய் நிலத்தைப் பூதான இரையிலியாக உரிமையாக்கினார். அந்நிலத்தின் அனைத்து விளையுளுக்கும் வரிவிலக்கு அளித்துத் துய்த்துக் கொள்ள ஓலை பிடிபாட்டு ஆவணம் அளித்த செய்தி

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிபுவநச் சக்கரவத்திகள் கோனேரிமேல்கொண்டான் கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய (நா)ட்டு தாரமங்கலத்தில் நல்லுடையப்பர் வைத்த அகரம் ஸ்ரீ லக்ஷ்மணச் சதுர்வ்வேதி மங்கலத்து ஒட்ட(ர்)களுக்கு இ(வ்)வூரில் காரைகுளத்தால் நீர்பாயும் நிலங்கள் உள்ளவை(யு)ம் ெ(ச)யபருமானே (ரி)யாலும் பெருமா(ர்) காமிண்டனேரியா.

2. ல் நீர்பாயும் கூஞ்(சு)மலைநா(யனா)யனார் தேவதானமான ஏரிக்கு மேற்க்கு உள்ள நிலமும் கண்ண(ந்) தை ஏரியால் நீர்பாயும் (த)ண்ணா யக்கன்ஏரிக்கு வடக்குள்ள நிலமும் கீழைப் பொய்கரையால் நீர்பாயும் நிலமும் இ(ந்நாட்டு க)ளக்குளத்தில் நான்கெல்லை யுழ்ப்பட்ட நன்ெ(செ)ச புன்சை நத்தம் உருணி உழ்பட்ட இவையும் சேமப்பள்ளிஏரி உழ்பட்ட குளங்களால் நீர்பாயும் நிலமு

3. ள்ள இவையும் கா(ரி)மங்கலத்தில் தங்கள் குடியிருப்(பு) நத்தமான வா(ஸ்து)வும் வஸ்து ஸேஷமும் ஆறாவது ஆடிமாத முதல் (த)ங்களுக்கு முதலடங்க பூதான இறையிலியாக தந்தது இன்னிலங்களால் வரும் நெல் கடமை காசுகட. .ர(ய)ம் பஞ்சுபீலி சந்துவிக்கிரகம் வாசல்வினியோகம காணிக்கை காத்திகைப் பச்சை ஆடிப்பூரப் பச்சை பிள்ளையார் நோன்புத் தேவை ஆணை(ச்)சா

4. லை குதிரைப்பந்தி கருஆழ்தாழ்வு தச்சுத்தாழ்வு தறிஇறை செக்கிறை தட்டொ(லி) தட்டார்ப்பாட்டம் பாசிப்பாட்டம் ஒழுக்கு நீர் மீன் பாட்டம் தோலொட்டு (ஏர்) வரி இனவரி வாசல்வரி ஆள்வரி நல்லெருது நல்பசு காணம் உள்ப்பட்ட இவையும் வரியிலார் கணகிலும் கழிக்கும்படி சொல்லிவிட்டோம் இன்னாள்முதல் தாங்கள் கைக்கொண்டு காரும் பசானமும் ஒருபூவும் மறுவும் வம்புங் கை

5. டய்பூவும் கமுகும் தெங்கு (வ)ாழை கொழுந்து மஞ்சள் இஞ்சி கருணை கரும்பு செங்கழுநீர் உட்பட்ட வான்பயிரும் மாப் பலா இலுப்பை புளி உள்ப்பட்ட பல மரங்களும் புல்லு வரகு தினை சாமை இறுங்கு ஆவணக்குப் பருத்தி வழுதிலை பூசணி எள்ளுக் கொ(ள்)ளு பயிறு அவரை துவரை உள்ப்பட்ட புன்ப(யி)ரும் தாங்கள் செதும் செய்வித்து /ம்/ங் கொள்ளுவாராகச் சொல்லி விட்டோம்

6. இப்படிக்கு இ(வ்)வோலை பிடிப்பாடாக (க)ாண்டு அதிகாரகணக்கிலும் நாட்டுக் கணக்கிலும் கழிப்(பி)த்து கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்துக் கொண்டு சந்ராதித்யவர்(ச்) செல்ல அநுபவித்துப் போதுக இவை துஞ்சலூ ருடையான் எழுத்து இயாண்டு ஆறாவது நாள் முப்பத்துநாலு உ துல்யம் இவை (பல்)லவராயர் எழுத்து உ

வழுதிலை - வழுதலை = கத்தரி

பிள்ளையார் நோன்புத் தேவை-வினாயக சதுர்த்தி புரட்டாசி மாத வளர்பிறை நான்காம் நாள்

எண் : 188

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
கயிலாயநாதர் கோவில முன்மண்டபத்தின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : ஒய்சாளர், இராமநாத தேவர்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 20

செய்தி : வட பூவாணிய நாட்டில் பூங்குளம் என்உம் ஊரில் வாழ்ந்த கொப்பயத் தண்ணாக்கரின் பிள்ளைகள் மூவர் கயிலாயநாதர் கோவிலுக்குத் தேவதான இறையிலியாக நன்செய், புன்செய் நலங்கள் அளிக்கப்பெற்றன. கல்வெட்டு சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ இராமனாத தேவற்கு ஆண்டு 14 (ஆவது வட பூவா)
2. ணிய நாட்டு பூங்குளத்தி லிருக்கும் கொப்பய (த)ண்ணா(க்கர்)
3. மக்களில் இராகுத்தராய அருளாளத் தண்ணாக்கரும் பே
4. ய்க்கடித் தண்ணாக்கரும் தேத்தயத் தண்ணாக்கரும்
5. பூவாணியனாட்டுத் தாரமங்கலத்து உடையார் ஸ்ரீ கை
6. லாயமுடைய நயினாற்கு இராமனாத(தே)வன் இறையிலி
7. தேவதானமாக விட்டருளின . . . . . (ட்டுவனாதி ந) ஞ்சை
8. புஞ்சை நாற்பாங்கெல்லையும் மேல் (நே)ாக்கின மரமு

9. ங் கீழ்னோக்கின கிண(றும் மற்)றும் மே(ப்பெ) றப்பட்டன (வு)ம்
10. இறையிலி தேவதா(ன)ம் . . . . த
11. ன்மத்தை அழித்தான் கெ. . . . . காரர(ர)ம்ப
12. . . . . (வக் கொன்)ற . . . .
13. . . . . வும் சுபமஸ்து

எண் : 189

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில முன்மண்டப வடக்குப்புறச்சுவர்

அரசர் : ஒய்சாளர், வீரஇராமநாத தேவர்

காலம் : கி.பி. 1279

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 26

செய்தி : இளமீசுவருடய நாயனார்க்குத் தாரமங்கலத்து ஊரவரும் முதலிகளும் தேவதான இறையிலியாக எல்லைகள் வரையறுத்து நிலம் வழங்கிய செய்தி இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸர்வ்வ பூமிச்சக்கரவத்திகள் ஸ்ரீ போசள வீரராமனாத தேவர்க்கு யாண்டு 20வது சித்திரை மாதம் முதற்றியதி கொங்கான வீரசோழ மண்டலத்து வ
2. ட பூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து உடையார் இளமீஸ்வரமுடைய நாயனார்க்கு இத்தாரமங்கலத்து ஊரவரும் முதலிகளும் தேவதானமாக விட்ட நிலமாவது இ
3. வ்வூர் ஊரேரி(க்)கீழ் நன்செய் நிலத்து உடையார் ஸ்ரீ கையிலாஸமுடைய நாயனார் தேவதானத்துக்குக் கிழக்கும் தெற்கும் ஆன நிலம் தடிபல குழி ஐஞ்ஞூறும் சந்ராதி(த்)தவரை
4. ர செ(ல்)ல(க்) கடவதாக உதகபூர்வ்வமாக குடுத்தோம் உடையார் இளமீவ்வரமுடைய நாயநார்க்கு ஊரவரும் முதலிகளும்

எண் : 190

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் கருவறையின் மேற்குப்புறச்சுவர்

அரசர் : ஒய்சாளர், வீரராமநாத தேவர்

காலம் : கி.பி. 1254

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 29

செய்தி : வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து இளமீசுவரர் கோவிலுக்கு முதலியார் சிலர் சேர்ந்து தங்களுக்கு உரிமையான நிலத்தை இறையிலியாக நானூறு குழி நிலத்தை நீர்வார்த்து உரிமை செய்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸர்வ்வ பூமச் சக்கரவத்திகள் ஸ்ரீ போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு 20வது சித்திரை மாஸம் முதற்றியதி கொங்கான வீரசோழமண்டலத்து வடபூவானிய நாட்டுத் தாரமங்கல
2. த்து உடையார் இளமீஸ்வரமுடைய நாயனார்க்கு இத்தாரமங்கலத்து முதலிகளில் நீருணி பெரிய இளமன் பெரியஉடையாண்டையும் சிறுஉடையாண்டையும் சூரியதேவரும் இளைய
3. பெருமாளும் சாத்தாழ்வாரும் சிலம்பாண்டை முதலியும் இவ்வனைவோமும் எங்கள் காணியான வலிவாட்க்கையிற் சிற்றேரி(க்)கீழ் அத்தித்தூ ம்பால் நீர்பாயும் நிலத்து பூதான காரதான யிறையிலியாக உத
4. க (ஷக) பூர்வ்வமாக குடுத்த நிலமா(வ)து இவ்வ(லிவ)ாட்கையில் உடையார் ஸ்ரீ கைலாஸமுடைய னாயனார் தேவதானத்துக்குத் தெற்குத் தடிபல குழி நூறூறு இக்குழி நானூறும் சந்திராதித்தவரை செல்ல(க்) கடவதாக உதகபூ
5. ர்வ்வமாக குடுத்தோம் இவ்வணைவோமும் உ

எண் : 191

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் கருவறையின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 31

செய்தி : நல்லுடையப்பர் உள்ளிட்ட ஆறு முதலிகளும் தங்கள் தந்தையின் பெயரில் சோமநாதத் தேவரைப் பிரதிட்டை செய்தாற்பொருட்டுக் குருதட்சினையாக நன்செய் நிலத்தை இறையிலியாக்கிக் கொடுத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சௌட சூடாமணி வடவா குலே . . . ன் வித்யாஸமுத்ர ஸ்ரீ கண்டதேவர் பூவாணியநாட்டு தாரமங்கலத்து இளமீவ்வரமுடையார் னாயினார் கோயில் ஸ்தாந(த்)தார்(க்)கு நம்முடைய மாதா(க்)கள் ஆய் தங்கள் கோயிலிலே அப்பாவுடைய
2. ஸிவநாமத்தாலே நாயினார் ஸோமநா(த)தேவ(ை)ர ப்ரதிஷ்டிக்கையில் இன்னாயினார்க்கு இவர் திருநாமத்து /க்/ காணியாக முன்னாள் உதக்கம் பண்ணிக்குடுத்த இ(வ்)வூ(ரி)ல் பெரிய ஏரி(க்) கீழ் சிறுத்தூம் படியில் இவ்வூரில் வெள்ளாழ(ரி)ல் நல்லஉடை
3. (ய)ப்பர் உள்ளூட்ட ஆறு முத(லி)களும் அப்பாவுக்கு குருதக்ஷிணையாக உதகபூர்வ்வ தர்ம்மதாந இறையிலியாகக் குடுத்த நஞ்சை நிலம் கு
4. (ரு) காயவைக்கீழ் விமபமசதாகாளஇ

அப்பா - தந்தை
(அப்பா எனும் வழக்கு 13 ஆம் நூற்றாண்டு முதலே இருந்துள்ளது)

எண் : 192

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
கயிலாயநாதர் கோவில் முன்மண்டபத்தின் வடக்குப்புறச்சுவர்

அரசர் : விசயநகரர், வீர வசந்தராயர்

காலம் : கி.பி. 1508 நவம்பர்

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 19

செய்தி : வீரசோழ மண்டலத்தின் வடபூவாணிய நாட்டு வேளாளரில் ஒருவரான இம்முடி இளம்நயினா முதலியார் என்பவரால் தேவதான இறையிலியாக இளம்சமுத்திரம் என்னும் ஊர் விடப்பெற்றது. தாரமங்கலம் கயிலாயநாதர் கோவிலுக்கும் இளமீசுவரர் கோவிலுக்கும் சேர்த்து அவ்வூர் அளிக்கபெற்றது. திருத்தோன்பட்டி என்ற ஊர் 'இளம்சமுத்திரம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தஸ்ரீ ஸ்ரீமந் மஹாமண்டலேசுவரந் அரிய (ராயவிபாடன் பா)ஷை(க்)குத் தப்புவரா
2. யர் கண்டந் மூவராயர்கண்டன் கண்டனாடு கொண்(டு) கெ(ா)ண்டனாடு
3. கொடாதான் இலங்காபுரியுந் திறைகொண்டு வென்றருளிய
4. ஸ்ரீ விரவஸந்தராயர் ப்ருதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற காலத்தில் கலியுக
5. ஸகாப்தம் (4609)க்குமேல் வீரவஸந்தராயர் நயினாற்கு ஆண்டு மூன்றா
6. வதி(ல்) விப வருஷம் காற்திகை (மாதம்) கொங்காண வீரசோழ மண்டலதில் வட
7. பூவாணியநாட்டு தாரமங்கல(தி)ல் வெள்ளாழரில் நிலங்கி(ழ)ார் ஈஸ்த்த
8. குடொரி மகுட சூடாமணி மன்னர் வணங்கிலும் வணங்காதமுடியான்
9. முதலியார் நல்லுடையப்பர் வண்ணமுதலியார் இம்முடி இளம்நயினாமுதலியார் என்
10. னுடையதான தாரமங்கலத்தின் நல்பள்ளியான திருத்தோன்பட்டியை அப்பேர்
11. மாற்றி இளம்சமுத்திரமென்றும் பேர் நாட்ட உடையார் ஸ்ரீ கைலாஸ முடைய
12. நயினாற்கும் இளமீசுரமுடைய நயினாற்கும் இறையிலி தேவதானமாக விட்டு
13. தன்மசாதனமாக குடுத்தோம் இளம்சமுத்திரத்தில் நஞ்சை புஞ்சை நாற்பாங்கெ(ல்)
14. . . . . . . (மே) னோகின ம(ர)மும் கீ(ள்) னோக்கன கிண . . . . .மின்படு
15. . . . . க்ம(க)மனை . . . . . கின. ம . . . . ப்பெ . . . . . . பல . . . .
16. யமும் குடுத்தோம் . . . . கல் . . . .
17. முதலிய . . . . எரிரென் . . . . இத்தன்(மத்)தை அழித்த(வன்)
18. கெங்கை . . . .
19. பசுவை (க் கொ) ன் (ற பாவத்தி)ல போகக்
20. கடவார்க(ள்) சுபமஸ்து . . . . மண்டபதி(ல்) எழு(ந்து)
21. இருந்தபடி

எண் : 193

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத்தின் கிழக்குப்புறச்சுவர்

அரசர் : விசயநகரர், அச்சுததேவமகாராயர்

காலம் : 27.04.1540

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 28

செய்தி : வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்தைச் சார்ந்த வேளாள நிலங்கிழார் இம்மடி கட்டிமுதலியார் அந்நாட்டின் காவேரிப்பட்டி என்னும் கிராமத்தைக் கோட்டை சமுத்திரம் எனப்பெயர் மாற்றம் செய்து எல்லைகளை வரையறுத்து அந்தணர்களின் வசிப்பிடமாக அளித்த செய்திக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. உ ஸ்வஸ்தி ஸ்ரீ விஜ (யாத்) சுதய கலியுக வருஷம் 4640 இதன்மேற் செல்லாநின்ற சாறுவரி வருஷம்
2. சித்திரை மாதம் 1 தேதி ஸ்ரீ வீரப்ரதாப அச்சுததேவ மஹாராயர் ப்ருத்விராஜ்யம் பண்ணியருளுகையில் அவர்வாயில்
3. கும்மளண்ணகளுக்கு குன்றத்தூ ர்த்துற்கஞ் செல்லுநாளில் கொங்கான வீர சோழ மண்டலத்து வடபூ
4. வாணிய நாட்டுத் தாரமங்கலம் வெள்ளாழ(ர)ர் நீலங்கிழார் மஸ்தக குடோரி மகுட சூடாமணி வண்ணத்தடுக்
5. கும் வாடாமாலையும் புலிக்கொ(டி)யும் உள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடைஅப்பர் கோட்டை
6. முதலியார் இம்மடி கட்டிமுததலியார் இன்னாட்டு காவேரிப்பட்டியைக் கோட்டை சமுத்திரமென்னும் நா
7. மதேயம் பண்ணி அக்கிறாரம் விட்டேன் யிதுக்கெல்லை கிழக்குப் புலிக்கல் தெற்குச் சிற்றாறு
8. மேற்கு காவேரி வடக்கு கலிவிடங்கந் தெற்கு ஏரி யறிதியாகவு முண்டான கலவ்வாமியமுஞ் சந்திராதித்தி
9. யவரை நடக்கக் கடவதாகவும் யித்தர்ம்மத்தை நடத்தினவன் தன்னிட வங்கிஷ பரம்பரையாகச் செய்த பா

எண் : 194

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத்தின் தெற்குப்புறச்சுவர்

அரசர் : விசயநகரர், அச்சுததேவ மகாராயர்

காலம் : 08.04.1541

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 21

செய்தி : இம்மடிகட்டி முதலியார் என்பவர் சிதம்பரத்தில் இருநூறு பணத்துக்கு நிலம் வாங்கி மடம் ஒன்றைக் கட்டினார். அம்மடத்துக்கு 'வணங்காமுடி மடம்' எனப் பெயரிடப்பெற்றது. அம்மடத்தில் திருமாகேசுவர பூசை தொடர்ந்து நடத்துதற் பொருட்டு நான்கு திசையினின்றும் வந்த பொருள்களுக்கு இனம் பிரித்து வரி விதிக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. சுப மஸ்து
2. ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்புத்ய கலியுக வருஷம் 4642 இதன்மேற் செல்லாநின்ற பிலவ வருஷம் (சி)த்திரை மாதம் 12 தேதி ராஜாதி ராஜ பரமேஸ்வர ஸ்ரீ அச்சுத ஷேவ மஹாராயர் விஜய நகர ஸிங்ஹாஸனத்தில் இருந்து ராச்சியம் பண்ணி அருளாநின்ற காலத்து அவர் ஊழியம் இராமப்பனாயக்கற்குக் குன்றத்தூர் செல்லுமன்னாளில் கொ(ங்)கான வீரசோழ மண்டலத்து வடபூவானிய நாட்டுத் தாரமங்கலம்
3. வெள்ளாழர் நிலங்கிழார் மஸ்தகுடோரி மகுடசூடாமணி வண்ணத்தடுக்கும் வாடா மாலையும் புலிக்கொடியும் யுள்ள வணங்காமுடி முதலியார் நல்லுடை அப்பர் கோட்டை முதலியார் இம்மடிகட்டி முதலியார் சிதம்பரத்தில் அன்னாயனார் திருக்கோயிலுக்குத் தெற்கு மூன்றாம் வீதியில் செங்கழுநீர்ப் பிள்ளையார் சன்னிதிப் புறத்துத் தென்சிறகில் நிலம் 200க்குக் கொண்டு வணங்காமுடி என்னும் மடங்கட்டி
4. விச்சு அம்மடத்தில் மாஹேஸ்வர பூஜை நடக்கும்படி இன்னாட்டுப் படைவீட்டு நன்செய் புன்செய் நாற்பாங்கெல்லைக் குட்பட்ட சகல ஸ்வாம்யமும் விட்டு எங்கள் கணியான ஏழுகரை நாட்டுக்குள்ளாக நடக்கு முபையமாற்கத்தில் நான்கு திசை அன்பத்தாறு தேசப்பலரால் தர்ம்ம சாதனமும் எழுதிவிச்சுக்கொண்டு மகமையுங் கட்டிவிச்சுக் குடுத்த விபரம் பிடவைக்கட்டு 1க்கு பணம் கால் பாக்கு மிளகு கால்நடை 1க்கு பணம் அரைக்கால் எள்ளுப்பொதி 1க்கு பணம் ஒருமா காணி நூல்
5. பஞ்சு பருத்தி ஆவணக்கு முத்துத் தவசப்பொதி கால்நடைக்கு ஒருமா சேவுக்கு மாகாணி முத்துப் பவளம் பனிநீர்ச் செம்பு சந்தனங் கஸ்தூரி கற்பூரம் பட்டுநூல் இரசகுடுக்கை வெள்ளாட்டி தண்டிகைக் கொம்பு சல்லிசவரம் கிச்சிலிக்கட்டு இவைக்கெல்லாம் கூடின தீர்வையில் 10க்கு அரை மற்றுமுள்ள பயிற்கு மேற்பிரகாரந் தீர்ந்து சந்ராதித்யவரை நடக்கும்படியுங் கட்டுப் பணி பண்ணிக் குடுத்தேன் இத்தர்ம்மத்தை விலக்கி னவன் புண்ய
6. காலத்தில் கங்கைக்கரையில் ப்ராஹமணனை வதைத்தவன் பாவங் கொள்ளக் கடவன் உ இவை செல்லப்பெருமாள் எழுத்து உ

எண் : 195

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முன்மண்டபத்தின் கிழக்குப்புறச்சுவர்

அரசர் : விசயநகரர், சதாசிவ மகாராயர்

காலம் : 26.08.1547

மொழி : தமிழ் தெ.இ.க.தொ. 7 - 27

செய்தி : இம்மடிகட்டி முதலியார் வடபூவானிய நாட்டுத் தாரமங்கலத்து இராம கூடல் என்னும் கோவிலுக்கு நீர் வார்ததுக் கிராமத்தை அளித்த செய்தி இடம்பெற்றுள்ளது. அக்கிராமம் வணங்காமுடி சமுத்திரம் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பெற்றது. அவ்வூர் அந்தணர்களின் வசிப்பிடமாக அளிக்கப்பெற்றது.

கல்வெட்டு :

1. உ ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாத் புத்ய கலியுக (ஸம்)வத்ஸரம் 4646 இதன்மேற் செல்லாநின்
2. ற பிலவங்க வருஷம் ஆவணி மாதம் 26 தேதி பூர்வ்வபக்ஷத்து ஏகாதெசியு முத்திராடமுஞ் சுக்
3. கிறவாரமும் பெற்ற நாள் ஸ்ரீமன் மஹாராஜாயிராஜ ராஜ(ப)ரமேவ்வர ஸ்ரீ வீரப்ரதாப சதாசி
4. வதேவமஹாராயர் ப்ருதிவிராஜ்யம் பண்ணியருளுகையில் அவர் காரியத் துக்குக் கற்த்தரான தண்பொ
5. றுப்பையனுக்கு முள்வாய் சூழ்ந்த குன்றத்தூ ர்த்துறகஞ் செல்லும் நாளிற் கொங்கன வீரசோழ
6. மண்டலத்து வடபூவாணியநாட்டுத் தாரமங்கலத்து வெள்ளாழர் நிலங் கிழார் மஸ்தகுடோரி ம
7. குடசூடாமணி வண்ணத்தடுக்கும் வாடாதமாலையும் (பு)லிக்கொடியுமுள்ள வணங்காமுடி முதலியார் ந
8. ல்லுடை அப்பர் கோட்டை முதலியார் இம்மடி கட்டிமுதலியார் இன்னாட்டு ராமகூடலுக்கு ஒ(ப)
9. ப்பையன் தம்பி திப்பப்பையனைக் கொண்டு புன்ய காலத்தில் காவேரிக் கரையில் தாரை வாற்(பி)
10. த்து யர்ம்மஸாதன(த்)துக்குத் தளத்துக் கரணிக்கர் கையெழுத்தும் எழுதிவிச்சுக் கொண்டு வண
11. ங்காமுடி சமுத்திரமென்னும் நாமதேயம் பண்ணி அக்கிறாரம் விட்டென் இதுக்கெல்லை கிழ
12. க்கு வணங்காமுடி சமுத்திர மென்னுங் குள மறிதியாகவுந் தெற்குப் பிள்ளாக் கவுண்டனி

எண் : 196

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
கயிலாயநாதர் கோவில் வடக்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 315 - 1919

செய்தி : இம்முடிகட்டி முதலியவர்களால் கயிலாயநாதர் கோவில் திருப்பணிக்காகக் கொடை அளிக்கப்பெற்ற செய்தி. திருக்கோவில் கருவறை மண்டபம் மகாமண்டபம் முதலியனவும் கணபதி, துர்க்கை, பிரமதேவர் ஆகியோருக்குக் கோவிலும் தட்சிணாமூர்த்தி, சண்டேசுவரர், இடபதேவர் ஆகியதிருமேனிகளுக்குச் சிகரமும் அமைத்துத் திருப்பணிகள் அனைத்தும் செய்யப்பெற்றமை.

கல்வெட்டு :

1. (மஸ்த) சகுடோரி மகுட சூடாமணி மன்(ன)வர் வணங்கிலும் வணங்காத
2. முடியார் முதலியார் நல்லுடையப்பன் அஸ்தநா (க்ஷத்ரம்கந்யா) ராசியில் உ
3. (து)யமான சின்னச்சீயால முதலியாருடைய குமாரர் புரட்டதி நக்ஷதரம் கும்
4. ப ராசியும் உதயமான இம்முடி கட்டிமுதலியார் நம்முடைய குலசுவாமியா
5. (ரா)கிய கைலாஸநாத சுவாமியார் காரியத்துக்குக் கற்தரான ஆதிச
6. ண்டேசுவர நாயினார் அருளிச்செய்த படிக்கு உண்டாக்கிய திருப்பணி
7. விபரம் ஸ்ரீவகாமி அம்மை ஸமேதரான ஸ்ரீ கைலாசநாத
8. சுவாமியாருக்குத் திருக்கோவில் கர்ப்ப கிரஹம் அர்தமண்டபம்
9. ஸ¬பநா/ஸி/ மஹாமண்டபம் கணபதி துர்கை பிரம்மதேவர்
10. லிங்கோத்பவர் தக்ஷிணாமூற்தி சண்டேசுவரர் வ்ரஷபதேவற்
11. சிகரம் யிதுமுதலான திருப்பனி சகலமும் உண்டாக்கி விச்சார்
12. கைலாஸநாத சுவாமியாருடைய அனுகிரஹத்தினாலே இந்த
13. வம்ஸம் பெத்ர பௌத்ர பாரம் பரையாக ஆசந்ஷராக்க
14. ஸ்யாமியாக . . . . வதந . . . ராதா . . . ரஹிப்ரஷியமாக இ . . . .
15. க்கடவது இந்(த) . . . . . படிக்கு திருப்பணி
16. உத்ரரோத்ரம் . . . . நடக்க கடவது சுப
17. மஸ்து ஸ்ரீ கைலாஸ . . . . ரக்ஷிக

எண் : 197

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
கயிலாயநாதர் கோவில் சுற்றுச்சுவரின் வடக்கு

அரசர் : விசயநகரர், சிக்கதேவராயர்

காலம் : 07.04.1679

மொழி : தமிழ் க.ஆ.அ. 1316 - 1919

செய்தி : சிக்கதேவராய உடையாரின் செயலராகிய கெம்பயன் என்பவர் பாலசுப்பிரமணியரையும் அறுபத்துமூன்று நாயன்மார்களயும் எழுந்தருளச்செய்து பிரதிட்டை செய்து முடித்தமை.

கல்வெட்டு :

1. உ கலியுகம் 4780 இதன்மேல் செல்லாநின்ற
2. சித்தாதிரி வருஷம் சித்திரை மாதம் 10 தேதி சோம வாரமும் சத்தமியும்
3. புணர்பூசமும் திறுதிநாம போகமும் பெற்ற நாளில்
4. ஸ்ரீ மநு ராசாதிராச ராசபரமேசுவர ராசமாத்தாண்ட ராச பிற
5. (ப)வப் பிறுதாபரான ராசஸ்ரீ சிக்க தேவரா . . . உடைய அய்ய
6. னவர்கள் காரியத்துக்கு கற்த்தரா
7. ன மயிக்குரு சாமயன் குமாரன் கெம்ப
8. யன் பாலசுபணியரும் அறு
9. ப்பித்து மூவரும் பண்ணிவித்து பிற
10. (திட்)டை பண்ணி முகிப்பித்தார்கள் உ அவரை கயிலாசபதி
11. (றசிக்க) உ

எண் : 198

இடம் : ஊர் - தாரமங்கலம் வட்டம் - ஓமலூர்
இளமீசுவரர் கோவில் முகமண்டப வாசல்

அரசர் : கட்டிமுதலி

காலம் : கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : கட்டிமுதலியின் வாய்மையைச் சிறப்பித்துக் கூறும் எண்ணலங்காரப் பாடல், செங்கதிர் பன்னிரண்டு, ஈசர் பதினொருவர், திக்குப் பத்து, கங்கை ஒன்பது, மலைகள் எட்டு, கடல் ஏழு, கார்த்திகை ஆறு, மன்மதனின் கணைகள் ஐந்து, வேதங்கள் நான்கு, சுடர் மூன்று, சாதி இரண்டு. ஆனால் தாரமங்கலத்தைச் சார்ந்த கட்டிமுதலியின் வாரத்தை ஒன்றே. சொல் மாறாதவர்.

கல்வெட்டு :

1. செங்கதிர் பண்ணிரண்டீசர் பதினொன்று திக்குப்
2. பத்து கங்கையு மொன்பது வெற்பெட்டேழ்
3. கடல் கார்த்திகை யாறைங்கணை நான்மறை முற்சு
4. டர் சாதியவை யிரண்டு மங்கைவரோதயன்
5. கட்டிமுதலி தன் வார்த்தை யொன்றே

எண் : 199

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்று குளத்தின் மேற்குத்திசைப் படிகள்

அரசர் : சோழன், முதலாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1032

மொழி : தமிழ் க.ஆ.அ. 347 - 1961

செய்தி : 'திருமன்னி வளர இருநில மடந்தை' என்னும் மெய்க்கீர்த்தி பொறிக்கப் பெற்று மிகுதியாகச் சிதைந்துள்ளது. திருச்செங்கோட்டுத் திருமலையில் எழுந்தருளிய உடையாருக்கு ஆதித்தன் என்பவர் உத்திராயன சங்கிராந்தி திருவிழாவின்போது பல்வகையான படைப்புகளின் பொருட்டு எட்டுக் கழஞ்சுப் பொன்னைக் கொடையாக அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநிலமடந்தையும் (பொற் செய)
2. ப் பாவையும் சீர்த்தநீச் செல்வியும் . . .
3. . . . . ஊழியூழி இடை . . . . .
4. . . . . . கொள்ளிப்பாக்கமும் . . . . . .
7. . . . . தெண் (தி)
8. க் கடலீழமண்டல முழுவதும் . . . .
9. . . . . சங்கெதிர் மா

10. லையும் செங்கதிர் வேலைத் தொல் . . . . .
11. . . . .
12. (வி)ட்ட பரசுராமன மேல் வருஞ் . . . .வரண(க்காது) இருத்திய செம்பொற்றறி
13. ருத்தகுமுடியும் . . . . . .
14. . . . . . . புகழ்ழொடு மடிசர் இலட்டபாடியு (ஏழரை)ளக்க
15. மும் அவநெதிக்குப் . . . . முதி . . . .
16. ரை ப (டி வி) ல்லை மதுரை . . . .
17. லெஞ் சத (வ) ரப்பஞ்சப் பள்ளியும் . . . . . ராசணை (ளவின) நயமர்க்
களா.
18. . . . . . ஆதிஞகர வைழிர் சந்திரன் . . . . . .
19. த்துக் கிளையொடும் பிடித்துப் ப(ல்) சந்ததோடு . . . . . .
20. ட்டருஞ் . . . . மினை ஒட்ட விஷையமும் . . . சேனை ந/ல் கோசலை நாடும்
21. . . . . . வண்டு / றுஸ்ரீ சோலைத் தன் . . . சியும் (ரண் சூர) னை
22. . . . .
23. . . . . ச்சங் கொட்டா மயிரவாளனை வெஞ்சமர்
24. . . . . நித்திர நெடுங்கடலுத்திர ல(ாடமும்) வெறி மலர் சீர்த்தித் தெறிபு
25. . . . . நிசைபொற்று
26. ங்க . . . .
27. . . . . ஆர்த்த வந் (கனக)ப் போர் . . . . .
28. . . . . மொபத் தொழில் புநமணி . . . . நிறைசீர் வரிசை
29. . . . . நிறை புநல் மாட்டார
30. மும் காவலம் புரிசை . . . .
31. . . . .
32. (டாற்) கொண்ட கோப்பரகேசரி . . . ந்திர சோழ /தேவற்கு/ யாண்டு இருபதாவது
33. . . . (சே)ாழ வ(ளநாட்)டுக் கீழ்க்.... கொடு நாட்டு சபை யோம் கூட்டக்
குறைவறக்
34. கூடிப்பின் . . . ஜேந்திரசிங்க வளநாட்டு மிழலை நாட்டு கள்ளப் . . . . .
35. (லி) யூருடைய(ரன்) ஆதித்தன் வை(த்த) . . . (சே)ாழ மிழலை நாட்டு
மூவேந்த வேளான் /தி/ . . . .
36. . . . ங்கொட்டு திருமலையிலெழுன் . . டையார்க்கு உத்தரமியந சங்கிரம . . .
37. . . . ன்று பெருந்திரு(வி). . . . ருள . . . .ல்லாபுற பொன் எண் கழைஞ்சு
இப் பொ (ன்)
38. . . . கழைஞ்சும் திருச்செங்கொட்டு . . ட்டு . . . நி . . . பித்துக் கைய்க் கொண்டு
39. . . . . . அர்த்தநாரீசுவர முடையார்க்கு கொ
40. . . . . . . மணி(ப்பய ஒ)ரு நாழி காய்க்கறி ய . . . .
41. . . . . . . ககி . . . முர்து . . . தும் அமுதுக்கு
42. . . . . . . மன் . . . . மூர்ந் இருநாழி . . . றுணியும் அ(ை)டக்காயது
43. . . . . . . இரண்டு . . . . . . ம் கறியமுது . . . உப்பு நாழியும் விளக்கெ . . .
44. . . . . . . பெறவப் பாவ . . . . நவிர பழ நெல்லுப் பதக்கும் அரிசி
45. . . . . தேவர்க்கு திருமு . . . . அரிசி குறுணி
46. . . . . . . விறகிடுவா . . . . க்கு நெல் . . . . நெல்லறு நாழியும்
47. . . . . . . (சந்)திராத்தவல் இத்தர்மம் செல்(வதாகவும்) . . . . சங்க . . . னனர்
48. . . . .

எண் : 200

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றின் மேற்குப்புற படிகளின் அருகிலுள்ள பாறை

அரசர் : சோழன், இராசகேசரிவர்மன்

காலம் : கி.பி. 10 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க..ஆ..அ 265 - 1968

செய்தி : திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப் பெருமக்களிடம் கோவிலில் சனிக்கிழமை தோறும் எண்ணெய் நீராட்ட அறக்கட்டளையாகப் பதினாறு கழஞ்சுப் பொன் அளிக்கப்பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜகேஸரிவர்ம்மற்கு யாண்டு
2. அஞ்சாவது திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு ந
3. ட்டுப் பெருமக்கள் கையில் சனிதொறு நாழி யெண்
4. ணை மலையிலோணத்தால் சனி யெண்ணை அட்டு
5. வதாக வெங்கால நாட்டு வெள்ளூர்ப் புலியங் கடம்
6. பனான பமஞ்சவன் வெள்ளூர் கிழவன் வைத்த செம்பொ
7. ன் காசெட்டாங் கல்லாற் பதினாறு கழஞ்சு இப்பொன்
8. னின் பலிசை கொண்டு சந்திராதித்தவற் சனி யெ
9. ண்ணை அட்டுவதாக என்றோம் பெரும
10. க்கேளோம்

எண் : 201

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
மலைமேல் நாகர்குன்றுக்கு மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், கோ இராசகேசரிவர்மன்

காலம் : கி.பி. 10 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 13 - 232

செய்தி : இளங்கோனடிகள் மனைவி மூரிகாமக்கனார் என்பவர் திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப் பெருமக்கள் குழுவிடம் இருபது கழஞ்சுப் பொன் கொடுத்தார். இப்பொன் காசெட்டாங்கல் என்னும் அளவால் நிறுக்கப்பெற்றது. இதிலிருந்து வந்த வட்டியில் இருபது அந்தணர்களுக்குத் திருவேகாதசி நாள்தோறும் உணவு படைக்கக் கணப்பெருமக்கள் ஒப்புக்கொண்டமை.

கல்வெட்டு :

1. கோவிராஜகேஸரி வர்மர்க்கு யாண்டு பதின்மூன்றாவ
2. து திருச்செங்கோட்டு பன்னிரண்டு நாட்டு (ப் பெரு)
3. மக்கள் கையில் லிளங்கோ(ன)டிகள் தேவியா
4. ர் மூரி காமக்கனார் திருவேகாதஸிக்கணத்துக்கு வை (த்)
5. த செம்பொன் க/ா/ (செட்டாங்) கல்லால் இருபதி
6. ன் கழஞ்சு இப்பொன்னின் பலிசை கொண்டு ச
7. ந்ராதத் (தவ)ல் திருவேகாதஸிதோறும் இருபது
8. ப்ராஹமணரை யூட்டுவதாக (போந்தது) திருவேகா
9. தஸிவக் கணப்பெருமக்களோம்

எண் : 202

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றுக்கு மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், கோ இராசகேசரிவர்மன் (கொங்கு)

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 13 - 242

செய்தி : மூரி அமுதனார் இளங்கோனடிகள் மனைவி மூரி காமக்கனார் திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப் பெருமக்களிடம் பதினைந்து கழஞ்சுப் பொன் கொடுத்து அதன் வட்டி வருவாயைக் கொண்டு அர்த்தநாரீசுவரருக்கு நந்தா விளக்கொன்று வைக்கச் செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராச (கேசரிபன்) மர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநி
2. ன்ற யாண்டு பதினாலாவது இவ்வாண்டு திருச்சங்கோட்டு பன்னிரண்
3. (டு) நாட்டுப் பெருமக்கள் (கை) யி (லி) ல் இளங்கோனடிகள் தேவியார் மூ
4. (ரி) அமுதனார் திருச்சங்கோட்டு ஆள்வார்க்கு ஒரு நொந்தா விளக்கெரி
5. ப்பதாக (வை)த்த செம்பொன் (கா) செட்டாங் கல்லால் பதினைங் கழஞ்சு இப்பொ
6. ன்னின் பலிசை (கொ)ண்டு சந்திராதித்தவல் நொந்தா விளக்கெரிப்பதா என்றோம் பெ
7. ருமக்களோம் மூரி அமுதினுக்கு

எண் : 203

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
மலைமேல் நாகர்குன்றுக்கு மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன் (கொங்கு)

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 13 - 243

செய்தி : இளங்கோன் மனைவி மூரிஅமுதனார் திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப் பெருமக்களிடம் திருஏகாதசிப் பூசைக்குப் பொன் கொடுத்தாள். அதனால் வருகிற வட்டியில் திரு ஏகாததசி நாளில் அந்தணர்களுக்கு உணவு கொடுக்கச் செய்தார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜ (கேஸரி)வர்மற்கு செல்லாநின்ற
2. பதினாலாவது திருச(ெ)சங்கோட்டு பன்னிரண்டு நாட்டுப் பெருமக்கள் கைய்யில்
3. . . . . கான் தேவியார் மூரி(அ)முதனார் (திருஏ) காதசி . . . . . (பூ)சைக்கு வைத்த பெரு(ந்திரு)
4. . . . . . பொன்னின் (ப)லிசை கொண்டு (சந்திர)ா தித்தவல் . . . . . .
5. ஊட்டுவதாக (பொ)ன் கொ . . . . . (ஏ) காதசிக்கு

எண் : 204

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றுக்கு மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், கோ இராசகேசரிவர்மன் (கொங்கு)

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 113 - 244

செய்தி : இளங்கோனடிகள் மனைவி மூரி காமக்கனார் திருச்செங்கோட்டுத் திருவாதிரைக் கண பெருமக்களிடம் இருபது கழஞ்சுப் பொன் கொடுத்து அதன் வட்டி வருவாயைக் கொண்டு இருபது அந்தணர்களுக்கு உணவு அளிக்கச் செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜகேஸரிவர்மற்கு யாண்டு பதி
2. னாலாவது இவ்வாண்டு திருச்செங்கோட்டுத் திருவாதி
3. ரைக் கணப்பெருமக்கள் கையில் லி(ள)ங்கோனடி
4. கள் தேவியார் மூரி காமக்கனார் ஏக வீர திவாகர தேவரை
5. ச் சாத்தி வைத்த செம்பொன் காசெட்டாங்கல்லால் இ
6. ருபதின் கழஞ்சு இப்பொன்னின் பலிசை கொண்டு
7. (தி) ருவாதிரை தோறுந் திங்களிருபது ப்ராஹமணரை ச
8. ந்ராதத்தவல் ஊட்டுவதாக என்றோந் திருவாதிரைக் க
9. ணப் பெருமக் (களோம்)

எண் : 205

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றுக்கு மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், (கொங்கு)

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 13 - 261

செய்தி : பேரங்கிமணியன் மனைவி கொற்றந்தைப் பொதுவன் மாரி என்பவர் தான் பிறந்த புரட்டாதி மாதம் சோதி நாளில் அந்தனர்களுக்கு உணவு படைக்க அர்த்தநாரீசுவரர் பெயரில் பாண்டியநாட்டுப் பெருமக்களிடம் இருபத்தைந்து கழஞ்சுப் பொன் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோ விராசகேசரிவன்
2. மர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லா
3. (நின்ற) யாண்டு 16ஆவது திருச்செங்கோட்டுப் பாண்
4. டி நாட்டுப் பெருமக்கள் கைய்யில் கொ . . . .

5. . . . ந்து வாழும் பேரங்கிய் மணியன் மா
6. . . . . . ணவாட்டி கொற்றந்தை பொதுவன் மாறி பிறந்த
7. புரட்டாதித் திங்கள் சோதி நாள் மலை விலக்கி . . . . . .
8. ப்ராஹமண போஜனஞ் செய்வதற்கு . . . ன் கொற்றந்தை பொ
9. துவநும் இவள் மணவாளன்னான பேரங் . . . னும்
10. . . . . இவனைச் சார்த்தி வைய்த்த பொன் . . . ம் இருபத்தைஞ் கழஞ்
11. சு இப்பொன்னின் பலிசைக் கொண்டு ஆண் (டு தோ)று
12. மொழுக்கமாக பிரட்டாதிச் சோதி நாள் மலை வில . . . .
13. ளிப்ராஹமண போஜனஞ் செய்வதாக சந்ராதத் . . . .
14. ல் செய்வதாக எ(ன்றோம்) பாண்டிநாட்டு பெரும (க்க)
15. ளோம்

எண் : 206

இடம் : ஊர் - திருச்செங்கோடு · வட்டம் - திருச்செங்கோடு
மலைமேல் அறுபதாம் படிக்குக் கிழக்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன் *

காலம் : கி.பி. 1255

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 219

செய்தி : ஈரோட்டைச் சேர்ந்த மணிகண்டி ஓடையமாந்தாளுக்காக அரட்டனக்க மகன் திருவோணக் கணப்பெருமக்களிடம் இருபது கழஞ்சுப் பொன் கொடுத்து அதனின்று வரும் வட்டியில் திங்கள்தோறும் அந்தணர்களுக்கு உணவளிக்கச் செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிவர்ம(ற்)கு யாண்டு 9 ஆவ
2. து திருச்செங்கோடு திருவோணக் கணப்பெருமக்கள்
3. கையில் திங்கள் தோறும் ஒழுக்கமாக இருபது ப்ரா
4. ஹமணரை சந்த்ராதித்தவல் நின்றது சான்றாக ஊட்டு
5. வதாக ஈரோட்டிருக்கு மணிகண்டி ஒடயமாந்தா
6. ளுக்காக அரட்டனக்க மகன் திருவோணக் கணப்பெருமக்கள்
7. வசம் வைத்த பொன் இருபதின் கழஞ்சு பொன்னு
8. ங் கொண்டு இருவது ப்ராஹமணரை இப்பொன்னின் ப
9. லிசை கொண்டு ஊட்டுவதாக என்றோம் திருவோணக்க
10. ணப்பெருமக்களோம் இது இறக்குவா . . . த்தானம
11. றுவான் காத்தா (னடி) என் தலைமேலின

* கொங்குச் சோழகர் கல்வெட்டுகளாக இருக்கலாம்.

எண் : 207

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றுக்கு மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1258

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 298

செய்தி : ஈரோட்டிலிருந்த உத்தமன் கணவதி தான் பிறந்த நாளான மாசி திருக்கோட்டை நாளில் அந்தணர்களுக்கு உணவளிக்க இருபது கழஞ்சுப் பொன்னைச் சோழ நாட்டு மக்களிடம் அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்மர்க்கு செல்லா நின்ற யாண்டு
2. பன்னிரண்டாவது திருச்சங்கோட்டு சோணாட்டுப் பெரும
3. க்கள் ஈரோட்டிருக்கும் உத்தமன் கணவ தி வை
4. த்த பொன் இருபத்தறு கழஞ்சு இப்பொன்னின் பலி
5. சை கொண்டு இவன் பிறந்த நாழி மாசி திருகே
6. ட்டை நாழி மலையில் ஸிவப்ராஹமண போஜ
7. னஞ் செந்திராத்தவல் செய்வதாக என்றோ
8. ம் சேணாட்டு பெருமக்களில்
9. உத்தமன் கணவதி

எண் : 208

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அறுபதாம் படிக்குக் கிழக்கே உள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1258

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 299

செய்தி : இரணமுக நாராணன் என்பவன் தான் பிறந்த மாசித் திங்கள் உரோகிணி நாளில் அந்தணர்களுக்கு உணவளிக்கக் கொடை அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகெசரிவற்ம்மற்கு
2. யாண்டு 12 ஆவது . . . . . ன இரண
3. முகனாருணந் பிற(ந்த) மாசி ரோச
4. ணி நாள் மலைய் . . . .ல் ப்ராஹம
5. ண போஜநம் தலை . . . . ற்றலையுடை
6. ய . . . மஹதேவர் க . . (கும்) த . . .
7. யாக மலை நாடா(ழ்) . . . . கயி . . வியா
8. . . . . .கொற் . . . க்கயாக ச
9. ந்திராதித்தவல் . . . . சம்மக
10. ன் இரணமுக நாரண
11. . . . .

எண் : 209

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றின் மேற்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1264

மொழி : தமிழ் க.ஆ.அ. 626 - 1905

செய்தி : உவச்சர்களுக்குத் திருப்பள்ளி எழுச்சி கொட்டக் கொடை கொடுத்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மராகிய ஸ்ரீ ராசேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 18 ஆவது
2. திருச்செங்கோடுத் தேவர்க்குத் திருப்பள்ளி எழுச்சி இவ்வாண்டு முதற்கொண்டு சந்திராதித்தவல்
3. வரை கொட்டுவதாகக் கொண்டு . . . . . தூ ரா . . . வங்கலது இத்தேவர் உடைய உவச்சர் . . . .
4. பெருவர்த்தனர். . . நித்துக்கு இடவழிப் ப. . . . . . ழஞ்சு வார ஒழுக்க நெல்
5. முக்கால் . . . . மாவும் கொண்டு திருப்பள்ளி எழுச்சி கொட்ட

எண் : 210

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அறுபதாம் படிக்குக் கிழக்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1272

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 426

செய்தி : காடன்பூதி மாணிக்கன் தன் மகளான முண்டடங்கோன் பெயரில் திருச் செங்கோட்டுத் திருவாதிரைக் கணப்பெருமக்களிடம் ஐந்து கழஞ்சுப் பொன் கொடுத்து அதனின்றும் வந்த வட்டியில் அந்தனர் ஐவருக்கு உணவு அளிக்கச் செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்
2. மர்க்கு செல்லாநின்ர யாண்டு
3. இருபத்தாராவது காடன் (பூ)தி மாணிக்
4. கன் மகள் முண்டடங்கோனை சாத்தி
5. திருச்செங்கோட்டு இருவாதிரை கணப் பெருமக்கள்
6. கைய்யில் வைத்த பொன் ஐங்கழஞ்சு இப்பொன்னின் பலிசை
7. கொண்டு ஐவர் ப்ராஹமணரை சந்திராதித்தவல் ஊட்டுவோமா
8. னோம் திருவாதிரை கணப்பெருமக்களோம்

எண் : 211

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அறுபதாம் படிக்குக் கிழக்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1273

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 427

செய்தி : புகழியூரைச் சார்ந்த குகாரி சுந்தரி என்பவர் துவாதசிதோறும் அந்தணர்களுக்கு உணவளிக்கத் திருச்செங்கோட்டுத் துவாதசிக் கணப்பெரு மக்களிடம் நன்கொடை அளித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்ம
2. (ர்)க்கு செல்லாநின்ற யா(ண்டு) இரு(பத்)
3. தேழாவது இவ்வாண்டு தி/ருச் (செங்)
4. கோட்டு(த்) துவாதஸிக்கணப்பெரும (க்)
5. க (ளிடை) வைத்தாள் புகழியூர் ம . . . . . கி . . . .
6. ணவாட்டி (கு) காரி சுந்தரி . . . .
7. கைகொண்டு திங்கள் . . . . /பிராமண/. . . . . .
8. துவாதஸிதோறும் ஊட்டுவ . . . . . .
9. . . . . உவாஉ . . . .

எண் : 212

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அறுபதாம் படிக்குக் கிழக்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1274

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 429

செய்தி : வாடஞ்சேத்தன் செருவாச்சி என்பவன் திருச்செங்கோட்டுப் பன்னிரண்டு நாட்டுப் பெருமக்களிடம் திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரருக்கு நந்தா விளக்கு எரிப்பதற்காகப் பன்னிரண்டு கழஞ்சு துளைப்பொன் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்ம (ர்) க்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற யா(ண்)டு 28 ஆவது இ(வ்வ)ாண்(டு)
2. திருச்செங்கோட்டுப் பெருமானடிகளுக்கு ஒரு நொந்தாவி(ள)க்கு சந்திராதித்தவல் எரிவதாக திருச்செ (ங்) கோட்டு
3. ப் பன்னிரண்டு நாட்டு பெருமக்கள் கைய்வழி வாடஞ் சேந்தன் செருவாச்சி
4. துளைப்பொன் பன்னிருகழைஞ்சு இதன் பலிசை கொண்டு திருவிளக்கெரிப்

(போமானோம்)
5. பெருமக்கள் இது காத்தானடி என்றலைமேலின இது இறக்கினான் வழி . . . .

எண் : 213

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அறுபதாம் படிக்குக் கிழக்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1274

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 430

செய்தி : திருச்செங்கோட்டுக் கணப்பெருமக்கள் மூவர் மலை மேல் துவாதசி, திருவாதிரை, திருவோணம் ஆகிய நாட்களில் மூன்று பொன் கழஞ்சு கொடுத்து அதனின்றும் வரும் வட்டியால் இரு அந்தணர்களுக்கு இரண்டு கலம் (பாத்திரம்) உணவளிக்கப் பெற்றமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரிபன்ம(ர்)க்கு செல்லா
2. நின்ற யாண்டு இருபத்தெட்டாவது இவ்வாண்டு திருச்
3. செங்கோட்டு திருமலைமேல் துவாதஸிக்கும் திருவாதிரை
4. திருவோணத்துகுமாக சந்ராதத்வல் ஊட்டுவதாக நாந்
5. வச்ச செம்பொன் முக்கழஞ்சு இப்பொன்ப் பலிசய் (ெ)காண்(டு)
6. (இரு) கலம் ஊட்டுவோமானோம் மூன்று கணப்பெருமக்களோ (ம்)
7. பெருமக்கள் ரக்ஷை உ

எண் : 214

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அறுபதாம் படியின் கிழக்கிலுள்ள பாறை

அரசர் : சோழன், மூன்றாம் இராசேந்திரன்

காலம் : கி.பி. 1279

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 441

செய்தி : மன்னன் பெயரும் ஆட்சியாண்டும் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மர்க்கு
2. செல்லா நின்ற யாண்டு முப்பத்து ஏழு ஆவது

எண் : 215

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
மேலவாசல் முனியப்பன் கோவில் தெருவிலுள்ள நடுகல்

அரசர் : பாண்டியன், இரண்டாம் சடையவரமன் சுந்தரன்

காலம் : கி.பி. 1287

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 19 - 441

செய்தி : ஆட்சியாண்டும், காற்கண்டன் என்ற பெயரும் மட்டும் காணப்பெறுகின்றது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்
2. க்கு யாண்டு (பத்து)
3. . . . . னாட்டு தேவ . . . . . காற்கண்டந்

எண் : 216

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
பச்சியம்மன் கோவிலிலுள்ள தனிக்கல்

அரசர் : பான்டியன், இரண்டாம் சடையவர்மன் சுந்தரன்

காலம் : கி.பி. 1287

மொழி : தமிழ்

செய்தி : அர்த்தநாரீசவரருக்கும் வேலவருக்கும் தோட்டம் வைக்கப் பார் விளங்கும்கண்டன் என்பான் நிலம் வாங்கிய செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம்
2. கோச்சடைய பன்மரான திரிபுவன சக்கரவத்திகள்
3. சுந்தரபாண்டிய தேவர்க்கு
4. யாண்டு 10 ஆவது
5. எழுகரை கீழ்கரைப் பூந்துறை நாட்டு திருச்
6. செங்கோட்டு திருமலையில் குமாரர் . . . . .
7. அப்பன் உடையார்க்குத் தேவர் பார் விளங்கும் கண்டன்
8. தேவர் வாசலில் உடையார் தம் பேரில் மேற்படி
9. ஊரில் விளவியான் மின்னாட்டுத் தவித்தர் கென் . . . . .

எண் : 217

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
நாகர்குன்றுக்கும் மேலே உள்ள பெரிய குண்டுக்கல்லின் அடிப்பகுதி

அரசர் : கொங்குச் சோழன், வீரராசேந்திரன்

காலம் : கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ்

செய்தி : கொங்கு சோழர் வீரராசேந்திரனின் முதல் ஆட்சியாண்டும் கொங்கு பூந்துறை நாட்டு நாட்டவரும் என்ற குறிப்புமட்டும் காணப்பெறுகிறது.

கல்வெட்டு :

1. கோச்சடவர்மரான
2. ஸ்ரீ வீராஜேந்திர தேவற்கு யாண்டு 1 ஆவது
3. கொங்கு பூந்துறை நாட்டு நாட்டவரோம்

எண் : 218

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
மகுதி தெருவிலுள்ள நடுகல்

அரசர் : பாண்டியன், சுந்தரபாண்டியன்

காலம் : கி.பி. 1283

மொழி : தமிழ் க.ஆ.அ. 294 - 1961

செய்தி : வடகரை நாட்டு உலகம் காத்த கன்னையன் வடிவில் சிலை எடுக்கப்பெற்ற செய்தி

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தரபாண்டிய
2. தேவர்(க்)கு யாண்டு ஆறா
3. வது வடக்ரை நாட்
4. டு உலக(ம்) காத்த க
5. ன்னையன் வடிவில் கல்

எண் : 219

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
கைக்கோளர் தெருவில் பொருத்தப்பெற்றுள்ள கல்

அரசர் : விசயநகரர், வீரப்பிரதாப கிருட்டிணராய மகாராயர்

காலம் : 19.08.1522

மொழி : தமிழ் க.ஆ.அ. 140 - 1915

செய்தி : திரியம்பக உடையாரின் முகவரான சாமநயினார் ஆட்சியின்போது 'சாம சமுத்திரம்' என்னும் பெயரில் கட்டிய ஊரிலுள்ள மனைகளில் தங்கியிருந்த உழவுக் குடிகளுக்கு ஓர் ஏருக்கு ஐந்து பணமும் காசாயவற்கக் குடிகளான செட்டி வியாபாரிகளுக்கும் கைக்கோளர்க்கும் முறையே இரண்டு ஆண்டுகளுக்கு வரிக்கொடையும், தறி ஒன்றுக்கு சுங்கம் இரண்டு பணமும், மனை ஒன்றுக்கு ஒரு பணம் வீதமும் விதிக்கப்பெற்று அந்த ஆணையின்படி வரி அலுவலர்கள் வரியைப்பெற வேண்டுமெனக் கூறப்பெற்றுள்ளது. கல்வெட்டு முழுமை பெறவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்ரீமன் மகாம
2. ண்ட லேசுரன்
3. இராசாதி இராசன் இ
4. ராச பரமேசுரன் பூ
5. றுவ தெக்ஷண பச்சி
6. ம உத்திரத்துச் சமுத்
7. திராதிபதி ஸ்ரீ வீரப்
8. பிறதாபன் கிட்ட
9. ன இராய மகாராயர்
10. பிறுதுவி ராச்சியம் ப
11. ண்ணி அருளாநின்ற
12. காலத்தில் திப்பரச உ
13. டையர் குமாரர் திரிய
14. ம்பக உடையரையந்
15. காரியத்துக்குக் கறுத்
16. தரான தொண்டை ம
17. ண்டலத்துச் சந்திரகி
18. ரிச் சாவடி பாலாற்று
19. க்கு வடகரை காஞ்சிபு
20. ரம் காக்கு நயினார் சி பா
21. தசேகரன் கோனேரி
22. கலிப்பிரியர் மாணிக்
23. க நயினார் சாம நயினார்
24. நம்முடைய அய்யன்
25. திறியம்பக உடைய
26. ரையான் நாயக்கத்த
27. ர சாம சமு
28. த்திரங் . . . .
29. . . . . மாக வ
30. ருகிற குடி
31. யளுக்குச்
32. சித்திர பா
33. னு வருஷம்
34. ஆவணி மா
35. தம் இருபத
36. ாந் தி/க/தி முத
37. ல் வருகிற கு
38. டியளுக்கு
39. உழவு கு (டி)
40. (ய்) க்கு கட்டி
41. ன ஏருக்கு
42. அன்சு பன
43. மும் காசாவ
44. ற்கம் செட்டி
45. வியாபாரி கைக்
46. கோளர் முதலிய
47. ளுக்கும் இந்த வருஷ
48. ம் முதல் இரண்டு வரு
49. ஷங்கக்கு இறைமாணி
50. யமும் மேல் (த) தி ஒன்று
51. க்கு சுங்க இரணடும் ம
52. னை வரி ஒன்று ஆக ப
53. னத்துக்குச் செல்லு
54. ம் முள்வாய் சூழ்ந்த குன்
55. றத்தூ ர்ச் சீர்மை எழுகரை
56. ர நாட்டுக்குள்ளான கீழ்
57. கரைப் பூ
58. ந்துறை ந(ா)
59. ட்டு அத்த
60. னாரி அரமு
61. டைய தம்
62. பிரானார்
63. குமரர் தம்
64. திருப் படை
65. வீடான தி
66. ருச்செங்
67. கோட்டி
68. ல் (ந) டக்கு
69. ணம் மூன்றும் . . . ம்ம.
70. வாக நடத்த கடவோ
71. ம் இந்தக் கட்டளையாக
72. இந்தக் கிறா(ம)த்துக்கு வருகி
73. ற துறைகளும்
74. ர்க்கு வந்த அதிகாரி நா
75. யக்க பாடிகளும் நா
76. ட்டாரும் நடத்திக் கு
77. டுக்க வேணும் இது
78. க்கு ஆர்ஆர் அகுதம்
79. பண்ணினார்கள் கெ
80. ங்கைக் கரையில்
81. காராம் பசுவைக்
82. கொன்ற பாவத்தி
83. ல போகக் கடவார்
84. கள் வேலுங்கையும்

எண் : 220

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
சுப்பிரமணியர் சன்னதிக்கு முன்னுள்ள மண்டபத்தின் வடக்குச்சுவரின் குமுதப்படை

அரசர் : விசயநகரர், கிருட்டிணதேவ மகாராயர்

காலம் : கி.பி. 1522

மொழி : தமிழ் க.ஆ.அ. 651 - 1905

செய்தி : குன்றத்தூர்த் துர்க்க பன்னிரண்டு நாட்டுக்கு அலுவலர் திரியம்பக உடையார் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு அர்த்தநாரீசுவரமுடைய தம்பிரானாக்கு உத்திராட நட்சத்திரத்தில் கொடியேற்றத்துக்கும் இரேவதி நட்சத்திரத்தில் தெப்பத் திருநாள் நடத்தவும் சந்தை , சுங்கம், தரகு, மகமை போன்ற வரிகளைத் தாரை வார்த்துக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது. அதை இன்னார் நடத்தி வைக்கவேண்டுமெனவும் கூறப்பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. *கலியுகாதி சாலிவாகன சகாப்தம் 1444ல் விஜயநகரம் ஸ்ரீ கிருஷ்ண தேவ மகாராயர் கொங்கின் வீர சோழ மண்டலத்துக் குன்றத்தூர் துர்க்கத்தைச் சூழ்ந்த பன்னிரண்டு பற்றுத் திரியம்பக உடையார்*
2. *கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் ஸ்ரீ அர்த்தநாரீச்சுரமுடைய தம்பிரானருக்கு உத்திராட நட்சத்திரத்தில் துவஜாரோகமும் ரேவதி நட்சத்திரத்தில் தெப்பத் திருநாளும் நடத்தத்தக்கதாகச் சந்தையிலுண்டான சுங்கம் தரகு மகிமை முதலியவைகளைத் தாரை வாத்துக் கொடுத்ததாக . . . .*
3. இந்த தர்மத்தைக் குன்றத்தூர் துர்க்கத்துக்கு வந்த அரசுகளும் இத்தானத்துக்கு வந்த அதிகாரிகளும் இந்நாட்டண்மைக்காரக் கவுண்டர்களும் நடத்தி வைக்க . . . . .

எண் : 221

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
கயிலாயநாதர் கோவில் தெற்குப்புறச்சுவரின் கீழ்த்தளம்

அரசர் : விசயநகரர், சதாசிவதேவ மகாராயர்

காலம் : 21.04.1561

மொழி : தமிழ் க.ஆ.அ. 348 - 1961

செய்தி : பிரமானந்தபூபன் என்பவர் கயிலாயநாதர் கோவிலில் கற்றூண் ஒன்றைக் கொடையாக எடுப்பித்தார். தன்னுடைய புகழும் பெருமையும் என்றும் நிலைக்கும் பொருட்டு இக்கொடையை அளித்தார். இக்கல்வெட்டு ஆசிரிய விருத்தப்பாவால் அமைந்துள்ளது.

கலவெட்டு :

1. சீரார சகத்த்திலாயிர தென்னறுாறு செல்க எண்பதி மூன்றின் மேந்திரமான துன்மதியினிற் சித்திரைத் (திங்கள் சேர்ந்த)
2. இருபத்தஞ்சினிற் பூராமி பூறுவபக்ஷம் சோம சத்தமியினிற் பூச மேனாளில் பூவியாள சதாசிவ மகாராச (ர் ஜெகதேவு)
3. பூபாலனுக்கருள்செய் வீராதிவீர நரசிங்க ராம(ர)ஞ்சயன் மிக்கு கொங்கு நாடாளு னான் வீப்பிற்கு (ல சர்வயன்)
4. தேவகிரியாதிபன் பிறாமனந்த பூபன் ஏரான செஹ்றகொடை வேலர் கயிலாய(ர்) முன
5. எழிலான கற்கம்ப மெடுத்தே நிறுத்திநன் கீற்திப்பி(ற்கு)
6. மநு இம்சேதளவு னிற்கவே சோதி உண்ணாமுலை கொ

எண் : 222

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
மோ... ...ன்னிதியில் முன்மண்டப வடக்குத் திசையின் வெளிப்புறச்சுவர்

அரசர் : நல்லதம்பி காங்கேயன்

காலம் : கி.பி. 1600

மொழி : தமிழ் க.ஆ.அ. 646 - 1905

செய்தி : கீழக்கரைப் பூந்துறை நாட்டு மோரூரில் இருக்கும் திருமலை அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் முருகன் கோவில் முன் மண்டபம் கட்டுவித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1522
2. இதன்மேற் செல்லாநின்ற சார்வாரி சித்திரை மாதம்
3. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரில் இருக்கும்
4. வேளாளக் கண்ணர்களில் திருமலை அத்தப்ப
5. நல்லதம்பிக் காங்கேயன் உபயம்

எண் : 223

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அர்த்தநாரீசுவரர் கோவிலின் மேற்குப்புற வெளிச்சுவர் விநாயகர் சிலையின் பின்புறம்

அரசர் : திருமலை அத்தப்ப நல்லதம்பி காங்கேயன்

காலம் : கி.பி. 1600

மொழி : தமிழ்

செய்தி : பூந்துறைநாடு மோரூர் அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் அர்த்தநாரீசுவரர் சன்னதிக்கு ஒட்டுக்கால் எட்டும் சித்திர கண்டக்கால் எட்டும் மேல் தளவரிசையுட்பட அளித்துத் திருப்பணி செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1522
2. இதன் மேல் செல்லாநின்ற சாற்வாரி வருஷம் சித்திரை
3. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரிலிருக்கும்
4. வெள்ளாழக் கண்ணர்களில்த் திருமண லபத்தப்ப
5. நல்லதம்பிக் காங்கையன் உபயம்
6. வெரியாண்டாவர் சன்னதி நிறுத்த மண்டபம் அணி
7. ஒட்டிக்கால் எட்டு சித்திர கண்டக்கால்
8. எட்டுமிதுக்குண்டாந பாவுக்கால்
9. தளவரிசை உட்பட முற்றுப் பெறுவித்தான்
10. அனேக தற்மம்

எண் : 224

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
வேலவர் சன்னிதியில் முன்மண்டப வடக்குத் திசையின் வெளிப்புறச்சுவர்

அரசர் : அத்தப்ப இம்முடி நல்லதம்பி காங்கேயன்

காலம் : கி.பி. 1612

மொழி : தமிழ் க.ஆ.அ. 646 - 1905

செய்தி :

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1534
2. இதன் மேல் செல்லா நின்ற

எண் : 225

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
வேலவர் சன்னிதியில் முன்மண்டப வடக்குத் திசை வெளிப்புறச்சுவர்

அரசர் : மோரூர் அத்தப்ப இம்முடி நல்லதம்பி காங்கேயன்

காலம் : கி.பி. 1612

மொழி : தமிழ் க.ஆ.அ. 648 - 1905

செய்தி : நல்லதம்பி காங்கேயன் என்பவர் கோவிலில் குமாரசாமியார் மண்டபத்திற்கும் பெரியாண்டவர் சன்னதி கூடத்திற்கும் சிங்கக்கால், குதிரைக்கால் தூண்கள் இருபத்திரண்டும் சக்கரம் கண்டக்கால் பன்னிரண்டும் தளவரிசையும் அளித்துத் திருப்பணி செய்வித்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1541
2. இதன் மேல் செல்லாநின்ற சித்தார்த்தி வருடம் சித்திரை மாதம்
3. கீழ்க்கரைப் பூந்துறை னாட்டில் மோரூரிலிருக்கும்
4. வெள்ளாளக் கண்ணர்களில் திருமலை யத்தப்ப
5. நல்லதம்பி காங்கேயன் குமாரர் அத்தப்ப
6. இம்முடி நல்லதம்பிக் காங்கேயன் கவுண்டன் உபயம்
7. குமாரசாமியார் மண்டபமும் இதற்கு வடபுறம் சிறந்த
8. பக்தி பெரியாண்டவர் சந்நதி கூடம்
9. சிங்கக் கால் குதிரைக்கால் இருபத்திரண்டு
10. சக்கரக் கண்டக்கால் பன்னிரண்டு
11. இதற்குண்டான பாவுக்கல் தளவரிசை
12. உள்பட முற்றுப் பெறுவித்தான்
13. புண்ணியத்தினால் அன்னதான சோமன என இருந்தான்

எண் : 226

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அர்த்தநாரீசுவரர் பிரபையில் உள்ளது

அரசர் : குமாரசாமி காங்கேயன்

காலம் : 23.01.1627

மொழி : தமிழ்

செய்தி : பூந்துறை நாட்டுக் கணக்கன் அர்தத்நாரியன் வேலையன் மகன் பெரிய அய்யன் அர்த்தநாரீசுவரர் கோவிலில் வேதம் ஓதுவதற்காகக் கொடை அளித்த செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்ரீ அர்த்தநாரீச்சுர சுவாமியாருக்கு
2. பூந்துறை நாட்டுக்கணக்கு அர்த்தநாரியன் சதாசேவை
3. குமாரன் பெரிய அய்யன் தர்மம் சதாசேவை
4. அக்ஷய வருடம் தை மாதம் 13ஆம் தேதி
5. சாலிவாகன (ச) காப்தம் 1548ன்
6. அர்த்தநாரீச்சுவரமுடைய தம்பிரானாராலயத்தில்
7. வேத வொளி சிறந்து ஒங்குமாறு மாம்பூண்டியை
8. அக்ரஹாரமாக அரசனது புண்ணியமென்று
9. தானம் செய்தனன்

எண் : 227

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
வேலவர் சன்னிதியில் முன்மண்டபத்தின் தென்புறச்சுவர்

அரசர் : திருமலை அத்தப்ப நல்லதம்பி காங்கேயன்

காலம் : கி.பி. 1628

மொழி : தமிழ் க.ஆ.அ. 647 - 1905

செய்தி : குமாரசாமி காங்கேயன் என்பார் கணபதியார் மண்டபம் ஒன்றும் தாண்டவ விலாச மண்டபம் ஒன்றும் எடுப்பித்து, சிங்கக்கால்களும் தாண்டவத் தூ ண்கள் பன்னிரண்டும் சித்திரக்கால் எட்டும் தலைவரிசையும் அமைத்துத் திருப்பணி செய்தமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஶ்ரீ சகாப்தம் 1550
2. இதன்மேல் செல்லாநின்ற விபவ ஆண்டு சித்திரை மாதம்
3. கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரில் இருக்கும்
4. வேளாளர் கண்ணர்களில் திருமலை அத்தப்ப
5. நல்லதம்பிக் காங்கேயன் குமாரர் அத்தப்ப
6. இம்முடி நல்லதம்பிக் காங்கேயன் தம்பி
7. குமாரசாமி காங்கேயன் உபையம்
8. நாரி கணபதியார் மண்டபமும் இதற்கு தெற்கு வாசல்
9. கதவும் தாண்டவ விலாச மண்டபமும்
10. சிங்கக் கால்களும் தாண்டவத்தூண் பன்னி
11. ரெண்டும் சித்திரக்கால் எட்டும் பாவுக்கல்
12. தளவரிசை உள்பட முற்றுப் பெறுவித்தான்
13. சொல்லால் தருமத்தால் அரிச்சந்தரன் போல் இருந்தான்

(சிற்பக்கலையின் நுட்பம் விளக்கப் பெறுகிறது)

எண் : 228

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அர்த்தநாரீசுவரர் கோயிலின் விமான உத்திரம்

அரசர் : குமாரசாமி காங்கேயன்

காலம் : கி.பி. 1631

மொழி : தமிழ்

செய்தி : குமாரசாமி காங்கேயன் உதவியாளர் சாமண்ணன், குமாரசாமி நல்லதம்பி ஆகியோர் செய்த கொடை கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1553
2. இதன்மேல் செல்லாநின்ற பிரசோற்பத்தி ஆண்டு ஆடி மாதம்
3. குமாரசாமி காங்கேயன் காரியத்துக்குக் கர்த்தரான சுப்ப நாய்க்கன் மகன் சாமண்ணன் உபயம் (சந்தனக்குறடு)
4. மோரூர் கண்ணகுலம் வேல்பூதி சந்நதி குமாரநல்லதம்பி வெற்றிக் குமாரசுவாமி
5. சாலிவாகன சகாப்தம் 1538 நள வருடத்தில்
6. ஸ்ரீ அர்த்தநாரீச்சுரர் கோயில் முன் கிழக்கிலே விசுவேச்சுரர் விசாலாட்சியம்மை நந்தி பலிபீடம் பிரதிட்டித்தான்

எண் : 229

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
கைலாயநாதர் கோவில் கோபுரம்

அரசர் : நாயக்கர், விசுவநாத சொக்கலிங்கன்

காலம் : கி.பி. 1663

மொழி : தமிழ் க.ஆ.அ. 654 - 1905

செய்தி : சேசாத்திரி செய்த உபயத்தைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகாப்தம் 1584
2. இதன்மேல் செல்லாநின்ற சோபகிருது வருடம் ஆவணி மாதம்
3. ஸ்ரீமது விசுவநாத சொக்கலிங்க னாயக்கரவர்கள் இராச்சிய பரிபாலனம் பண்ணுகையில்
4. நாணிய கைமிலாய னாதருக்குப் பூசை
5. அணிகிளருங் கோபுர முண்டாக்கிப் - பனிமலை மேல்
6. காசி விசுவேசருக்குக் கற்கோயிலும் பணித்தான்
7. நேசருணைச் சேசாத்திரி

எண் : 230

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
வேலவர் சன்னிதி முன்மண்டபத்தின் வடக்குபுறச்சுவர்

அரசர் : விசயநகரர் நாயக்கர், சொக்கநாதன்

காலம் : கி.பி. 1669 09.02.1669

மொழி : தமிழ் க.ஆ.அ. 649 - 1905

செய்தி : சொக்கநாத நாயக்கர் திருச்செங்கோட்டு அர்த்தநாரீசுவரர் கோவில் தானத்தார்க்கு அளித்த விண்ணப்பம் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. சுபமஸ்து ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1591ன் மேல் செல்லாநின்ற கீலக ஆண்டு மாசி மாதம் 13 ஆம் நாள்
2. ஸ்ரீ மது காசிப கோத்திரம் விசுவநாத நாயக்கர் குமாரர் சொக்கநாத நாயக்கர்
3. தெருச்செங்கோட்டுத் தானத்தாருக்கு விஞ்ஞாபனம் திருச்செங்கோடு அரத்தநாரீச்சுர சுவாமிக்கும் விசுவநாதருக்கும் . . . .

எண் : 231

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
அர்த்தநரீசுவரர் கோவில் கருவறையின தென்புறச்சுவர்

அரசர் : நரசிம்மராய உடையார்

காலம் : கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 645 - 1905

செய்தி : திருச்செங்கோட்டு அரத்தநாரீசுவரருக்கும் சுப்பிரமணியருக்கும் குரப்பள்ளியான அகரமும் நத்தமும் அறக்கொடையாக அளித்து உடன் பாட்டு ஆவணத்தை அளித்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது.

கல்வெட்டு :

1. நரசிம்மராய உடையார் காரியத்துக்கு கடவோமாக
2. உடையார் கொங்கின் வீரசோழ மண்டலத்துக் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுத் திருச்செங்கோட்டுத் திருமலைமேல் எழுந்தருளிய அர்த்தநாரீவ்வரர்க்கும் சுப்ரமணியர்க்கும் தர்ம தானப் பிரமாணம் பண்ணிக் கொடுத்த பரிசாவது
3. இந்த நாட்டுச் சூரப்பள்ளியான அகரமும் நத்தமும் உள்ளாக நான்கு எல்லைக்கும் உட்பட்ட மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் நஞ்சை புஞ்சை யாவும் தர்மமாகக் கொடுத்தோம்

எண் : 232

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
கைலாயநாதர் கோவில் நிருத்த மண்டபத்தின் கிழக்குச்சுவர் மேல்பகுதி

அரசர் : நாயக்கர், பொத்து

காலம் : கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 652 - 1905

செய்தி : பொத்து நாயக்கர் மகன் எறம்செட்டி நாயக்கர் என்பவரின் மனைவி பங்காசிம்மன் என்பவர் கயிலாயநாதர் கோவில் சன்னதிமுன் நருத்த மண்டபத்தைக் கொடையாகக் கட்டுவித்தமை.

கல்வெட்டு :

1. ருதிரோத்காரி வருடம் மாசி 19
2. சுவாமி ˆயிலாசநாதர் சன்னதி முன் நிருத்த மண்டபம்
3. பொத்து நாய்க்கர் குமாரன் எறம்செட்டி நாய்க்கர் தேவி பங்காசிம்மன் கட்டிவிச்ச உபையம்

நிருத்த மண்டபம் - கூத்தாடு மண்டபம்

எண் : 233

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
பத்திரகாளி கோவில் கருவறையின் மேற்குப்புறச்சுவர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 296 - 1961

செய்தி : அந்தியூரைச் சார்ந்த நகரத்தாரில் குமாரவேல் செட்டியார் என்பவர் அழகுநாச்சியம்மன் குளம் ஒன்றைக் கொடையாகக் கட்டி வைத்த செய்தி.

கல்வெட்டு :

1. காலயுத்தி வருடம் கார்த்திகை மாதம் 12 வடகரை நாட்டில் அந்
2. தி ஊரிலிருக்கும் நகரத்தாரில் வண்ணக்கர் கோ
3. த்திரத்தில் பாகம் பிரியா செட்டியார் குமாரன்
4. குமாரவேல் செட்டியார் அழகுனாச்சியார் அம்
5. மன் குளம் கட்டிவிச்சார் உபை
6. யம் அடிஅடி வாழையாயி அர்த்தனாரிலிங்கர் லக்ஷச்சிக்கவும் உ

எண் : 234

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
மலையின் முதன் மண்டபத்தை அடுத்துப் படியேறும்போது இடதுபுறப் பாதை

அரசர் : . . . .

காலம் : 09.10.1912

மொழி : தமிழ்

செய்தி : திருச்செங்கோட்டு வட்டக் குமாரமங்கல கிராம மேட்டுப்பாளையத்தில் வசித்த தோட்டிகள் பதினால்வர் அரசாங்கத்திலிருந்து பெறும் மொத்த சம்பளத்தைப் பதினான்கு சம பங்காகப் பிரித்து எடுத்துக் கொண்ட செய்தியைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. 1912 பரிதாபி வருஷம் புரட்டாசி மாதம் 24ந்தேதி திருச்செங்கோடு தாலூக்கா கொமரமங்கலம் கிராமம் மேட்டுப் பாளையத்திலிருக்கும் தோட்டிகளாகிய நாம்பல் அனைவரும் செய்து கொண்ட கல் சாதினம்
2. மேற்படி கிராமந்தில் தோட்டிகள் அனைவருக்கு
3. சர்க்காரில் சம்பளம் ஏர்பட்டதும் அதைத் தோட்டி நாம்பல் பதிநாலு பங்கி பிரித்து கொல்ல வேண்டியது தொட்டி 14 பேருக்குல்லாளர்களுக்கு பிரித்து கொடுக்க வேண்டியது
4. இப்படி பங்காசாரம் பழசி இருக்க தபரிங்ல் காராம் பசுவு கொன்ன கடவில்லே போவது
5. அர்த்தநாரீஸ்பரந் துணை வீமனசமி துணை பெரியண்ண மில்லை

எண் : 235

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
கைக்கோளர் தெருவில் பொருத்தப்பெற்றுள்ள கல்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 20 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 141 - 1915

செய்தி : இலக்குமி என்பவர் தன் அன்னை பழனியம்மாள் பெயரில் சுமைதாங்கிக் கல் ஒன்று வைத்த செய்தி.

கல்வெட்டு :

1. விய வருஷம் வைய்யி
2. சி மாதம் 24 தேதி திருச்செ
3. ங்கோடு கேதாரலி
4. ங்க முதலி மகன் க
5. வலமுத்து முதலி
6. மகன் அருணாச
7. லமுதலி *பெருஞ்
8. சாதி லெச்சும
9. ரயிக்கு தாயாற்
10. பழனியம்மா
11. குமாறத்தி கவுண்
12. டம்பாளையம் த
13. ம் பகுணத்து கொ
14. ழுந்தவேல் முதலி
15. சுமை தாங்கி
16. கல்லு லெச்
17. சுமாயிக்கு
18. உபயம்

* பெஞ்சாதி - மனைவி

எண் : 236

இடம் : ஊர் - திருச்செங்கோடு வட்டம் - திருச்செங்கோடு
பப்பாளர் மண்டபத்திலுள்ள கல்

அரசர் : . . . .

காலம் :

மொழி : தமிழ் க.ஆ.அ. 349 - 1961

செய்தி : மடம் ஒன்றைக் கட்டுவதற்காக எண்பது அடி நீளமும் அகலமும் ஒத்துவரக் கூடிய சதுர அளவில் தென்வடக்குத் திசையில் ஐம்பதாறு தேசத்தாரும் ஐந்து சாதி பாஞ்சலாத்தாரும் உள்ளம் கொள்ளும் வகையில் கொடையாகக் கீழைத்தெருவில் மடம் கட்டக் கொடுத்த செய்தி.

கல்வெட்டு :

1. (வி) ய வருஷம் சித்தி
2. ரை மாதம் 1 தேதி தணகுரர்
3. அன்ப(த்) தாறு தேசச்(தா)
4. றும் அஞ்சு சாதி ப
5. ஞ்சாள (த்) தாறும் திருவு
6. ளம்பற்றி தன்ம (மி)
7. ருபதின் ப(டி)க்கு ழை
8. த் தெருவில் சீ
9. (மை)ழச் சிறகில் மடம்
10. ச . . . . தெற்கு வ
11. டக்கு அடி 80
12. உம் அகலொத்
13. தவர ஸொமெ
14. ங்கு பற்றிக்
15. கொண்டு
16. சந்திறாதித்த
17. வரையும் அ
18. னுபவித்து
19. வரவும் உ

எண் : 237

இடம் : ஊர் - தூசூர் வட்டம் - நாமக்கல்
தெற்கிலுள்ள சின்னக்காவூர்ப் பாறையில் உள்ள கல்வெட்டு

அரசர் : விசயநகரர், இம்மடி இராமச்சந்திர நாயக்கர்

காலம் : 08.11.1668

மொழி : தமிழ் க.ஆ.அ. 29 - 1965

செய்தி : சகாப்தம் 1590 கீலக வருடம் கார்த்திகை மாதம் பூர்வபட்சமும் பௌர்ணமியும் கார்த்திகை நட்சத்திரமும் பெற்ற ஞாயிற்றுக் கிழமையில் சந்திர கிரணத்தன்று இம்மடி இராமச்சந்திர நாயக்கன், இலட்சும நாயக்கன்பட்டி, அலங்காநத்தம் ஆகிய ஊர்களில் உள்கடையில் நிலம் விட்டமை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸாலிவாஹந சாகப்தம் 1590 இதின்மேற் செல்லா நின்ற கீலக வருசம்

2. கார்த்திகை ஞாயிற்று பூர்வ பக்ஷத்து பௌர்ணமாஸ்யும் ஞாயிற்றுக் கிழமையும் பெற்ற காற்திகை நட்சத்திரத்து
3. னாள் சந்திர கரகண புண்ணிய காலத்லே இம்மடி ராமச்சந்திர னாயக்கரய(ன)வர்கள் வென்று மாலையிட்ட பெருமாளய்பரவர்களுக்கு அகரஹாரத்துக்கு பாலைபட்டி
4. அக்கரை திம்ம நாயக்கன் திருத்து நஞ்சை இருபது செய்யும் லட்சும நாயகனபட்டியும் அலங்காநத்தம் உள்க்கடையும் குடுத்தபடியினாலே
5. ஆசந்திராத்தம் புத்ர பௌத்ர பாரம்பரை யாக அனுபவித்துக் கொள்ல கடவராகவும் இததன்மத்துக்கு அகிதம் பண்ணினவன் கங்கைக்க கரையலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான்

எண் : 238

இடம் : ஊர் - தேவனாங்குறிச்சி வட்டம் - திருச்செங்கோடு

அரசர் : . . . .

காலம் : 11.11.1692

மொழி : தமிழ் க.ஆ.அ. 436 - 1929

செய்தி : தேவனாங்குறிச்சியில் வசிக்கும் நல்லான் செட்டி என்பவர் விநாயகர் கருவறையும் கோவில் படிகளையும் அமைத்துக் கொடுத்தமை.

கல்வெட்டு :

1. உ ஸ்வஸ்தி ஸ்ரீ சுகாவ்ப்தம் னாலாத்தி
2. ல் எண்ணு (த்தி) ல் இதில் மே செ
3. ல்லானின்ற ஆங்கிர வருஷம்
4. கார்த்திகை மாதம் 11 சுக்கிர வாரமு
5. ம் அசுவதி நட்சததிரமு திறயோஸி
6. தசியு பெற்ற னாளில் தே(சி) வினாயகன்
7. கெப்பகெறமுன் சோபானமு னாற்ற
8. ப்ப கோற்றிரத்தில் நகரத்தாரில் தேவனா
9. குறிச் வாசியில் பாசுகட்டி நல்லாசெ
10. ட்டி மகன் நல்லா செட்டி உபைய
11. ம் குருவே துணை உ

எண் : 239

இடம் : ஊர் - தேவனாங்குறிச்சி வட்டம் - திருச்செங்கோடு

அரசர் : . . . .

காலம் : கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 437 - 1929

செய்தி : வியாபாரி நல்லான்செட்டி மகன் விநாயகர் சிலையை அளித்தது.

கல்வெட்டு :

1. சுக்கில வருஷம் காத்திகை மாதம் 10
2. தேதி வினா(ய)கன் . . . . . கம் . . . . வி
3. (யாப)ாரிகளில் . . . த்த (உ)பை . . . . ந
4. ல்லா(ன்) செட்டி மகன் நல் . . . .
5. . . . . . உபையம் குருவேது
6. ணை

எண் : 240

இடம் : ஊர் - தொற்றிபாளையம் வட்டம் - திருச்செங்கோடு

அரசர் : . . . .

காலம் : கி.பி. 17 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 162 - 1915

செய்தி : குழந்தை கவுண்டன் மகன் முத்துக்கவுண்டன் என்பவர் பெருமாள்மலைக்கு அளித்த கொடையைப் பற்றியது.

கல்வெட்டு :

1. றவுத்திரி வருஷம் பிற
2. ட்டாசி மாதம் 21 தேதி
3. பெ (ாங்கு) ர்ச்சி தேவ
4. ன் பாளையம் குளந்த க
5. வுண்டன் மகன் முத்து க
6. வுண்டன் . . . . . .
7. பெருமாள் ரேவு . . . . .
8. உபயம்

எண் : 241

இடம் : ஊர் - நங்கவள்ளி வட்டம் - ஓமலூர்

அரசர் : . . . .

காலம் : 12.04.1885

மொழி : தமிழ் க.ஆ.அ. 368 - 1940

செய்தி : சேலம் புதுப்பேட்டையில் வாழ்ந்த நகரத்தாரில் தித்தா செட்டியார் என்பவர் கருட சேர்வை மண்டபம் கட்டுவித்த செய்தியைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. கலியுக சகா
2. ற்த்தம் 4806 செல்லா
3. நின்ற பாத்திப
4. வருசம் சித்திரை மாச
5. ம் முதல் தேதி சேலம் புதுப்
6. பேட்டையிலிருக்கும்
7. நகரத்தாரில் சாத்தந்
8. தை யதிகாரி சி கோ
9. த்திரம் திருவம்பல செ
10. ட்டியார் குமாரன் தித்
11. தா செட்டியார் கெரு
12. ட சேருவை மண்ட
13. பம் கட்டி வைத்தது

(சாத்தான் + தந்தை = சாத்தந்தை
தொல். எழுத்து 348)

எண் : 242

இடம் : ஊர் - நங்கவள்ளி வட்டம் - ஓமலூர்

அரசர் : . . . .

காலம் : 23.03.1932

மொழி : தமிழ்

செய்தி : கல்மண்டபம் புதுப்பிக்கப்பெற்ற செய்தி.

கல்வெட்டு :

1. கலியுகம் 4926 வருஷத்தில் சேலம் செவ்வாய்ப் பேட்டை
2. தீத்தாசெட்டியாரால் கட்டிய கல்மண்டபத்தை கலியுகாதி 5032 வருஷத்துக்கு
3. பிரிசோத்பதி வருஷம் பங்குனி மாதம் 10 தேதி திருச்செங்கோடு பொன்னன் செட்டி
4. யார் குமாரர் சுந்திரம் செட்டியாரால் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்டது.

எண் : 243

இடம் : ஊர் - நங்கவள்ளி வட்டம் - ஓமலூர்

அரசர் : . . . .

காலம் : கி.பி. 19 ஆம் நூற்றாண்டு

மொழி : தமிழ் க.ஆ.அ. 369 - 1940

செய்தி : முதற்கல் தொடக்கநிலை சிதைந்துள்ளது. குளத்துக்குப் படிகள் கட்டி முடித்த செய்தியை விளக்குகிறது. இரண்டாம் கல் 21.10.1830இல் பொறிக்கப்பெற்றது. ஆதிமூல செட்டி என்பவரின் கொடையைக் குறிப்பிடுகிறது. மூன்றாவது கல் 14.07.1854இல் பொறிக்கப் பெற்றது. செங்கழனி முதலியார் என்பவர் விநாயகப் பெருமானின் திருவுருவத்தை அமைத்தது.

கல்வெட்டு :

முதற்கல்

1. . . . . . . பிடியும் கட்டி முகி
2. ஞ்சுது கொளு வட்டி ச
3. மும் கணபதிப் பிசாதமு
4. தா சேர்வை திருவிளம்

இரண்டாம் கல்

1. விகுறுதி வருஷம் அற்பசி (மாதம்) எ . . . .
2. கும்பம் ஆதிமூல செட்டி உபையம்

மூன்றாவது கல்

1. ஆனந்த வருஷம்
2. ஆனி மாசம் 22 கா
3. வாண்டை முதலியார் ம
4. கன் செங்கழனி முதலியார் பரி
5. னாட வினாயகன் திருவிளம்

எண் : 244

இடம் : ஊர் - நஞ்சைஇடையார் வட்டம் - நாமக்கல்

அரசர் : சோழன், முதலாம் இராசேந்திரன்

காலம் :

மொழி : தமிழ் க.ஆ.அ. 42 - 1913

செய்தி : கல்வெட்டு படியெடுக்க இயலாத நிலையில் கட்டடம் கட்டப்பெற்றுள்ளது. வீர இராசேந்திர சிம்ம சதுர்வேதி மங்கலத்துச் சபையார் கோவில் திருப்பணி செய்தமை.

கல்வெட்டு :

1. கோ பரகெசரி பன்மரான இராஜேந்திர சோழ
2. தேவற்கு யாண்டு ஏழாவது வடகரை
3. இராசாசியர வளநாட்டு இடையாற்று இருந்து
4. பணிப்பணியால் பணித்து இவ்வூர் சீ காமிலாஸமாக
5. திருவேயில் வாயிலுடைய பரமேசுவரர்க்கு ஸ்ரீ
6. காரியம் செய்ய . . . . .

7. தேவர்க்கு இவ்வீரராசேந்திர சிம்ம சதுர்
8. வேதி மங்கலத்து சபையோம் இது பன்மாகேசுவர

எண் : 245

இடம் : ஊர் - நாட்டாமங்கலம் வட்டம் - நாமக்கல்
பெருமாள் கோவில் விளக்குத்தூ ணில் உள்ள கல்வெட்டு

அரசர் : . . . .

காலம் : கி.பி. 1541

மொழி : தமிழ்

செய்தி : நல்யாணி அவிலாசி நல்லதம்பி மகன் குமாரசுவாமியின் பணியாள் உபயம்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விசைய கலியு
2. காப்தம் 4642
3. மேல் செல்லா
4. நின்ற பிலவ
5. அப்பசி
6. கலியாணி அவனா
7. சி நல்லதம்பி மகன்
8. குமார சு
9. வாமி அடப்பன்
10. உபையம்

எண் : 246

இடம் : ஊர் - நாமககல் வட்டம் - நாமக்கல்
நரசிங்கப்பெருமாள் கோவில் கருவறையின் நடுச்சுவர்

அரசர் : சோழன், மூன்றாம் இராசராசன்

காலம் : கி.பி. 1228

மொழி : தமிழ் தெ.இ.க.தொ 22 - 1 - 11

செய்தி : இக் கல்வெட்டுப் பல துண்டுகளாக ஆங்காங்குப் பதிக்கப்பெற்றுள்ளது. ஒரு கல்துண்டு இராசராசசோழனின் 9ஆம் ஆட்சியாண்டைக் குறிப்புகிறது. கோவில் பணிக்காக நிலம் கொடையாக அளித்தசெய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. மற்றொரு துண்டுக்கல்லில் விடுகாதநாகிய வத்தராமன் என்பவர் குறிப்பிடப்பெற்றுள்ளார். நாட்டவரில் பலருடைய பெயர்கள் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது துண்டுச்கல் இறைவன் எம்பெருமான் சிங்கப்பெருமாளுக்கு நிலத்தைக் கொடையாகக் காசியப்பன் செந்தாமரைக் கண்ணன் என்பார் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. மற்றொரு துண்டுக்கல் அரசன் பெயர் அறிய இயலாத இரண்டாம் ஆட்சியாண்டைக்

குறிப்பிடுகிறது. கோவிலுக்குத் திருவிடையாட்டமாக இறையிலி நிலம் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. கல்வெட்டுப் பகுதி சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

(1)

1. . . . . ராஜ . . .
2. . . . . ரநாட் . . .
3. . . . . வந்குட்ட . . . .
4. . . . . னன் என்னு . . .
5. . . . . மிக்கு மேற் . . .
6. . . . . கும் தேவநா . . .
7. . . . . ப்புறமாக விட் . .
8. . . . . ன்று கொலுக் . . .
9. . . . . ட்டிக்குடுத்தே . . .
10. . . . . ஆண்டானேன் . .
11. . . . ஏழச்சம் ஒழியாமல் . . .
12. . . . ல்தான(த்)தா(ர்)க்கும் இக் . .
13. . . . ஊர் இராஜ (ந)ம்பிதிருவ . .
